# சீவலப்பேரி பாண்டி

சௌ.பா



விகடன் பிரசுரம்

# சீவலப்பேரி பாண்டி

## சௌபா

விகடன்
வெளியீடு

முதற் பதிப்பு: ஜனவரி 1993
இரண்டாம் பதிப்பு: ஜனவரி 1993
மூன்றாம் பதிப்பு: ஜனவரி 1994
நான்காம் பதிப்பு: செப்டம்பர் 1994
ஐந்தாம் பதிப்பு: பிப்ரவரி 2005

அட்டைப்பட அமைப்பு: **மணியம் செல்வன்**
வண்ணப்படங்கள்: **கே.ராஜசேகரன்**
குறிப்பு: **படங்களில் இருப்பவர்கள் மாடல்களே**

**விலை: ரூ.40**

**ஆனந்த விகடன்**
757, அண்ணாசாலை,
சென்னை-600 002.

## என்னுரை...

**ப**த்திரிகைத்துறையில் தனக்கென தனிப்பாதை அமைத்து வெற்றிபெற்ற ஜூனியர் விகடனில், வாசகர்களின் பெரும் ஆதரவு பெற்றவை கிராமத்துப் பக்கங்கள்! நாடு விடுதலை அடைந்து ஆண்டுகள் பல உருண்டோடினாலும் கிராமங்கள் புறக்கணிக்கப்பட்டுக் கிடப்பதும் கிராமங்களின் பல்வேறு பிரச்னைகளும் அந்தப் பக்கங்களில் ஒலித்தன. அதோடு கிராமத்தின் கலாசாரமும் அதில் இடம்பெற்றது. கிராமத்துச் சோகமும் சிரிப்பும் அதில் எதிரொலித்தன. அந்த மண்ணிலே தோன்றிப் பரவிய உண்மைச் சம்பவங்களும் கதைகளாக வந்திருக்கின்றன.

அதில், 'சௌபா' எழுதிய சீவலப்பேரி பாண்டி தொடர் மிகவும் புகழைப் பெற்றது. அண்மைக் காலத்தில் நடந்த சம்பவங்கள்... எப்படியோ வாழ்ந்திருக்க வேண்டிய கிராமத்து வீரமகன் ஒருவனின் வாழ்க்கை சில சுயநலவாதிகளால் திசைதிருப்பப்பட்டு, அவன் கொலைகாரனாகிவிட்ட கதை. கதையின் கடைசியில், பாண்டி செத்து வீழ்கிறபோது போலீஸ் அதிகாரி பிரேம்குமார் மட்டுமின்றி நமக்கும் பாண்டியின் இதயத்துக்குள் இருக்கும் மனிதநேயம் தெரியத்தான் செய்கிறது.

கத்திமேல் நடப்பது போல எச்சரிக்கையுடன் எழுத வேண்டிய கடமை சௌபாவுக்கு இருந்தது. அதைச் செவ்வனே செய்தார். தெற்கத்திய தீந்தமிழ் நடை அவருக்குக் கைவந்தது, தொடருக்கு மேலும் உயிரூட்டியது.

விகடன் மாணவர் திட்டத்தில் 'கண்டுபிடிக்கப்பட்ட' சௌபா, இன்று தேர்ந்த எழுத்தாளராக உயர்ந்திருப்பது விகடனுக்குப் பெருமை.

*எஸ். பாலசுப்ரமணியன்*
*ஆசிரியர்*
*ஆனந்த விகடன்*

## நன்றியுடன் நினைவலே...

'சீவலப்பேரி பாண்டி' பற்றி முதலில் கேள்விப்பட்ட மாத்திரத்தில், இது உயிர்ப்பான ஒரு நாவலுக்கான விஷயம் என்பது எனக்குள் முடிவானது. நெருப்பாற்றில் நீந்தியது போன்ற ஒரு மனிதனின் அசாத்திய திருப்பங்கள் நிறைந்த வாழ்க்கையும் முடிவும் என்னை மிகவும் பாதித்தன. இதில் சம்பந்தப்பட்ட பலர் இன்னும் வாழ்ந்துகொண்டிருக்கும் நிலையில், கதையாக எழுதுவதில் உள்ள சிக்கல்கள் துவக்கத்தில் மிகவும் மலைப்பை ஏற்படுத்தின. மிகவும் கவனமாய் இருந்தேன். அதே சமயத்தில் நிஜத்தை நீர்த்துப் போகாமல் வாசகர்களின்முன் வைத்துவிட வேண்டும் என்பதிலும் உறுதியாய் இருந்தேன். விகடனின் மாணவர் திட்டத்தில் பத்திரிகையாளருக்கான பயிற்சிபெற்று எழுத்துலகுக்கு வந்தவன் நான். பயிற்சிக் காலத்தில் தாய்ப்பாலாக ஊட்டி வளர்த்த சமூகப் பொறுப்பின் காரணமாக, சந்தர்ப்பம் வரட்டும் என்று காத்திருந்தேன். கடந்த நான்கு வருடங்களில் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம், சம்பந்தப்பட்ட இடங்கள் அனைத்துக்கும் பல முறை நேரில் சென்றேன். ஜூனியர் விகடனில் தொடர் ஆரம்பித்த சில வாரங்களிலேயே வாசகர்களும் ஆர்வத்துடன் கடிதங்களில் பாண்டி தொடர்பான தாம் அறிந்த தகவல்களைத் தெரியப் படுத்தியது மிகுந்த உற்சாகம் அளித்தது.

பாண்டி சிறையிலிருந்து தப்பிய விதம் மட்டும் முயன்றும் அறியமுடியாத நிலையில், கற்பனையில் நகர்த்துவது தவிர்க்க முடியாததானது. தொடர் முடிந்ததும் தோழர் தியாகு அதைச் சுட்டிக்காட்டினார். தற்போது புத்தகத்தில் அப்பகுதி புதிதாக எழுதி இணைக்கப்பட்டு விட்டது.

இந்த நாவல் தொடர்பான நீதிமன்ற ஆவணங்களைச் சேகரிக்கவும் மற்றும் பிறவகையிலும் துணைநின்ற நெல்லை நண்பர்கள் வழக்கறிஞர்கள் திரு. அ. இளங்கோ சுப்ரமணியம், திரு. சி. சேதுராமலிங்கபாண்டியன் இருவருக்கும் நன்றி.

இந்தத் தொடருக்குப் பலவிதங்களில் ஆதர்சபலமாய் விளங்கிய மாண்புமிகு நீதிபதி ரத்தினவேல் பாண்டியன் மற்றும் திரு. முத்துக் கருப்பன் ஐ.பி.எஸ். ஆகியோருக்கும் என் மனப்பூர்வமான நன்றி.

இந்தத் தொடரின் வெற்றி உட்பட என் சம்பந்தப்பட்ட அனைத்துக்கும் காரணமாகவும் அடிவேராகவும் அணுகுமுறையில், அரவணைப்பில் தாயாக, தந்தையாக, நல்லாசிரியராகத் திகழும் எங்கள் ஞானத்தந்தை ஆசிரியர் எஸ். பாலசுப்ரமணியன் அவர்களுக்கு நன்றி சொல்ல வார்த்தைகளே இல்லை.

மறுபிறவியில் எனக்கு நம்பிக்கை கிடையாது. அப்படி ஒன்று இருந்தால் அப்போதும் இவர் நிழலில் ஒரு நிருபராக, எழுத்தாளராகப் பணிபுரியவே வரம் கேட்பேன்!

சௌபா

# சீவலப்பேரி பாண்டி

பொழுது சரியப்போகும் செங்கமங்கலான நேரம்.. தாமிரபரணியில் முழங்கால் தண்ணீர் சலசலத்தது. அதன் வடகரை விளிம்பில் குத்தவைத்து உட்கார்ந்த மாதிரி சுடலைமாடன்கோயில்... அதையடுத்து பொருதத் தயாராய் நிற்கும் சிப்பாய்கள் போல் படைபடையாய் அடர்ந்த கரும்பனைகள். அதையும் தாண்டி சீமைக்கருவைப் புதருக்குள் ஒருக்களித்துப் படுத்திருப்பதுபோல் சுருண்டு கிடக்கும் சீவலப்பேரி கிராமத்துக்கு இது லேசாய் சோம்பல் முறிக்கும் நேரம். விடிந்தும் விடியாமல் காடுகரைக்குப் போனவர்கள் வேலை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தனர்!

முன்சீப்பின் பெரிய வீட்டின் மேற்குப் பார்த்த மதிலில் இறங்கு வெயில் மஞ்சள் பூசியிருந்தது. முற்றத்தில் வெக்கை அடங்க 'சலப்.. சலப்' என்று நீர் தெளிப்பது தெருமுனை வரை கேட்டது. வலதுபக்கம் கோனாக்கமார் தெருவில் கிடந்த நாய், இருந்தபடிக்கே மோவாயை நிமிர்த்தி திடீரென்று விகாரமாய் ஊளையிடத் தொடங்கியது. சற்றுத் தள்ளி திண்ணையில் உட்கார்ந்திருந்த வயசாளி வாரிச் சுருட்டி எழுந்தார்.

''மூதி, ஆக்கங்கெட்ட மூதி... பொழுதுசாயுத நேரத்ல இப்படி வாய்பொளந்து ஊளையிடுதியே... எழவு விளங்கவா...'' - முனங்கியபடி ஆவேசமாய் எதையோ எடுத்த வேகத்தில் வீசி எறிய... நாயின் பிட்டத்தில் விழுந்தது. நொண்டிய நாய், விடாமல் ஊளையிட்டு ஓடியது. சத்தம் கேட்டு மரங்கள் அடர்ந்து கிடக்கும் சந்தையிலிருந்து பறவைகள் பதறிப் படபடத்தன. நாயை அடித்தவர் பெரிய வீட்டைத் திரும்பிப் பார்த்தார். தெருவைப் பார்த்த உயரமான ஜன்னலில் முன்சீப்! அவர் இதைக் கவனித்த மாதிரி தெரியவில்லை. சிவந்த முதுகைக் காட்டியபடி கம்பீரமாய் உட்கார்ந்து ஏதோ வேலையில் மும்முரமாய் இருந்தார். அவர் இருந்த இடத்தில் இருந்தபடி லேசாய் திரும்பினால் போதும்... தெருவில் நடப்பது அப்படியே தெரியும். இதனால் எப்போதுமே அந்தத் தெருவில் ஆள்

செதுயிய ஆளுக்கொரு ஜோடி மாடுகளைப் பத்தி வந்தனர். மாடுகளின் கழுத்துமணி 'கலங்.. கலங்' என்று விட்டு விட்டுக் கிணுங்கின. ''ஏம்ல வெள்ளூரு கொடைக்குப் போனியாம்ல... ஒரு வாரமா கண்ல காங்கல. சம்பந்தார் வீட்டுல நல்ல கெவனிப்போ...'' கூட வந்தவன் பதில் பேசவில்லை.

''கேக்குறம்லா... வாயில என்னத்தல..?'' என்று ஓங்கிய குரலில் வாயெடுத்தவன், முன்சீப் வீட்டுப்பக்கம் வந்துவிட்டதை அறிந்து சுதாரித்து நிறுத்தினான். இருவரும் மரியாதையுடன் அவரவர் மாடுகளின் கழுத்து மணியை ஓசையெழாமல் வாரிப் பிடித்துக்கொண்டனர். தெருமுனையைக் கடக்கும்வரை காலடிச் சத்தம்கூட எழாமல் நடந்தனர். கொஞ்ச தூரம் தள்ளிப்போய் பேச்சைப் பாதியில் நிறுத்தியவன் ''நம்ம முன்சீப் ஐயா..'' என்று எதையோ சொல்ல வாயெடுத்தான். சற்று தூரத்தில் எதிரே யாரோ வருவது தெரிந்தது. ''வாய்கொழுத்து வம்பை வாங்காதல... ஒம்பாட்டுக்கு எதையாச்சும் சொல்லி, அதை எவனாச்சும் கேட்டு, எடக்குமடக்கா ஆகிப்போவும் லேய்...'' – மற்றவன் பதறினான். அவ்வளவுதான்... இரண்டு பேரும் வார்த்தையில்லாமல் கான்சாபுரம் போகிற பாதையில் மாடுகளின் வேகத்துக்கு ஈடாய் வேகுவேகென்று எட்டு வைத்தனர்.

முன்சீப்பின் பூர்வீக வீடு சீவலப்பேரியிலிருந்தாலும் பாளையங் கோட்டையில் குடியேறியிருந்தார். பெரும்பாலும் காலையில் சீவலப்பேரிக்கு வருவார். விவசாய வேலைகளையும் மாடுகன்றுகளையும் நேரடியாகக் கவனிப்பார். ஊர் வில்லங்க விவகாரங்களைத் தீர்த்து வைப்பார். பகலெல்லாம் இருந்துவிட்டு பொழுதுசாயத் துவங்கியதும் பாளையங்கோட்டைக்குக் கிளம்பிவிடுவது அவரது வழக்கமாயிருந்தது.

இப்போதும் அவர் வெளியே கிளம்புவதற்கான அறிகுறி, பரபரக்கும் வேலையாட்களிடத்தில் தெரிந்தது. வாசலுக்கு வெளியே நாலா திசை ஊர்களிலிருந்தும் பலதரப்பட்டவர்கள் ஆளுக்கொரு பஞ்சாயத்துடன் முன்சீப்பின் முகம் பார்த்துச் சொல்லக் காத்துநின்றனர். இவர்களின் தோள் துண்டுகள் அத்தனையும் இடுப்பிலே சுற்றியபடியோ, கக்கத்தில் தொங்கியபடியோ, மணிக்கட்டில் துவண்டபடியோ கிடந்தன. வாசலுக்கு வந்து எட்டிப் பார்த்த வயதான பெண்மணி, வீட்டுக்குள் சென்று பெரிய சொம்பு நிறைய மோர் கொண்டுவந்து குவளையில் ஊற்றி ஊற்றிக் கொடுத்தார். சிலர் கையெடுத்துக் கும்பிட்டபடி வாங்கி ஒரே மடக்கில் குடித்தனர். சிலர் சற்றுக் குனிந்து கையேந்தி அதில் ஊற்றச் சொல்லி அண்ணாந்து பார்த்தனர்.

''மனசும் வயிறும் குளுந்திருச்சு நாச்சியாரே... ஐயா கிளம்புத நேரத்ல எதிர்ல போனா 'என்ன, ஏது'ன்னு கேக்கமாட்டாவ. நாளக் காலையில வந்து பாக்கோம்...'' பக்கத்துப் பச்சேரியிலிருந்து வந்திருந்த சிலர் ஒதுங்கினர்.

தென்கரையிலிருந்து பஸ்ஸின் ஹாரன் சத்தம் விட்டுவிட்டுச் சன்னமாய் கேட்டது. தயாராக நின்ற வேலையாட்களில் ஒருவனை முன்சீப் ஏறிட்டார். அவரது பார்வையின் அர்த்தத்தைப் புரிந்துகொண்டு ஆற்றங்கரையை நோக்கி ஓடினான். மறுகரையில் பஸ் ஆலமரத்தை ஒட்டிக் கிழக்குமேற்காக நின்றது. இப்போதுபோல் ஆற்றுப்பாலம் அப்போதில்லை. எப்போதுமே முன்சீப் ஆட்கள் வடகரை மேட்டில் நின்று 'போகலாம்' என்பதுபோல் கையை அசைத்தால் மட்டுமே பஸ் போகும். தலையில் கட்டியிருக்கும் 'தலைப்பா'வை அவிழ்த்து அசைத்தால் ''ஐயா வரப்போறார்... நிக்கட்டும்ல'' என்று அர்த்தம். எவ்வளவு நேரமானாலும் கிளம்பாது. பஸ்ஸுக்குள் இருக்கும் எல்லோரும், முன்சீப் ஐயா ஆற்றைக் கடந்துவரும்



வடகரை மேட்டில் முன்சீப்பின் வேலையாள் தலை தெரிந்தது. கட்டியிருந்த தலைப்பாவை அவிழ்த்துக் கொடியசைப்பது போல் அசைத்தான். ''சரி'' என்பதுபோல் பஸ்ஸின் ஹாரன் சத்தம் நின்றது. வந்தவன் மீண்டும் சாவகாசமாய் திரும்பி நடந்தான்.

முன்சீப் வீட்டு வாசலில் மேல்சட்டையில்லாத வேலையாட்கள் ஏழெட்டுப் பேர் வரிந்து கட்டி நின்றனர். முன்சீப்பைப் பார்க்கக் காத்திருந்தவர்கள் சற்று ஒதுங்கி அவர் வெளியே வரும்போது பார்வையில் படுகிற மாதிரி நின்றனர். உள்ளே நாற்காலியில் இருந்து சடக்கென்று எழுந்தார். நிலையோரம் நின்ற வேலையாட்கள் இருவரில் ஒருவன் மடிப்புக் கலையாத சலவை உடுப்புக்களை ஏந்தி வந்து அலுங்காமல் மேஜை மீது வைத்துவிட்டு நகர்ந்தான். வெளுத்த வேட்டியை லேசாய் உதறி இடுப்பில் கட்டிக்கொண்டு தும்பைப் பூ நிறத்தில் பளீரென்று இருந்த கதர் ஜிப்பாவை அணிந்து கம்பீரமாய் நிமிர்ந்த முன்சீப், மர பீரோவில் பொருத்தியிருந்த ஆளுயரக் கண்ணாடியில் தன்னை மேலும்கீழும் பார்த்தார். பீரோவைத் திறந்தார். முன்னடுக்கில் பளீரென்ற வெல்வெட் துணிமேல் கரேலென்று பளபளப்பாய் ஒரு ரிவால்வர்! மெள்ள எடுத்து 'சடக்'கென்ற ஓசையுடன் ரவைகளைச் சரிபார்த்தார். எப்போதும் போல் தயார் நிலையில் இருந்தன. பின் சரிசெய்து, வயிற்றை எக்கி இடது பக்கம் இடுப்புக்கும் இடைவாருக்கும் நடுவில் பதனமாய் செருகின வேகத்தில் வாசலுக்கு வந்தார்.

''கும்பிடுதோம்யா...'' வெளியே காத்திருந்தவர்கள் கோரஸுடன் கையெடுத்தனர். லேசான தலை அசைப்போடு யாரையும் சட்டைபண்ணாமல் வீதியில் இறங்கி நடந்தார். அவருக்குப் பின்னால் அரிவாள், கம்புடன் ஒரு இளைஞன் காவலுக்குச் சென்றான். முன்சீப் நடைக்கு ஈடுகொடுக்க முடியாமல் ஓடினான் அவன். வாசலில் காத்திருந்தவர்களில் சிலர் அவரை விடாமல் பின்தொடர்ந்தனர். ''ஐயாவுக்கு இன்னிக்கி அவசர சோலியிருக்கு. நாளைக் காலையிலே வந்து பாருங்கல...'' இளைஞன் திரும்பி விரட்டினான்.

கொஞ்ச நேர நடையில் ஆற்றங்கரை மேடு வந்தது. அகன்ற ஆற்றின் நடுவில் ஓடை போல ஓடிக்கொண்டிருக்கும் தண்ணீரில் அலுப்புத்தீர உட்கார்ந்து குளித்துக்கொண்டிருந்த சிலர், அவசரகதியில் ஒதுங்கினர். வேட்டி நுனியை இடது கையில் பிடித்தபடி வடகரையில் நின்று ஆற்றை அளப்பது போல் இடமும் வலமும் பார்த்தார் முன்சீப். பிறகு அனாயாசமாய் தண்ணீரைக் கிழித்து நடந்து மறுகரையை அடைந்தார் முன்சீப்.

மறுகரையில் சிலர் சீமைக்கருவைப் புதருக்குள் தன்னை எதிர்பார்த்துப் பதுங்கி இருப்பதை அறியாத முன்சீப், நிதானமாய் நடந்து பஸ்ஸில் ஏறப்போனார். பாதுகாவலன் பஸ் படிக்கட்டை ஒட்டிப்போய் நின்றான். அதற்குள் எங்கிருந்தோ ''ஐயா, சாமீ... எம்மக வாக்கப்பட்ட எடத்தில போட்ட நகையெல்லாம் வித்துக் குடிச்சிட்டு, அவளை விரட்டி விட்டுட்டானுகய்யா... இப்ப எங்கண்ணு கண்ணீரும் கம்பலையுமா வந்து நிக்கா. நீங்கதான் விசாரிச்சி நியாயஞ் சொல்லணும்யா...'' வயசாளி ஒருவர் அழுதுகொண்டே ஓடிவந்து முறையிட்டார்.

பஸ்ஸில் ஏறப்போனவர் நின்று கிழவரைத் திரும்பிப் பார்த்தார். 'கெழட்டுச் சனியன்... இப்பப் போய் அழுது மறிக்கியே' என்பது போல் பார்த்துவிட்டுச் சற்றுப் பின்னால் விலகி நின்றான் காவலுக்கு வந்த வேலையாள்.

பாக்கேன்..'' என்றார் முன்சீப். கும்பிட்டபடி விலகினார் கிழவர்.

பஸ்ஸின் படி சற்று உயரம். வலது கையால் கைப்பிடிக் கம்பியை இறுகப்பற்றி ஏற எத்தனித்தார். அதற்குள் யாருமே எதிர்பாராத விதமாய் 'விலுக்' என்று முன்சீப் புஜத்தில் ஆழமாய் ஒரு வெட்டு மின்னலாய் இறங்கியது! விகாரமாய் அலறிய முன்சீப், தடுமாறி சரிந்து விழுவதற்குள் தாங்கிப்பிடித்து அவரது ரிவால்வரை உருவி எடுத்தான் வெட்டியவன். அதற்குள் மல்லாந்து விழுந்த முன்சீப் விழி பிதுங்க ''லேய் நீ...யா...ல...'' என்று அலறும்போதே பஸ்ஸின் பின்புறம் சீமைக்கருவைப் புதருக்குள்ளிருந்து இன்னும் இரண்டு பேர் வீச்சரிவாளுடனும் கண்டங்கோடாலியுடனும் பாய்ந்தனர். கீழே கிடந்த முன்சீப்பைத் துடிக்கத் துடிக்க மாறி மாறி 'சத் சத்'தென்று வெட்டினர். ஒவ்வொரு வெட்டும் முன்சீப் உடலைப் பாளம்பாளமாய் பிளந்து உருக்குலைத்தது. தரையெல்லாம் பீய்ச்சி அடித்த ரத்தமயம்! பஸ்ஸின் பக்கவாட்டில் ரத்தம் தெறித்து கோடுகோடாய் ஒழுகியது. இமைக்கும் நேரத்தில் எல்லாம் முடிந்து போனது. என்ன நடக்கிறதென்று யாருக்குமே பிடிபடவில்லை. அதிர்ச்சியில் உறைந்து போயிருந்தவர்களுக்குச் சுயநினைவு திரும்பும்முன் டயரைத் தேய்த்தபடி பஸ் தாறுமாறாய் பாய்ந்து கிளம்பியது. வெறிதீர முன்சீப்பை வெட்டியவர்களில் இரண்டு பேர், துடிதுடித்த உடலை நிதானமாய் தரதரவென்று இழுத்துச் சென்று ஆலமரத்தடியில் படையல் வைத்தது போல் பரப்பினர்.

கொஞ்ச தூரம் தள்ளி, ஒரு கையில் சற்றுமுன்வரை முன்சீப்பின் இடுப்பிலிருந்த ரிவால்வரையும் மறுகையில் அவர் புஜத்தில் முதலில் இறங்கிய ரத்தம் சொட்டும் அரிவாளையும் ஏந்திப்பிடித்துச் சலனமின்றி நின்றுகொண்டிருந்தான் சீவலப்பேரி பாண்டி! அவன்... முன்சீப்பின் நம்பிக்கைக்குரிய அதே மெய்க்காப்பாளன்!

**து**ணிச்சலிலும் கம்பீரத்திலும் முன்சீப் ஒரு சிங்கம் போல... சுற்றுப்பட்டிகளிலும் ஊர் ஊருக்கு அவரது வயல்கள் விரிந்து கிடந்தன. முன்சீப் கச்சேரிக்குள் நுழைந்தால் போதும்... ஏட்டையாவிலிருந்து ரைட்டர் வரைக்கும் எஸ்.பி-யைப் பார்த்ததுபோல எழுந்து நின்று மரியாதை செய்வார்கள். அவ்வளவு செல்வாக்கு! பாளையங்கோட்டையில் வசிக்கும் அதிகாரிமார்கள் நல்ல ஜாதிமாடுகளாய் வாங்கி முன்சீப்பின் தொழுவத்தில் விட்டிருப்பார்கள். அவற்றைப் பராமரித்து, பால் கறந்து, அதிகாரிகளின் வீடுகளுக்குத் தினமும் முன்சீப்பின் ஆட்கள் கொண்டுபோவார்கள். ஒரு காரியமாய் மேலதிகாரியை முன்சீப் பார்க்கப் போகிறார் என்றால், அவர் கூடப்போவதே பெரிய கௌரவம்தான்!

''ஐயா... எனக்கு ஒங்களவிட்டா நாதியேது... நீங்கதாம் என்னைக் காப்பாத்தோணும்...'' என்று அவர் காலில் போய்விழுந்தால், காப்பாற்றி விடுவார். அதையிட்டு எந்தப் பகை வந்தாலும் கைவிடாத தைரியமும் தாட்டியமும் அவருக்கு இருந்தன. பொழுது விடிந்தால் பத்துப் பேராவது ''அவம் அப்படிச் செஞ்சாம்யா... இவம் இப்படிச் செஞ்சாம்யா... இந்தப்



வந்துவிடுவார்கள்.

ஊர்மேடையில் உட்கார்ந்து முன்சீப் பேசுவார். சம்பந்தப்பட்டவர்கள் கட்டுப்படாமல் பதில் சொன்னால், பிராது சொல்லி வந்தவனை ஒரு பெட்டிஷன் எழுதி போலீஸில் கொடுக்கச் சொல்வார். பின் அவரே நேரில் போய், ''இன்னின்ன செக்ஷன்கள்ல கேஸ் போடுங்கள்...'' என்று யோசனையும் சொல்வார். அவர் சொல்படி கச்சேரியில் கேஸ் எழுதிவிட்டால், எவ்வளவு பெரிய வக்கீலை வைத்து வாதாடினாலும் ஜெயிலுக்குப் போவதிலிருந்து தப்பிக்க முடியாது.

சீவலப்பேரியில் மட்டுமில்லாமல், இவரது நிலங்களைப் பார்க்கப் போய்வரும் சுற்றியுள்ள ஊர்களிலெல்லாம்கூட அவர்முன் இப்படி ஊர் வில்லங்கம் வலிய வந்து நிற்கும். முன்சீப்பிடம் உண்மையைச் சொல்லி நியாயம் பெற்றவர்களும் உண்டு. தனக்கு வேண்டாதவர்களைப் பற்றி இல்லாததைச் சொல்லிப் பழிதீர்ப்பவர்களும் இருந்தார்கள்.

பாண்டியின் குடும்பம்கூடப் பல வருடங்களுக்கு முன் வசதியாய்த்தான் இருந்தது. பாண்டியின் அண்ணன் மலையாண்டி சொந்தமாய் டூரிங் டாக்கீஸ் வைத்திருந்தார். அரிசி வியாபாரமும் அமோகமாய் நடந்து கொண்டிருந்தது. ஒரு நாள் டூரிங் டாக்கீஸில் நல்ல கூட்டம். அன்றைக்குப் பார்த்து அந்தப் பகுதியில் பல கொலை – கொள்ளை வழக்குகளில் சம்பந்தப்பட்டு போலீஸாரால் தேடப்பட்டு வந்த ராஜா என்ற பிரபல கொள்ளைக்காரன், தன் நண்பன் ஜெயில் கொம்பையா என்பவனுடன் பட்டுவேட்டி, சட்டையோடு பகிரங்கமாய் டூரிங் டாக்கீஸ் பக்கம் குடிபோதையில் வர... கூட்டம் சிதறி ஓடியது. அந்தச் சமயம் பார்த்துத் தற்செயலாய் முன்சீப்புடன் வந்த போலீஸ்காரர்கள் சுற்றி வளைத்தனர். கொள்ளைக்காரன் ராஜா எப்படியோ தப்பி ஓடிவிட, கொம்பையா மட்டும் பிடிபட்டான். இருட்டில் ஆள் தெரியாமல் பாண்டியின் அண்ணன் மலையாண்டியை ராஜா என்று நினைத்த போலீஸார் அடி நிமித்திவிட்டனர். ''நான் மலையாண்டிங்க... ராசா இல்லே...'' என்று சொல்லச் சொல்ல, நம்பாமல் ஜெயில் கொம்பையாவையும் மலையாண்டியையும் கச்சேரிக்கு இழுத்துச் சென்றது போலீஸ். கச்சேரியில் வைத்துக் கொம்பையாவின் பட்டுவேட்டி சட்டையை வரிவரியாய் தோரணமாய்க் கிழித்து, ''நீ கெட்டகேட்டுக்குப் பட்டுவேட்டியால...'' என்று அதையே கட்ட வைத்துவிட்டார்கள்.

விடிந்ததும் மலையாண்டியின் மைத்துனர் கீழப்பாட்டம் பரமசிவத்தேவர் வந்து, ''இவன் மலையாண்டிதான்... கொள்ளைக்காரன் ராஜா இல்ல...'' என்று நிரூபித்து அழைத்துச் சென்றார். கொஞ்ச நாள் கழித்து இன்னொரு களவு கேஸில் மலையாண்டி அநியாயமாய் ஜெயிலுக்குப் போக நேர்ந்தது. மலையாண்டி ஜெயிலிலிருந்து திரும்பி வந்தபோது டூரிங் டாக்கீஸ் நொடித்துப்போய், இருந்த வயல்களும் வழக்குக்காக இரையாகி இருந்தன. வேறு வழியில்லாமல் ''என்னைக் காப்பாத்துங்கய்யா...'' என்று முன்சீப் காலில் விழுந்து, அவரிடம் வேலைக்குச் சேர்ந்தார் மலையாண்டி. அப்போது பாண்டி ரொம்பச் சின்னப் பையன்.

மரகாத்தலை முருகன் கான்ஸ்டபிளாய் இருந்தவன். அவன் தாய்மாமன் மகளைக் கல்யாணம் முடிக்க ரொம்ப ஆசைப்பட்டான். அவள் பெயரில் உயிரையே வைத்திருந்தான். பெண் கேட்டான். மாமன்காரர் சம்மதிக்கவில்லை. வேறு இடத்தில் மாப்பிள்ளை பார்க்கிறார் என்று தெரிந்ததும் அரிவாளோடு போய், ''நா உசுரோடு இருக்கையில

மாமனை மிரட்டினான். வில்லங்கம் முன்சீப்பிடம் வந்தது. மேலதிகாரியிடம் இவர் பேச... முருகனின் வேலை போனது. மறுபடியும் வேலையில் சேர எவ்வளவோ முயன்றான். முன்சீப் தயவில்லாமல் அது நடக்கவில்லை. இதற்கிடையில் முருகனின் முறைப்பெண் கல்யாணத்தை போலீஸ் பந்தோபஸ்தோடு, வேறொரு மாப்பிள்ளைக்கு முன்சீப்பே முன்னின்று நடத்தி வைத்தார். முருகனுக்கு முன்சீப் மீது வெறிபிடித்திருந்தது.

இப்படி நாலா திசைகளிலும் முன்சீப்புக்கு எதிரிகள் அதிகரித்துக்கொண்டிருந்த நேரத்தில், முதல் பஞ்சாயத்து போர்டு தேர்தல் வந்தது. அதுவரையிலும் தாயாய் பிள்ளையாய் இருந்து வந்த கிராமங்களில், தத்தமது ஆட்களைத் தலைவராக்கும் வேகத்தில் வேற்றுமையின் விதை விழுந்த நேரம்... அப்போதெல்லாம் ஜெயித்து வந்த பஞ்சாயத்துத் தலைவர்கள்தான் வோட்டுப் போட்டு சேர்மனைத் தேர்ந்தெடுப்பார்கள். முன்சீப் எந்தப் பதவிக்கும் நின்றதில்லை. ஆச்சரியம்! சீவலப்பேரியிலோ, அதைச் சுற்றியுள்ள ஊர்களிலோ முன்சீப்புக்கு வோட்டுக்கூட இல்லை. ஆனால், சகல ஊர்களிலும் யார் யார் பிரசிடெண்டாய் வரவேண்டும் என்பதை இவரே தீர்மானித்தார். அவ்வளவு செல்வாக்கு! அதையும் மீறிச் சிலர் ஜெயித்து வந்தனர். இவர்கள் சேர்மனைத் தேர்ந்தெடுக்கும் சமயம் சிலரைப் பார்த்துப்பேசி தன் செல்வாக்கால் தான் விரும்பினவரையே சேர்மனாக்குவதில் வெற்றியும் பெற்றார் முன்சீப்.

அப்போதுதான் சீவலப்பேரியைச் சுற்றியுள்ள சகல ஊர்களிலும் முன்சீப்புக்கு எதிராக முக்கியஸ்தர்களின் கோபம் விஸ்வரூபம் எடுத்தது. "ஊரு வெவகாரத்துல இருந்து, கோவிச்சுக்கிட்டுப் போன பொண்டாட்டியைத் திரும்பக் கூப்பிடுறது வரைக்கும் அவரைக் கேட்காம எதுவும் செய்யப்படாதுன்னு நெனைக்கார்... இதுக்கொரு முடிவுகட்டலைன்னா நாம வாழமுடியாதுவோய்... இதையிட்டு என்ன செலவானாலும் சரி... நம்ம தாய் புள்ளைக்குள்ள வரியைப் போட்டாகிலும் கேஸைப் பாத்துக்குவோம். இவரை இப்படியே விடப்பிடாது..." என்ற முடிவுக்கு வந்தனர்.

ஆனால், இதில் இம்மி பிசகினாலும் விபரீதமாகிவிடும் என்பது எல்லோருக்குமே தெரியும். இதை யார் செய்து முடிப்பது என்று யோசிக்கும்போது, அப்போதுதான் கல்யாணம் முடிந்து மாப்பிள்ளை முறுக்கில் திரிந்த பாண்டியைத் தேர்ந்தெடுத்தனர். ஒரு நாள் சிந்துபூந்துறை நயினாரும் ஜெயில் கொம்பையாவும் பாண்டியைச் சந்தித்தனர்.

"ஏல பாண்டி.. ஒங்குடும்பம் இந்த அளவுக்குச் சீரழிய அந்த மனுசர்தாம்ல காரணம்... ஒங்க அண்ணன் மலையாண்டி மழுங்கிப்போயி அவருகிட்டயே அடிமை ஊழியம் பாக்கான். அந்த ஒரு மனுசனால நம்ம தாய்புள்ளக்காரனெல்லாம் எத்தனை பேரு ஜெயிலுக்குப் போயிருக்கானுக தெரியுமால? நீ வீரன்ல... ஒன் ஒருத்தனாலதான் இதுக்கொரு முடிவு பொறக்கணும். நீ ஒனக்காகச் செய்யலல... அவரால பாதிக்கப்பட்ட ஒன் சொந்தக்காரங்களுக்காகச் செய்யப்போறே... எதைப் பத்தியும் கவலைப்படாதல... நாங்க இருக்கோம்... தலைக்கு இவ்வளவுன்னு வரி போட்டாவது கேஸ் நடத்தி ஒன்னைக் காப்பாத்திருவோம். ஒங்குடும்பத்துக்கு பூவுக்கு அஞ்சு கோட்டை நெல்லு குடுத்திருதோம். ரெண்டு ஏக்கர் வயக்காட்டை ஒம்பேருக்கு எழுதி வெச்சுடுதோம். நீ நம்ம சனத்துக்காக செய்யப் போறல... முன்சீப்கிட்ட போய், அவர் கையில கால்ல விழுந்து வேலைக்குச் சேருல... நேரம் வந்ததும் சொல்லுதோம்...



ஒஞ்சித்தப்பாரு மவன் முண்டனும் காரியத்தன்னிக்கிக் கூட இருப்பானுக..." என்றனர்.

ரொம்ப நேரம் யோசித்தான் பாண்டி. பின்னர் தீர்க்கமாய், "சரி..." என்றான். உடனே வெற்றிலைப் பாக்கு எடுத்து உள்ளங்கையில் வைத்துச் சத்தியம் வாங்கினர். அப்புறம் எல்லாமே அவர்கள் நினைத்தபடி கச்சிதமாய் முடிந்தது!

அடிவயிற்றில் குரலெடுத்த அலறலும் அதைத் தொடர்ந்து வேகமாய்க் கிளம்பிய பஸ்ஸின் உறுமலும் ஆற்றின் வடகரையில் எதிரொலித்தன!

வேல்கம்புகளுடன் வடக்கே கரையிலிருந்த முன்சீப்பின் வேலையாட்கள் திடுக்கிட்டுத் திரும்பினர். அக்கரையில் வெறிச்சோடிய அமைதி! 'கெதக்'கென்றது.

"அது என்னலே சத்தம்?"

"............"

"ஏ... நம்ம ஐயாவுக்கு என்னமோ.. ஓடியாங்கலே..."

'ஹோவ்'வென்ற இரைச்சலுடன் முன்னும் பின்னுமாய் பாய்ந்து, ஓடும் தண்ணீரைப் பிளந்து கடந்தனர். ஒரு ஆள் உயரத்துக்குத் தண்ணீர் விசிறித் தெறித்தது. தெப்பமாய் நனைந்து ஈரஞ்சொட்ட முன்னேறினர்.

வந்தவர்கள், ஆலமரத்தடியில் ரத்தம் வழிய பரப்பிக்கிடந்த முன்சீப்பின் அசைவற்ற உடலைப் பார்த்து அப்படியே ஸ்தம்பித்தனர்! விஷயம் விளங்கிவிட்டது!

"எல்லாம் முடிஞ்சு போச்சுல... நம்ம பாண்டிதாம்...ல..." - பேச்சு வராமல் ஒருவன் உடைந்த குரலில் குழறினான். எதிரே கால்களை அகல விரித்து நின்ற பாண்டியின் பார்வை, சத்தம் வந்த திசையில் திரும்பியது. இப்போது அவனது வலது கையிலிருந்த வீச்சரிவாள் இடது கைக்கும், இடது கையில் இருந்த ரிவால்வர் ரத்தம் பிசுபிசுத்த வலது கைக்கும் மாறியிருந்தது. வந்த வழியே தண்ணீருக்குள் சிதறி ஓடினர். இப்போது ஆற்று நீர் இரண்டு ஆள் உயரத்துக்கு விசிறித் தெறித்தது!

வழியிலுள்ள சிற்றூர்களில் பஸ்ஸுக்குக் காத்து நின்றவர்கள், கைநீட்டி மறித்தும் நிற்காமல் கெஜப் புடுங்கில் போன பஸ்ஸின் பக்கவாட்டில் தாரை தாரையாய் ஒழுகிப் படிந்திருந்த ரத்தத்தைப் பார்த்தனர்.

"லேய்... என்னமோ ஒரு செய்கை நடந்திருக்கு... ஓடுங்கல..." பதட்டத்துடன் அவரவர் வீடுகளை நோக்கி விரைந்தனர். வேகமாய் போன பஸ், மருதூர் விலக்கில் நின்றவர்களைத் தாண்டி, வளைவில் சில விநாடிகள் நின்றது. ஒல்லியான ஒருத்தனைச் சிலர் கைத்தாங்கலாக இறக்கினர். மறுகணம் பஸ் பாய்ந்துவிட்டது!

இறங்கியவன், உட்கார்ந்து திருதிருவென விழித்தான். ரத்த ரத்தமாய் வாந்தி எடுத்தான். அவனை ஊருக்குள் தூக்கிக்கொண்டு ஓடினர். இவன் பஸ்

பார்த்தவன். பயந்த சுபாவம்... பாவம். புத்தி பேதலித்துவிட்டது! அவனது தகப்பன்காரர் நடந்ததைச் சொல்ல... விஷயம் கரும்புக்காட்டுத் தீ போல் கனன்று பரவியது.

''சும்மா எவனோ வீம்பொரளி கிளப்புதானுக. ஐயாவுகள நெருங்கி நிக்க முடியுமா? அவரை எதுத்து நெனைச்சித்தாம் பாக்க முடியுமா...'' ரோட்டோர வயல்களில் களையெடுத்துக் கொண்டிருந்த பெண்கள் பேச்சுக்குச் சொன்னாலும், 'நெசமா இருக்குமோ?' என்ற உள்பயத்தில் கைகால் சகதிகளைக்கூட அலம்பாமல், போட்டது போட்டபடிக்குச் சிதறினர்.

சீவலப்பேரிக்குள் ஓடிய காவலாளிகள் முன்சீப் வீட்டில் விஷயத்தைச் சொன்னார்கள். கேட்டவர்களுக்கு உலகமே தலைகீழாய் சுழன்றது. வேலையாய் இருந்த பாண்டியின் அண்ணன் மலையாண்டி சத்தம் கேட்டு வாசலுக்கு ஓடி வந்தார்.

''லே மலையாண்டி, உந்தம்பி பாண்டியும் முண்டனும் முருகனும் சேந்து நம்ம ஐயாவை...'' மேற்கொண்டு சொல்லமுடியாமல் அழுதான் ஒருவன். ஆற்றைப் பார்த்து தலையில் கைவைத்து அழுதபடி மலையாண்டி ஓட.... எல்லோரும் தொய்ந்தனர்.

''இனி யாரை அண்டி நிப்போம்... நாதியத்த எங்களுக்கு 'நான் இருக்கேன்'னு சொல்ல இனி யாரு இருக்கா ஐயா..?'' சுத்துப்பட்டி பச்சேரி குடிசைகளில் புலம்பலுடன் ஏழைகளின் அழுகுரல்கள் ஒலித்தன.

''இந்த மனுசர் இருக்கத்தானே ஊருக்குள்ள களவு, பொய் இல்லாம காப்பாத்தி வந்தாரு. 'ஊர்ல பள்ளிக்கூடம் கட்டி வைச்சேன். புள்ளைகளைப் படிக்க வைங்கல'ன்னு வாய் நிறையச் சொல்லுவாரே... இனி யாரிருக்கா?'' என்று பலர் அலைபாய்ந்தனர்.

''நீங்களே இல்லாம இனி எதுக்காக நாங்க உசிரு பொழைக்கோணும்?'' என்று பலர் கதறித் துடித்து அழுதனர்.

பிரபலமான சீவலப்பேரி சந்தைக்கு எங்கெங்கிருந்தோ மாடு பிடிக்க வந்திருந்த சம்சாரிகளும் யாவாரிகளும் விஷயத்தைக் கேள்விப்பட்டு ''அடடா, பேருபெத்த மனுசராச்சே.. நெனைச்சுப் பாக்கவே முடியலயே.. வில்லங்கம் வெவகாரம்னு போனா வெட்டு ஒண்ணு துண்டு ரெண்டுனு பேசி முடிப்பவராச்சே. இந்த சுத்துப்பத்தில் இவரைப்போல தாட்டியமா இன்னொருத்தர் உண்டுமா? இவர் தைரியத்தில்தானே சந்தைக்கு வந்து போறோம். இனி இந்தப் பேருபெத்த சந்தை பொதர் மண்டியில்லா போகும்..'' என்றபடி தங்கள் ஊர்களுக்குக் கிளம்பினர்.

பலர் போலீஸுக்குப் பயந்து மூட்டை முடிச்சுகளுடன் ஊரைவிட்டுக் குழந்தை குட்டிகளுடன் வெளியேறத் தயாராயினர்.

முன்சீப் இல்லாத சீவலப்பேரியை யாராலும் நினைத்துப் பார்க்க முடியவில்லை.

**அ**ரிவாளை ஆற்றில் கழுவி இடுப்பில் தொங்கவிட்டு பாண்டி நடுவில் வர... இடமும் வலமும் முண்டனும் முருகனுமாய் மூவரும் வேதக்கோயில் பக்கமாய் வந்துகொண்டிருந்தனர்.

ஊரே வெறிச்சோடிக் கிடந்தது. ஆணும் பெண்ணுமாய் மறைந்து நின்று எட்டிப் பார்த்தனர்.

''யே, யாத்தா... பாண்டியும் அவம் சின்னய்யா மவன் முண்டனும்



பாத்ததில்லியே... இதுக்குன்னே ஒண்ணு சேந்தானுகளோ? இனி என்னென்ன நடக்கப்போவுதோ... சொடலமாடா...!'' – பெண்கள் முந்தானையை வாயில் கவ்வியபடி ஒருத்தருக்கொருத்தர் கிசுகிசுத்துக் கொண்டனர்.

எதிரே வந்துகொண்டிருந்தவர்களை பாண்டியின் அண்ணன் மட்டும் நெருங்கினார். ''லே... பாண்டி..! குடியக்கெடுத்திட்டியேல... இந்தப் பாவம் விடுமால... நம்ம ரத்தத்தில துரோகமே கெடையாதல... உங்கூடப் பெறந்த பாவத்துக்கு அந்த அருவாளைக்கொண்டே எங்கழுத்தை அறுத்துக் கொல்லுல... என்னைக் கொல்லுல...'' அலறியபடி பாண்டியின் கழுத்தைப் பிடிக்கப் போனார். அவரை இடதுகையால் விலக்கி லேசாய் தள்ளவும், தடுமாறி நின்றவர் மீண்டும் ''அவருக்கு ஒண்ணுன்னா உசிரையே விட்டுப்புடுவேன்னு அடிக்கொரு தரம் சொல்லுவியல... இப்பம் நம்ம குடும்பத்துக்கு உப்பிட்ட மனுசனை உதிரங்கொட்ட வெச்சிட்டீயல... உங்கள்ல யாருக்குல என்ன கெடுதல் செஞ்சாரு? சொல்லுங்கல...''

பாண்டி முகத்தில் எந்தப் பாவமும் காட்டாமல் லேசாய் குனிந்தபடி நடந்துகொண்டே இருக்க... மலையாண்டி ஓங்கிக் குரலெடுத்து அரற்றியபடி தொடர்ந்தார். தெருக்களெல்லாம் வெறிச்சோடி மயான அமைதி நிலவியது.

''நின்னு சொல்லுங்கல... ஏமுல இப்படிச் செஞ்சீக..?''

'தூர வெலகுல...' என்பதுபோல் பாண்டி நின்று முறைத்தான்.

''பதினெட்டுச் சாதியும் தாயாபுள்ளயா பொழைக்கிற ஊர்ல வேத்துமை வந்துருமேல... இங்க இனி மனுசப்பய குடியிருப்பானால... தாட்டியமான மனுசனை ஏம்ல தரையில சாச்சீங்க..? சொல்லுங்கல...'' – விடாமல் உடைந்த குரலில் கேட்டார் மலையாண்டி.

**கடைவீதியிலிருந்து தலைவிரி கோலமாய் ஓடிவந்தாள் பாண்டியின் மனைவி வேலம்மாள்.**

''எய்யா... இப்பிடிச் செஞ்சிட்டிகளே பாவி மனுசா...ஆ'' கதறி மறித்தாள். தன் பொஞ்சாதியைப் பார்த்ததும் ஏனோ பாண்டியின் கண்கள் லேசாய் கலங்கின.

''நீ வெலவு புள்ளே... நா எனக்காகச் செய்யல...'' அவனது குரல் கம்மிக் கரகரத்தது.

''பெறவு யாருக்காகச் செஞ்சீக? என்னை நெனைச்சுப் பாத்திருந்தா இந்தக் காரியத்தைச் செஞ்சிருப்பிகளா?'' அழுதாள்.

''உடனே மணியாச்சிக்குக் கிளம்பு... உந்தாய் தவப்பன் வீட்டுல போய் இரு. சீக்கிரமா வந்திருதேன்...''

மூவரும் இயந்திரம்போல் நடையின் வேகத்தைக் கூட்டினர். மலையாண்டியும் வேலம்மாளும் அதிர்ச்சியில் கல்லாய்ச் சமைந்தது போல அப்படியே நின்றனர்.

**ஊ**ரின் வடகடைசி எல்லையைத் தாண்டி இருந்த கொல்லுப்பட்டறைத் துருத்தி, பெருமூச்சு விடுவதுபோல் 'புஸ்... புஸ்' என்று சுருங்கி விரிந்து கொண்டிருந்தது. இன்னும் விஷயம் இங்கு எட்டவில்லை. சிலர் சாவகாசமாக உட்கார்ந்திருந்தனர். உலை வாயில் செவேலென்று கங்கு கனன்று பொறி பறந்து கொண்டிருந்தது.

''கலப்பைக்குக் கொழுவடிக்கக் குடுத்து எத்தனை நாளாச்சுவேய்... விட்டா அடுத்த பூவுக்குத்தாம் தருவீருபோல. சீக்கிரம் குடும்யா'' என்று நச்சரித்துக்கொண்டிருந்தவன், அருகில் அசலூர்க்காரர்கள் இருவரைப்



பார்த்ததும், ''என்ன வேய், உம்ம ஊரு ஆசாரி எங்கே போனார்? இங்கே வந்து குத்தவச்சிட்டீக...'' என்றான்.

''சாவமாட்டாம இருக்காம்... செறுக்கிபுள்ள... என்ன இருந்தாலும் உம்ம ஊரு கைப்பக்குவம் வருமா வேய்'' என்றபடி யாரையோ எதிர்பார்த்து அடிக்கொருதரம் திரும்பிப் பார்த்துக்கொண்டிருந்தனர். மூச்சு வாங்கத் தன் சகாக்கள் இருவருடனும் பாண்டி வந்ததுமே விருட்டென்று எழுந்து நெருங்கினர். ''முடிச்சுட்டேன்... ஆகவேண்டியதை ஒடனே பாக்கச் சொல்லுங்கல... உம்... சீக்கிரம் கிளம்புங்க'' என்றபடி மீண்டும் ஓட்டமும் நடையுமாய் பாண்டியும் சகாக்களும் வடக்குப் பார்த்து நடந்தனர். உடனே கொல்லுப்பட்டறையில் உட்கார்ந்திருந்த அசலூர்க்காரர்கள் இரண்டு பேரும் தெற்குப் பார்த்து ஒத்தையடிப் பாதையில் சிட்டாய்ப் பறந்தனர்.

வெகு தூரத்தில் வயல்களுக்கு நடுவில் நிற்கும் வெயிலாச்சியம்மன் கோயில் மேட்டில், படபடப்புடன் காத்திருந்த ஏழெட்டுப் பேர், எதிரே வேகமாக வருபவர்கள் தலை தெரிந்ததும் சடக்கென்று கொத்தாக எழுந்து நின்றனர்! வந்தவர்கள் விஷயத்தைச் சொன்னார்கள். சிறிது நேரம் மௌனம்... பின் ஒவ்வொருத்தரும் நிம்மதிப் பெருமூச்சுடன் ஆளுக்கொரு திசையில் விரைந்து கலைந்தனர்.

ஊரே பாண்டியின் பழைய நாட்களை நிதானமாக அசை போட்டது.

சீவலப்பேரிச் சந்தைக்குக் காங்கையத்திலிருந்து ஒரு காரிக்காளை



களைப் பார்த்த சந்தையில் இதுமட்டும் துணுக்காய்த் தெரிந்தது. அதை ஓட்டிக்கொண்டு வரும்போதே, ஒரு வில் வண்டி முன்னால் வர, பின்னால் மூக்கணாங்கயிற்றில் வரிசையாய் தும்புக்கயிறு கட்டிப் பக்கத்துக்கு நாலு பேராக எட்டுப் பேர் பிடித்து வந்தனர். கௌரவத்துக்கு வளர்த்த ஏதோ ஜமீன் வீட்டு மாடு என்றும், இதன் அலும்பு தாளாமல் சந்தைக்குக் கொண்டுவந்துவிட்டனர் என்றும் பேசிக்கொண்டனர். அதன் திமில் மட்டும் முழங்கை உயரத்துக்குச் சிவலிங்கம்போல் கரேலென்று விம்மி நின்றது. முன்னங்காலால் பரபரவென்று புழுதி கிளம்பத் தரையைப் பிறாண்டிப் பெயர்த்தது. வாகாய் சீவிவிடப்பட்ட கூர்மையான கொம்பால் அது கட்டிக்கிடந்த வேப்பமரத்தைச் சிலுப்பி இடித்தது. உள்ளங்கை அளவு ஈரப்பட்டை பெயர்ந்து தெறித்தது. சம்சாரிகள் எட்ட நின்று வாயைப் பிளந்து பார்த்தனர். யாவாரிகளுக்கு ரொம்ப ஆர்வம்.

''ஜல்லிக்கட்டுக்கு வளர்ப்பவர்கள்... சொன்ன விலை தருவார்கள்'' என்று விலைபேசிப் பார்த்தனர். திகையவில்லை. கேள்விப்பட்டு வேகமாக முன்சீப் அங்கு வந்தார். பார்த்ததுமே அதன் கம்பீரம் அவருக்குப் பிடித்துப் போனது. மெள்ள அதன் அருகில் போனார். ஏதோ மந்திரத்துக்குக் கட்டுப்பட்டதுபோல் தலையைக் குலுக்கிச் சாதுவாய் நின்றது. மறுவிலை பேசாமல் வாங்கிச்சென்று தன் தொழுவத்தில் கட்டி வைத்தார். அதனிடம் யாரும் லேசில் நெருங்கமுடியாது. முன்சீப் ஒருத்தர் தவிர, யாருக்கும் கட்டுப்படாது. ஒரு நாள் இவர் பாளையங்கோட்டைக்குப் போயிருந்த சமயம் தும்புக்கயிற்றை அறுத்துக்கொண்டு ஊருக்குள் கிளம்பிவிட்டது. வேலையாட்கள் நெருங்கப் பயந்தனர். இவர்கள் விரட்டிப் போவதும், அது நின்று திரும்பியதும் ஓடிவருவதுமாக... தெருவில் ஒரே வேடிக்கைதான். வழியில் நின்றுகொண்டிருந்த பாண்டி ''நான் இதைப் புடிச்சு தொழுவத்தில அடைக்கவா'' என்றதும் முன்சீப்பின் வேலையாட்களுக்குச் சிரிப்பு தாங்கவில்லை.

''ஏலே நீயா... எங்கலே போயிப்புடி'' என்றனர். மாட்டைக் கவனமாக நெருங்கினான் பாண்டி. சற்றும் எதிர்பாராதவண்ணம் பாய்ந்து திமிலைப் பற்றியதுதான் தாமதம்... ஒரு உலுப்பு உலுப்பிப் பாண்டியைத் தூர வீசியது. தடுமாறிக் குப்புறவிழுந்த பாண்டியைப் பார்த்து ''ஒனக்கெதுக்குல இந்த வீம்பு?'' என்று விலகி நின்று வேடிக்கை பார்த்த கூட்டம் சிரித்தது.

காளை ஒரு கணம் நிதானித்துவிட்டு ஆற்றைக் கடந்து வயலுக்குள் இறங்கி வாலை விடைத்து நிமிர்த்தியபடி நாலுகால் பாய்ச்சலில் கிளம்பியது. விடாமல் பாண்டி தொடர... வேலையாட்களும் கைகளில் கயிற்றுடன் வயல் சகதிக்குள் தொடர்ந்தனர். அப்போதுதான் நடவு முடிந்து நின்ற நெற்பயிர்கள், காலடியில் மிதிபட்டுச் சிதைந்தன. ஓடிய மாடு மருதூரைத் தாண்டி மரகாத்தலை குளத்தங்கரை மேட்டில் நின்று சற்றுத் தகிப்பாறியது. தன்னை ஒருவன் விடாமல் தொடர்ந்து வருவதைப்

எத்தனித்தது. அதற்குள் பாண்டி, சரேலென்று காளைமீது பாய்ந்தான். இப்போது ஒருகை திமிலை வளைத்திருக்க, பக்கவாட்டில் பாயவிடாமல் கூரிய கொம்பை மறுகை இறுக்கிப் பிடித்திருந்தது. தரதரவென்று தட்டாமாலை சுற்றுவதுபோல் காளை சுற்றியது. அவனது பிடி தளரவில்லை. உடும்பாய் ஒட்டியிருந்தான். மிரண்டுபோன காளை, திடீரென்று நிகா பிடிபடாமல் பாண்டியுடன் குளத்தங்கரையில் ஏறியது. மறுபக்கம் சரிவாய் இருந்ததால் தடுமாறி விழுந்தது. ''ம்மா'' என்ற ஓலத்துடன் தலையைத் தரையில் வைத்து அப்படியே பம்மிப் படுத்தது காளை. கயிற்றுடன் தொடர்ந்து வந்த வேலையாட்கள், மூக்கணாங்கயிற்றை மாட்டியதும் பசு போல வந்து தொழுவத்தில் அடைந்தது.

முன்சீப் வந்ததும் விஷயத்தைச் சொன்னார்கள். ''அவம் எங்க இருந்தாலும் கூட்டிட்டு வாங்கல'' என்று ஆளனுப்பினார். பயந்துகொண்டே வந்து நின்ற பாண்டியை ''சபாஷ்'' என்று தட்டிக்கொடுத்தார். ''மத்தவனெல்லாம் சாணி அள்ளப் போங்கல'' என்றவர், ''ஏல பாண்டி... நீ இங்க வேலைக்கு வர்றியாலே'' என்ற இந்த வார்த்தைக்கே தவம் இருந்ததுபோல சந்தோஷமாய் தலையாட்டினான்.

அன்றிலிருந்து முன்சீப்பின் மாட்டுத்தொழுவத்தில் மாடு கன்றுகளைக் கவனித்துக்கொள்ள வேண்டியது பாண்டியின் பொறுப்பு. முன்சீப்பிடம் நல்ல பேர் எடுப்பதே இவன் குறியாய் இருந்தது. ராப்பகலாய் பாடுபட்டு மாடுகன்றுகளைப் பராமரித்தான். கொஞ்ச நாள் கழித்து தற்செயலாய் தொழுவத்துக்கு வந்த முன்சீப்புக்கு ஆச்சரியம்... வழக்கமாய் கோமிய நாற்றமெடுக்கும் தொழுவம், சுத்தமாய் பளபளவென்றிருந்தது. அலுப்பில் அசந்து மாடுகளுடன் மாடாய் தரையில் சுருண்டு தூங்கிக்கொண்டிருந்தான் பாண்டி. நின்று வாஞ்சையாய் பார்த்த முன்சீப், லேசாய் செருமினார். பாண்டி பதறி எழுந்ததும் ''ஒனக்கு வேற வேல என்னல தெரியும்?'' என்றார்.

''நீங்க காலால இட்ட வேலையை நான் தலையால செய்யுதேன்யா...''

முன்சீப் சிரித்தார். ''சரி... தொழுவத்தை மத்தவங்க பாத்துக்கட்டும்... நீ எங்கூடமாட ஒத்தாசைக்கி இருல'' என்றார். உற்சாகமாய் சம்மதித்தான். அவருக்குக் கொஞ்சங்கொஞ்சமாய் அவனைப் பிடித்துப் போனது. முழுசாய் நம்பத் தொடங்கினார்.

இதற்கென்றே காத்திருந்த பாண்டியும் இன்னும் சிலரும் அடுத்து நடக்கப்போவதற்குச் சந்தர்ப்பம் பார்த்திருந்ததை, முன்சீப் நினைத்துக்கூடப் பார்த்திருக்கவில்லை!



[illegible] போலீஸ் [illegible] கொலையாளிகளைத் தேடி இறங்கியது. போட்டது போட்டபடிக்கு ஆணும் பெண்ணுமாய் புள்ளைகுட்டிகளுடன் பருத்திக்காட்டுக்குள்ளும் பனங்காடுகளுக்குள்ளும் கஞ்சி தண்ணி இல்லாமல் பயந்துபோய் பம்மிக் கிடந்தனர்.

'இளவட்டப் பையன்மார் மூணு பேர் மட்டும் இவ்வளவு பெரிய கொலையைச் செய்திருக்க முடியாது... இதற்குப் பெரிய பின்னணி இருக்கும்...' என்று கருதியது போலீஸ். சுற்றுப்பட்டிகளில் தேர்தலில் நின்று முன்சீப்பால் தோற்றுப்போன ஏழு முக்கியஸ்தர்களை சில தினங்களில் கைது செய்தது போலீஸ். பாண்டி, முண்டன், முருகன் மூவரையும் போலீஸ் நாலா திசைகளிலும் சல்லடை போட்டுச் சலித்தனர். யாரும் அகப்படவில்லை!

காட்டுக்குள் ஒத்தையடிப்பாதை வழியாகவே மூவரும் நடந்தே கங்கைகொண்டான் அருகே ரோடு ஏறினர். எதிரே வந்த லாரியின் விளக்கு வெளிச்சத்தில் மூன்று பேர் வேகவேகமாய் நடந்துபோனதைப் பார்த்ததும் தற்செயலாய் மணியாச்சியை நோக்கிப் போய்க்கொண்டிருந்த போலீஸ் ஜீப், தன் ஹெட்லைட்டை அணைத்துவிட்டுக் கண்காணித்தது. மூவரும் ரோட்டோரமாய் இருந்த ஒரு பாறையின் அடியில் ரிவால்வரை ஒளித்து வைத்துவிட்டு இளைப்பாறினர். சுற்றி வளைத்தது போலீஸ். ஒரு கணம் சுதாரித்த பாண்டி, இருட்டுக்குள் ஓடினான். முண்டனும் முருகனும் ஆளுக்கொரு திசையில் ஓடித் தப்பினர். மூவரையும் ராப்பகலாய்த் தேடியது போலீஸ். யாருமே அகப்படவில்லை! இதே சமயம், பாண்டியின் தாயார் நோய்வாய்ப்பட்டுப் படுத்த படுக்கையாய் கிடந்தார். எப்படியும் பாண்டி வருவான் என்ற நம்பிக்கையில் மாறுவேடத்தில் ஊருக்குள் காத்திருந்தது போலீஸ்.

ஒரு நாள் நடுச்சாமத்தில் பாண்டியின் வீட்டில் ஒரே களேபரம்! சுவரோரமாய்க் கோரைப்பாயில் கிடந்த வயதான தாயாரின் தலைமாட்டில் உட்கார்ந்திருந்த மலையாண்டிக்குத் திடீரென்று யாரோ வந்து செருமி நின்றதும் திடுக்கிட்டது. இருட்டில் முகம் தெரியவில்லை. ''யார்ல அது?'' என்றபடி எழுந்து லாந்தர் விளக்கின் திரியைத் தூண்டினார். நின்றது பாண்டியேதான்!

''லே... இங்க பாருல... நீ ஓம்பாட்டுக்குச் செஞ்சுட்டுப் போயிட்ட... அன்னியிலிருந்து ஊருக்குள்ள மனுசமக்க நடமாட முடியலலே. கண்ணுல தட்டுப்பட்டவனையெல்லாம் போலீஸ் புடிக்கான். எல்லோரும் கருவ முள்ளுக் காட்டுக்குள்ளே அன்ன ஆகாரமில்லாம கெடக்கானுக. நம்ம வீடு நொழைஞ்சு, இருந்த ஒம்போது மூட்டை நெல்லயும் ரெண்டு மூட்டை அரிசியையும் கொள்ளையடிச்சுட்டானுக. பாத்திர பண்டம் மிச்சமில்ல. பாருலே... கதவு, நெல, ஜன்னல் அம்புட்டையும் இடிச்சு எடுத்திட்டுப் போயிட்டானுக. என்ன ஏதுன்னு பாக்க வந்த என்னையும் போலீஸ் புடிச்சிட்டாம்ல. அப்புறம் முன்சீப் ஐயாவோட தம்பி வந்து 'பாவம்... மலையாண்டி நல்லவன். அவனைப் புடிக்காதீங்க'ன்னு சொல்லத்தாம்ல விட்டானுக. ஆத்தா ஓம் பேரைச் சொல்லிக்கிட்டே பத்து நாளா கஞ்சி தண்ணி குடிக்காமக் கெடக்கா. இனி பொழைக்கமாட்டா... இதெல்லாம் ஒன்னாலதாம்ல...''

சத்தம் கேட்டுக் கிழவி லேசாய்க் கண்திறந்தார்.

பாண்டியைக் கண்டதும் அவரது கண்கள் விரிந்தன. எதையோ சொல்ல வாயெடுத்தார். சத்தம் வராமல் வாயைத் திறந்து திறந்து மூடினார். பாண்டி அருகில் போய்த் தலைமாட்டில் உட்கார்ந்தான். மௌனமாய்

தடவிக் கொடுத்தார். என்ன இருந்தாலும் பெற்றவர் இல்லையா? பாண்டிக்கு அழுகை முட்டியது. "அழுவாத ஆத்தா... நா போலீஸ்ல புடிபடமாட்டேன்..." கிழவிக்குக் கரகரவென்று கண்ணீர் வழிந்தது.

"ஆமால... நீ புடிபடாம திரி... இங்க ஊர்ல இருக்கவமெல்லாம் போலீஸ்காரங்கிட்ட சிக்கிச் சீரழியட்டும். ஒன்னை நானே புடிச்சுக் கொடுக்கப் போறேம்ல..." மலையாண்டி ஆங்காரமாய் பாண்டியை நெருங்க, "சீ... தூர வெலகுல.. நெருங்கினே மூத்தவம்னு பார்க்கமாட்டேன்..." பாண்டி ஆவேசமாய் எழுந்தான். மலையாண்டிக்குக் கொஞ்சம் பயம் தட்டிவிட்டது. அதற்குள் எப்படியோ பாண்டி வந்திருக்கும் விஷயத்தை போலீஸ் மோப்பம் பிடித்துவிட்டது.

"பீப்... பீப்..பீ ப்..!"

போலீஸாரின் ஒற்றை விசில் சத்தம் நடுச்சாம அமைதியைக் கிழித்தது. உடனே பதிலுக்கு வேறு திசைகளிலிருந்தும் போலீஸ் விசில்களின் சத்தம் ஊரை உசுப்பியது. பாண்டி சுதாரித்து வெளியேறி, சந்தையைப் பார்த்துச் சாவகாசமாய் வீதியில் நடந்தான். சத்தம் கேட்டு எழுந்த சிலர் வீடுகளுக்குள் இருந்தபடி, சாமக்கோடாங்கி குறிசொல்ல வரும்போது மறைந்திருந்து பார்ப்பதுபோல் பார்த்தனர். அப்போது பள்ளிக்கூடத்துப் பக்கமிருந்து ஒரு போலீஸ் படையே வேகமாய் வந்து கொண்டிருந்தது. பலரது கைகளில் பெரிய துப்பாக்கிகள் இருந்தன. முன்னால் வந்த சப்-இன்ஸ்பெக்டர் கைத்துப்பாக்கி வைத்திருந்தார்.

"சி.ஐ.டி. விசில் ஊதுறான். ஏட்டு, நீரு கோனாக்கமாரு தெரு வழியா வாரும்... ஏய்... ஓம்மத்தாம்யா... நீரு வேதக்கோயில் பக்கமா போயி நில்லும்... நீங்க ரெண்டு பேரும் ஆத்தங்கரைப் பக்கம் போங்க. மத்தவம் எம் பின்னாடியே வரணும்... புரிஞ்சுதா... எவனாச்சிலும் இருட்டுல ஓடுற மாதிரி தெரிஞ்சா மொழங்காலுக்குக் கீழே சுட்டுப்பிடணும்..." வியூகம் வகுத்து வந்தனர்.

எதிரில் கூட்டமாய் வரும் போலீஸாரைப் பார்த்ததும் இன்னும் வேகமாய், நேருக்குநேராய் போலீஸாரை நெருங்கினான் பாண்டி. வீடுகளுக்குள் மறைந்து நின்று பார்த்துக்கொண்டிருந்தவர்களுக்கு வியர்த்துக் கொட்டியது. கைத்துப்பாக்கியை உயர்த்திப் பிடித்த சப்-இன்ஸ்பெக்டர் "யார்ல நீ?" என்றார். "நான்தாம்யா" என்றபடி அருகில் நெருங்கிச் சன்னமான குரலில் "பாண்டி வந்திருக்காம்யா. எங்கண்ணால பார்த்தேன். அவனுக்கும் மலையாண்டிக்கும் கைகலப்பு... ஓடிப்போய் ஏட்டையாகிட்டச் சொன்னேன். விசிலெடுத்து ஊதினாரு. உங்க யாரையுமே காணோம். போயி ஐயாகிட்டச் சொல்லிச் சீக்கிரமா கூட்டியாடான்னு அனுப்பிச்சாருய்யா..."

"இப்ப பாண்டி எங்கல இருக்காம்?"

"சொடலமாடன் கோயில் பக்கமா போனாம்யா... வேகமா போனா புடிச்சுப்புடலாம்யா..."

"சபாஷ்லே..." சுடலைமாடன் கோயிலைப் பார்த்து போலீஸ் படை ஓடியது! மறுகணம் எதிர்திசையில் காட்டுக்குள் புகுந்து ஓட்டம் பிடித்தான் பாண்டி! ஓட்டத்தில் அவன் புயலைப் போல!

அடுத்த ஒரு வாரம் கழித்துப் பாண்டி, முண்டன், முருகன் மூவரும் மதுரை கோர்ட்டில் சரணடைந்ததைக் கேள்விப்பட்டு ஊரே நிம்மதிப் பெருமூச்சுவிட்டது. ஒருவழியாய் போலீஸ் கெடுபிடியும் ஓய்ந்தது!



தாமிரபரணி ஆற்றுப் பாலத்தை ஒட்டிய கொக்கிரகுளம் கோர்ட்டைச் சுற்றி நூற்றுக்கணக்கில் போலீஸார் நின்றனர். வேடிக்கை பார்க்கக் கூட்டம் அலைமோதியது. "கோர்ட்டுக்குள்ளே அநாவசியமா ஒரு பய நிக்கப்பிடாது... சாட்சிகளைக் கலைச்சிப்பிடுவானுக. உம்... தூர வெரட்டுங்க..." அதிகாரி உத்தரவிட... உள்ளே நின்றவர்களை போலீஸ் விரட்டியடித்தது.

பாண்டி, முண்டன், முருகன் ஒரு வண்டியிலும் 'கொலைக்குத் தூண்டினார்கள்' என்று கூறி போலீஸ் கைதுசெய்த சுற்றுப்பட்டி முக்கியஸ்தர்கள் ஒரு வண்டியிலும் சாட்சிகள் ஒரு வண்டியிலும் தனித்தனியாக கோர்ட்டுக்குக் கொண்டுவரப்பட்டனர்.

"லேய்... பாண்டிக்கு ஆஜராகப் போறது லேசுப்பட்ட வக்கீலில்ல... ரத்தினவேல் பாண்டியனாக்கும். இந்த கேஸ்ல என்.டி. வானமாமலை, பாலாஜி, இப்படி பேரு பெத்த வக்கீல்கள்லா எறங்கிருக்காக. இவக வாதத் தெறமையைக் கேள்விப்பட்டிருக்கேன். நேர்ல பாக்கலாம்னு வந்தா அடிச்சில்லா வெரட்டுதானுக..." – திரண்டு நின்ற கூட்டம் தங்களுக்குள் முணுமுணுத்துக் கொண்டது.

"ஜட்ஜ் மட்டும் லேசுப்பட்டவரா...? நரசிம்மய்யராக்கும்! ஜட்ஜாகணும்னே பொறந்தவருல்லா... ஹைகோர்ட் என்னல, சுப்ரீம்கோர்ட் போனாலும் ஐயரு தீர்ப்புக்கு அப்பீல் ஏதுல..?"

போலீஸார் திகைத்தனர். "சார், அரசாங்க வக்கீல்கள்கிட்ட கலந்துபேசி கேஸ் ஜோடிச்சோம். இங்க பார்த்தா பெரிய பெரிய வக்கீல்லாம் வந்து நிக்காக... கேஸ் நிக்குமா சார்? விடுதலை ஆகிப் போச்சுன்னா நம்ம மானம் போயிடுமே..." – ஒரு கான்ஸ்டபிள் புலம்பினார்.

"நீ வேற பயமுறுத்தாதல... எப்படிப் போகுதுன்னு பார்ப்போம். கடைசியிலே அதுக்கும் ஒரு வழி இருக்கு..." என்றார் ஏட்டையா.

பத்தே நாட்களுக்குள் தொடர்ந்து வழக்கை ஒரே மூச்சில் விசாரித்துத் தீர்ப்புச் சொல்லிவிடத் தீர்மானித்தார் நீதிபதி. கோர்ட் கலைந்த பின்னாலும் இரவு பதினோரு மணி, பன்னிரண்டு மணி வரையில் கோர்ட்டிலேயே இருந்து வாதப் பிரதிவாதங்களை ஒழுங்குப்படுத்தி எழுதி வைத்துவிட்டுத்தான் வீட்டுக்குப் போவார். இது அவரது வழக்கம். பாவம், அவரது டவாலிகள் பாடுதான் ரொம்பக் கஷ்டம்.

வழக்குக் காரசாரமாக நடந்து கொண்டிருந்தது. வக்கீல்களின் குறுக்கு விசாரணைகளில் சாட்சிகளின் விழி பிதுங்கியது. நாளுக்கு நாள் கொக்கிரகுளம் கோர்ட்டில் ஜனக்கூட்டம் அலைமோதியது.

வழக்கு நடந்துகொண்டிருந்த ஆறாவது நாள்... யாருமே சற்றும் எதிர்பாராதது நடந்தது!

கோர்ட்டுக்குள் சைக்கிளில் வந்து இறங்கிய போஸ்ட்மேன் தபால்களைக் கொடுத்துக்கொண்டே இந்த வழக்கு நடக்கும் ஹால் பக்கமாய் வந்தார். சைக்கிளை ஸ்டாண்ட் போட்டுவிட்டு கேரியரில் இருந்த பெரிய பார்சலை எடுத்தார். அது நீதிபதி நரசிம்மயரின் பெயருக்கு வந்த ரெஜிஸ்டர் தபால். கோர்ட் நடந்துகொண்டு இருக்கவும் குமாஸ்தாவைக் கூப்பிட்டு, "ஜட்ஜ் ஐயா கையெழுத்துப் போட்டாதாம் குடுக்க முடியும்" என்றார்.

அதைத் தற்செயலாய்க் கவனித்த நீதிபதி, போஸ்ட்மேனைத் தன்னிடம் வரச்சொல்லி சைகை செய்தார். பவ்யமாய்க் குனிந்து பணிவுடன் பார்சலை ஒப்படைத்துவிட்டுக் கையெழுத்து வாங்கிக்கொண்டு கிளம்பினார்

பார்சலைப் பார்த்தார் நீதிபதி. மேலே 'மிகவும் அவசரம்' என்று எழுதப்பட்டிருந்தது. சாவகாசமாய்ப் பிரித்த நீதிபதி, அதிர்ந்து திடுக்கிட்டார்!

நொடிப்பொழுதில் கோர்ட்டே நிசப்தமானது. எல்லோரும் என்ன ஏதென்று புரியாமல் நீதிபதியை வைத்த கண் வாங்காமல் பார்த்தனர். அவரது இடது புருவமும் உதடுகளும் லேசாய்த் துடித்தன. பார்சலுக்குள் கொம்புப் பிடிபோட்ட ஒரு வீச்சரிவாள் தகதகத்தது! அதனடியில் ஒரு கடுதாசியும் இருந்தது! பதட்டம் விலகாமல் அதை உருவிப் பிரித்தார். 'மகா கனம் பொருந்திய நீதிபதி, சர்வஸ்ரீ நரசிம்மய்யருக்கு... நீரு கேஸை விடிய விடிய விசாரியும்... அதையிட்டுப் பாதகமில்லை. யாருக்காச்சிலும் தண்டனை சொன்னீரு... முன்சீப் கதிதாம்வேய் உமக்கும். தீர்ப்பு எழுதும்போது இது மனசுல இருக்கட்டும்...' – அனுப்பியது இன்னார் என்ற விவரம் இல்லை. எங்கிருந்து வந்தது என்ற தபால் முத்திரையும் தெளிவாய் இல்லை.

பார்சலில் இருந்த அரிவாள் கைநழுவி நீதிபதியின் காலடியில் 'டணால்' என்ற ஓசையுடன் விழுந்தது. "குடிகெட்டுச்சு போ... இது எவம் செஞ்ச காரியமல...?!" எல்லோருமே பதட்டத்துடன் முணுமுணுத்தனர்.

"ஐயா எப்பேர்ப்பட்ட நீதிமான்... அவருக்கே அருவாளை அனுப்பிப் பயமுறுத்தணும்னா இந்தப் பயலுகளுக்கு எம்புட்டுத் தகிரியம் இருக்கோணும்..." குமாஸ்தாக்கள் கொதித்தனர்.

அருகருகே நிற்க வைக்கப்பட்டிருந்த பாண்டியும் முண்டனும் முருகனும், "இது என்னல புதுக் கூத்தாருக்கு" என்று விழித்தனர். கொலை செய்யத் தூண்டினார்கள் என்று குற்றம் சாட்டப்பட்டு நின்ற முக்கியஸ்தர்கள் நிலைகுலைந்து தத்தமது தலையில் கைவைத்தபடி அப்படியே சரிந்து உட்கார்ந்தனர். கேஸ் என்ன ஆகுமோ என்று பயந்த போலீஸார் மட்டும் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர்.

தன் புருஷனைப் பார்க்க கோர்ட்டுக்கு வந்திருந்த வேலம்மாள் வாய்விட்டு அழுதாள். முக்கியஸ்தர்கள் பக்கம் திரும்பிக் கைகளை விரித்து, "எம்புருஷன் இருந்தும் கைம்பொஞ்சாதியா நிக்கேன். இப்பம் எந்தப் பாவியோ இத வேற அனுப்பி என் தாலியை அறுக்க வழி வெச்சுட்டானே... ஏ ஆண்டவனே..." குமுறிக் குமுறிச் சுவரில் அறைந்து அழுதாள். "உஷ்..ஷ்..ஷ்.. இந்தாம்மா... இது கோர்ட்டு... ஒங்க ஊர் சந்தைக்கடை இல்ல. சத்தம் போடாதே.." டவாலி அமட்டினான்.

வக்கீல்கள் திகைத்து நிற்க... நீதிபதி திடீரென்று எழுந்து தன் சேம்பருக்குள் போனார். அன்றைக்கு கோர்ட் அதோடு கலைந்தது. வக்கீல்களின் அறையில் பதட்டத்துடன் விவாதம் நடந்தது. "கேஸ் நல்லா போயிக்கிட்டு இருக்கப்ப, எந்தக் கிறுக்கனாச்சிலும் இந்தக் காரியத்தைச் செய்வானா ஓய்..? கேஸ் விடுதலை ஆகிடக்கூடாதுன்னு எவனோ இந்தக் காரியத்தைப் பண்ணியிருக்காம்... பிராசிக்யூஷன் தரப்பில், பழைய குற்றவாளி ஜெயில் கொம்பையாவை அப்ரூவரா நிறுத்தியிருக்காங்க. அவம் பேர்ல ஏற்கெனவே ஒரு கொலை கேஸ் பெண்டிங் இருக்கு... இந்த கேஸ்ல அப்ரூவரானா பழைய கேஸ்லருந்து விடுதலை வாங்கித்தருவோம்னு போலீஸ் சம்மதிக்க வெச்சிருக்கணும். இந்த பாயிண்டை கோர்ட்ல சொன்னதுமே அதை ஜட்ஜ் ஆர்வமா குறிச்சார். கொலை நடந்த பஸ் ஸ்டாப்ல டீக்கடை வெச்சிருந்தவனை நேரில் பார்த்த சாட்சியா போட்டிருக்காங்க. ஆனா, அவனோ எதுக்குப் பொல்லாப்புன்னு 'நான்



தூண்டிவிட்டதா போலீஸ் சொல்லும் முக்கியஸ்தர்களில் ஒருத்தர்கூட சம்பவத்தன்னிக்கு அந்த இடத்தில் இல்ல. அப்படிச் சாட்சிகளும் இல்ல. சம்பவத்தன்னிக்கு பாண்டி முன்சீப் கூடவே பாதுகாப்புக்கு வருவதுபோல வந்து வெட்டினது போலில்லாம, முண்டன், முருகன் கூட மறைஞ்சிருந்து வந்து தாக்கினதாதான் எழுதியிருக்காக. கேஸ் நிக்காதுன்னு நாம நெனச்சிட்டிருக்கப்ப, இப்படி நடந்துபோச்சே! இதை எவனோ வில்லங்கமான பயதாம்வே செஞ்சிருக்கணும்... இனி நாம என்ன செய்யறது?"

"இதையே நேரா ஜட்ஜைப் பார்த்துச் சொன்னா என்ன?"

"வேணாம்.. கேஸ் நடக்கிறப்ப சம்பந்தப்பட்ட யாரையும் தனியா பாக்க மாட்டார். போனாலும், 'எதாயிருந்தாலும் கோர்ட்டுலயே வந்து சொல்லுங்க'ன்னு மொகத்துல அடிச்ச மாதிரி அனுப்பிருவார். நாளைக்கு கோர்ட்டுல பார்த்துத்தாம்வே சொல்லணும்..."

மறுநாள் எப்படியோ விஷயம் பரவி, விடிந்ததிலிருந்தே கொக்கிரகுளம் கோர்ட்டில் வேடிக்கை பார்க்கும் கூட்டம் அலைமோதியது. துப்பாக்கிகளுடன் போலீஸார் படைபடையாய் வந்து குவிந்தனர்.

"ஓடுங்கல... இங்க உளுந்தங்களியாலே கொடுக்காம்... வாயைப் பொளந்துட்டு வந்து நிக்கிக... வேலைவெட்டியில்லாம ஈசப்புத்து ஒடைஞ்ச மாதிரி வந்து நிக்கானுகளே..." போலீஸார் பிரம்பைச் சுழற்றி விரட்டினர். கூட்டம் நாலா திசைக்கும் சிதறியது.

கோர்ட் துவங்கும் முன்பே பாண்டி, முண்டன், முருகன் மூவரும் தனியாகவும் மற்றவர்கள் தனித்தனியாகவும் கோர்ட்டுக்குக் கொண்டு வரப்பட்டனர். இவர்களை எல்லோரும் ஆச்சரியமாய் பார்க்க, கைவிலங்குடன் வராண்டாவில் சோர்ந்துபோய் உட்கார்ந்தனர். ஜட்ஜ் வரும் வழி நெடுகிலும் துப்பாக்கியுடன் போலீஸார் இடைவெளிவிட்டு நின்றனர்.

பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பார்த்து "இதெல்லாம் என்ன..?" என்று கேட்டுக்கொண்டே வந்த நீதிபதி, பாண்டி தரப்பினருக்கு ஆஜரான வக்கீல்களில் ஒருவரை எதேச்சையாய் ஏறிட்டார். "நேத்து நடந்தது சின்ன விஷயம்தான். நான் இதைப் பெரிசுப்படுத்தல... தபால்ல வந்த பார்சலுக்கும் நடக்குற கேஸுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லன்னுதான் நெனக்கிறேன். அது எந்தவிதத்திலும் இந்த வழக்கைப் பாதிக்காது. மத்த விஷயத்துல கான்ஸன்ட்ரேட் பண்ணுங்க..." என்றார் சிரித்தபடி. கோர்ட்டுக்கே நிம்மதிப் பெருமூச்சு வந்தது.

மீண்டும் காரசார விவாதங்களிலும் குறுக்கு விசாரணைகளிலும் கோர்ட் களைகட்டியது. விசாரணை நடந்த ஹாலில் ஜூனியர் வக்கீல்கள் கூட்டம் கூட்டமாய் வந்து நெருக்கியடித்து நின்றனர். அடுத்த சில தினங்களில் வழக்கு தீர்ப்பை நெருங்கியது.

அன்றும் வழக்கம் போலவே கட்டுக்கடங்காத கூட்டம் திமிறி நின்றது! நீதிபதி தம் இருக்கையில் வந்து உட்கார்ந்ததுமே படு நிசப்தம்.. வெளியே சற்றுத் தூரத்திலுள்ள வேப்பமரத்திலிருந்த காக்கை விடாமல் கரைந்தது ஹாலுக்குள் துல்லியமாய்க் கேட்டது. குரலைச் செருமிச் சரிசெய்தபடி நீதிபதி நிதானமாய்த் தனது தீர்ப்பை வாசித்தார். அது சரியாக 120 பக்கங்கள் டைப் செய்யப்பட்டிருந்தன. அதில் ஒவ்வொரு வாதத்தையும் அலசி ஆராய்ந்து எழுதியிருந்தார்.

எல்லோரும் ஆர்வமாய் எதிர்பார்த்த தீர்ப்பின் இறுதிப் பகுதிக்கு வந்ததும் ஒரு கணம் நிறுத்தி, பின்னர் கணீரென்று வாசித்தார், "நடந்த



நேரடியாகச் சம்பந்தப்பட்ட பாண்டி, முண்டன், முருகன் மூவருக்கும் தூக்குத் தண்டனை விதிக்கப்படுகிறது. இந்தக் கொலைக்குத் தூண்டியவர்கள் என்று சாட்சியங்கள் கூறிய முக்கியஸ்தர்கள் ஆறு பேருக்கும் ஆயுள் தண்டனை அளிக்கப்படுகிறது. மேல்முறையீடு செய்வதாயிருந்தால் இன்றிலிருந்து முப்பது நாட்களுக்குள் உயர்நீதிமன்றத்தில் செய்துகொள்ளலாம்...'' நீதிபதி வாசித்து முடித்ததும் தன் சேம்பருக்குள் போனார். ''என்..அய்..ய்..யா..'' என்று கதறியபடி பாண்டியின் மனைவி வேலம்மாள் தரையில் புரண்டு அழுதாள்.

''கவலைப்படாதீங்க... ஹைகோர்ட்டுல விடுதலை வாங்கிப்பிடலாம். அப்பீலுக்கு ஆகவேண்டியதைப் பாப்போம்...'' என்று உறவினர்கள் ஆறுதல் சொல்லி, கைத்தாங்கலாக அழைத்துச் சென்றனர். வாயில் துண்டைக் கடித்தபடி அழுதுகொண்டே போன மலையாண்டி, ''நான் அப்பமே சொன்னனே... ஒரு பயலுகளும் கேட்கலயே...'' என்று புலம்பி நடந்தார்.

ஒரு சில மாதங்களிலேயே அப்பீலை ஹைகோர்ட் விசாரணைக்கு எடுத்தது. வக்கீல்களின் அனல் பறக்கும் வாதம், சென்னையில் பரபரப்பை ஏற்படுத்தியது. இறுதியில், போதிய சாட்சிகள் மூலம் சதிசெய்து தூண்டியதாக நிரூபிக்கப்படாததால் குற்றம் சாட்டப்பட்ட முக்கியஸ்தர்கள் எல்லோரும் விடுதலை செய்யப்பட்டனர். பாண்டி, முண்டன், முருகன் மூவருக்கு மட்டும் கீழ்கோர்ட்டில் அளித்த அதே தூக்குத் தண்டனை ஊர்ஜிதமானது!

உடனே ஜனாதிபதிக்குச் சென்ற கருணை மனு போன வேகத்தில் நிராகரிக்கப்பட்டுத் திரும்பியது. தூக்குத் தண்டனைக்கு நாள் மட்டும் முடிவுசெய்யப்படாமல் மதுரை ஜெயிலில் இருந்தான் பாண்டி. அவன் யாருடனும் பேசவேயில்லை. அவன் நினைவெல்லாம் கோர்ட்டில் கதறி அழுத தன் மனைவியைப் பற்றியே இருந்தது. முண்டனும் முருகனும் கண்கலங்கிப் பிரமைபிடித்ததுபோல தனித்தனி செல்லில் இருந்தனர்.

அன்றைக்குப் பார்த்து மணியாச்சியிலிருந்து எதேச்சையாய் சிவலப்பேரிக்கு வந்திருந்தாள் பாண்டியின் மனைவி. சாப்பிடாமல் கொள்ளாமல் இற்றுத் துரும்பாய் இளைத்துப்போயிருந்தாள். அன்று பொழுது சரியும் நேரத்தில் சிவலப்பேரிக்கு ஒரு தந்தி வந்தது. 'நாளை பாண்டியையும் முண்டனையும் முருகனையும் மதுரை ஜெயிலில் தூக்கிலிட இருக்கிறோம். உரியவர்கள் விரும்பினால் நேரில் வந்து, மருத்துவப் பரிசோதனைக்குப் பிறகு சம்பந்தப்பட்டவர்களின் சடலத்தைப் பெற்றுக்கொள்ளலாம்' என்ற விவரத்தை தந்தி கொண்டுவந்தவர் வாசித்துச் சொன்னார். பாண்டியின் மனைவிக்கு ஆயிரம் தேள்கள் ஒன்றாய் கொட்டியதுபோல் இருந்தது. கதறினாள். துடித்தாள். தலைவிரிகோலமாய் தரையில் புரண்டு அழுதாள். அவளையும் உறவுக்காரர்கள் சிலரையும் அழைத்துக்கொண்டு இரவோடு இரவாக சிவலப்பேரியிலிருந்து ஜங்ஷனுக்கு வந்தார் மலையாண்டி. யாரிடமும் கையில் காசில்லை. ஜங்ஷனில் லாரி ஆபீஸ் வைத்திருந்த தனது மைத்துனரை எழுப்பி விஷயத்தைச் சொன்னார். சற்று நேரம் யோசித்துவிட்டு, பீரோவைத் திறந்து கத்தையாகப் பணத்தை எடுத்து மடியில் கட்டிக்கொண்டு சடாரென்று காரியத்தில் இறங்கினார் லாரி ஆபீஸ்காரர். டாக்ஸிக்காரர்கள் வரத் தயங்கினார்கள். மலையாண்டியின் மைத்துனரைப் பார்த்ததும் தட்டமுடியாமல் ஒருவர் மட்டும் வரச் சம்மதித்தார்.

பாண்டியின் சடலத்தைப் பெற்றுவரக் கிளம்பிய எல்லோருக்குமே துக்கம் தொண்டையை அடைத்தது. மௌனமாய் வார்த்தையின்றி

"இந்த ராப்பொழுது இப்படியே விடியாமப் போயிடாதா..." என்று ஏங்கி பாண்டியின் மனைவி தெய்வங்களை எல்லாம் வேண்டினாள்.

இவளின் இந்த வேண்டுதல் நிஜமாகவே பலித்துவிட்டால்...! அது எவ்வளவு பெரிய ஆச்சரியம்! யாருமே எதிர்பாராத, அதைவிடப் பெரிய ஆச்சரியம் ஒன்று மதுரைச் சிறையில் இவர்களுக்குக் காத்திருந்தது!

என்றைக்கும் போல் அந்த வக்கீல் ஆபீஸ் முன்பு பல பேர் கூடி நின்றனர். உள்ளே வக்கீல்கள் கேஸ் கட்டுகளைப் புரட்டியபடி இருந்தனர். பழைய டைப் மெஷின் ஒன்று விடாமல் கடகடத்துக் கொண்டிருந்தது. வக்கீல்கள் கோர்ட்டுக்குக் கிளம்புகிற நேரம் இது. ஆபீஸ் வாசலில் 'வழக்கறிஞர் செல்லப்பாண்டியன்' என்ற பெயர் பலகை தொங்கியது. வெளியில் நின்ற இருவர் பேசிக்கொண்டனர். "நம்ம பெரியவரின் பெயர் பலகைக்கு என்னிக்குமே ஒரு மருவாதி இருக்குவே... இப்பம் அவர் அரசியல்ல தீவிரமாகித் தேர்தல்ல ஜெயிச்சு சபாநாயகராயிட்டார். தான் கோட்டைக்குப் போனாலும் தீவிர அரசியல்ல இருந்த ரத்தினவேல்பாண்டியனைத் தனக்கு ஈடா இங்கே தயார்பண்ணிட்டுல்லா போயிருக்காக... பெரியவர் தயாரிப்புன்னா சும்மாவாவே? நம்ம பாண்டி கேஸுலகூட என்னம்மா வாதாடுனாக. இன்னிக்கும் கோர்ட்டே பேசுதே! இவரே வாதாடி முடியலன்னா அந்தக் கடவுளே வந்து நின்னு வாதாடியிருந்தாலும், அவனைக் காப்பாத்தியிருக்க முடியாதுவே... அவம் விதி முடிஞ்சு போச்சு. அவ்வளவுதாம்..." இவர்கள் பேசிக்கொண்டு இருக்கும்போதே சீவலப்பேரி ஆள் ஒருத்தன் மூச்சுவாங்க ஓடிவந்தான்.

"நேத்துப் பொழுதுசாய சீவலப்பேரிக்கு ஒரு தந்தி வந்துச்சிய்யா... வந்திச்சா... அது வந்ததுமே.."

"சேய்... ரப்பரா இழுக்காதலே... ஒங்கப்பன் சவ்வு மிட்டாய் யாவாரமாலே பாக்காம்? விஷயத்தைச் சொல்லுல..." குமாஸ்தா சிடுசிடுத்தார்.

"பாண்டியையும் முண்டன், முருகனையும் இன்னிக்குக் காலையில மதுரை ஜெயில்ல தூக்குல போடப் போராகளாம். வந்து பொணத்தை வாங்கிக்கச் சொல்லி தந்தியில எழுதியிருந்துச்சாம். ராவோட ராவா பாண்டி பொஞ்சாதி வேலம்மாளும் அண்ணன் மலையாண்டியும் கிளம்பி மதுரைக்குப் போயிருக்காக..." மூச்சுவிடாமல் சொல்லி முடித்தான். அருகே கடகடத்த டைப்ரைட்டர் சட்டென்று மௌனமானது. எல்லோருக்குமே கொஞ்சம் அதிர்ச்சியாய்த்தான் இருந்தது. இது எதிர்பார்த்த தகவல்தான் என்றாலும், எதிர்பாராத நேரத்தில் அல்லவா, வந்திருக்கிறது!

"அடடே.... தெரிஞ்சிருந்தா நானும் கூடப் போயிருந்திருப்பனே... யாரைப பார்த்து என்ன செய்யப் போறாகளோ தெரியல..." ஒரு குமாஸ்தா உச்சுக் கொட்டினார். வக்கீல்கள், வந்திருந்தவர்கள் என்று எல்லோருமே சற்று நேரம் மௌனமாயினர். "ஒருத்தன் என்னதான் கொலைக்குற்றம் செய்திருந்தாலும் தூக்குன்னு கேட்டா மனசு கேட்கலையே... ஒரு மனுசப்பய, இன்னொரு மனுசப்பயலை எப்படித்தாம் கொல்லத்



பேசிக்கொண்டே கோர்ட்டைப் பார்த்து நடந்தனர்.

கோர்ட்டுக்குக் கிளம்பி நடந்த வக்கீல்களில் ஒருவர் தன் கைக்கடிகாரத்தைப் பார்த்து, "இந்நேரம் எல்லாம் முடிஞ்சிருக்கும்..." என்றார். பாண்டிக்கு ஆஜரானவர் யாருடனும் பேசாமல் ஆபீஸைவிட்டு இறங்கி நடந்தார். வரும்போதே தற்செயலாய் ஏறிட்டார். எதிரே சற்றுத் தூரத்தில் யாரோ ஒரு பெண் மாலையுடன் ஓடி வருவதைப் பார்த்து நின்று திகைத்தார். வருபவள் யார் என்று பிடிபடவில்லை. அதற்குள் அவள் முகம் தெரியும் தூரத்தில் நெருங்கிவிட்டாள்.

'இவ பாண்டி பொஞ்சாதியாச்சே! இவ புருஷனை இந்நேரம் தூக்குலயில்ல போட்டிருப்பாக... இங்கே எதுக்கு மாலையும் கையுமா ஓடியாறா...?' திகைத்தார்.

"நீங்கள்லாம் பெரிய பெரிய வக்கீல்மாரு... எம் புருஷனைக் காப்பாத்துவீங்கன்னு நம்பி ஒப்படைச்சேன்... இப்பம் தூக்குல போட்டுட்டானுக... ஒங்க எல்லாத்துக்கும் ரொம்ப நன்றிய்யா...' என்று சொல்லி, மாலையைப் போட்டுக் கேவலப்படுத்த வர்றாளோ?' வக்கீல் செய்வதறியாமல் நின்று நிதானித்தார்..

"எம் புருஷனுக்குக் கண்டம் வெலகிருச்சுய்யா! கண்டம் வெலகிருச்சு..!" மூச்சிரைக்க ஓடிவந்த வேகத்தில் கையிலிருந்த மாலையை வக்கீலின் காலடியில் வைத்து ஏறிட்டுக் கும்பிட்டாள். அவளுக்குச் சந்தோஷத்தில் கண்ணீர் பெருக்கெடுத்தது.

"நீ என்ன தாயி சொல்லுத..? ஒண்ணுமே புரியலயம்மா..."

"தந்தி வந்து மதுரைக்குப் போனோம். ராத்திரியோட ராத்திரியா என் புருஷனைத் தூக்குல போட வேணாம்னு முடிவாயிருச்சாம்யா... எல்லாம் நீங்கதாம்யா காரணம்..." என்றாள். பாவம், என்ன நடந்தது என்று அவளுக்குத் தெளிவாய் சொல்லத் தெரியவில்லை. 'அதெப்படி முடியும்? யாராவது சும்மா ஆறுதலுக்காகச் சொல்லியிருப்பாகளோ?' வக்கீல் குழம்பினார். "நான் ஒண்ணுமே செய்யலையே தாயி... நீ சொல்றது நெசமாயிருந்து ஒருவேளை ஒம் புருஷன் உசுரு பொழச்சிருந்தான்னா, அது ஒம் மாங்கல்ய பலம்தாம்மா, போ. நீ நல்லாரு..."

"அப்படிச் சொல்லாதீங்கய்யா. எனக்குத் தெரியும்யா. நீங்கதாம்யா காப்பாத்தியிருக்கீங்க..." கையெடுத்துக் கும்பிட்டாள்.

அவருக்கு ஒன்றுமே புரியவில்லை. மதுரை ஜெயிலில் உத்தியோகத்தில் இருந்த தனக்குத் தெரிந்த ஒருத்தருக்கு ட்ரங்கால் போட்டுப் பேசினார். தொலைபேசியின் மறுமுனை வேலம்மாள் சொன்னதை உறுதிப்படுத்திற்று.

"உண்மைதான் சார்... இது நாங்களே எதிர்பார்க்காதது... நேத்து தந்தி அனுப்பிச்சுட்டு, பகல் முழுவதும் தூக்குமேடையை ரெடி பண்ணினோம். டம்மி வெச்சு ரிகர்சல்கூடப் பார்த்துட்டோம். ஹேங்கிங் முடிஞ்சதும் அக்கியூஸ்ட்களோட சாவை கன்ஃபார்ம் பண்ண அதிகாலையிலேயே வரச் சொல்லி மெடிக்கல் ஆபீஸருக்கெல்லாம் மெஸேஜ் அனுப்பிட்டோம். நேத்துச் சாயந்திரம்கூட பாண்டி இருந்த செல்லுக்கு சூப்பிரண்ட் ஐயா போனார். 'கடைசியா ஆசை எதுவும் இருந்தா சொல்லு பாண்டி! நான் அதை நிறைவேத்தி வைக்கிறேன்'னு கேட்டார். கலகலன்னு சிரிச்சான் சார். எங்களுக்கெல்லாம் ஒரே வேடிக்கையா போச்சு. 'பார்ரா, விடிஞ்சா தொங்கப்போறான். கொஞ்சங்கூடப் பயப்படாம சிரிக்கிறானே'ன்னு நெனச்சோம். அவன் ஐயாகிட்ட 'நான் எனக்காகச் செய்யலை சார். எங்க

ஆசைப்படலை. எங்குடும்பத்துக்கு ஒரு குறையுமில்லாம அவுங்க காப்பாத்திடுவாங்க. நான் சாகப்போறதைப் பத்தி வருத்தப்படல. எம் பொஞ்சாதியை நெனச்சாதான் கவலையாயிருக்கு. எனக்குக் கல்யாணம் ஆகிக் கொஞ்ச நாள்தான் ஆவுது. இன்னும் குழந்தைகூட இல்லை. வேலம்மா எம்மேல உசுரையே வெச்சிருந்தா. நான் செத்த பின்னாடி அவ தனிமரமா நிக்காம, 'இன்னொரு கல்யாணம் முடிச்சுக்கோ'ன்னு நானே அவகிட்ட சொல்லணும். நான் தூக்குல தொங்குறதுக்கு முன்னாடி அவளை ஒரு தடவை பார்க்க முடியுமா?'ன்னு கேட்டான் சார்.

'இல்ல பாண்டி... அதுக்கு ஜெயில் விதிமுறைகள் இடந்தரல. நீ சொன்னதா உன் மனைவிகிட்ட நாங்க சொல்லிடுறோம். வேற பலகாரங்கள் எதுவும் சாப்பிட ஆசைப்படுறியா'ன்னு கேட்டார். மறுபடியும் சிரிச்சான். அப்புறம் கொஞ்ச நேரத்துல நிம்மதியா படுத்துத் தூங்கிட்டான் சார். முண்டனும் முருகனும் வெவ்வேறு செல்லில் அழுதுகிட்டே இருந்தாங்க. ராத்திரி பத்து மணிக்கு கவர்ன்மெண்ட்டுல இருந்து ஒரு அவசரத் தகவல் வந்ததுங்க. மகாத்மா காந்தி நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மத்திய சர்க்கார், 'தூக்குத்தண்டனைக் கைதிக்கெல்லாம் பொது மன்னிப்புக் கொடுத்து ஆயுள் தண்டனையா மாத்திடணும்'னு நேத்து ராத்திரி முடிவு எடுத்துட்டாங்களாம். நல்லவேளை சார். தகவல் கொஞ்சம் லேட்டா கிடைச்சிருந்தாக்கூட எல்லாமே முடிஞ்சிருக்கும். லட்சத்தில ஒரு கேஸ்தான் சார் இப்படிப் பிழைக்கும்...''

''என்னப்பா இது... சினிமால வர்ற மாதிரியில்லா இருக்கு?!''

''ஆமா சார்... இதேபோல வெவ்வேறு ஜெயில்ல இருக்கற பதினேழு கைதிகளைத் தூக்குப் போட இருந்தாங்க. இப்ப எல்லோருக்குமே கடைசி நேரத்துல அது ஆயுள் தண்டனையா மாறிப்போச்சு. இவனுக உயிர் ரொம்பக் கெட்டி சார். நம்ம கையில என்ன சார் இருக்கு? இவனுக்குத் தூக்குன்னு நீதிபதி ஒரு தீர்ப்பு எழுதறார். ஆனா, மேல இருக்குற பெரிய நீதிபதி... அதான் சார் கடவுள்... 'நீயென்னவே தூக்குச் சொல்றது... நான் சொல்றேன், அது இல்லை'ன்னு வேற ஒரு தீர்ப்பு எழுதறார். கடைசியில் எது ஜெயிக்கிது பார்த்தீங்களா?''

வக்கீல் தீவிர பகுத்தறிவுக் கட்சிக்காரர் என்பது மறுமுனையில் பேசியவருக்குத் தெரியும். ''அட, அப்படிங்கிறே...! இது கடவுள் புண்ணியம் இல்லேப்பா... காந்தி புண்ணியமாக்கும்...''.

இருவருமே சத்தமாகச் சிரித்தார்கள்.

வழக்கறிஞர்கள் வட்டாரத்தில் ரொம்ப நாள் இதைப் பற்றியே பேச்சாயிருந்தது. விவரம் தெரிந்த ஒருத்தர், ''டெல்லியிலும் அமைச்சரவை இந்த முடிவை லேசில் எடுக்கலவேய்... பெரிய பெரிய அறிவாளிகளை உட்காத்தி மீட்டிங் போட்டு ரகசியமாய் ஒன்றுக்குப் பல தடவை காரசாரமாய் பேசியிருக்காக... அதுல ஒருத்தர் பேசறப்போ, 'ஒருத்தன் குற்றம் செய்யும் நேரத்தில் சந்தர்ப்ப சூழ்நிலையால் மிருகமாய் மாறிப் போறான். அந்த நிமிஷத்திலேயே அவனைச் சட்டம் சுட்டுக்கொல்றதில்கூடத் தப்பில்லை. ஏன்னா, அவன் குற்றவாளியாகவே செத்தும்போறான். அவனைப் புடிச்சு வருஷக்கணக்கில் ஜெயில்ல அடைச்சு வெச்சு அவனைத் தூக்குல போடுறப்ப தாஞ்செஞ்ச தப்பை உணர்ந்து, திருந்தின முழு மனுசனா இருக்கக்கூட வாய்ப்பு இருக்கு. மனுசப்பய எல்லோருமே அடிப்படையில நல்லவம்தான். குற்றத்தைக் கொல்லணுமேயொழிய குற்றவாளிகளைக் கொல்றதுனால மட்டும் குற்றம்



போட்டாப்பல பெருகீட்டுலா இருக்கு' என்ற பாணியில் வெளுத்து வாங்கியிருக்கார். இன்னொருத்தர் பேசும்போது 'சரி, கொலைபண்ணினவனைத் தூக்கில் போடுறோம்... அவனுக்கு மட்டும் எப்படி அது தண்டனையாகும்? அவன் ஒருத்தன் மட்டும் சம்பாதிச்சு குடும்பத்தைக் காப்பாத்துறவனா இருக்காம்னு வெச்சுக்குங்க... அவன் செஞ்ச தப்புக்கு அவனையே நம்பி இருந்த, எந்தப் பாவமும் செய்யாத அவன் பெஞ்சாதி பிள்ளைக்குட்டிகள் சாப்பாட்டுக்கு வழியில்லாம தெருவில திரிஞ்சு... வாழ்க்கை பூராம் தண்டனை அனுபவிக்கணுமே... இது எப்படி நியாயம்?'னு கேட்டாராம். இப்படியெல்லாம் தெளிவா பேசித்தான் இந்த முடிவுக்கு வந்தாங்களாக்கும்.''

''ஓகோ... இதுக்குள்ளே இவ்வளவு சங்கதிக இருக்கா'' என்று கேட்டவர்கள் வியந்தனர்.

தூக்குத் தண்டனை ரத்தாகி ஆயுள் தண்டனை என்றானதும், பாண்டி மதுரையிலிருந்து திருச்சி கன்டோன்மெண்ட் சிறைக்கு மாற்றப்பட்டான்.

மதுரைச் சிறையில் பழகிய கன்விக்ட் வார்டர்கள், ''கவலைப்படாதே பாண்டி... அதிகாரிகள் பேச்சுக்குக் கட்டுப்பட்டு நல்லமுறையில் இருந்தால் ஏழெட்டு வருஷத்தில தண்டனை முடிஞ்சு நீ வீட்டுக்குப் போயிடலாம். ஒனக்கு வெவசாயம் தெரியும்... தோட்டம் போடவும் தறி நெய்யவும் தச்சுவேலை செய்யவும் பழகிக்கிட்டா அதுக்கெல்லாம் இங்கே சம்பளம் உண்டு. ஊருக்குப் போறப்ப் கைநெறைய துட்டோட போகலாம்...'' என்றனர்.

திருச்சி சிறையில் தான் இருக்கும் இடம் தெரியாமல், ரொம்பவும் ஆளே மாறிவிட்டான் பாண்டி. சக கைதிகளுக்கும் அதிகாரிகளுக்கும் சில மாதங்களிலேயே பிரியமானவனாய் ஆனான். கொஞ்ச காலத்திலேயே தறி நெய்யவும் தச்சுவேலையும்கூடப் பழகிவிட்டான்.

அப்போது கைதிகள் பல பேரைச் சொந்தக்காரர்கள் மனுப்போட்டு தேடிவந்து பீடி, சிகரெட் வாங்கிக் கொடுப்பதைப் பார்க்கும்போதெல்லாம் அவனுக்கு ஏக்கமாய் இருந்தது.

'மதுரை ஜெயில்லயே வெச்சிருந்தாலும் பார்க்க அடிக்கடி ஆள் வருவாக. திருச்சிக்குப் பதிலா பாளையங்கோட்டை ஜெயிலுக்கு மாத்தியிருந்தா தினமும் ஆளு வரும்... உள்ளேயும் தெரிஞ்ச மொகமா இருக்கும். இவ்வளவு தொலைவில கொண்டாந்து போட்டுட்டானுகளே! எடுத்தேறி இங்க யாரு வருவா? இப்போ வீட்டில் கஷ்டம் இல்லாம எல்லோருமே நல்லா இருப்பாங்க... அது போதும்' என்று நினைத்துக்கொள்வான்.

ஒரு நாள் பாண்டியைப் பார்க்க யாரோ இரண்டு பேர் வந்து மனு போட்டுக் காத்திருப்பதாகச் சொன்னார்கள். ஆர்வமாய் ஓடிவந்தான். அண்ணன்காரர் மெலிந்து பல வருஷமாய் சீக்கில் கிடந்தவர் போல, நைந்து அழுக்கடைந்த வேட்டி துண்டோடு நின்றார். அழுதுகொண்டே நின்ற தன் மனைவியின் கோலத்தைப் பார்த்ததுமே பாண்டிக்குத் தூக்கிவாரிப் போட்டது!

''ஏட்டி, ஒனக்கென்ன ஆச்சி...? இந்தக் கோலத்தில் வந்து நிக்கியே...'' – பதறினான் பாண்டி. அவள் பதிலே பேசவில்லை. முந்தானையை எடுத்து வாயில் கவ்வி, சத்தம் வராமல் அழுதாள். அவள் கட்டியிருந்த சேலை சாயம்போய் வெளுத்திருந்தது. காதும் மூக்கும் மூளியாய் இருந்தன.

கயிறு கிடந்தது. தலைமுடியெல்லாம் எண்ணெய் கண்டு பல நாள் ஆனதுபோல் வறண்டு, கலைந்து கிடந்தன. அதிர்ச்சியுடன் தன் அண்ணனை ஏறிட்டான்.

''நான் என்னத்தல சொல்ல? வேலையிலருந்து என்னை நிறுத்திப்பிட்டாக... வீட்டுல சொல்லமுடியாத கஷ்டம்ல... ஊர்ப்பக்கம் மழை தண்ணியும் செரியில்ல... அன்னன்னிக்குக் கருவமுள்ளை வெட்டிக் கரிமூட்டம் போட்டு, அதை வித்துதாம் வயித்தைக் கழுவுதோம். உம் பொஞ்சாதி நான் சொல்லச் சொல்லக் கேட்காம, போட்டிருந்த நகைநட்டையெல்லாம் வித்து போலீஸ், கேஸ்னு அலஞ்சிட்டா... இப்பம் நம்ம வீட்டுல விக்குறதுக்கும் வைக்குறதுக்கும் ஒண்ணுமில்லலே. இவளும் கூலிக்கு வயக்காட்டு வேலை பாக்கா... வாக்கப்பட்டப்ப எப்பிடி வந்தவ... நெனைச்சாலே நெஞ்சை அடைக்கி... பாருல, இதெல்லாம் உன்னாலதாம்ல...'' – அழுதார் மலையாண்டி. காவலுக்கு நின்ற சிறைக்காவலர்கள், வந்திருந்த பார்வையாளர்கள் எல்லோரும் இவர்களை வேடிக்கை பார்த்தனர். பாண்டியின் கண்கள் ரத்தமாய்க் கலங்கிச் சிவந்தன. அவனுக்கு உள்ளங்காலிலிருந்து உச்சந்தலைவரைக்கும் மின்சாரம் பாய்ந்தது போலிருந்தது.

''நீ என்னண்ணே சொல்லுத..? 'ஒவ்வொரு பூவுக்கும் நெல்லு குடுத்திருதோம். பாடுபட நெலம் குடுத்திருதோம். உங்குடும்பத்தைக் கஷ்டமில்லாமப் பார்த்துக்கிடுதோம்'னு அவுங்க வெத்தலையில கையடிச்சுச் சொன்னாக...! நீங்க இப்படிக் கஷ்டப்படுறதெல்லாம் அவுங்களுக்குத் தெரியுமா..?''

மலையாண்டி விரக்தியாய்ச் சிரித்தார். அப்புறமும் விடாமல் ''நீ.. மேலப்பாட்டம் போனியா..? கீழப்பாட்டம் பெரியப்பாவைப் பாத்தியா...? திருத்துல போயி நம்ம அத்தாங்கிட்ட ஒதவி கேட்டியா..?'' – தொடர்ந்து படபடத்தான் பாண்டி.

''நான் ஒருத்தரையும் போய்ப் பாக்கல... இனிமேவும் மாட்டேன். நாங்க படுத கஷ்டம் யாருக்குத் தெரியாதுன்னு நெனச்சே..? 'ஒங்களுக்காகத்தாம் எந்தம்பி ஜெயில்ல கெடக்காம். அவஞ் செஞ்சதுக்குக் கூலி குடுங்க'ன்னு ஒவ்வொருத்தர்கிட்டயும் போயி பிச்சை கேக்கச் சொல்லுதியால..? சுத்துப்பத்துல இருக்கற நம்ம தாய்புள்ளை எல்லாம் நாங்க படுத கஷ்டத்தைப் பாத்து எரக்கப்படுது. ஆனா பாவம், உதவி செய்யக்கூடிய நிலைமையில அவுக இல்ல... அவனவம்பாடே பெரும்பாடா இருக்கு. இருக்கப்பட்ட வசதியானவம் மட்டும் எல்லாம் தெரிஞ்சும் தெரியாத மாதிரி இருக்காம்... வழியில பாத்தாலும் ஒரு பேச்சுக்குப் பேசிட்டு நிக்காம ஓடுதானுக... கையில நாலு துட்டு இருந்தாத்தாம்ல சொந்தபந்தமெல்லாம்... அவங்க யாரைச் சொல்லியும் குத்தமில்லலே... அவனவன் கையை ஊனித்தாம்ல கரணம் பாயணும்... இப்பமாச்சும் தெரிஞ்சுக்க...''

பாண்டிக்கு ஆத்திரத்தில் மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்கிற்று. வேலம்மாள் மெல்லிய குரலில், ''ஒங்க உசிருக்கு இருந்த கண்டம் வெலகிருச்சு... அதுபோதும்... கஷ்டப்பட்டுப் பொழைக்கிறது கேவலமில்லேன்னுதான் கூலிக்கு வயக்காட்டு வேலைக்குப் போறேன்...'' என்றாள்.

''நீ இங்க கெடந்து ஏன் இம்புட்டுக் கஷ்டப்படுத... நாந்தான் அப்பமே சொன்னம்ல, மணியாச்சிக்குப் போயி உந்தாய் தவப்பன் வீட்டுல இருன்னு...''

''ஆமால... அதாஞ்சரி...'' என்றார் மலையாண்டி.



இருந்தாத்தான் [illegible] நான் இங்கதான் இருக்கணும்னு நினைச்சிட்டேன்...'' பாண்டி இவள் சொன்னது எதையும் காதில் வாங்கியதாகத் தெரியவில்லை. எங்கோ வெறித்துப் பார்த்தபடி இருந்தான்.

''எப்பம் ஊருக்கு விடுவாக..?'' – மெள்ளக் கேட்டாள்.

''நீ போ... சீக்கிரமா வந்திருதேன்...'' பாண்டியின் குரலில் தொனித்த உறுதி மலையாண்டியைக் கலக்கியது.

''லேய்... ஒழுங்கா மருவாதியா அதிகாரிமாரு சொல்லுகேட்டு இருல... வக்கீலய்யாகிட்டச் சொல்லி பாளையங்கோட்டை ஜெயிலுக்கு உன்னை மாத்த ஏற்பாடு பண்ணுதேன்... நீ எங்களை நினைச்சு வருத்தப்படாத...'' என்றார்.

மடியிலிருந்த பீடி மற்றும் கடலைமிட்டாய் கட்டுகளை எடுத்துப் புருசனிடம் நீட்டினாள். சிறைக்காவலர் அதை வாங்கிச் சோதித்தபின் பாண்டியிடம் கொடுத்தார். அதற்குள் பார்வையாளர்கள் நேரம் முடிந்துவிட்டதை உணர்த்த, தன் கையிலிருந்த கம்பால் கிராதியில் தட்டினர். நடைபிணம் போல் தள்ளாடி சிறைக்குள் நடந்தான் பாண்டி.

சிறையைவிட்டு வெளியேறும்போது, வாசலில் துப்பாக்கி ஏந்தி நின்ற போலீஸ்காரர்களையும் பூட்டிக்கிடந்த முரட்டுக்கதவுகளையும் அண்ணாந்து பார்க்கும்படியான சுவர்களையும் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே நடந்தாள் வேலம்மாள்.

அன்று மதியத்திலிருந்து சிறையில் பாண்டிக்குச் சாப்பிடப் பிடிக்கவில்லை. மாலை ரோல்கால் முடிந்து தனி செல்லில் பூட்டப்படும் வரையில் பித்துப் பிடித்தவன்போல் அலைபாய்ந்தான். இரவெல்லாம் பொட்டுக்கூடத் தூங்கவில்லை. அறைக்குள் குறுக்கும் நெடுக்குமாய் நடந்து கொண்டிருந்தான். தூக்கமில்லாததால், கண்ணுக்குள் குறுமணலைக் கொட்டியதுபோல் காந்தலெடுத்தது. பூட்டப்பட்ட கதவின் கம்பியைப் பற்றியபடி தூரத்தில் தெரிந்த உயரமான சுவரைப் பார்த்துப் பெருமூச்சுவிட்டான்.

'நயினாரை நேர்ல போய்ப் பார்த்து 'நான் யாருக்காக இந்த நெலைமைக்கு ஆனேன்... நீங்க சொன்னபடிக்குச் செய்யாம, எங்குடும்பத்தை இப்படித் தவிக்கவிடலாமா...?'ன்னு கேட்கணும். மத்தவங்களைப் பார்த்து 'ஒண்ணுக்குள்ள ஒண்ணா இருந்தும் இப்படி எங்குடும்பத்தைக் கைவிடலாமா?'னு நாலு வார்த்தை கேட்கணும். அவங்கள்ல யாருமே இவஞ் சொல்லுத மாதிரி வாக்குத் தவர்ற ஆளுக இல்லையே..? இந்த மலையாண்டிதாம் ஒவ்வொருத்தரிடம் போய், 'ஒங்களாலதாம்வேய் எந்தம்பி ஜெயில்ல கெடக்காம்'னு அநாவசியமா ஏசிருப்பான். அவனைத்தாம் ஒருத்தருக்குமே புடிக்காதே... பின்னே எப்படி ஒதவிக்கு வருவாக...? இதுக்கெடையில இவ கெடந்தில்ல கஷ்டப்படுதா...' – குழம்பிக் குழம்பி யோசித்தான்.

முக்கியஸ்தர்கள் சிலருக்கு "என்ன நடந்திச்சு... ஏன் எங்குடும்பத்தை நிராதரவா விட்டுட்டீக... ஒடனே தாமதிக்காமல் பதில் கடுதாசி எழுதவும்' என்று கடிதம் போட்டான். ஒருத்தரிடமிருந்தும் பதில் வரவில்லை. 'ஒருவேளை, தபாலை அனுப்பிச்சிடுறோம்னு வாங்கினவன் பொட்டியில போடாம விட்டுட்டானோ... கடுதாசி கெடச்சிருந்தா இந்நேரம் நாலு வரியில பதில் எழுதியிருப்பாகளே...? மலையாண்டி சொன்னதெல்லாம் நெசந்தானோ..?' நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. கண்களில் நீர்

இங்க இருக்கக்கூடாது... எப்படியாச்சிலும் தப்பிச்சுப்போய், 'ஏன் இப்படிச் செஞ்சீக'ன்னு நேருக்கு நேரா கேட்டுப்பிடணும்...'

பாண்டி நிதானமாய் யோசித்தான்.

அதிகாலையிலிருந்தே சிறைச்சாலையை இனம் புரியாத மௌனம் கவ்வியிருந்தது. ஒவ்வொரு பிளாக்கிலும் வார்டர்கள் கையிலிருந்த தடியால் கம்பிக் கதவுகளைத் தட்டிக்கொண்டே ஓசை எழ நடப்பதும் லாக்கப்களைத் திறந்துவிடும் 'கிரீச் கிரீச்' சத்தமும் அடுத்தடுத்துக் கேட்டுக் கொண்டிருந்தது. மரங்களில் அடைந்திருந்த பறவைகளும் விழிப்புத்தட்டி கிச்சாட்டம் போட்டுக் கொண்டிருந்தன.

''பழைய கண்டத்தில் இருக்கற குருமூர்த்தியும் தியாகுவும் இன்னும் உண்ணாவிரதத்தை விடமாட்டோம்னு பிடிவாதமா இருக்காகளாம். விடிஞ்சா இனிக்கோட ஒம்போது நாள் ஆகப்போகுது. என்னா வைராக்கியம் பாருடா... பச்சத் தண்ணிகூடக் குடிக்கலையாம். இவங்களோட சேர்ந்த லெனினுக்கு மஞ்சக்காமாலையாம், ஆஸ்பத்திரி பிளாக்லே கெடந்தும் சாப்பிடமாட்டேங்கிறாராம். இப்பவே ஆளுக தளந்திடுச்சுக. சி.பி. கண்டம் பிளாக்கிலே கைதிகள்லாம் ஏதோ குசுகுசுன்னு பேசுறானுக. என்னமோ நடக்கும்போல... என்னான்னுதான் புரியலை'' என்றார் கன்விக்ட் வார்டர் ஒருவர்.

''அவனுகளா உண்ணாவிரதத்தைக் கைவிடலைன்னா நாளைக்கு டாக்டரைக் கூப்பிட்டு மூக்குவழியா ட்யூப் போட்டு சாப்பாடு கொடுத்துரணும்னு தொரை நேத்தே பேசிக்கிட்டிருந்தாரு. தூக்குக்கு நாளை எண்ணிக்கிட்டு இருக்கிறவனுகளுக்கு இம்புட்டு வீம்பு ஆகாதப்பா... தொரைமாரு சொல்லுகேட்டு நல்லது பொல்லத வாங்கித் தின்னுட்டுப் போறதை விட்டுட்டு...'' என்று ஒரு கன்விக்ட் வார்டர் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, கேட்டுக் கொண்டிருந்த பாண்டி கோபத்தோடு குறுக்கிட்டான்: ''தூதேறி... நிறுத்துல சவமே... ஒன்னைப்போல 'கறுப்புக்குல்லா' பயலுகன்னு நெனைச்சியால செறுக்கிபுள்ளே.''

''பாண்டியண்ணே... அவுங்க நல்லதுக்குத்தான் சொன்னேன். தொரைமாரு நெனைச்சா..''

''அது மட்டும் இந்த ஆளுககிட்ட நடக்காதுலே...''

''ஒங்களுக்குத் தெரியாதுண்ணே... இவங்க நக்ஸலைட்டு ஆளுக...''

''எந்த லைட்டாவும் இருக்கட்டும்ல... இப்ப அவங்கேக்றது என்னான்னு பாரு... சரியோ, தப்போ... தனக்குன்னு சல்லி பிரயோஜனம் இல்லாம ஒரு கொலையப் பண்ணிட்டு வந்து கண்டத்துல நிக்கானுக. கோர்ட்ல 'நாங்க செஞ்சது சரிதான். உங்ககிட்ட நியாயம் கெடைக்கும்னு எங்களுக்கு நம்பிக்கையில்லே, அப்பீல் வேணாம்... தூக்குல போட்டுக்கங்கலே'ங்கான்.



போலீஸ்காரன் பத்திரிகைக்குப் பொய் செய்தி கொடுத்து, 'கோர்ட்டுமேல நம்பிக்கையில்லேனு வீரமா பேசினவங்க, தூக்குன்னு சொன்னதும் அப்பீல் பண்ணியிருக்காங்க'ன்னு செய்தி வந்திருச்சாம். அந்த பேப்பர் எப்படியோ இவங்க கைக்குக் கெடச்சிருக்கு... இது நக்கல் பண்ணுத சோலியில்லா... சாகப்போறவன் தான்கொண்ட கொள்கை மாறிச் செத்தாங்கிற அவப் பேரு இல்லாம சாகணும்னு நெனைக்காம்ல... அந்தப் பத்திரிகைக்கு மறுப்பு செய்தி குடுக்கணுங்கான். ஜெயிலர் 'முடியாது'ங்கான். 'அப்ப விடு... உண்ணாவிரதமிருந்து சாகோம். தூக்குக் கைதி எப்படிச் செத்தான்னு கேள்வி வரட்டும். வெளியே விஷயம் தெரியட்டும்'ங்கான். ஜெயிலர் மூக்குவழியா கொழாயை எறக்குவோம்ங்கான். எதுவே வீம்பு...? விசுவாசங்கெட்ட செறுக்கிபுள்ளைகளா... ஒவ்வொரு விஷயத்திலேயும் ஜெயிலுக்குள்ள இவனுக தகராறு பண்ணிப் பண்ணித்தாம்ல இம்புட்டுச் சௌகரியம் கெடைச்சிருக்கு... அதை மறந்திட்டுப் பேசாதீங்கல... விளங்கமாட்டிக...''

''ஆமா... ஆமா... பாண்டியண்ணஞ் சொல்றதும் சரிதான்...''

பொழுது விடிந்தது. பழைய கண்டத்தை ஒட்டியிருந்த ஆஸ்பத்திரியில் மஞ்சள்காமாலையில் கிடந்த தங்கள் தோழரைப் பார்க்க சி.பி. கண்டத்திலிருந்த எட்டுக் கைதிகள் அனுமதி கேட்டனர். கிடைத்தது. சற்று நேரத்தில் யாருமே எதிர்பாராதவிதமாய் சிறையின் அலாரம் கதறியது. நக்ஸலைட் கைதிகள் உண்ணாவிரதமிருந்த பழைய கண்டம் பிளாக்கை நோக்கி ஓடிவந்தனர் அதிகாரிகள்.

''இடியட், எப்படி இந்த எட்டுப் பேத்தையும் உள்ளே விட்டே?'' ஜெயிலர் பதறினார். ''ஆஸ்பத்திரிக்கு வர்ற மாதிரி வந்தாங்க தொரை... வாசல்ல நின்ன எங்கிட்ட பீடிக்கு நெருப்பு கேட்டாங்க. திடீர்னு தள்ளி விட்டுட்டு மளமளன்னு உள்ளே நொழைஞ்சு கேட்டைச் சாத்திக்கிட்டாங்க தொரை. என்னால ஒண்ணுஞ் செய்ய முடியலை...'' காவலுக்கு நின்ற கன்விக்ட் கும்பிட்டபடி சொன்னான்.

ஜெயிலர் கர்ஜித்தார்: ''மரியாதையா சொல்றேன்... கேட்டுக்குங்க... பண்ணி அஞ்சு நிமிசத்துக்குள்ள அவங்கவங்க பிளாக்குக்குப் போயிருங்க. ஜெயிலுக்குள்ள வந்து உண்ணாவிரதம் இருக்கதே சட்ட விரோதம். அடுத்த பிளாக்ல இருந்து வந்து அவங்களோட சேர்ந்து நிக்கறது அதைவிடப் பெரிய குற்றம். நீங்களா வெளியே வந்திருங்க... இல்லே, இன்னிக்கு 'கம்பளிபரேடு' நடக்கும்... ஜாக்கிரதை...''

''முடியாது... தெரிஞ்சதைப் பாருங்கடா... எவனாச்சும் கேட்டைத் தாண்டி உள்ளே வந்தா கொரவளையைக் கடிச்சுத் துப்பிடுவோம்...'' ஒரு கைதி சொல்ல... உள்ளே இருந்த மற்றவர்கள் ''வாங்கடா பார்ப்போம்'' என்று ஆர்ப்பரித்தனர். வார்டர்கள் நூறு பேர் அணிவகுத்து வந்து நின்றனர். கன்விக்ட் வார்டர்கள் சுமார் அறுபது பேர் தயாராய் நிறுத்தப்பட்டனர். வார்டர்கள் கேட்டை ஒட்டி நின்றவர்களை நோக்கி லத்தியால் குத்த நீட்டினர். உள்ளே இருந்தவர்கள் அவற்றை இழுத்துப் பிடுங்கினர். கையில் கிடைத்த மரம், மட்டைகளை எடுத்து எறிந்தனர். சிலர் வாசல் கம்பிக் கதவைத் திறக்கவிடாமல் பிடித்துக்கொண்டனர். ரகளை துவங்கியது. அதிகாரிகளுக்கு விசுவாசமான கன்விக்ட் வார்டர்களில் ஒருவரான சோமுத்தென்கொண்டார் வேகமாய் வந்தார்.

''இவனுக அடங்கமாட்டானுக தொரை, சமையக்கட்டுலருந்து ஒரு அண்டாவில் சுடு தண்ணியைக் கொண்டாரச் சொல்லுங்க... கதவைத் தொறக்க வெச்சிரலாம்'' என்றார்.

கொண்டுவந்து வைத்தனர். வார்டர்களும் கன்விக்ட் வார்டர்களும் மாறி மாறி அந்தத் தண்ணீரை எடுத்து உள்ளே இருப்பவர்கள் மீது விசிறியடித்தனர்.

சிலர் சூடு தாங்கமாட்டாமல் கதறினர். பலர் முன்னிலும் உறுதியாய் ஆவி பறக்க கேட்டைத் திறக்கவிடாமல் ஈரஞ்சொட்ட நின்றனர்.

''தொரை... இது காணாது... தண்ணிய நல்லா கொதிக்க வெச்சு அதுல மொளகாத்தூளைக் கலந்துகொண்டாரச் சொல்லுங்க'' என்றார் தென்கொண்டார். தென்கொண்டாரை பாண்டி அருவருப்புடன் முறைத்தான். கன்விக்ட் வார்டர்களைப் பார்த்து ''லேய்... நீங்களும் கைதிகள்தானடா... என்னிக்காவது சாப்பிடுற கொளம்புல மொளகாத்தூள் போட்டிருக்கானுகளாலே? இப்படி மொளகாத்தூள் போட்டு மனுசப் பயலுகமேல ஊத்தச் சொல்றீங்களேடா... பன்னிப்பய புள்ளகளா'' என்று முணுமுணுத்த பாண்டி, இதைத் தடுக்க முடியாத நிலையில், இயலாமைபொங்க விடுவிடுவென நடந்துபோய் டவர் பக்கமாய் ஒரு வேப்பமரத்தடியில் உட்கார்ந்து பற்களைக் கடித்துக்கொண்டு ஆகாயத்தை வெறித்துப் பார்த்தான். மிளகாய்த்தூள் கலந்த ஆவி பறக்கும் தண்ணீர் கம்பிக் கதவுகள் வழியாக விசிறிப் பாய்ந்து தாக்கியது. கூச்சலும் அலறலும் அதிகரித்தன. பாண்டி தன் காதுகளைப் பொத்திக்கொண்டான். கதவைத் திறக்கவிடாமல் நின்ற பலரது பிடி தளர்ந்தது. ''சூடு தாங்கல... ஒரு துண்டை மட்டும் எம்மேல போடுங்கடா...''

கைதிகள் புலவர் என்றழைக்கும் கலியபெருமாள் மட்டும் விடாமல் கேட்டைத் தள்ளிப்பிடித்து நின்றார். தலையில் யாரோ போட்ட துண்டு அவரது முகத்தில் விழுந்தது. துண்டு நனைந்து ஆவி பறந்தது. சற்று நேரத்தில், கொஞ்சங் கொஞ்சமாக அவரது பிடியும் தளர்ந்தது. வெளியில் நின்ற வார்டர்களும் கன்விக்ட் வார்டர்களாயிருந்த கைதிகளும் கதவைத் தள்ளிப் பாய்ந்து புகுந்தனர். உள்ளிருந்தவர்களை நாயை அடிப்பதுபோல அடித்து வெளியே வீசினர். பலர் ஆடைகளின்றி முழு நிர்வாணமாய் ரத்தம் சொட்ட வந்து விழுந்தனர். அவர்களைச் சில வார்டர்கள் உடனே ஒரு கம்பளிப்போர்வையால் சுற்றிப் பிடித்துக்கொள்ள... உருட்டுத்தடிகளுடன் நின்ற கன்விக்ட் வார்டர்கள், எலியடிப்பதுபோல மாறி மாறி அடித்தனர். கதறலில் சிறை மதில்கள் அதிர்ந்தன.

''ஏ... சொடலமாடா'' என்றபடி தன் காதுகளை இறுகப் பொத்திக் கொண்டான் பாண்டி.

''சொன்னேன்ல கம்பளிபரேடு குடுப்போம்னு... நீங்க கேக்கலையேடா... காயமே இருக்காது. நடமாட நாலு மாசம் ஆகும். எல்லாத்தையும் அள்ளி ஆஸ்பத்திரி பிளாக்குல போடுங்கடா... உண்ணாவிரதம் இருக்கானுகளாம் உண்ணாவிரதம்! அடி உதவுற மாதிரி அண்ணந்தம்பிகூட உதவமாட்டாண்டா.'' ஜெயிலர் தன் அலுவலக அறைக்கு நடந்தார்.



ஜெயிலுக்குள் போராட்டம் நடத்திய நக்ஸலைட் கைதிகளைத் தொடர்ந்து கண்காணித்து ஒடுக்க வாட்டசாட்டமான ஏழு கன்விக்ட் வார்டர்களாக கைதிகளை ஜெயிலர் நியமித்தார். அதில் ஒருவனாக பாண்டியும் இருந்தான். ஐ.ஜி. அருள் நாங்குனேரியில் அதிகாரியா இருந்தபோது அவரைக் கொலைசெய்ய முயன்றதாகக் கைதாகி ஆயுள்தண்டனை பெற்ற பரமத்தேவரும் இருந்தார். ஒரு சின்னப் பிரச்னை என்றாலும் பாண்டியும் பரமத்தேவரும் தவிர, மீதமுள்ள ஐந்து கன்விக்ட் வார்டர்கள் உள்ளே இருந்தவர்களை அடி நொறுக்கி விடுவார்கள்.

''பரமு அண்ணாச்சி, வெளிய நடந்ததைச் சகிக்கமாட்டாம ஒரு குத்தத்தைச் செஞ்சி உள்ளே வந்தேன். இங்க அதைவிடப் பெரிய அநியாயம் நடக்கு. நான் யாரை நம்பி ஜெயிலுக்கு வந்தேனோ அவங்க எங்குடும்பத்துக்கு ஒண்ணுஞ் செய்யலையாம். எம்பொஞ்சாதியும் எங்கண்ணனும் என்னைப் பாக்க வந்திருந்தாக. அவங்க வந்த கோலத்தைப் பாத்ததும் என் நெஞ்சே வெந்துபோச்சு அண்ணாச்சி. என்னால இங்க இனி இருக்கமுடியாது... தப்பிச்சிரணும்'' என்றான் பாண்டி.

''லே... அது அவ்வளவு சுளுவான காரியமில்லலே... தெரிஞ்சுக்க. பிடிபட்டா 'கம்பளிபரேடு' குடுத்திடுவானுக. முதுகுச் சதை முக்காத்துட்டுப் பொறாது... நானெல்லாம் இத்தனை வருஷம் இருக்கணும்னா இருக்கேன்... ஒழுங்கிருக்க ஒண்ணு செஞ்சு அம்புட்டுறாதே பாண்டி... இதைத்தான் சொல்லுவேன் கேளு... இந்த எண்ணத்தை விட்டுரு...'' என்றார் பரமத்தேவர்.

''அடப் போங்கண்ணாச்சி... தகிரியம் சொல்லுவிகளா... அதை விட்டுட்டு...'' ஒரு முடிவோடு சிரித்தான். பாண்டியின் எண்ணமெல்லாம் தப்பிப்பதிலேயே குறியாய் இருந்தது. ஒன்றும் தோதுவாதாய் இல்லை. பித்துப் பிடித்ததுபோல் அலைந்தான். ஒன்றும் முடியாமல் போனது. பாண்டியின் தோற்றத்தில் சன்னஞ்சன்னமாய் மாற்றங்கள் தெரிந்தன. கன்விக்ட்டுகள் போடும் உடுப்புடன் சட்டைக்குமேல் சட்டையாக இன்னொன்றும் போட்டுக்கொள்வான்.

வெயிலடிக்கிற நேரங்களில்கூட பழைய மழைகோட்டு ஒன்றைப் போட்டுக்கொண்டு திரிந்தான். தோளில் எந்நேரமும் ஒரு பூனைக்குட்டி... கையில் ஐந்தடி நீளக் குச்சியுடன் அலைந்தான். சின்ன மரங்களில் ஏறி பல்லிகளையும் ஓணான்களையும் அடித்து பூனைக்குப் போட்டு, அது ஆசையாய் விழுங்குவதைப் பார்க்கும்போது மட்டும் அவன் முகத்தில் வெளிச்சம் படரும்.

''என்னமோ தெரியல... பாண்டியண்ணனுக்கு வீட்டு நெனவுதட்டிருச்சு. லூசா கிறுக்குப்பிடிச்சதுபோல திரியுதாரு. பிளாஸ்டிக் காயிதம், பழைய துணி எதைக் கண்டாலும் எடுத்து கோட்டுக்குள்ள திணிச்சுக்கிடுறாரு. பூனைக்குட்டியத் தவிர யார்கிட்டையும் மொகங்கொடுத்துப் பேசுறதில்ல.''

''ஆமா, நானுந்தான் நெனைச்சேன். நேத்துக்கூட பீடி கேட்டேன்... குடுத்தாரு, பேச்செல்லாம் தெளிவாதான் இருக்கு. பாவம், மனசுக்குள்ள எதையோ நெனச்சு மறுகுறாரு. வாயைத் தொறந்து சொன்னாவுல பாரம் எறங்கும். வலியப்போயி, கேக்கப் பயமா இருக்கு. 'தூர வெலகுல செறுக்கிபுள்ள...'ம்பாரு...'' இப்படி மற்ற கன்விக்ட் வார்டர்கள் தங்களுக்குள் முணுமுணுத்துக்கொண்டனர்.

ஒரு நாள் மதியச் சாப்பாட்டு நேரத்துக்குப் பிறகு நக்ஸலைட் கைதிகள் இருந்த பழைய கண்டம் பக்கமாய் சூபரின்டெண்டெண்ட் திடீர் விசிட்

நின்றான்.

"என்ன பாண்டி, இவனுக ஒழுங்கா இருக்கானுகளா?"

"இருக்காங்க தொரை. எனக்கு மனசிலபட்ட ஒரு கருத்தைச் சொல்லுதேன்... கேப்பிகளா?"

"சொல்லு..."

அருகில் நின்ற பெரிய வேப்பமரத்தை அண்ணாந்து பார்த்துக் கைநீட்டினான். "பாருங்க தொரை... கொப்பு ஒண்ணு இந்த பிளாக்கைத் தாண்டி மதிலைத் தொட்டு நிக்கி. யாரும் ஏறிக்குதிச்சிட்டாம்னா நீங்க எங்களைக் கோவிப்பீங்க. இதை வெட்டி விட்டுறணும்."

"அடப்பாவி... நீயுமா?" தங்கள்மீது அனுதாபம் கொண்ட கன்விக்ட் வார்டர்களில் ஒருவன் பாண்டி என்று நினைத்திருந்த நக்ஸலைட் கைதிகளுக்கு ஆச்சரியமாய் இருந்தது.

"ஓயெஸ்... ஒடனே ஒரு ஆளைவிட்டு வெட்டச் சொல்லு..."

"இதுக்கொரு ஆளைத் தேடி எங்கே தொரை போறது? நானே வெட்டீரவா?"

"நல்லதாப் போச்சு... இந்த மாதிரிதான் இருக்கணும் பாண்டி. எதையுமே வர்றதுக்கு முன்னாடி தடுக்கணும்..." தட்டிக்கொடுத்து நகர்ந்தார் அதிகாரி.

அப்போதெல்லாம் ஜெயிலுக்குள் கொல்லுப்பட்டறை ஒன்று இருந்தது. வேலை தெரிந்த கைதிகளில் சிலர், ஜெயிலுக்குத் தேவையான சாமான்களை அடித்துக்கொடுத்தனர்.

"தொரை பழைய கண்டத்தில் நிக்குத மரத்தை வெட்டிவிடச் சொல்லிருக்காருலே... நல்லா நெடுகமா ஒரு அருவா அடிச்சுத்தாங்கல. ஒரு பெரிய கவுறும் வேணும். மேல உட்கார்ந்து வெட்டத் தோதா பாதாளக் கரண்டிபோல கொக்கியும் அடிச்சுத்தாங்கல..."

பட்டறையிலிருந்து சூபரின்டெண்டெண்டிடம் அனுமதி கேட்டனர்.

"ஓயெஸ்" என்றார். மறுநாளே செய்துகொடுத்தனர். அரிவாளை வாங்கியதும் மரத்தில் ஏறினான். சிரத்தையாய் ஒவ்வொரு கொப்பாய் வெட்டிவிட்டான். நீண்டு படர்ந்த கொப்புகள் சடசடவென்று சரிந்து விழுந்தன. ஒரு கயிற்றில் கொக்கியைமாட்டி தான் விழுந்துவிடாமல் பாதுகாப்பாய் இடுப்பில் கட்டிக்கொண்டான். மரம் வெட்டி முடித்ததும் மேலிருந்தபடியே நீளமான ஒரு குச்சியைச் செதுக்கிக்கொண்டு விறுவிறுவென்று எதையோ தேடித்தேடி உச்சிமரத்துக்கு ஏறினான்.

கீழே நின்ற வார்டர்கள்... "எறங்கு பாண்டி... விழுந்தா எலும்பு மிஞ்சாது... உச்சிமரத்துக்கு ஏன் போறே?" என்றனர்.

"மரப் பல்லின்னா என் பூனைக்குட்டி நல்லா சாப்டும்ணேய்.." பாண்டி அடித்த ஒவ்வொரு அடிக்கும் ஒரு பல்லி 'சொத், சொத்' என்று தரையில் விழுந்தன. பூனை ஓடி ஓடிக் கவ்வியது. மரத்தின் உச்சிக்குப் போனதும் பல்லியடிப்பதை நிறுத்திய பாண்டி, சுற்றும்முற்றும் பார்த்தான். திருச்சி நகரமே தெளிவாய் தெரிந்தது! ஒருபுறம் வெளிப்புற சுவரைத் தாண்டி வார்டர்களின் குடியிருப்பும் தோட்டமும்... இன்னொருபுறம் பொன்மலையின் கட்டடங்களும் ரோடுகளும் தெளிவாய் தெரிந்தன. இப்போது சிறையின் அமைப்பும் சுவர்களுக்கு அப்பால் வெளியே உள்ள பொசிஷனும் தெளிவாய் மனதில் பதிந்துபோயின. ஓசைப்படாமல் இறங்கித் தன் பூனைக்குட்டியை அள்ளி எடுத்து உற்சாகமாய் கொஞ்சினான்!



பொதுவாய் எல்லா சிறைகளின் வெளிச்சுவர் நாற்புறச் சதுரமாய், கனகச்சிதமாயிருக்கும். திருச்சி ஜெயிலின் சுற்றுப்புற அமைப்பு மட்டும் சற்று வித்தியாசமானது. ஒரு பக்கத்தில் மட்டும் இன்னொரு சிறிய சதுரம் சுவரை ஒட்டி இணைந்தது போல் பிதுங்கி நிற்கும். சுவரை ஒட்டிய பாதையில் மற்ற மூன்று பக்கமும் ஒரு மூலையில் நின்று பார்த்தால் சுவர் 'ட' போல திரும்பும் மறுமுனை வரை பார்க்கலாம். ஆனால், துருத்திக்கொண்டிருக்கும் பக்கம் நடந்தால் ஆள் தெரியாது. கைதிகள் அதை 'மூலைக்கேணி, வைக்கோல் ஓர்க் ஷாப்' என்பார்கள்.

முன்பு தச்சுக்கூட கோடௌன் இருந்த இடமாம் அது. பல வருடங்களுக்கு முன்பு உள்ளேயே ஒரு மாட்டுப் பண்ணை இருந்தது. அங்கே மாடுகளுக்கு வைக்கோல் அடைந்து கிடந்ததால் இந்தப் பெயர். அப்போதெல்லாம் காவலுக்கு இரவு பகல் இருபத்துநாலு மணி நேரமும் அந்தப் பாதையில் பன்னிரண்டு இடங்களில் கன்விக்ட் வார்டர்கள் நிலையாய் நிற்பார்கள். ஒரு தடவை அந்தப் பகுதியில் பதின்மூன்று கைதிகள் சுவரேறிக் குதித்துத் தப்பி ஓடிப் பிடிபட்டதால், மதில்சுவரை ஒட்டி பாராவுக்கு ஒரே இடத்தில் நிற்கும் முறை போய், இப்போது 'டிஸ்க் சிஸ்டம்' கொண்டுவந்து விட்டார்கள்.

இது கெடுபிடியான ஒரு சிஸ்டம். வழக்கம்போல பன்னிரண்டு இடங்களில் கன்விக்ட் வார்டர்கள் ஒரே இடத்தில் நிற்கமுடியாது. மெயின் கேட்டிலிருந்து கிளம்பும் ஒருவர் தன்னிடமுள்ள 'டிஸ்கை' அடுத்த பீட்டில் உள்ளவரிடம் போய் கொடுத்துவிட்டு அந்த இடத்தில் நின்றுகொள்வார். டிஸ்கை வாங்கியவர் போய் அடுத்து நிற்பவரிடம் கொடுக்கவேண்டும். இப்படியே அந்த பித்தளை வில்லை நகர்ந்து நகர்ந்து மீண்டும் கேட்டுக்கே சுற்றி வந்து சேரும்.

இது ஒரு கன்விக்ட் வார்டரிடமிருந்து இன்னொருவர் கைமாற சுமார் பத்துப் பன்னிரண்டு நிமிடங்கள் பிடிக்கும். சரியான நேரத்தில் அடுத்தடுத்து டிஸ்க்குகள் மெயின் கேட்டுக்கு வந்து சேரவில்லை என்றால் மெயின் கேட்டிலிருக்கும் வார்டர்கள் உஷாராகிவிடுவார்கள்.

பாரா நிற்கும் கைதிகளில் யாருக்கும் உடம்புக்கு முடியவில்லை என்றால், "நீ உன் இடத்திலேயே நில்லப்பா... நானே போயி டிஸ்கைக் குடுத்திடுறேன்" என்று ஒருத்தருக்கொருத்தர் அட்ஜஸ்ட் செய்து கொண்டால்கூட கேட்டில் இருப்பவர்களுக்கு விஷயம் தெரியாது. தெரிந்தாலும் கண்டும் காணாமலிருப்பார்கள். அவர்களுக்கு நேரத்துக்கு 'டிஸ்க்' வந்து சேர்ந்தால் சரி.

பாராவுக்குப் பாண்டியின் முறை வந்தபோது, லேசாய் மழை தூறி வெறித்திருந்தது. டிஸ்க் கைமாறி வந்துகொண்டிருந்தது. பாண்டி நிற்குமிடம் மற்றவர்கள் பார்வையில் படாத மூலைக்கேணி அருகே வந்தபோது மாலை சுமார் நாலரை மணியிருக்கும். பாண்டியிடம் டிஸ்கைத் தரவேண்டியவர் வந்தபோது, பாண்டி நிற்கவேண்டிய இடத்தில் ஆள் இல்லை.

"பாண்டியண்ணாச்சி நிக்கவேண்டிய ஸ்பாட் ஆச்சே... எங்க போயிருப்பாரு..." சுற்றும்முற்றும் பார்த்தார். விளக்குக் கம்பத்தின் அடியில் கன்விக்ட் வார்டர்கள் அணியும் சட்டை, பெல்ட் கிடந்தன. பெல்ட்டின்மேல் மடிப்புக் கலையாத குல்லாவும் இருந்தது. எதிரே சற்று தூரத்திலிருந்த கழிப்பறையைப் பார்த்தார்.

"பாவம், வயிறு சரியில்ல போலிருக்கு... அதான்..." என்று நினைத்தவர், பாண்டி வாங்கிச் செல்லவேண்டிய டிஸ்க்கை தானே கொண்டுபோய்

நடந்ததுதான் தாமதம்... கழிப்பறைக்குள்ளிருந்து பாண்டி மழைகோட்டு சகிதமாக அவசரமாய் வெளியேறினான். மேலும் இரண்டு கைதிகள் அவனுடனிருந்தனர். அதில் ஒருத்தன் பெயர் முருகன். மதுரைப் பக்கத்து ஆள். இன்னொருத்தன், வண்டிக்களிம்பைப் பூசியது போன்ற கறுப்பு. சட்டி போல் முன்தள்ளிய வயிறு. இரண்டாம் பிளாக் கைதி அவன். அவனது நிஜப் பெயர் இன்னதென்று யாருக்குமே தெரியாது. 'குள்ளவாத்து' என்றும் 'வவுத்தான்' என்றும்தான் ஜெயிலே கூப்பிடும்.

''லே... வவுத்தான்... அடுத்த டிஸ்க் வர்றதுக்குள்ள கிளம்பணும்ல... வார்டர் யாரும் வாருதானான்னு நீ பாத்துக்க...'' - சொன்ன வேகத்தில் மழைகோட்டுக்குள் ஒளித்து வைத்திருந்த கொக்கிகள் பொருந்திய நீண்ட கயிறை எடுத்தான். அது முன்பு மரம் வெட்டுவதற்காக ஜெயிலில் கேட்டு வாங்கியது. அதை எறிந்த வேகத்தில், சுவர் மேல் போகும் மின்சாரக் கம்பியைத் தாங்கி நிற்கும் கம்பத்தில் தொற்றியது. கயிற்றை ஒரு முறை இழுத்துப் பார்த்தான்.

''நீ மொதல்ல ஏறுல முருகா... நாம் பின்னால வருதேன்...''

''அண்ணே, கம்பியில கரண்ட் இருந்தா..?''

''எப்பவும் அதுல கரண்ட் போட்டுவிட மாட்டானுகல... எதுக்கும் இதைப் போட்டுக்க... கம்பிமேல பட்றாம போ... போயி இதைக் கீழே போடு...'' தன் மழைகோட்டையும் அதற்குள்ளிருந்த பிளாஸ்டிக் காகிதங்களையும் எடுத்துக்கொடுத்தான்.

''கிறுக்கம் மாதிரி இதை எதுக்குத் தூக்கீட்டுத் திரியுறேனு நெனைச்சண்ணே. இப்பவுல்ல தெரியுது.''

''போடா சீக்கிரம்...''

கயிற்றைப் பிடித்தவன் சுவரில் கால் பதித்து முதுகை வளைத்து கை பலத்திலேயே மளமளவென்று ஏறினான். மதிலின் மேல்பரப்பு ஆள் நிற்கத் தோதில்லாமல் வளவளப்பாயிருந்தது. அதன்மேல் போகும் கம்பிகளிலும் மின்சாரம் பாய்ச்சப்பட்டிருக்கவில்லை என்பதை உறுதிப்படுத்தினான்.

''அந்தானிக்குச் சீக்கிரந்தாவ்வுல..''

இப்போது கயிற்றைப் பிடித்து உடும்பு போல் பாண்டி மதிலில் ஏறினான். சுற்றும்முற்றும் பார்த்துக் கொண்டிருந்த வவுத்தான், பாண்டி நின்ற இடத்தில் வந்து தயாராய் நின்றான். ''சீக்கிரம் போயி மேலருந்து கவுத்தப் போட்டு என்னைத் தூக்குண்ணே. என்னால ஏறிவர முடியாது...''

மேலே ஏறிவிட்ட பாண்டி கிசுகிசுத்த குரலில்... ''லே.. வவுத்தான்.. வழுக்குதுல... நிக்கமுடியல. கவுத்தை அந்தப் பக்கம் போட்டு எறங்கீட்டு உள்ளே போடுறம்ல... ஒண்ணும் கஷ்டமில்ல... நீ ஏறி வந்திரு...''

''சரிண்ணே...''

சுவருக்கு வெளியே கயிறைப் போட்டு இறங்கிய பாண்டி, வெளியே நின்று சுண்டி இழுத்தான். பற்றியிருந்த கொக்கி விடுபட்டு கயிறு கையோடு வந்துவிட்டது.

உள்ளே நிற்கும் வவுத்தானுக்குக் கேட்கிற மாதிரி ''லே... வவுத்தான்... தப்பா நெனைக்காதல... ஒன்னால ஏறிவர முடியாது. ஆள் பாக்கத்தாம்ல ஒன்னை நிறுத்தினேன். நான் வெளியே போறது ஒரு முக்கியமான சோலியை முடிக்கத்தான். எப்டியும் இங்கதான் திரும்ப வருவேன். நீ மட்டும் மனசை விட்றாதே. தைரியமா இருல'' என்றான்.



தெரியவில்லை. அவசர அவசரமாய் அந்த இடத்தைவிட்டு அகன்று மற்ற கைதிகளுக்குள் போய் உட்கார்ந்து கொண்டான்... படபடவென்றிருந்தது. அடுத்த சில நிமிடங்களில் பிளாக்வாரியாகக் கணக்கெடுப்பு தொடங்கி விட்டது. மாலை ஆறு மணிக்குள் முடித்துவிட்டால் அதையடுத்து ரேடியோவில் மாநிலச் செய்தி வைப்பார்கள். எதுவும் பிரச்னை என்றால் ரேடியோ வைக்கப்படாது. உள்ளே இருப்பவர்களுக்கு ரேடியோ செய்தி கேட்கவில்லை என்றால் அன்றைக்குக் கிறுக்குப் பிடித்தது போலாகிவிடும். அதிலும் நக்ஸலைட் கைதிகள் ரகளையே பண்ணிவிடுவார்கள்.

''நியூஸ் வர்ற நேரமாச்சு. இன்னும் ரேடியோ போடாம இருக்கானுக...''

''ஏ... நியூஸ் வைங்கய்யா...'' நக்ஸலைட்கள் இருந்த சி.பி. கண்டத்திலிருந்து சத்தங்கள் எழுந்தன.

''ஏதோ கணக்கு டேலி ஆகலையாம்... அதான்...'' என்றனர் வார்டர்கள்.

திடீரென்று சிறையின் சைரன் அலறியது!

''இப்ப எதுக்கு அலாரம் வைக்கிறானுக?''

''ரெண்டாம் பிளாக்கில ஒரு ஆள் கொறையுதாம்.''

''வேற வேல இல்லாதவனுக. ஒழுங்கா ஒண்ணு ரெண்டு படிக்கச் சொல்லுங்க...''

கைதிகள் எல்லோரையும் வரிசையாய் உட்கார்த்தி வார்டர்கள் எண்ணிக் கொண்டிருந்தனர். மீண்டும் சைரன் அலறியது. வவுத்தான் திருதிருவென விழித்துக் கொண்டிருந்தான்.

''இப்ப எதுக்கு மறுபடியும் அலாரம் வைக்கிறானுக?'' என்றான்.

ஒருவன் உத்தேசமாக... ''இல்ல... யாரோ தப்பிச்சுப் போயிருக்கான். ஒடனே வெரட்டிப் புடிச்சிட்டாங்களாம்... இனி சீக்கிரம் ரேடியோ வெச்சிடுவாங்க'' என்றான்.

வவுத்தானுக்கு அடிவயிறு கலங்கியது. பாண்டியோ, முருகனோ பிடிபட்டு அடி பொறுக்கமாட்டாமல், இவன்தான் ஆள் பார்த்தான் என்ற உண்மையைச் சொல்லிவிட்டால்? கற்பனை செய்யவே முடியவில்லை.

'எதுக்கும் நாமே முந்திக்கிடுவோம்... அடி கொறையும்...'

சற்றுத் தள்ளி கைதிகளை எண்ணிக்கொண்டிருந்த கணக்குப்பிள்ளையிடம் உண்மையைச் சொல்ல எழுந்து ஓடினான்.

''கணக்குப்புள்ள ஐயா, நான் கக்கூஸுக்குப் போனேன். அப்ப பாண்டியும் முருகனும்..'' என்று சொல்ல வாயெடுத்தான்.

''போடா... எனக்கு வர்ற கடுப்புல மூஞ்சில மிதிச்சிருவேன். போயி உக்கார்றா... நான் என்ன வேலை பாத்திட்டிருக்கேன்னு தெரியாம முன்ன வராத...'' வார்டர் சிடுசிடுத்தார். வவுத்தான் விலகிப்போய் உட்கார்ந்தான்.

சற்று தூரத்தில் அவசரமாய் சூபரின்டெண்டெண்ட் வந்து கொண்டிருந்தார்.

'எப்படியும் தெரிஞ்சு போகும்... தொரைகிட்டயே சொல்லிட்டா?'

''தொரை...'' என்று கும்பிட்டான்.

''என்னடா...?''

''கக்கூஸுக்குப் போனேன். அப்ப மூலைக்கேணிப் பக்கம் சத்தங்கேட்டுப் போய் பாத்தேன். கன்விக்ட் வார்டர் பாண்டியும் ரெண்டாம் பிளாக்

தெரியப்படுத்த கணக்குப்பிள்ளை வார்டரைத் தேடிப் போனேன், காணோம். அவரு வந்ததும் சொன்னேன். அவரு காதுல வாங்காம 'போடா... நீ ஒண்ணுஞ்சொல்லாத... போயி உக்காரு... எனக்குத் தெரியும்'னுட்டாரு தொரை.''

ஜெயில் பரபரப்பானது... உடனே கன்விக்ட் வார்டர்களைச் சரிபார்த்தார்கள். பாண்டியும் மிஸ்ஸிங்!

''எந்த எடத்தில..? வந்து காமிடா...''

வவுத்தான் கைநீட்டிய இடத்தில் சுவரின்மேல் பசேலென்று படர்ந்திருந்த பாசியில் செங்குத்தாய் கால் தடங்கள் தெரிந்தன!

அதிகாரிகள் அதிர்ச்சியில் நிலைகுலைந்து நின்றனர்.

மேலிடத்துக்குத் தகவல் பறந்தது. திருச்சி கன்டோன்மெண்ட் போலீஸ் ஸ்டேஷனிலிருந்து படைபடையாய் போலீஸார் பாண்டியைத் தேடிக் கிளம்பினர். சொந்த ஊருக்கு அவன் வரக்கூடும் என்று கருதி ஒரு போலீஸ் டீம் சீவலப்பேரியை நோக்கி விரைந்தது.

திருநெல்வேலியிலும் போலீஸ் உஷார் படுத்தப்பட்டது. சீவலப்பேரியையும் சுற்றியுள்ள ஊர்களிலும் வேனிலும் ஜீப்பிலுமாக போலீஸார் அலைபாய்ந்தனர்.

தன்னுடன் தப்பித்த சக கைதியை ''எங்காச்சும் ஓடிப் போய் பொழச்சுக்கல... சேர்ந்து போனா புடிபட்டுடுவோம்'' என்று அனுப்பிவிட்டு கால் போனபோக்கில் வெகுதூரம் ஓடிய பாண்டி, ஒரு ரயில்வே லெவல் கிராஸிங் வந்ததும் நின்றான். மேலெல்லாம் தெப்பமாய் வியர்த்து ஒழுகியது. மூச்சு வாங்கியது. தண்டவாளத்தை ஒட்டி மீண்டும் ஓடத் தொடங்கினான். கொஞ்ச தூரம் ஓடியபின் தூரத்தில் சின்ன ரயில்வே ஸ்டேஷன் தெரிந்தது. சற்றுநேரம் தண்டவாளத்தில் உட்கார்ந்து தகிப்பாறினான். மெள்ள ஸ்டேஷனை நோக்கி நடந்தான். அந்த ஸ்டேஷன் இருந்த விதத்தைப் பார்த்தால் பெரிய ரயில் எதுவும் நிற்கும்போலத் தெரியவில்லை. எப்போதோ வரப்போகும் பாஸஞ்சர் வண்டிக்காக இரண்டு மூன்று பேர் மட்டும் விளக்கு வெளிச்சத்தில் உட்கார்ந்திருந்தனர். பிளாட்பாரத்தில் ஏறி மெள்ள நடந்தான். பாதையில் இருட்டில் படுத்துக்கிடந்தவன் மீது 'நலுக்' என்று கால் இடறி மிதித்துவிட்டு உற்றுப் பார்த்தான். ஒரு பையைத் தலைமாட்டுக்கு வைத்துப் படுத்திருந்தவன் போதையில் நெளிந்தான். அவன் தலைமாட்டில் கிடந்த பையை எடுத்தான் பாண்டி. உள்ளே பழைய வேட்டி, சட்டை சுருட்டிக் கிடந்தன. மெள்ள உருவி எடுத்து இருட்டுக்குள்ளேயே மாட்டிக்கொண்டு பையை வீசிவிட்டு சற்றுத் தள்ளி இருட்டிலேயே உட்கார்ந்திருந்தான். கொஞ்ச நேரத்தில் ஒரு எக்ஸ்பிரஸ் ரயில் ஊளையிட்டபடி வந்தது. சிக்னல் விழாமல் இருக்கவே, ஸ்டேஷனுக்குச் சற்றுத் தள்ளியே சில நிமிடங்கள் நின்று பின்னர் உடனே கிளம்பியது. அது வேகம் பிடிக்குமுன் பாய்ந்து தொற்றினான். ரயில் தெற்கு நோக்கிப் போவதை உணர்ந்தான். வாசலுக்கு அருகே அயர்ந்து





உறங்கினான். அது ஒரு ஃபர்ஸ்ட் கிளாஸ் கம்பார்ட்மெண்ட். ரயில் கொஞ்சம் தூரம்தான் போயிருக்கும், அதற்குள் ரயில்வே டிக்கெட் பரிசோதகர் ஒருவர் அவனை எழுப்பினார்.

''நீ எப்படி இதுல ஏறினே? அடுத்த ஸ்டேஷன் வரட்டும்... ஒன்னை போலீஸ்ல ஒப்படைச்சிர்றேன் இரு...''

''ஐயா... நாங் கஷ்டப்படுத சம்சாரிங்க... வேணாமுங்க... நானே எறங்கிப் போயிடுதேங்க'' என்றான் பரிதாபமாக. சத்தம் கேட்டு உள்ளிருந்து தற்செயலாய் வந்து பார்த்த பெரியவர் ஒருவர் பரிசோதகரை அழைத்து, ''பார்த்தா பரிதாபமா இருக்கு... நான் அவனுக்கு ஃபைன் கட்டிடுறேன். விட்டுருங்க... பாவம்'' என்று தமிழை நிறுத்தி நிதானமாய்ப் பேசினார். உடனே உரிய பணமும் கட்டினார். ''நீங்க நல்லாயிருக்கணும் சாமி!'' என்று கும்பிட்டான். தன் பின்னே வரச்சொல்லி சைகை செய்துவிட்டு நடந்தார். அந்தத் தனிப் பெட்டியில் அவரது சம்சாரமும் உட்கார்ந்திருந்தாள். அவர்களால் சரளமாய்த் தமிழ்பேச முடியவில்லையே தவிர, பாண்டி பேசுவதைப் புரிந்துகொண்டனர். ''ஐயா, எனக்குத் தெக்க சின்ன கிராமமுங்க... மழை தண்ணியில்லாம ஊரே பஞ்சமா போச்சு. கூலி வேலை பார்த்தாவது பொழைக்கலாம்னு ரயிலேறி வந்தேங்க. வெச்சிருந்த ரூவாய டிக்கெட்டோட யாரோ களவாண்டுட்டாம்யா... இப்பத் திரும்பவும் ஊருக்கே போறேன்...'' பொய் சொன்னான். பெரியவரின் மனைவி தன் பையிலிருந்து பழங்களை எடுத்துச் சாப்பிடக் கொடுத்தாள். சற்றுநேரம்

வேலை செய்றியா?''

''சரிங்க'' என்றான் உற்சாகத்தோடு.

''எங்க கூட வா'' என்றார் பெரியவர். பின்னர் இருவரும் தூங்கிவிட்டனர். பாண்டி அவர்களுக்குக் காவல் இருப்பதுபோல் நடைபாதையில் உட்கார்ந்து வந்தான். ஒரு இடத்தில் ரயில் நின்றது. ஜன்னல் வழியே எட்டிப் பார்த்த பெரியவர், ''கொடைரோடு வந்தாச்சு'' என்றபடி தன் மனைவியை எழுப்பினார். பாண்டி அவர்களது பெட்டி படுக்கைகளைத் தலையிலும் கக்கத்திலும் தூக்கிக்கொண்டு அவர்களுடன் நடந்தான்.

**மா**தங்கள் பல உருண்டன. தப்பிச் சென்ற பாண்டியைத் தேடி போலீஸ் சோர்ந்துபோன நேரம்... ஊராரும் பாண்டியைச் சன்னஞ்சன்னமாய் மறந்தேவிட்டனர்.

திடீரென்று ஒரு நாள் இரவு ஊரடங்கிய பின்பு திருநெல்வேலி ஜங்ஷனை ஒட்டிய சிந்துபூந்துறையில் இருந்த குன்னத்தூர் நயினாரின் வீட்டுக் கதவு 'தடதட' என்று தட்டப்பட்டது. படுக்கைக்குப் போன நயினாரே வந்து திறந்தார். வாசலில் பாண்டி! நல்ல சந்தன கலரில் சில்க் ஜிப்பா போட்டு கையை மடிக்காமல் ஏத்திவிட்டிருந்தான். பளீரென்ற சலவை வேட்டியை ஏத்திக் கட்டியிருந்தான். தலையில் இறுகக்கட்டிய உருமா.. காலில் கனத்த தோல் செருப்பு...

''லே பாண்டி! வால... எப்பம்ல வந்தே? இப்ப எங்கல இருக்க நீ?''

''ஜெயில்லருந்து தப்பிச்சிட்டேன்... தெரியும்ல.''

''பின்ன தெரியாதால... ஒன்னைக் கண்டா ஒடனே சொல்லணும்னு இங்க எல்லாத்தையும் ரெண்டு மூணு மாசமா போலீஸ் படாதபாடு படுத்திட்டானுகல... நாங்க எல்லோருமா உங்குடும்பத்துக்கு என்ன செய்யறதுன்னு கூடிப் பேசிக்கிட்டு இருக்கப்ப நீ தப்பிச்சிட்ட. போலீஸ் கெடுபிடி ஜாஸ்தியாயிடிச்சு. யாரையும் தேடிப்போயி எதுவும் செய்ய முடியலே'' என்று நயினார் வருத்தப்பட்டார்.

''அதான பார்த்தேன். நாங்கூட ஒங்களத் தப்பிதமா நெனச்சிட்டேன்...''

''அதெப்பீடில நெனச்சே? வா, வா... ஒட்காரு...'' என்று சொல்லிக் கொரைப்பாயை பெரிய ஜன்னலோரமாய் போட்டு எதிரில் உட்கார்ந்தார். உள்ளே பின்வாசலில் இருந்த தன் வேலையாளைக் கூப்பிட்டார்.

''பாண்டி வந்திருக்காம்லே... போயி சாயுபு கடையில பிரியாணி வாங்கிட்டுவாலே... என்ன புரிஞ்சதா?''

''சரிங்க ஐயா'' என்று வேகமாய் கிளம்பினான் வேலையாள்.

''முன்சீப்புகிட்டருந்து எடுத்த அந்த ரிவால்வர் எங்கேல?'' அக்கறையாய்க் கேட்டார்.

''அதையேங்கேக்குதீக... மொதச் சோலியா நேத்துப் போயி, அதை மறைச்சு வெச்சிருந்த எடத்தில் பார்த்தேன். அம்புட்டும் ஒண்ணுக்கும் ஒதவாம கெடந்திச்சு... தூர வீசிட்டேன். ஒரு அருவா மட்டும் வெச்சிருக்கேன்...'' இடுப்பைத் தொட்டுக் காட்டினான்.

சிரித்தார் நயினார்.

இருவருக்கும் பேச்சு வளர்ந்துகொண்டேயிருந்தது. ''பிரியாணி வாங்கப்போன செறுக்கிபுள்ளையக் காணோமே'' என்று முணுமுணுத்தபடி அடிக்கொருதரம் வாசலைப் பார்த்தார். தொடர்ந்து பேசிக்கொண்டே



பேசிக்கொண்டே ஜன்னல் வழியே திரும்பிப் பார்த்த பாண்டி திடுக்கிட்டான்! போலீஸ்வேன் ஒன்று அந்த வீட்டுக்குமுன் வந்து நின்றது. அதில் நயினார் பிரியாணி வாங்கிவர அனுப்பிய வேலையாள் உட்கார்ந்திருந்தான்!

உட்கார்ந்தபடிக்கே வீட்டைக் கைநீட்டி எதையோ சொன்னான். திபுதிபுவென்று பூட்ஸ் சத்தம் எழத் தரையிறங்கிய கான்ஸ்டபிள்கள், நயினாரின் வீட்டு வாசலில் வரிசையாய் நின்றனர். முன்ஸீட்டில் இருந்து குதித்த சப்-இன்ஸ்பெக்டர், ''அவம் ரிவால்வர் வெச்சுருப்பான்... ஜெயில்ல இருந்தே தப்பிச்சவன்... எதுக்கும் துணிஞ்சவன்... அவசரத்தில கிளம்பினதால நம்ம கையில துப்பாக்கி எதுவுமில்ல. ஜாக்ரதையா பிடிக்கணும்...'' கிசுகிசுத்தார்.

''சரி, இப்ப யார் யாரு வீட்டுக்குள்ள போறது?'' தயங்கியபடி கேட்டார் ஏட்டு. வேனுக்குள்ளிருந்து வேகமாய் இறங்கியவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து வீட்டை ஏறிட்டனர். அகலமான படிக்கட்டுகள்... இவர்கள் நிற்கும் இடத்திலிருந்து சற்று உயரத்தில் இருந்தது வீடு. கொஞ்சம் வேகமான இளவட்டங்கள் மூன்று பேர் முன்னால் வந்தனர். ''நாங்க உள்ளே போயி அவனைப் புடிக்கிதோம்யா...''

''சரி... நான் 'மார்ச்'ன்னு சொன்னதும் நீங்க மூணு பேரும் மளமளன்னு உள்ள நொழஞ்சிடணும். அவன் வெளியில ஓடிவந்தா வாசல்லயே மடக்கிப் பிடிக்கத் தோதா நீங்க ரெண்டு பேரும் இடது பக்கமா மறஞ்சு நில்லுங்க. நீங்க ரெண்டு பேரும் இங்க நில்லுங்க. வீட்டுக்குள்ள போகும் மூணு பேர் பின்னாடியே நானும் போறேன். ஒரு விசில் கொடுப்பேன்... ஒடனே எல்லோரும் உள்ளே ஓடியாந்திரணும்... கடைசியா உள்ளே வர்றவன் வாசக் கதவைச் சாத்திடணும். எங்கே போயிருவான் புய... எலிய அமுக்குற மாதிரி உள்ள வெச்சே அமுக்கீரணும்.''

பாண்டி விருட்டென்று எழுந்தான். உட்கார்ந்திருந்த நயினார், எழுந்து நின்றவனை அண்ணாந்து பார்த்தார். அவன் வானத்துக்கும் பூமிக்குமாய் கால்களை அகலப் பரத்தி விஸ்வரூபம் எடுத்து நிற்பதைப் போலிருந்தது.

''லேய் நயினாரு... பெரிய மனுசம்னு நம்பித்தானல உம்ம வாசப்படி மிதிச்சேன்...'' குனிந்து இடதுகையால் அவரது தலைமுடியைக் கோதிப்பிடித்தான். வலதுகையால் தன் இடுப்பிலிருந்த அரிவாளை உருவி எடுத்தான். சத்தம்போட வாயெடுத்த நயினாருக்குக் குரல் வரவில்லை.

வாசலுக்கு வெளியே சப்-இன்ஸ்பெக்டர் மெல்லிய குரலில் ''உம்... மார்ச்..'' என்றார். மூன்று கான்ஸ்டபிள்கள் மட்டும் வாசலை நோக்கி 'கிரக் கிரக்' என்று பூட்ஸின் கீச்சிடலுடன் இரண்டு எட்டு வைத்திருப்பார்கள். அதற்குள் உயரமான வாசற்படியில் இருந்து கடகடவென்று படிகளில் தேங்காய் போல உருண்டு, படியேறப் போன போலீஸாரின் காலடியில் ரத்தப்பெருக்குடன் தரையில் நின்றது நயினாரின் தலை!

வந்தவர்கள் வெலவெலத்துப் பின்வாங்கினர். சப்-இன்ஸ்பெக்டர் வாயிலிருந்த விசிலை ஊத எத்தனித்தார். அதிர்ச்சியில் முடியவில்லை. காலடியில் கிடந்த தலையைக் கண்ட போலீஸார், சிலருக்கு லேசாய் நடுக்கம் எடுத்தது. சில நிமிட இடைவேளையில் சுதாரித்துக்கொண்டு விசிலை ஊதினார் சப்-இன்ஸ்பெக்டர். கொத்தாகக் கிளம்பி வீட்டுக்குள் நுழைந்தனர் போலீஸார். முன்ஹாலில் நயினாரின் தலையில்லாத உடல் சலனமின்றிக் கிடந்தது. தரைமுழுதும் ரத்தம் பெருக்கெடுத்து ஓடி உறைந்திருந்தது. வீட்டுக்குள் ஆளரவம் இல்லை. வீட்டின் பின்வாசல் கதவு திறந்து

அரிவாளுடன் ஓடிய பாண்டி, வீட்டுக்குப் பின்புறம் விரிந்து ஓடும் தாமிரபரணி ஆற்றுக்குள் இறங்கி மறைந்தான். போலீஸார் திரும்பவும் தடதடவென்று முன்வாசலை அடைந்து, வந்த வேனிலேயே ஏறிக்கொண்டு அதிலிருந்த நயினாரின் வேலையாளை மட்டும் இறக்கிவிட்டு விரைந்தனர். ''யய்யா...ஆ!'' கண்ணெதிரே தன் எஜமானரின் தலை தரையில் கிடப்பதைக் கண்டு முகத்தை மூடிக்கொண்டு கதறினான். சீறிக் கிளம்பிய வேன், ஜங்ஷன் வழியாய் பாளையங்கோட்டை போகிற பாதையில் விரைந்து கொக்கிரகுளம் ஆற்றுப் பாலத்தின்மேல் நின்றது. எல்லோரும் ஆற்றை உற்றுப் பார்த்தனர். நிலா பட்டாய் பிரகாசித்து ஓடுதண்ணீரில் தங்கப்பாளம் போல் தகதகத்துக் கொண்டிருந்தது. கண்ணுக்கெட்டிய தூரம் வரை கரையோரம் மண்டிக்கிடந்த நீர்க்கருவைப் புதர்களைத் தவிர, ஆற்றுக்குள் ஆள்நடமாட்டம் தெரியவில்லை. ''குய்ய்'' என்ற சில்வண்டுகளின் ரீங்காரம் தவிர வேறு சத்தம் இல்லை. மேலதிகாரிகளிடம் தெரியப்படுத்த பாளையங்கோட்டைக்கு விரைந்தனர்.

**ம**றுநாள் விடிந்ததும் தன் வீட்டுக்குப் பின்புறம் தோட்டத்தில் பூச்செடிகளுக்குத் தண்ணீர் விட்டுக்கொண்டிருந்த வக்கீல், செடிமறைவில் பாண்டி உட்கார்ந்திருப்பதைப் பார்த்ததும் அதிர்ந்தார். ''ஏ... என்னலே... நீ இங்க..?'' என்றார். அப்படியே நெடுஞ்சாண்கிடையாக வக்கீலின் காலில் கும்பிட்டு விழுந்தான் பாண்டி.

''எந்திரில... இப்பம் எதுக்குல கால்ல விழுதே? ஏம்ல இப்டி ஜெயில்லருந்து ஓடியாந்தே? அதாம் மணியடிச்சா சோறு போடுதாம்ல... பேசாம இருந்திட்டு வரவேண்டியதுதானல'' என்றார் செடிகளுக்குத் தண்ணீர் விட்டுக்கொண்டே. பாண்டி தரையிலிருந்து எழுந்திருக்கவே இல்லை.

''ஏல... நீ இப்பம் என்ன பண்ணிட்டு வந்திருக்க? அதைச் சொல்லுல மொதல்ல..''

தயங்கித் தயங்கி விஷயத்தைச் சொன்னான் பாண்டி. வக்கீலின் முகமெல்லாம் சிவந்தது. ''ஏல, ஒனக்குக் கோட்டியால பிடிச்சிருச்சு? ஒரு கொலயச் செஞ்சு தூக்குல சிக்கித் தப்பிச்சே... இப்பம் ஒந்தாயிபிள்ளகள்ல ஒருத்தனையே போட்டுத்தள்ளிட்டேன்னு வந்து நிக்கியேல. இப்பம் ஐ.பி.சி. 303-னு ஒரு சட்டம் இருக்கு... ஒரு கொலயச் செஞ்சுட்டு ஆயுள் கைதியா இருக்கவம் வெளியில வந்து இன்னொரு கொலையச் செஞ்சா அவம் பேருல கேஸ், அப்பீல்னு எதுவுமே இல்ல. நேர தூக்குத்தாம்... தெரியுமால ஒனக்கு?''

''இல்லங்கய்யா... அவம் என்னை போலீஸ்ல சொல்லி... நம்பிக்கைத்துரோகமில்லா...''

''நீ ஒண்ணும் பேசாதல... இனி நீ உசுரோட இருக்கதும் ஒண்ணுதாம்... செத்துப்போறதும் ஒண்ணுதாம். ஒன்னை கேஸ் நடத்திக் காப்பாத்த முடியாது. போலீஸ் புடிக்கிற வரைக்கும் எங்காவது கண்காணாம ஓடி ஒளிஞ்சு உசுர் பொழச்சுக்கோ... போ...''

மௌனமாய் திரும்பி நடந்தான் பாண்டி.

''ஏ... ஒன்னத்தாம்ல... நில்லு...'' – திரும்பினான். ''சாப்புட்டையால..?''

உதட்டைப் பிதுக்கினான்.

''சரி... வால...'' அவனை இழுத்துச் சென்று சாப்பாடு போட்டார். ''வாழவேண்டிய வயசுல இப்படிக் கொலை, ஜெயில்னு போனியேல...



ரொம்பவும் ஆதங்கப்பட்டார் வக்கீல்.

**ஜெ**யிலிலிருந்து இவன் தப்பித்ததைக் கேள்விப்பட்டதிலிருந்தே தன் புருஷன் எப்படியும் வருவான்... எந்த நேரத்திலும் வருவான் என்று எதிர்பார்த்தாள் வேலம்மாள். ராப்பகலாக விழித்திருந்தாள். இரவில் சரசரவென்று சின்ன அரவம் கேட்டாலும் சடக்கென்று விழித்துக் கதவைத் திறந்து சுற்றும்முற்றும் பார்ப்பாள். பின் சோர்ந்துபோய் பாயில் வந்து விழுவாள். அன்றைக்கும் யாரோ கதவைத் தட்டுவதுபோலிருந்தது. வழக்கம்போல மனப்பிரமை என்று நினைத்தபடி படுத்திருந்தாள். சற்று இடைவெளிவிட்டு மீண்டும் கதவு தட்டப்பட்டதும் வேகமாய் எழுந்துபோய் கதவைத் திறந்தாள்.

வெளியே பாண்டி நின்றான். அவளுக்குக் கண்ணீர் பெருக்கெடுத்தது. விசும்பி விசும்பி அழுதாள். அவளை ஆறுதல் படுத்தினான் பாண்டி. ''நான் என்ன செய்யட்டும்... என்ன ஏதுன்னு தாக்கல் கேட்கத்தாம் நயினார் வீட்டுக்குப் போனேன். அவரைக் கொலைபண்ணணும்னு நெனக்கல... எங்கிட்ட சத்தியம் வாங்கின அந்த மனுசரே போலீஸ்ல பிடிச்சுக்கொடுக்கப் பாத்தார்னதும் பொறுக்க முடியல... சோலிய முடிச்சுப்புட்டேன். வக்கீலய்யாவைப் பாத்தேன். 'நீ உசுரோடு இருக்கிறதும் ஒண்ணுதாம்... செத்துப்போறதும் ஒண்ணுதாம்ல'ன்னு சொல்லிட்டார். இங்க விடிஞ்சதும் போலீஸ் வந்திரும்... நான் இப்பமே கிளம்புதேன்.''

''எங்க?''

''அதான் தெரியல... வல்லநாட்டுமலைக்குப் போயிடலாம்னு நெனக்கேன்.''

''சரி... நானும் வாரேன்... கிளம்புங்க...'' பாண்டி அதிர்ந்தான். ''ஏ... நீ என்ன சொல்லுத... நானே உசுற வெறுத்துப் போறேன். இதுல ஒன்னையும் கூட்டிட்டுப் போகச் சொல்லுதியேட்டீ... அன்ன ஆகாரமில்லாம காட்டுக்குள்ளாற ஒளிஞ்சு கெடக்கணும். எனக்கு எல்லாஞ்சரி... நீ வேணாம்...''

''சரி... போங்க... விடியுமுன்ன நான் நாண்டுக்கிடுதேன். இனி ஒரு நிமிஷம் ஒத்தயில உசிரை வெச்சுருக்க மாட்டேன்...'' ஆவேசமாய்ச் சொன்னாள். 'இவள் சொன்னால் சொன்னபடிக்குச் செய்வாள்...' யோசித்த பாண்டி ஒரு முடிவுக்கு வந்தான்.

''சரி... வா கிளம்பு...'' இருட்டில் பருத்திக்காட்டுக்குள் இறங்கி வல்லநாட்டுமலை நோக்கி நடக்க, மாற்றுத் துணிகூட எடுத்துக்கொள்ளாமல் அந்தபடிக்கே அவனைப் பின்தொடர்ந்தாள் வேலம்மாள்.

போலீஸ் மேலிடத்தில் பதட்டம் பரவியது திருச்சி ஜெயில்ல இருந்து தப்பிச்சதுமே அவனைத் தேடிப் புடிச்சிருக்கணும்... அசால்ட்டா விட்டுட்டீங்க. இப்பம் ஊருக்குள்ள வந்து உங்க முன்னாடியே ஒரு பெரிய மனுசன் தலையை வெட்டி உருட்டிவிட்டுட்டு ஓடிட்டாம்னு வந்து நிக்கிகளே... வெட்கமா இல்ல...? கஞ்சி போட்டுத் தேச்சு மொடமொடன்னு யூனிஃபார்ம் போட்டா மட்டும் போதுமாய்யா? 'தப்பிச்சு ஓடினான்... வெரட்டிப் போய் சுட்டுத் தூக்கிட்டு வந்தோம்'ன்னு எம்முன்னாடி அவனைக் கொண்டுவந்து போட வேணாமா..? ஒங்க தலையையும் ஒரே சீவா சீவிப்புடுவாம்னு பயந்திட்டீகளா? என் சர்வீஸ்ல எப்பேர்ப்பட்ட கில்லாடியையெல்லாம் ஒத்தையில போய்ப் புடிச்சிருக்கேன் தெரியுமா..? அவனைப் புடிக்காம யாரும் என் முகத்துலே முழிக்கக்கூடாது. ஐ.ஜி. போன்மேல போன் போட்டுக் கொடையுதாரு. 'நீங்க அவனைப் புடிச்சிருவீகளா... இல்ல, மெட்ராஸ்ல இருந்து ஸ்பெஷல் டீமை அனுப்பவா?'ன்னு கேட்குதாரு. எனக்கு நாக்கப் புடுங்கிட்டுச் சாவலாம்னு வருது... போங்கையா... அவன் எங்கேயிருந்தாலும் தேடிப் புடிங்க...'' – படபடத்தார் இன்ஸ்பெக்டர்.

தலைகவிழ்ந்து நின்ற கான்ஸ்டபிள்கள் இரண்டு மூன்று பிரிவாய்ப் பிரிந்து, ஆளுக்கொரு திசையில் கிளம்பினர். அதில் ஒருத்தருக்குக்கூடப் பாண்டியை அடையாளம் தெரியாது.

''ஆளு நெடுநெடுன்னு நல்ல ஒசரமாம். இருபத்தஞ்சு வயசுக்குள்ளதாம் இருக்குமாம். எப்பமும் தொடைக்குமேல் வேட்டியை ஏத்திக் கட்டியிருப்பானாம். உருமாக் கட்டியிருப்பானாம். சின்னப் பையன்தானாம்வேய்... இப்படிப்பட்ட பயலுகதாம் பெரிய பெரிய செய்கய பண்ணிப்பிடுதானுக. டிபார்ட்மெண்ட்டுல நம்ம உசுர எடுக்கானுக...'' கான்ஸ்டபிள்கள் முணுமுணுத்துக்கொண்டனர். முன்சீப்பிடமிருந்து அவன் எடுத்திருந்த ரிவால்வரை தன் கூடவே வைத்திருப்பான் என்று எல்லோருமே திடமாக நம்பினர். வயதான ஒரு ஏட்டையா, ''எனக்கு ரிடையர் ஆக இன்னும் மூணு மாசம்தான்டே இருக்கு... நாலு பொட்டைப் பிள்ளைகளை வேற பெத்துவெச்சிருக்கேன். அவம்கிட்ட இருக்கது சாதாரண ரிவால்வர் இல்லடே... அது கெட்ட சனியன்னாக்கும்'' என்று பீடிகைபோட்டார். இளம் கான்ஸ்டபிள்கள் ஆர்வமாகக் கேட்டனர்.

''அப்பம் நாடு பூராம் 'எஸ்ஸோ'ங்கற பெட்ரோல் கம்பெனி இருந்திச்சு. அந்த கம்பெனி நம்ம ஊர்லயும் ஒரு பிராஞ்ச் ஆரம்பிக்க விரும்புச்சு. அதோட பிரதிநிதி நாங்குனேரி பால்வண்ண ராமசாமி ஐயர் பொருத்தமான இடம் தேடி ராப்பகலா அலஞ்சார். முன்சீப்புக்கும் அவருக்கும் நல்ல சிநேகம். கடைசியில் முன்சீப் நேரடியா தலையிட்டு வண்ணாரப்பேட்டையில் திருவாங்கூர் சாலை ஓரமா (இன்றைய டி.வி.எஸ். ஃப்யூல் சர்வீஸ் பங்க்) கிரையம் முடிச்சுக் கொடுத்தார். பெட்ரோல் கம்பெனி துரைக்கு ரொம்ப சந்தோஷம். எட்டையாபுரம் கெஸ்ட்ஹவுஸ்ல பெரிய விருந்து வெச்சு அந்த 'ஹெல்டோ' மாடல் துப்பாக்கியை அன்பளிப்பா கொடுத்தார். மத்ததில் பொதுவா ஆறு ரவைதான் இருக்கும். இதுல மட்டும் ஒம்பது இருக்குமாம். பன்றி, மாட்டுக்கொழுப்பில் பீங்கான்தூளைக் கலந்து வேற பல ரசாயனமும் சேர்த்துக் கொதிகலவையில் சூடேற்றித் தயார்பண்ணினது. ஒடம்புல எந்த இடத்துல குண்டு பாஞ்சாலும் அடுத்த அஞ்சு நிமிஷத்துல ஆளு சுருண்டு விழுந்து செத்துப்போவான். அம்புட்டு பாய்சன். பெரும்பாலும் ஜில்லா கலெக்டரா இருக்கும்



கொலைகாரன் திரியுதான். அவனைப் போய் புடிங்கடான்னு இன்ஸ்பெக்டர் லேசா சொல்லுதாரே. அவரே போகவேண்டியதுதானவோய்... புடிச்சா அஞ்சு ரூபா ரிவார்டு கொடுப்பாரு... அவம் சுட்டா எம் பொஞ்சாதியில்லடே தாலி அறுக்கணும். ரிடையர் ஆகப்போற எனக்கு அவர் ரிவார்டும் வேணாம்... ஒரு கருவாடும் வேணாம்...''

''சும்மா பயமுறுத்தாதீங்க ஏட்டையா... மெட்ராஸ் பார்ட்டி வந்து அவனைப் புடிச்சா நாம யூனிஃபார்ம்மைக் கழட்டிட்டுச் சேலைதான்யா கட்டணும்... அசிங்கம். இன்னும் ஒரு வாரத்துல நாங்க புடிக்கிதோம். நீங்க வண்டிக்குள்ளேயே இருங்க... புடிச்சதும் ஒங்க தலைமையில போய் புடிச்சோம்னு ரெக்கார்டு பண்ணிடுவோம்...'' ஏட்டையாவும் சேர்ந்து சிரித்தார்.

பல குழுக்களாகப் பிரிந்து ஊர் ஊராகத் தேடியும் பாண்டி வந்துபோனதற்கான தடயமோ, தகவலோ கிடைக்கவில்லை. இதற்கிடையில் சுத்துப்பட்டிகளில் டூரிங் டாக்கீஸ் பக்கம் வேட்டியை மடித்துக்கட்டி உருமாலுடன் வளர்த்தியாய் இரண்டாவது ஆட்டம் சினிமா பார்க்கப்போன இளந்தாரிகள் பலரைச் சந்தேகத்தின் பேரில் பிடித்துக் கொண்டுவந்து ''நீ பாண்டிதானல... உள்ளதைச் சொல்லுல'' என்று அடி சவட்டி எடுத்தனர்! கோர்ட்டில் கேஸ் நடந்தபோது பாண்டிக்கு எஸ்கார்டு போயிருந்த போலீஸ்காரர்கள் வந்து உற்றுப் பார்த்துவிட்டு ''இவம் இல்ல சார்'' என்று சொன்னபின்தான், லாடம் கட்டிய கால்களுடன் நொண்டி நொண்டி ஊர்ப் போய்ச் சேர்ந்தனர்.

திருத்து, மேலப்பாட்டம், கீழப்பாட்டம், கான்சாபுரம், மருதூர், மரகாத்தலை, புளியம்பட்டி, உழக்குடி, கருங்குளம், மணக்கரை என்று சீவலப்பேரியைச் சுற்றியுள்ள ஊர்களை போலீஸ் தினமும் சலித்தெடுத்தது.

''பாண்டியா...? அவம் எதுக்கு இங்க வாராம்.... வந்தாம்னா ஒடனே புடிச்சி ஒப்படைக்குதோம்யா'' என்று சொல்லி வைத்தாற்போல் ஒரே மாதிரி பதில் சொன்னார்கள். உருப்படியான தகவல் இல்லை. பாண்டி சீவலப்பேரிக்கு வந்து தன் மனைவியைப் பார்த்ததையோ, அவளும் ராவோடு ராவாக அவன் கூடப் போனதையோ யாருமே அறிந்திருக்கவில்லை, 'பாவம்... தன் தாய்தவப்பன் வீட்டுக்குப் போயிருப்பா' என்று ஊர் நினைத்தது.

இரவு முழுக்கக் காட்டுப்பாதையில் புருசனும் பொஞ்சாதியும் நடந்தே வல்லநாட்டு மலையடிவாரத்துக்கு வந்தபோது பொழுது விடிந்து விட்டது.

''என்னால யாரையுமே நம்பமுடியல... எவம்மாவது போலீஸ்ல சொல்லிக் கொடுத்துட்டாம்னா ஒடனே எஞ்சோலி முடிஞ்சு போகும். ஒரு செறுக்கிபுள்ள கண்ணுலயும் படாம இருக்கணும்னா வேற வழியில்ல. இங்க ஒரு பய தேடி வரமாட்டான்... வந்தாலும் தப்பிச்சுடலாம். கஞ்சி தண்ணிக்குத்தாம் கஷ்டம். நான் சொல்லுதேன் கேளு... வேலம்மா, இன்னிக்கு விடியுமுன்னே மணியாச்சிக்கு உன் தாயி தகப்பன் வீட்டுல கொண்டுபோய் விட்டுடுதேன். அடிக்கொருதரம் வந்து பாக்கேன்...''

''முடியாது... போலீஸ் சுட்டுப்புடும்... நா உங்களை விட்டுப் போவமாட்டேன்'' என்றாள் பிடிவாதமாக.

''சரி... இங்க கொஞ்ச நாள் இருப்போம். போலீஸ் கெடுபிடி கொறைஞ்சதும் நான் ஜெயில்ல இருந்து தப்பிச்சதும் வேலை பார்த்த எஸ்டேட்டுக்குப் போயிடுவோம்...''

''நீ செத்த இரு... நான் வல்லநாட்டுக்குப் போய் கடையில ஏதாச்சும் வாங்கியாறேன்...'' அவளை புதர் அருகே உயரமான ஒரு பாறை நிழலில் உட்கார வைத்துவிட்டுத் தூரத்திலிருந்த ஊரைப் பார்த்து நடந்தான்.

ஊருக்குள் போலீஸ் நடமாட்டம் தெரிகிறதா என்று கடைவீதியில் சுற்றும்முற்றும் பார்த்தான். அப்படி ஒன்றுமில்லை. யாரும் சந்தேகப்பட்டுப் பார்ப்பதுபோல் இல்லை. ஒரு கடைக்குப் போய் பொரியும் அவலும் ஒவ்வொரு படி தரும்படி கேட்டான். ''அளந்து போடுதேன்... பையை எடுத்துப் புடியும்யா'' என்றார் கடைக்காரர். ''மழைக்காயிதம் இருந்தா அதுல மடிச்சு தாரும்.''

''பைகூட எடுத்தாராம பொரி வாங்க வந்திருக்கியே... எந்த ஊருவேய் ஒமக்கு?''

வாய்தவறி ''சீவலப்பேரி...'' என்றான். கடைக்காரர் நிமிர்ந்து அவன் முகத்தை உற்றுப் பார்த்தார்... ''உம் பேரு?'' இவனுக்கு என்ன சொல்லுவது என்று தெரியவில்லை. ''நீ பாண்டிதானலே..?''

மிரண்டு பார்த்தான். வேகமாய் பைக்குள் இருந்த சில்லறை காசுகளை அள்ளி நீட்டினான். ''பரவால்ல... துட்டு வேணாம்...'' என்ற கடைக்காரர், பக்கத்தில் கிடந்த வாழைப்பழத்தார் ஒன்றையும் தூக்கிக்கொடுத்து ''கொண்டுபோலே... எங்கழுத்தை அறுத்தாலும் ஒன்னைப் பார்த்ததா சொல்லமாட்டேன். நம்பு... நேத்துக்கூட இந்தப் பக்கம் ஒன்னைத் தேடி போலீஸ் அலஞ்சுச்சு... ஒங்க ஊரு சந்தைக்கு வந்திருக்கேன். ஒங்க அண்ணன் மலையாண்டிக்கு என்னைத் தெரியும். நானும் ஒந்தாய்புள்ளதாம். எனக்கு எல்லா வெவரமும் தெரியும். இந்த வயசுல நீ இப்படி எறங்கலாமாலே? இந்தப் பக்கம் பூராம் ஒம்பேச்சாதான் இருக்கு. ஒனக்கு என்ன வேணும்னாலும் மாடுமேய்க்கிற பையன்மாருட்ட சொல்லி அனுப்பு. ஊருக்குள்ள நடமாடாத... போயிரு'' என்றார்.

நடந்ததை மனைவியிடம் சொன்னதுமே பயந்தாள். ''ஒடனே இங்கிருந்து கிளம்பிறணும்'' என்று அவசரப்பட்டாள். அவள் பயந்தபடிக்கு ஒன்றும் ஆகவில்லை. தண்ணீரில் அவலை நனைத்துச் சாப்பிட்டனர். அது இரண்டு வேளைக்குப் பசி தாங்கியது. அத்துடன் பொரி, வாழைப்பழத்தைச் சாப்பிட்டே சில நாட்களைக் கழித்தனர்.

''இப்படிக் காட்டுமிருகத்தைப் போல எத்தன நாளக்கி இந்த மலைங்காட்டுல பசியும் பட்டினியுமா கெடக்கது. பாம்பு கடிச்சுச் செத்தாலும் தூக்கிப்போட நாதியிருக்கா? நாஞ் சொல்லுதேன் கேளுங்க... எப்படியாச்சிலும் சீக்கிரமா அந்த எஸ்டேட்டுக்குப் போயிடுவோம்'' என்றாள் வேலம்மாள்.

''போலாம்... வழிச்செலவுக்குத் துட்டு வேணும்... பண்டபாத்திரமும் வாங்கணும்... என்ன பண்றது..?'' மறுகினான் பாண்டி. ''யாருக்காக இந்தக் கதிக்கு ஆளானோமோ அவமெல்லாம் இப்பம் நிம்மதியா இருக்கானுக. போயி கேளுங்க'' என்றாள் ஆவேசத்துடன்.

அன்று உச்சிப்பொழுதிலே வல்லநாட்டுமலையில் இருந்து இறங்கிக் காட்டுப்பாதையில் இருவரும் நடந்தனர்.

வழியில் ஒரு கிராமத்திலிருந்த தன் உறவினர் வீட்டில் மனைவியை மட்டும் தங்கவைத்துவிட்டுப் பொழுதுசாயும் நேரம் சீவலப்பேரியை நெருங்கினான் பாண்டி. வீடு திரும்பிக்கொண்டிருந்த ஆடு மேய்க்கும் சிறுவன் ஒருவனைக் கூப்பிட்டு தன் சிநேகிதர்கள் நான்கு பேர் பெயரைச்





ஆற்றோரம் நீர்க்கருவைப் புத்ருக்குள் மறைந்து உட்கார்ந்திருந்தான். கொஞ்ச நேரத்தில் அவன் உட்கார்ந்திருந்த மறைவோரமாய் நாலைந்து பேர் வருவது தெரிந்தது. எல்லோருமே வெள்ளையும் சொள்ளையுமாய் இருந்தனர். தான் வரச் சொன்ன ஆட்கள் மாதிரி இல்லை என்று மட்டும் தெளிவாய்த் தெரிந்தது.

'ஒருவேளை தான் வந்த விஷயம் பரவி போலீஸ் வந்துவிட்டதோ' பயம்தட்டி யோசிக்கும்போதே வந்தவர்கள் நெருங்கிவிட்டனர். புதருக்குள் இருந்தபடியே இடுப்பில் இருந்த அரிவாளை எடுத்த பாண்டி, விருட்டென்று வெளிக் கிளம்பி, ''அப்படியே நில்லுங்கல... ஒரு அடி எடுத்து வெச்சா தலையைச் சீவிப்புடுவேன்'' என்றான் அச்சம் கலந்த ஆவேசத்துடன். வந்தவர்கள் திடுக்கிட்டு நின்றனர். ஐந்து பேரில் ஒருவன் சீவலப்பேரிக்காரத் தரகன். அவன் உடனிருந்த நாலு பேரிடமும் மெல்லிய குரலில் ''பாண்டி'' என்றான்.

''நாங்க மாடு விக்க வந்த யாவாரிகளப்பா. ஒண்ணும் செஞ்சிடாதே'' மடியில் கட்டியிருந்த பணத்தைக் கத்தை கத்தையாக அள்ளி நீட்டினர். நிதானம் பிடிபடாமல் பாண்டி ஓங்கின அரிவாளைக் கீழே போடாமல் நிற்கவும், கழுத்தில் கிடந்த சங்கிலி, மோதிரம் அவ்வளவையும் கழற்றிக் கொடுத்தனர். ''கீழ வெச்சிட்டு ஓடுங்கல'' என்றான். பொருட்களை வைத்த வேகத்தில் ஓடினர். அவர்கள் போனதும் தரையில் கிடந்த பணத்தையும் நகைகளையும் அள்ளிப் பார்த்துச் சிரித்தான் பாண்டி.

சற்று நேரத்தில் இவன் வரச்சொல்லி அனுப்பிய நாலு பேரும் வந்தனர். நடந்ததைக் கேட்டு விழுந்து விழுந்து சிரித்தனர்.

''அப்பப்ப நீ வந்து வெலகி நில்லு. மிச்சத்தை நாங்க பாத்துக்கிடுதோம். ஒவ்வொருத்தனும் உன் பேரைச் சொன்னாலே பயந்து நடுங்குதானுக. காய்ச்ச, மண்டையிடின்னு போயி பத்து ரூவா கடன் கேட்டா தராதவனெல்லாம் கத்தை கத்தையா எடுத்துவைப்பானுகல... தெரியுமா..''

''நெசந்தானலே...''

''நம்பலைன்னா எங்க கூட வா. நடக்குறதப் பாருல...'' என்று ஒருவன் அழைத்தான். நன்றாக இருட்டிவிட்டது. எல்லோருமாய்க் கொஞ்ச தூரம் நடந்து ஒரு கிராமத்துக்குப் போய் வயலை ஒட்டி இருந்த ஒரு வீட்டின் கதவைத் தட்டினர். பாண்டி வாசலுக்கு வெளியே முதுகைத் திருப்பியபடியே நின்றான். கதவைத் திறந்தவர் என்னவென்று விசாரிக்குமுன் ''பாண்டி வந்திருக்கார்'' என்று காண்பித்தனர். நிலா வெளிச்சத்தில் பாண்டி கையில் இருந்த அரிவாள் மினுமினுத்தது.

''ஒங்களாலதாம் இப்படி அலையுதாராம். செலவுக்கு ஐயாயிரம் ரூவா கேட்கார்.''

''எங்கிட்ட சல்லிக்காசு இல்லையே... திடீர்னு வந்து நின்னா எப்படி?''

''இப்பம் என்ன சொல்லுதீரு?'' பாண்டி செருமினான். வீட்டுக்குள் ஓடிப்போய் ஒரு தங்கச் சங்கிலியைக் கொண்டுவந்து நீட்டினார்.

''வெளிய சொல்லுவீரோ?''

''ஊகூம்... மாட்டேன்...'' ஓசைப்படாமல் கும்பல் நடந்தது.

அடுத்தடுத்து இடைவெளிவிட்டு ஆங்காங்கே வரிசையாய்ப் பல கொள்ளைகள் நடந்தன.

''யார் செய்தது?'' என்றால், தெரிந்தவர் தெரியாதவர் யாராக



இருந்தாலும், 'சீவலப்பேரி பாண்டி' என்றனர். 'பாண்டி எப்போது வருவான்? எங்கே இருக்கிறான்?' என்பது பெரும் புதிராக இருந்தது. அடுத்தடுத்து 24 கொள்ளை வழக்குகள் போலீஸில் ரிப்போர்ட் ஆயின. போலீஸுக்கு வராதது ஏராளம்! போலீஸார் நிம்மதியிழந்தனர். எப்போது பாண்டி வந்து தன் வீட்டுக் கதவைத் தட்டுவானோ என்று திருநெல்வேலி ஜில்லாவே நடுங்கியது.

ஒரு நாள் தாழையூத்து போலீஸ் ஸ்டேஷனில் இன்ஸ்பெக்ஷனுக்காக ஐ.ஜி. வரவிருந்தார். முதல் நாள் இரவு போலீஸார் ஸ்டேஷனுக்கு பெயிண்ட் அடிப்பதிலும் பூந்தொட்டி வைத்து அழகுபடுத்துவதிலும் மும்முரமாய் இருந்தனர். விடிந்ததும் ஐ.ஜி-யின் வரவுக்காக எல்லோருமே காத்திருந்தனர். அப்போது போலீஸாருக்கு இடிவிழுந்தது போல் ஒரு புகார் வந்தது!

''ஐயா, எசமானே... இந்தக் கருமாயத்தைக் கண்டோமா?'' வேகமாய் வந்து நின்ற வயசாளி வாய்விட்டுக் கதறினார். அவரைத் தொடர்ந்து வந்த நாலைந்து பேர் ஒதுங்கி நின்றனர். ''யோவ்.. பெருசு.. என்னன்னு சொல்லிட்டு அழும்யா. சே... நேரங்காலமில்லாம.. பெரிய அதிகாரி வரப்போற நேரத்தில வந்து நிக்கிரே.. சட்டுப்புட்டுன்னு விஷயத்தைச் சொல்லும்யா.. நாளப் பின்னே விசாரிப்போம்...'' படபடத்தார் ரைட்டர். அதற்குள் இன்ஸ்பெக்டரே அருகில் வந்தார்.

''ஐயா! இன்னிக்குக் கோழி கூப்புடுத நேரம்... வீட்டுக்குள்ள எம்பொஞ்சாதி படுத்திருந்தா. யாரோ வீடு நொழஞ்சு அவ காதுல கெடந்த பாம்படத்தை வெடுக்குன்னு புடுங்கி, அவ நெஞ்சுல மிதிச்சிக் கழுத்துல கெடந்த சங்கிலியையும் அத்துக்கிட்டுப் போயிட்டாம்யா. சங்கிலிய இழுத்து அத்ததுல தொண்டைக்குழி இறுகி விடியும் வரைக்கும் பேச்சுமூச்சு இல்லாம கெடந்தா... விடிஞ்சதும் உசுரு போயிருச்சியா, போயிருச்சி...''

'அடக் கடவுளே.. ஐ.ஜி. வரும் நேரத்திலா இப்படி?' இன்ஸ்பெக்டருக்குத் தலைசுற்றியது. அவர் யோசித்துக்கொண்டிருக்கும்போதே மின்னல் வேகத்தில் வாகனங்கள் வந்து நின்றன. கிழவரை அப்படியே விட்டுவிட்டு, பாய்ந்து சென்று பவ்யமாய் கார் கதவைத் திறந்து விறைப்பாய் நின்று சல்யூட் அடித்தார் இன்ஸ்பெக்டர். இறங்கி நின்று ஸ்டேஷனை ஏறிட்டார் ஐ.ஜி.! வரிசையாய் நின்ற காவலர்கள் பூட்ஸ் ஓசை எழ, துப்பாக்கியில் டப்..டப் என்று அடித்து சல்யூட் செய்தனர். அதற்குள் யாரும் எதிர்பாராத விதமாய், அழுது நின்ற வயசாளி ஓடிப்போய் ஐ.ஜி-யின் காலில் விழுந்தார். அவரது கால்களைப் பற்றிக் கதறினார். கூட வந்த சிலரும் ஓடிப்போய் கும்பிட்டு விழுந்தனர்.

''என்ன.. என்ன இதெல்லாம்?'' பதறிப்போன ஐ.ஜி., அதிர்ந்து இன்ஸ்பெக்டரைப் பார்த்தார்!

இன்ஸ்பெக்டரின் முகம் பேயறைந்ததுபோல இருண்டு போனது. தயங்கித் தயங்கிச் சொன்னார்.

''ஸாரி சார்.. எங்க லிமிட்ல ஒரு அக்கரன்ஸ் நடந்துபோச்சு... இவரோட

அந்தக் கிழவி போட்டிருந்த முப்பது பவுன் நகைகளைக் கொள்ளையடிச்சிட்டானுங்களாம். கழுத்துல கெடந்த சங்கிலியை இழுத்து அத்ததுல அந்த அம்மா செத்துப் போச்சாம் சார்..'' இன்ஸ்பெக்டரை ஐ.ஜி. ஊடுருவிப் பார்த்தார். வயசாளியைத் தன் பின்னால் வரச்சொல்லி சைகை செய்துவிட்டு வேகமாய் ஸ்டேஷனுக்குள் சென்றார் ஐ.ஜி.! அதிகாரிகள் பின்தொடர்ந்தனர். போலீஸ்காரர்கள் ஒருவர் முகத்தை. ஒருவர் பார்த்து நின்றனர்.

சற்று நேரம் யோசித்த ஐ.ஜி., ''பெரியவரே.. இதை யார் பண்ணினதுன்னு அடையாளம் தெரியுமா?'' என்று கேட்டார்.

''தெரியல சாமி... சத்தம் கேட்டு எந்திருச்சுப் பாத்தேன். வாசல்ல நாலஞ்சு பேர் நின்னுருந்தானுக. எல்லோரும் வீச்சரிவா வெச்சிருந்தானுக.''

''நடந்ததை வெச்சுப் பார்த்தா, இதைச் செஞ்சது சீவலப்பேரி பாண்டியாத்தான் இருக்கும் சார்'' என்றார் இன்ஸ்பெக்டர்.

ஐ.ஜி-யின் முகம் மேலும் சிவந்தது. ''வாட் நான்சென்ஸ்.. இவ்வளவு ஸ்ட்ரென்த் இருந்தும் வெப்பன்ஸ் இருந்தும் அவனைப் புடிக்க முடியாம என்னதான் பண்றீங்க? இது தமிழ்நாடு போலீஸே தலைகுனிய வேண்டிய விஷயம்'' என்றார். அதிகாரிகள் வெலவெலத்து நின்றனர்.

அப்போது ஸ்டேஷன் வாசலில் ஏதோ பரபரப்பு தெரிந்தது.

யாரோ ஒரு பெண் ஸ்டேஷனுக்குள் வர முயற்சித்துக்கொண்டிருந்தாள். பாராவுக்கு நின்ற கான்ஸ்டபிள், அவளை உள்ளே வரவிடாமல் தடுத்து ஏதோ சொல்லிக் கெஞ்சிக்கொண்டிருந்தார். வாசலுக்கு நேராய் இருந்த பெரிய டேபிளில் உட்கார்ந்திருந்த ஐ.ஜி., தற்செயலாய்த் திரும்பி, 'அவளை உள்ளே வர விடுங்கள்' என்பதுபோல சைகை செய்தார். இன்ஸ்பெக்டர் வாசலுக்கு ஓடினார். வந்தவள் ஐ.ஜி-யின் முன்வந்து நின்றாள். அவளது ஆடைகள் ஈரமாக இருந்தன. அவளுக்கு முப்பது முப்பத்தைந்து வயதிருக்கும். அவளது தோள்பட்டையின் இருபுறமும் ரத்தம் கசிந்து படிந்திருந்தது. அறுந்து தொங்கிய காதுகளிலிருந்த பாம்படத்தை யாரோ பலவந்தமாய் அறுத்திருக்க வேண்டும் என்பது பார்த்ததுமே தெரிந்தது.

''சீவலப்பேரி ஆத்துல குளிச்சிக்கிட்டிருந்தேம்யா.. எங்கிருந்தோ நாலஞ்சு பேர் வந்தானுக.. ஒருத்தன் மட்டும் அந்தவாக்குல திரும்பி நின்னுக்கிட்டான். இன்னொருத்தன் 'சட்னு கரையேறு... இப்பம் ஒம் புருஷன் எங்கே இருக்காம்'னான். எல்லோரும் கையில அருவா வெச்சிருந்தானுக. எனக்குக் 'கெதக்கு'ன்னு ஆயிடுச்சு... 'பாண்டி வந்திருக்கார். அவரைப் பத்தி ஒம் 'புருஷன் போலீஸ்ல சொல்லப் போறானாமே.. ஒழுங்கு மருவாதியா இருக்கச் சொல்லு. நயினார் கதை தெரியுமில்லா'ன்னான். இன்னொருத்தன் 'இவகிட்ட என்னலே பேச்சு'ன்னு சொல்லிக்கிட்டே என் காதுல கெடந்த பாம்படத்தை வெடுக்குன்னு அத்துட்டுப் போயிட்டாம்யா! 'லே... நானும் கொண்டையங்கோட்டை மறத்தில.. ஒங்க அருவாளுக்குப் பயந்தவ இல்ல... மருவாதியா நில்லுங்கல'ன்னு சத்தம் போட்டேன். 'இப்பம் தாழையூத்து ஸ்டேஷன்ல பெரிய அதிகாரியே வந்து ஒட்காந்திருக்காராம். முதல்ல இதைப்போயி உம் புருஷனைச் சொல்லச் சொல்லு'ன்னுட்டு போயிட்டானுகய்யா.''

''உம் பேரு என்னம்மா?''

''முத்தம்மாய்யா.''

யோசித்த ஐ.ஜி., பாண்டி சம்பந்தப்பட்ட ஃபைல்களைச் சற்று நேரம்



ஆர்டர்ஸ் ரெடிபண்ணுங்க. 'பொதுமக்களில் யாரும் அவனை உயிரோடவோ, பிணமாகவோ பிடிக்கத் தகவல் சொன்னால் இருபதாயிரம் ரூபாய் ரொக்கப் பரிசு'ன்னு பேப்பர்ஸ்ல விளம்பரம் கொடுங்க! நம்ம டிபார்ட்மெண்ட்ல இருக்கறவங்க பிடிச்சா, அவங்களுக்கு முதலமைச்சர் பதக்கமும் உடனே மூவாயிரம் ரூபாய் 'கேஷ் அவார்டு'ம் உண்டு. அதுமட்டுமில்ல.. எந்த ஃபார்மாலிட்டியும் இல்லாம, உடனே அவர்களுக்கு ப்ரமோஷன் கொடுக்கிறேன். எந்த ஊர்லயாவது தெரிஞ்சே அவனை மறைச்சு வெச்சிருந்தாங்கன்னு உறுதியா தெரிஞ்சா, அந்த 'வில்லேஜ்' தமிழ்நாடு மேப்லயே இருக்கக்கூடாது'' என்று சொன்ன வேகத்துடன் ஐ.ஜி. கிளம்பிப் போனார்.

''இன்னிக்குப் பார்த்தா இப்படி ஆகணும்...'' நிலைகுலைந்து நின்ற இன்ஸ்பெக்டர், தயார் நிலையில் இருந்த ரிசர்வ் பார்ட்டியை உசுப்பினார். மானூர் சப்-இன்ஸ்பெக்டர் காளிமுத்துவைக் கூப்பிட்டார். சல்யூட் அடித்து விறைப்பாய் வந்து நின்றார். வாட்டசாட்டமான இளவட்டம். இவரைக் 'கடுவம்பூனை காளிமுத்து' என்றால்தான் எல்லோருக்கும் தெரியும்.

வீடுகளில் ராத்திரி கொடாப்புகளில் மூடி வைத்திருக்கும் கோழிகளை ஓசைப்படாமல் நெருங்கி மெள்ள கதவுக் கொண்டியைக் கழட்டி, வெடைக்கோழியாய்ப் பார்த்து லபக்கென்று கவ்வித் தூக்கிக்கொண்டு போவதில் கடுவம்பூனை வகையறா படு கில்லாடி. விடிந்தபின் கோழிகளை எண்ணிப் பார்த்தால்தான் விஷயம் தெரியும். அதுபோல ஒரு நபரை நாலாம் பேருக்குத் தெரியாமல் ராத்திரியோடு ராத்திரியாகப் பிடித்துக்கொண்டு வருவதில் காளிமுத்து பெயரெடுத்தவர்.

''இனி உமக்குப் பாண்டியைத் தேடிப் பிடிக்கிறது மட்டும்தான் வேலை. எவ்வளவு ஸ்ட்ரென்த் வேணும்னாலும் வெச்சுக்குங்க. எங்கெங்கு வேணும்னாலும் தேடிப் போங்க. இப்பமே கிளம்புங்க...'' அவசரப்பட்டார் இன்ஸ்பெக்டர்.

''யெஸ் சார்!'' கிளம்பினார் கடுவம்பூனை காளிமுத்து!

**பா**ண்டியும் அவன் மனைவியும் பாதுகாப்பாய் தங்க, வல்லநாட்டு மலையடிவாரத்தை ஒட்டியே ஒரு குடிசை போட்டுக் கொடுத்திருந்தனர் பாண்டியின் சகாக்கள். ஆள் நடமாட்டம் இல்லாத அந்த மலைக்காட்டில் அப்படியொரு குடிசை இருப்பது ஆடு மேய்க்கும் ஒன்றிரண்டு நபர்களைத் தவிர, வேறு யாருக்கும் தெரியாது. கடைகண்ணிக்குப் போய் வேண்டியதை வாங்கிக்கொடுப்பார்களே தவிர, இவர்களும் வேறு யாரிடமும் வாய்திறக்கவில்லை. திடீரென்று அவ்வப்போது பொழுதுசாயும் நேரத்தில் பாண்டியின் சகாக்கள் எங்கிருந்தோ வருவார்கள். பின்னிரவில் எங்கோ பாண்டியுடன் கிளம்பிப் போவார்கள்.

குடிசையில் இருந்து கொஞ்ச தூரத்தில் ஒரு நாய் மட்டுமே கட்டிக்கிடக்கும். ஒரு பர்லாங்குக்கு அப்பால் ஆள் ஆரவம் தெரிந்தாலே போதும்... நாய் காதை விடைத்துக் குரைக்கத் தொடங்கிவிடும்!

விடியப்போகிற நேரத்தில் நாய் குரைக்கும் சத்தம் கேட்டு, ராவெல்லாம் பொட்டுக்கூடத் தூங்காமல் உட்கார்ந்திருந்த வேலம்மாள் நிமிர்ந்து பார்த்தாள். பாண்டி தூரத்தில் வந்து கொண்டிருந்தான். வந்ததும் கத்தைக் கத்தையாகப் பணத்தை அவள் முன்னே எடுத்துப்போட்டான்.

''இது தப்பில்லையா? பொய்யும் களவும் பாவமில்லையா?''

''நான் என்ன செய்யட்டும்... மொதல்ல என்னை இந்தக் கெதிக்கு

நான் சும்மாதான் தூர வெலகி நின்னுக்குவேன். கூட வர்ற மத்தவம்தான் செய்வானுக! புடிபடுற எந்த நிமிஷமும் எனக்குச் சாவு நிச்சயம். உசுரோட இருக்கிற வரைக்கும் ஒவ்வொருத்தன்கிட்டையும் போய், 'எனக்குச் சோத்துக்கு உதவி செய்யுங்க'ன்னு கேட்கிறதைவிட, இது ரொம்ப சுளுவா இருக்கு. அது கெடக்கட்டும்... தாழையூத்துல பெரிய போலீஸ் அதிகாரி வந்திருந்தப்போ ஒரு கெழவியைக் கொன்னு யாரோ நகையை அடிச்சிட்டானுகளாம். சத்தியமா நான் போகலை. இப்பம் அங்கங்கே ரெண்டு மூணு கொத்தா செறுக்கிபுள்ளைக கிளம்பிப் போய், 'நான் பாண்டி வந்திருக்கேன்'னு சொல்லிக் கொள்ளையடிச்சுட்டுப் போயிடுதானுகளாம். அது எவம்னு கையுங்களவுமா புடிக்க அலையுதோம். எவனும் சிக்குதானுகயில்ல. எனக்குச் சந்தேகம்... அது . மொரப்பநாடு ராமசுப்புவாகத்தான் இருக்கும்னு. அவம்தான் இப்படிச் சோலி பாப்பாம். செறுக்கிபுள்ள என் கையில சிக்கட்டும்...''

''இந்தப் பொழப்பு நமக்கு வேணாம். நீங்க புடிபட்டுச் செத்தாலும் வீரனாத்தான் சாவணும். எஸ்டேட்டுக்குப் போயி கூலிவேலை செஞ்சாவது பொழைச்சுக்குவோம்!'' வேலம்மாள் அழுதாள்.

''சரி... போலாம்... ஆனா, என்னை நம்பி நாலஞ்சு பேர் இருக்கானுக. அவனுகளுக்காகவாவது அப்ப அப்ப இங்க வந்து போவேன். பாவம்... அவனுகளுக்கு வேற பொழப்பில்ல.'' அவள் பதில் பேசவில்லை.

ஒரு நாள் துணிமணிகளை மட்டும் எடுத்துக்கொண்டு இருவருமாய் தூத்துக்குடிக்குப் போய், பின் அங்கிருந்து ரயில் ஏறிக் கொடைரோட்டில் இறங்கி, முன்பு பாண்டி இருந்த எஸ்டேட்டுக்குப் போய்விடுவது என்று கிளம்பினர். இருவரும் நடந்து வந்து, தூத்துக்குடி போகும் ரோடேறியபோது, சிறிது தூரத்தில் ஒரு ஊருக்குச் சற்று முன்னால் போலீஸ் ஜீப் ஒன்று நின்று கொண்டிருந்தது. இரண்டு மூன்று போலீஸ்காரர்கள் சுற்றும்முற்றும் பார்த்தபடி நின்றனர். உள்ளே டிரைவருக்கு அடுத்த ஸீட்டில் பாண்டியைப் பிடிப்பதற்கென்றே நியமிக்கப்பட்ட சப்-இன்ஸ்பெக்டர் 'கடுவம்பூனை காளிமுத்து'! அவர் ஜீப்பிலிருந்து இறங்காமல் உட்கார்ந்தபடிக்கே, பாண்டியை நோக்கிக் கைநீட்டி கான்ஸ்டபிள்களிடம் ஏதோ சொன்னார். உடனே, மனைவியுடன் போன பாண்டியைக் கைதட்டிக் கூப்பிட்டார் ஒரு கான்ஸ்டபிள். 'ஒரே ஓட்டமாய் ரோட்டைவிட்டு இறங்கிக் காட்டுக்குள் ஓடிவிடலாமா?' என்று ஒரு கணம் நினைத்தான். 'இவளை என்ன செய்வது? இவளை மட்டும் புடிச்சா சித்ரவதை பண்ணிப்புடுவானுகளே...' தன் மனைவியைப் பார்த்தான்.

''ஏ... ஒன்னைத்தான்... ஐயா கூப்பிடுதாருல்ல? இங்க வாலேய்...'' பாண்டி திகைத்தான். ''ஒன்னைக் கடிச்சா திங்கப்போறோம்... சும்மா வாலேய்'' என்றார் கடுவம்பூனை. வேலம்மாளுக்கு நெஞ்சு அடைத்தது. உலகமே தலைகீழாய் சுழல்வது போலிருந்தது. முகமெல்லாம் குப்பென்று வியர்த்தது.

'என்னை என்ன வேணும்னாலும் செஞ்சுக்கங்க. இவள் ஒரு பாவமும் அறியாதவ. அவளை ஒண்ணும் செஞ்சுடாதீகன்னு சரணடைஞ்சிடலாமா' என்றுகூட ஒரு விநாடி யோசித்தான்.

'என்ன ஆனாலும் சரி' என்று நினைத்தபடி கையில் இருந்த துணி மூட்டையைத் தன் மனைவியிடம் கொடுத்துவிட்டு தயங்கித் தயங்கி போலீஸ் ஜீப்பை நெருங்கினான்.



விழலாமா என்று படபடத்து யோசித்தாள். சப்-இன்ஸ்பெக்டர் கடுவம்பூனையின்முன் போய் நின்றான் பாண்டி.

''நீ என்னல... தேள் கொட்டின திருடனைப் போல முழிக்க! ஒனக்கு எந்த ஊருல...? உம்...'' என்றார் தன் கைப்பிரம்பை உருவிவிட்டபடி.

இவர் தன்னை அடையாளம் கண்டுதான் தெரியாத மாதிரி கேட்கிறாரோ என்ற சந்தேகம் பாண்டிக்கு. மெல்லிய குரலில் ''வல்லநாட்டுப் பக்கம்... கொங்கராயக்குறிச்சிய்யா. கொடைக்கு வந்தோம்யா... இப்பம் தூத்துக்குடிக்குப் போறோம்.''

''ஏம்ல, போலீஸைக் கண்டதுமே இந்தப் பக்கம் அம்புட்டுப் பேரும் தலைதெறிக்க ஓடுதானுக?'' என்றார் கடுவம்பூனை கர்வத்துடன்.

''எதுக்கு வம்புன்னுதாம்யா... 'கழுதையக் கண்டா அது பின்னால போகாதல... போலீஸ்காரரைக் கண்டா அவம் முன்னால போகாதல'ன்னு எங்கப்பாருகூட அடிக்கொரு தரம் சொல்வாருய்யா. பயம்தாம்யா!''

''எங்கலே பயப்பிடுதீக? தெரியாதா? செறுக்கிபுள்ளக பயப்படுத மாதிரி நடிக்கானுகய்யா'' என்றார் ஏட்டு.

அந்த நேரம் பார்த்து அவர்களை ஒரு பஸ் கடந்து போனது. உள்ளேயிருந்து யாரோ ஒருத்தர் எட்டிப் பார்த்து உற்சாகமாய்க் கையசைத்துவிட்டுப் போனார். கடுவம்பூனையும் கையசைத்தார். அது இன்னார் என்று அவர் அடையாளம் பார்ப்பதற்குள் பஸ் கடந்து போய்விட்டது.

''சரி, சரி! ஜீப்பைத் தள்ளி விடுல...'' சற்று விலகி நின்ற பாண்டியின் மனைவிக்கு நின்ற மூச்சு திரும்பியது. அவள் முகமெல்லாம் குப்பென்று முத்துமுத்தாய் வியர்த்திருந்தது.

ஜீப்பின் இடது பின்சக்கரம் ரோட்டோரமாயிருந்த சகதிக்குள் பதிந்து, நின்ற இடத்திலேயே சேற்றை வாரியிறைத்தது. பின்பக்கமாயிருந்து போலீஸ்காரர்கள் சிலருடன் சேர்ந்து ஜீப்பைத் தள்ளினான் பாண்டி. சக்கரம் கிளம்பியபாடில்லை. எல்லோரையும் ஒதுங்கச் சொல்லிவிட்டு, ''இந்தச் சக்கரத்தை நான் தூக்குதேன். வைக்கோலை அள்ளிக் கீழே சொருகுங்க'' என்றவன், குனிந்து கழுத்து நரம்புகள் புடைக்கத் தம்பிடித்து தூக்கினான். சக்கரம் சகதியிலிருந்து நாலு விரக்கடையளவுக்கு லேசாய் எழுந்தது. அருகில் கிடந்த வைக்கோலை அள்ளி இடைவெளியில் திணித்தனர். பின் ஒரு உறுமலுடன் புகையைக் கக்கிச் சகதியைவிட்டுக் கிளம்பியது ஜீப்.

''அட... சபாஷ்லே..! நீ என்னல செய்யுதே?''

''தூத்துக்குடி தொறமுகத்ல லோடுமேனா இருக்கம்யா.''

''அதான பாத்தேன்...'' அவன் தோளில் ஒரு தட்டுத் தட்டிவிட்டு ஸ்டைலாய் ஏறிக் கிளம்பினார் கடுவம்பூனை. தலை தப்பினது என்று ரயிலைப் பிடிக்க தன் மனைவியுடன் தூத்துக்குடிக்கு விரைந்தான் பாண்டி.

**ம**றுநாள் காலை கொக்கிரகுளம் கோர்ட் அருகே வேகமாய் ஜீப்பில் போன எஸ்.ஐ-யை ஒரு வக்கீல் மறித்து நிறுத்தினார். ''கங்க்ராஜுலேஷன் சார்..! உங்களுக்கு கடுவம்பூனைன்னு பெயர் வெச்சவங்க வாய் நெறைய சர்க்கரையை அள்ளித்தாம் போடணும்...''

''நீங்க என்ன சொல்லுதிக?''

''என்ன... சொல்லுதிகளா? எவ்வளவு பெரிய காரியம் பண்ணிருக்கீங்க.. எப்பேர்ப்பட்ட ஆளு பாண்டி... அவனைக் கோழிக்குஞ்சை அமுக்குன

நான் சும்மாதான் தூர வெலகி நின்னுக்குவேன். கூட வர்ற மத்தவம்தான் செய்வானுக! புடிபடுற எந்த நிமிஷமும் எனக்குச் சாவு நிச்சயம். உசுரோட இருக்கிற வரைக்கும் ஒவ்வொருத்தன்கிட்டையும் போய், 'எனக்குச் சோத்துக்கு உதவி செய்யுங்க'ன்னு கேட்கிறதைவிட, இது ரொம்ப சுளுவா இருக்கு. அது கெடக்கட்டும்... தாழையூத்துல பெரிய போலீஸ் அதிகாரி வந்திருந்தப்போ ஒரு கெழவியைக் கொன்னு யாரோ நகையை அடிச்சிட்டானுகளாம். சத்தியமா நான் போகலை. இப்பம் அங்கங்கே ரெண்டு மூணு கொத்தா செறுக்கிபுள்ளைக கிளம்பிப் போய், 'நான் பாண்டி வந்திருக்கேன்'னு சொல்லிக் கொள்ளையடிச்சுட்டுப் போயிடுதானுகளாம். அது எவம்னு கையுங்களவுமா புடிக்க அலையுதோம். எவனும் சிக்குதானுகயில்ல. எனக்குச் சந்தேகம்... அது . மொரப்பநாடு ராமசுப்புவாகத்தான் இருக்கும்னு. அவம்தான் இப்படிச் சோலி பாப்பாம். செறுக்கிபுள்ள என் கையில சிக்கட்டும்...''

''இந்தப் பொழப்பு நமக்கு வேணாம். நீங்க புடிபட்டுச் செத்தாலும் வீரனாத்தான் சாவணும். எஸ்டேட்டுக்குப் போயி கூலிவேலை செஞ்சாவது பொழைச்சுக்குவோம்!'' வேலம்மாள் அழுதாள்.

''சரி... போலாம்... ஆனா, என்னை நம்பி நாலஞ்சு பேர் இருக்கானுக. அவனுகளுக்காகவாவது அப்ப அப்ப இங்க வந்து போவேன். பாவம்... அவனுகளுக்கு வேற பொழப்பில்ல.'' அவள் பதில் பேசவில்லை.

ஒரு நாள் துணிமணிகளை மட்டும் எடுத்துக்கொண்டு இருவருமாய் தூத்துக்குடிக்குப் போய், பின் அங்கிருந்து ரயில் ஏறிக் கொடைரோட்டில் இறங்கி, முன்பு பாண்டி இருந்த எஸ்டேட்டுக்குப் போய்விடுவது என்று கிளம்பினர். இருவரும் நடந்து வந்து, தூத்துக்குடி போகும் ரோடேறியபோது, சிறிது தூரத்தில் ஒரு ஊருக்குச் சற்று முன்னால் போலீஸ் ஜீப் ஒன்று நின்று கொண்டிருந்தது. இரண்டு மூன்று போலீஸ்காரர்கள் சுற்றும்முற்றும் பார்த்தபடி நின்றனர். உள்ளே டிரைவருக்கு அடுத்த ஸீட்டில் பாண்டியைப் பிடிப்பதற்கென்றே நியமிக்கப்பட்ட சப்-இன்ஸ்பெக்டர் 'கடுவம்பூனை காளிமுத்து'! அவர் ஜீப்பிலிருந்து இறங்காமல் உட்கார்ந்தபடிக்கே, பாண்டியை நோக்கிக் கைநீட்டி கான்ஸ்டபிள்களிடம் ஏதோ சொன்னார். உடனே, மனைவியுடன் போன பாண்டியைக் கைதட்டிக் கூப்பிட்டார் ஒரு கான்ஸ்டபிள். 'ஒரே ஓட்டமாய் ரோட்டைவிட்டு இறங்கிக் காட்டுக்குள் ஓடிவிடலாமா?' என்று ஒரு கணம் நினைத்தான். 'இவளை என்ன செய்வது? இவளை மட்டும் புடிச்சா சித்ரவதை பண்ணிப்புடுவானுகளே...' தன் மனைவியைப் பார்த்தான்.

''ஏ... ஒன்னைத்தான்... ஐயா கூப்பிடுதாருல்ல? இங்க வாலேய்...'' பாண்டி திகைத்தான். ''ஒன்னைக் கடிச்சா திங்கப்போறோம்... சும்மா வாலேய்'' என்றார் கடுவம்பூனை. வேலம்மாளுக்கு நெஞ்சு அடைத்தது. உலகமே தலைகீழாய் சுழல்வது போலிருந்தது. முகமெல்லாம் குப்பென்று வியர்த்தது.

'என்னை என்ன வேணும்னாலும் செஞ்சுக்கங்க. இவள் ஒரு பாவமும் அறியாதவ. அவளை ஒண்ணும் செஞ்சுடாதீகன்னு சரணடைஞ்சிடலாமா' என்றுகூட ஒரு விநாடி யோசித்தான்.

'என்ன ஆனாலும் சரி' என்று நினைத்தபடி கையில் இருந்த துணி மூட்டையைத் தன் மனைவியிடம் கொடுத்துவிட்டு தயங்கித் தயங்கி போலீஸ் ஜீப்பை நெருங்கினான்.



விழலாமா என்று படபடத்து யோசித்தாள். சப்-இன்ஸ்பெக்டர் கடுவம்பூனையின்முன் போய் நின்றான் பாண்டி.

''நீ என்னல... தேள் கொட்டின திருடனைப் போல முழிக்க! ஒனக்கு எந்த ஊருல...? உம்...'' என்றார் தன் கைப்பிரம்பை உருவிவிட்டபடி.

இவர் தன்னை அடையாளம் கண்டுதான் தெரியாத மாதிரி கேட்கிறாரோ என்ற சந்தேகம் பாண்டிக்கு. மெல்லிய குரலில் ''வல்லநாட்டுப் பக்கம்... கொங்கராயக்குறிச்சிய்யா. கொடைக்கு வந்தோம்யா... இப்பம் தூத்துக்குடிக்குப் போறோம்.''

''ஏம்ல, போலீஸைக் கண்டதுமே இந்தப் பக்கம் அம்புட்டுப் பேரும் தலைதெறிக்க ஓடுதானுக?'' என்றார் கடுவம்பூனை கர்வத்துடன்.

''எதுக்கு வம்புன்னுதாம்யா... 'கழுதையக் கண்டா அது பின்னால போகாதல... போலீஸ்காரரைக் கண்டா அவம் முன்னால போகாதல'ன்னு எங்கப்பாருகூட அடிக்கொரு தரம் சொல்வாருய்யா. பயம்தாம்யா!''

''எங்கலே பயப்பிடுதீக? தெரியாதா? செறுக்கிபுள்ளக பயப்படுத மாதிரி நடிக்கானுகய்யா'' என்றார் ஏட்டு.

அந்த நேரம் பார்த்து அவர்களை ஒரு பஸ் கடந்து போனது. உள்ளேயிருந்து யாரோ ஒருத்தர் எட்டிப் பார்த்து உற்சாகமாய்க் கையசைத்துவிட்டுப் போனார். கடுவம்பூனையும் கையசைத்தார். அது இன்னார் என்று அவர் அடையாளம் பார்ப்பதற்குள் பஸ் கடந்து போய்விட்டது.

''சரி, சரி! ஜீப்பைத் தள்ளி விடுல...'' சற்று விலகி நின்ற பாண்டியின் மனைவிக்கு நின்ற மூச்சு திரும்பியது. அவள் முகமெல்லாம் குப்பென்று முத்துமுத்தாய் வியர்த்திருந்தது.

ஜீப்பின் இடது பின்சக்கரம் ரோட்டோரமாயிருந்த சகதிக்குள் பதிந்து, நின்ற இடத்திலேயே சேற்றை வாரியிறைத்தது. பின்பக்கமாயிருந்து போலீஸ்காரர்கள் சிலருடன் சேர்ந்து ஜீப்பைத் தள்ளினான் பாண்டி. சக்கரம் கிளம்பியபாடில்லை. எல்லோரையும் ஒதுங்கச் சொல்லிவிட்டு, ''இந்தச் சக்கரத்தை நான் தூக்குதேன். வைக்கோலை அள்ளிக் கீழே சொருகுங்க'' என்றவன், குனிந்து கழுத்து நரம்புகள் புடைக்கத் தம்பிடித்து தூக்கினான். சக்கரம் சகதியிலிருந்து நாலு விரக்கடையளவுக்கு லேசாய் எழுந்தது. அருகில் கிடந்த வைக்கோலை அள்ளி இடைவெளியில் திணித்தனர். பின் ஒரு உறுமலுடன் புகையைக் கக்கிச் சகதியைவிட்டுக் கிளம்பியது ஜீப்.

''அட... சபாஷ்லே..! நீ என்னல செய்யுதே?''

''தூத்துக்குடி தொறமுகத்ல லோடுமேனா இருக்கம்யா.''

''அதான பாத்தேன்...'' அவன் தோளில் ஒரு தட்டுத் தட்டிவிட்டு ஸ்டைலாய் ஏறிக் கிளம்பினார் கடுவம்பூனை. தலை தப்பினது என்று ரயிலைப் பிடிக்க தன் மனைவியுடன் தூத்துக்குடிக்கு விரைந்தான் பாண்டி.

**ம**றுநாள் காலை கொக்கிரகுளம் கோர்ட் அருகே வேகமாய் ஜீப்பில் போன எஸ்.ஐ-யை ஒரு வக்கீல் மறித்து நிறுத்தினார். ''கங்க்ராஜுலேஷன் சார்..! உங்களுக்கு கடுவம்பூனைன்னு பெயர் வெச்சவங்க வாய் நெறைய சர்க்கரையை அள்ளித்தாம் போடணும்...''

''நீங்க என்ன சொல்லுதிக?''

''என்ன... சொல்லுதிகளா? எவ்வளவு பெரிய காரியம் பண்ணிருக்கீங்க.. எப்பேர்ப்பட்ட ஆளு பாண்டி... அவனைக் கோழிக்குஞ்சை அமுக்குன

கையை இழுத்துக் குலுக்கினார் வக்கில்.

''என்ன சார் வெளையாடுதிகளா..? உங்களுக்கு வேற ஆள் கெடைக்கலயாக்கும்..? நானே நொந்து போயிருக்கேன். நீங்க வேற லகல பண்ணுதிகளே..?''

''நீங்கதான் வெளையாடுதிக... நேத்து தூத்துக்குடி கோர்ட்டுக்கு ஒரு கேஸுக்காக பஸ்ல போய்க்கிட்டு இருந்தப்ப, நீங்க ரோட்டோரமா ஜீப்பை நிறுத்தி ஒருத்தனை விசாரிச்சுட்டு இருந்தப்ப பஸ்ஸுல இருந்து எட்டிப் பாத்துக் கையசைச்சுட்டுப் போனனே..''

''ஆமா, ஒரு லோடுமேன்... ஜீப்பைத் தள்ளிவிட்டான்...''

''நல்லாருக்கு கூத்து! அவம்தான் சார் பாண்டி! கேஸுக்கு வந்தப்ப கோர்ட்ல அவனை எத்தனை தடவை பார்த்திருக்கேன். அவன் பொஞ்சாதிகூட கொஞ்சம் தள்ளி நின்னாளே சார்... அவனுக்குத் தூக்குன்னு ஜட்ஜ்மெண்ட் சொன்னதும் கோர்ட்டுக்குள்ளாற அழுது ரகளை பண்ணுனாளே, அவளேதாம்... நீங்க அரஸ்ட் பண்ணலியா?''

சப்-இன்ஸ்பெக்டர் கடுவம்பூனைக்கு உலகமே இருட்டித் தலைகீழாய் சுழன்றது. அவரது முகமெல்லாம் சிவந்து குப்பென்று வியர்த்தது!

''அடப்பாவி... மோசம் போயிட்டனே...'' பதறியபடி நேராய் தூத்துக்குடி துறைமுகத்துக்கு விரைந்தார். அங்கு மூடை தூக்குபவர்களை இரவுவரை ஒவ்வொருத்தராய் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அதே சமயத்தில் பாண்டியும் அவன் மனைவியும் ரயிலேறி கொடைரோட்டில் இறங்கி, அங்கிருந்து பஸ் பிடித்து கொடைக்கானல் பூம்பாறையில் இறங்கி கொஞ்ச தூரம் நடந்து, பின் அந்த எஸ்டேட்டை அடைந்தனர். சுற்றிலும் பசேலென்றிருந்த செடிகொடிகளும் அண்ணாந்து பார்க்கும்படியான மரங்களும் விதவிதமான பறவைகளின் கெக்கெலிப்பும் வெடவெடக்கும் குளிரும் கரிசல் காட்டிலேயே பிறந்து வளர்ந்த வேலம்மாளுக்கு வித்தியாசமாயிருந்தது. பிடித்துப்போனது. எல்லையில் லாமல் விரிந்து கிடந்த எஸ்டேட்டின் நடுவே கம்பீரமாய் ஒரு பங்களா தெரிந்தது.

''நான் ஜெயில்லருந்து தப்பி வந்தப்போ ரயில்ல என்னைக் காப்பாத்தினவர் வீடு இது... இங்க எம் பேரு அர்ஜுனக் கோனார்னு சொல்லீருக்கேன்... நீ எதையாச்சும் வாய் உளறிக் காரியத்தைக் கெடுத்திராத...''

வாசலில் 'அஸ்வினி பங்களா' என்ற பழைய பெயர்ப் பலகை மீது பசுங்கொடிகள் படர்ந்து செவேலென்று மூக்குத்தி அளவில் கொத்துக் கொத்தாய்ப் பூப் பூத்திருந்தது.

''என்ன கோனாரே, ரெண்டு மாசத்தில பொண்டாட்டியைக் கூட்டிட்டு வந்திருவேன்னு சொல்லிட்டுப் போனே... இப்ப நாலஞ்சு மாசம் ஆகிப்போச்சு. இனி 'எங்க வரப்போறே... வேற ஆளைப் பார்க்கணும்'னு நெனைச்சிக்கிட்டிருந்தேன்... வந்திட்டியே...''

தன் துண்டை எடுத்து மணிக்கட்டில் போட்டபடி, ''மன்னிக்கணும்யா... எங்க அண்ணந்தம்பிக்குள்ளாற மனஸ்தாபம்யா... பாகவஸ்தி அது இதுன்னு நாளாகிப் போச்சிய்யா. சொன்ன கெடுவுல வந்து நிக்கமுடியல...'' என்றான்.

''பரவாயில்ல... இனி ஊருக்குப் போறதா இருந்தா ரெண்டு மூணு நாள்ல திரும்பிடணும். இங்க வேலை கெட்டுப்போகும்...'' என்றார் கண்டிப்புடன்.



மனைவி, ''இவர் பொண்டாட்டி இங்கதானே இருக்கப்போறா... இனி நீங்க மூணு நாள் லீவு குடுத்தாலும் கோனார் மறுநாளே வந்திடுவார்...'' என்று சிரித்தாள்.

அஸ்வினி பங்களாவை ஒட்டியே சிறிய வீடு ஒன்றையும் ஒதுக்கிக் கொடுத்தார்கள். பாண்டி எஸ்டேட் வேலையாட்களை மேற்பார்வை யிடுவதும் வேலம்மாள் முதலாளி வீட்டில் அவரது மனைவிக்கு ஒத்தாசையாய் இருப்பதுமாய் இருந்தனர்.

திருநெல்வேலி போலீஸ் டீம் ஒன்று சீவலப்பேரி, மணியாச்சிப் பகுதிகளை விடாமல் சுற்றிக்கொண்டே இருந்தது. இன்னொரு போலீஸ் டீம் கேரளாவுக்குச் சென்று மூணாறு, வண்டிப்பெரியார் பகுதிகளிலுள்ள மலைத்தோட்டங்களை அலசித் திரிந்தது. கொஞ்ச காலம் கொள்ளைகளோ, கொலையோ இல்லாமல் திருநெல்வேலி ஜில்லா நிம்மதிப் பெருமூச்சு விட்டது.

''பாண்டி இப்ப ஆளே இல்லலே... இருந்தா இவ்வளவு நாளா ஒரு 'செய்கை' நடக்காம இருக்குமா..?'' என்று ஆளாளுக்குப் பேசிக் கொண்டனர்.

இதை போலீஸும் நம்பத் தொடங்கிய சமயத்தில் திடீரென்று ஒரு நாள் பொழுது சாய்ந்த நேரம், சீவலப்பேரியின் தென்கரையில் வயல்களுக்கு நடுவே இருந்த செட்டியார் ரைஸ்மில்லில் கதவை நீம்பலாகச் சாத்தி வைத்துவிட்டு கணக்கு வழக்குப் பார்த்துக்கொண்டிருந்தனர். திடுதிப்பென்று ஆறு பேர் அரிவாளுடன் நுழைந்தனர். ''பாண்டி வந்திருக்கார்...'' என்றதும் செட்டியாருக்குத் தூக்கிவாரிப் போட்டது. சிலர் கைகளில் நாட்டு வெடிகுண்டுகள் வைத்திருந்தனர். உருமாலுடன் வேட்டியை ஏந்திக் கட்டிய பாண்டி வாசலுக்கு நேராய் வெளியே வெளிச்சத்தில் நின்றான். கல்லா பெட்டியைவிட்டு செட்டியார் ஒதுங்கினார். உள்ளிருந்த முப்பத்தாறாயிரம் ரூபாயையும் ஒரு துண்டில் அள்ளி முடிந்துகொண்டு சாவகாசமாய் நடந்தது கும்பல். அதே இரவில், மணியாச்சி லிமிட்டில் இன்னொரு வியாபாரி வீட்டில் இதே ஸ்டைலில் கொள்ளை போனது. விடிந்ததும் யானை மிதித்த எறும்புப் புற்றாய் ஆனது எஸ்.பி. அலுவலகம். ரிசர்வ் போலீஸ் பட்டாளம் அனைத்தும் அந்தப் பிரதேசம் முழுவதும் அலைபாய்ந்தது. யாருமே அகப்படவில்லை.

''கையில நாலடி நீளத்துக்குப் பெரிய அருவா வெச்சிருக்கானாம். இடுப்பில துப்பாக்கி இருக்காம். சில்க் ஜிப்பா போட்டு, கையை ஏத்திவிட்டு உருமாலோட நிக்கானாம். பாத்தவக சொல்லுதாகல்ல...'' என்று ஊர்களில் பேசிக்கொண்டனர்.

இதேபோல சில மாதங்கள் ஏராளமான கொள்ளைகள் நடந்தன. இந்தச் சமயத்தில் தன் நடவடிக்கைகளில் சில மாற்றங்களைச் செய்தான் பாண்டி.

அவன் கூட்டாளிகளுக்கே இருக்குமிடத்தைச் சொல்வதில்லை. இரண்டு மூன்று மாதத்துக்கொருமுறை பொழுது சாயும் நேரத்தில் சீவலப்பேரியைச் சுற்றியுள்ள ஏதாவது ஒரு கிராமத்தை அடுத்து வந்து நிற்பான். ஆடு, மாடு மேய்க்கும் சிறுவர்களை அனுப்பி, ''ஊருக்குள் போய் இன்னார் இன்னாரை மட்டும் வரச் சொல்லுல...'' என்பான். காரியம் முடிந்ததும் வந்தவர்களுக்கு அதைப் பிரித்துக் கொடுத்துவிட்டு, ''இதை வெச்சுப் பொழச்சுக்கங்கல...'' என்று கிளம்பிவிடுவான். ஒருமுறை கூப்பிட்டவர்களை அடுத்த கொள்ளைக்குக் கூப்பிடுவதில்லை. 'பாண்டி வந்துவிடுவானோ' என்று பயந்து கிடந்த பலர் படிப்படியாய் 'வந்து என்னைக் கூப்பிடமாட்டானா?'

ஆதரித்தும் எதிர்த்தும் நாலா திசையிலும் பாண்டியைப் பற்றியே பேச்சாயிருந்தது. கிராமங்களிலெல்லாம் ஐஸ் விற்பவர்கள் போலவும் சவ்வு மிட்டாய்க்காரர்கள் போலவும் சேலை, ரவிக்கை, வளையல் விற்பவர்களாகவும் போலீஸார் மாறுவேடத்தில் அலைந்தனர். தகவல் கிடைத்த எந்த நேரத்திலும் விரட்டிப் பிடிக்கப் பாளையங்கோட்டையில் ரிசர்வ் பார்ட்டி ஒன்று தயார்நிலையில் வைக்கப்பட்டிருந்தது.

ஒரு நாள் சாய்ந்தரம் நல்ல மழை பெய்து ஓய்ந்து சிலுசிலுவென்று தூறல் அடித்துக்கொண்டிருந்தது... தாலுகா போலீஸ் ஸ்டேஷனுக்கு ஒரு போன் வந்தது. ''ராஜகோபாலபுரம் போற பாதையில் சைக்கிள்ல போன பால்காரன் வெட்டுப்பட்டுக் கெடக்கான்...'' என்றது மறுமுனை.

''அடடா, நமக்குப் பாண்டியப் பத்தி தகவல் சொல்லுவானே ஒரு பால்காரன்... அவனாயிருக்குமோ?'' ரைட்டர் பதறிப் போய்ப் பார்த்தார். அவனேதான்!

மேலதிகாரிகளுக்குத் தகவல் சொன்னார். சில நிமிடங்களில் ரிசர்வ் லைனில் போலீஸார் ஓடிச் சென்று வேனில் ஏற... அது பாய்ந்து கிளம்பியது. அந்த வேனுக்கு மிக அருகில் போலீஸ் குவார்ட்டர்ஸிலுள்ள ஒரு வீட்டின் ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தான் பாண்டி. ''பேச்சிமுத்தண்ணே... ஒங்க ஆளுக என்னைப் புடிக்கத்தாம் வேகமா போறாக போலருக்கு..''

''ஆமால... நீ ஆறு மாசத்துக்கு இந்தப் பக்கமே தலைகாட்டாத... இந்தா, இந்தத் துப்பாக்கியைப் பாதுகாப்புக்கு வெச்சுக்க... நான் அதிகாரிகள்கிட்ட துப்பாக்கித் தொலைஞ்சு போச்சுன்னு சொல்லிக்கிடுதேன். மிஞ்சிப்போனா எனக்கு வேலை போகும்ல... போகட்டும்...'' என்றபடி, ஒரு கோணிச்சாக்கில் தன் துப்பாக்கியைச் சுருட்டிக் கொடுத்தார் கான்ஸ்டபிள் பேச்சிமுத்து! அவர் பாண்டியின் நெருங்கிய உறவுக்காரர்.

**பா**ளையங்கோட்டையிலிருந்து ஹைகிரவுண்ட் போகிறவழியில், மேலிருந்து பார்த்தால் சிலுவை போல தெரியும் நாலு ரோடு சந்திப்பின் முனையில் இருக்கும் மரியா கான்டீன், மாணவர்களின் பகல் நேரச் சொர்க்கம். எந்நேரமும் அங்கு பழியாய் கிடப்பார்கள். சாராள்தக்கர் மகளிர் கல்லூரியிலிருந்து வரும் டவுன் பஸ்கள் மரியா கான்டீனைக் கடக்கும்போதெல்லாம், ''அந்தா பாரு... பஸ்ல போறா எஸ்.டி.சி. குட்டி! அவளைவிட நல்லாருப்பா எங்க வீட்டுப் பாட்டி!'' என்று கோரஸாய் கைதட்டி ஒரு குரூப் லூட்டியடித்துக் கொண்டிருந்தது. ஜான்ஸ் காலேஜ் சேர்மன் தனுஷ்கோடி ஆதித்தன் குரூப்பினர் ஆர்ப்பாட்டம் இல்லாமல் ஒதுங்கி உட்கார்ந்திருந்தனர்.

''லே நாராயணா... உம் பாட்டுல ஒண்ணை எடுத்து விடுல... கான்டீன் கூட்டத்தைக் கலைக்க வேற வழியில்ல...''

நாராயணன் ராகம் போட்டுத் தேவாரம் பாடத் துவங்கியதும் டீ ஆற்றிக்கொண்டிருந்த நாயர் ஏறிட்டுத் தனக்குள் லேசாகச்



''ஏய் ஓட்டமேளம், எங்கலே நம்ம பிரேம்? ஆளே தட்டுப்படக் காணோம்.''

சுற்றும்முற்றும் பார்த்த பொன்னப்பன், தூரத்தில் என்.சி.சி. யூனிஃபார்முடன் கான்டீனை நோக்கி வந்து கொண்டிருந்த பிரேம்குமாரைப் பார்த்துக் கைநீட்டி ''தோ.. அவனுக்கு நூறு வயசுல... அவுக வர்ற வரத்தைப் பாருங்கல... எல்லாம் என்.சி.சி.க்காரன் கொடுக்கானே ஓசி பூரி... அதோட மகிமைதாம்ல.''

''இருல, இரு... அவம் வரட்டும்... நான் சொல்லுதேன்.''

'ஐயோ... வேணாம்லே' என்பதுபோல் கெஞ்சினான் பொன்னப்பன். அதற்குள் அருகில் வந்த பிரேமைப் பார்த்து ஓங்கிக் குரலெடுத்து ''அட்டேன்ஷன்'' என்று ஒருவன் சொல்ல, இன்னொரு மாணவன் ''அபௌட்டன்'' என்றான். மாணவர் குரூப், பிரேம்குமாருக்கு முதுகைக் காட்டிச் சடக்கென்று திரும்பி உட்கார்ந்து கொண்டது. ''ஸாரி.. லேட்டாயிருச்சு.''

''அதுக்கு பனிஷ்மெண்ட் வேணாமால... நாயரே... பிரேமுக்கு ஸ்ட்ராங்கா ஒரு டீ போடும்வேய்'' என்றார் மாணவர் சேர்மன். ''தலைவா, இவனுக்குக் குடுக்கற தண்டனையை நானும் பகிர்ந்துக்கிறேன்... நாயரே, அதையே ஒன் பை டூவா போடும்வேய்'' என்று பென்னட் சொன்னதும் ''நீ பெரிய்ய எம்டன்டா'' என்று கையை ஓங்கினான் பிரேம்.

மாணவர்கள் பேச்சு மெள்ள திசை திரும்பியது. பிரேம்குமார் சீரியஸாக ''நேத்துச் சாயந்திரம் யாரோ ராஜகோபாலபுரம் பாதையில வெட்டுப்பட்டுக் கெடக்காம்னு பேசிக்கிட்டாக... ஓடிப்போயி பார்த்தேன். எப்பா! பயங்கரம்ல! பாதை ஓரமா மழையில நனைஞ்சபடி அவம் முண்டம் கிடந்துச்சு. நாலெட்டுத் தள்ளி ஒரு சைக்கிள் கீழே கெடந்துச்சு. ஹேண்ட்பார்கிட்ட அவம் தல துண்டா இருந்துச்சு. கேன் கவுந்து பாலெல்லாம் கொட்டி ரத்தத்தில கலந்து செவப்பும் வெள்ளையுமா மழைத் தண்ணியோட ஓடிக்கிட்டிருந்துச்சு!''

''யாராம்... யாரு செஞ்சதாம்?''

''வேற யாரு... சீவலப்பேரி பாண்டிதாம்னு பேசிக்கிட்டாக... வெட்டுப்பட்டவன் ஸ்டேட் பாங்க் காலனிக்குப் பால் ஊத்தறவனாம். நெனச்சா கொமட்டுது...''

''நீ ஏம்ல அதப் போய்ப் பாத்த?''

''நான் ஸ்கூல்ல படிக்கறப்ப இருந்தே பாண்டியைப் பத்தி பேப்பர்ல போடுதாம்'' என்றான் பிரேம்குமார்.

''நாங்கூட அப்ப பேப்பர் படிக்கிறப்போ 'ஆசாமிக்கு வலை வீச்சு, ஆசாமி கைவரிசை'ன்னு அடிக்கொருதரம் பேப்பர்ல வருமா... 'என்னடா இந்த ஆசாமிங்கிறவன் பாண்டியைவிட பயங்கரமான ஆளா இருப்பாம் போல இருக்கே... ஒரே நேரத்தில பல ஊர்கள்ல காரியம் பண்ணுதாம்... போலீஸுக்குப் பயப்படமாட்டேங்கானே'ன்னு நெ்னப்பேன். அப்புறம்தான்லே விஷயம் விளங்கிச்சு...'' எல்லோரும் சிரித்தனர். ''ஜெயில்ல இருந்து தப்பிச்சுக் கொலைக்கு மேல கொலை பண்ணிக் கொள்ளையடிக்காம் பாண்டி... இத்தனை வருசமா பிடிக்க முடியாம போலீஸ் என்னதாம் பண்ணுதோ தெரியல'' என்றான் பிரேம்.

''சைக்கிள்ல லைட்டில்லாம போறவனையும் ரெண்டாவது ஆட்டம்

நம்ம போலீஸ் லாய்க்கு... பாண்டிகிட்ட இவங்க பருப்பு வேகலலே'' என்றான் ஒருவன்.

ஒரு மாணவன் சுற்றும்முற்றும் பார்த்தபடி ''போலீஸ்லேயே பாண்டிக்கு சப்போர்ட் இருக்குன்னு பேசிக்கிடுதாக... இல்லாமயா இத்தனை வருசமா தப்பிக்க முடியும். வசதியானவனுக தூண்டிவிட்டுக் கொலைகாரனாக்கிட்டு... கைவிட்டுட்டானுக. அவம் சன்னஞ்சன்னமா கொள்ளைக்காரனாயிட்டான். இப்பமெல்லாம் கொள்ளையடிச்ச நகைகளைத் தவிட்டு வெலைக்குத் தன் தாய்புள்ளைககிட்ட வித்துக் குடுத்துட்டு 'பொழச்சுக்கங்கடா'ன்னுட்டுப் போயிடுதானாம். பல பேர் வசதியாயிட்டானுகளாம்லே'' என்றான் ஒரு மாணவன்.

''பாண்டி எப்படிப்பட்டவன்ல?'' - இது பென்னட்.

''ஒவ்வொருத்தனும் ஒவ்வொரு மாதிரி சொல்லுதானுக... ஒருபக்கம் அவன மாதிரி உண்டுமாங்கானுக. இன்னொரு பக்கம் கொலைகாரன், கொள்ளைக்காரன்ங்கானுக... ஒருபக்கம் அவம் பேரைச் சொல்லவே பயப்படுதானுக. இன்னொருபக்கம் கோழியடிச்சுக் கொழம்பு வெச்சி, அவ்ம் எப்ப வருவாம்னு காத்திருக்கானுகளாம்.''

''இப்ப பாண்டி ஆளே உசிரோட இல்லயாமே? அவம் பேரைச் சொல்லி யார் யாரோ பண்ணுதானுகன்னும் சொல்லிக்கிடுதானுக. ஒரே கொழப்பமா இருக்குல...''

''நமக்கு எதுக்குல ஊர்வம்பு... பரீட்சை நெருங்கிருச்சு! படிக்கிற சோலியப் பாப்பம்...'' ஹாஸ்டலுக்குப் போகக் கிளம்பினார் மாணவர் சேர்மன். பிரேம் திடுக்கிட்டு ''தலைவா, என்ன சொல்லுதிக... நீங்க படிக்கப் போறீகளா...? நேத்து பெஞ்ச மழை ஒங்களுக்காகத்தானா?'' எல்லோரும் சிரித்தபடி கிளம்பினர்.

பென்னட்டுக்கும் பிரேம்குமாருக்கும் வீடு மகராஜ நகரில். போகிற வழியில், லீவில் கிரிக்கெட் டீம் ஒன்று அமைப்பது பற்றி பென்னட் தொணதொணத்துக்கொண்டே வர, பிரேமின் நினைவெல்லாம் ஏனோ பாண்டியைச் சுற்றியே இருந்தது.

ஒருவழியாய் பரீட்சைகள் முடிந்து ஹாஸ்டலில் இருந்தவர்கள் ஊர்களுக்குக் கிளம்பிப் போனதும் வேடந்தாங்கலைப் போல் கலகலத்த மரியா கான்டீன் வெறிச்சோடிப் போனது. விடுமுறை காலங்களில் இப்படித்தான்... உள்ளூர் மாணவர்கள் மட்டும் சாயங்கால நேரங்களில் எப்போதாவது வந்து போவார்கள்... கும்மாளமும் கூத்துமாய் கான்டீனில் கூடிச் சிரித்தவர்களை, காலம் சிதறுதேங்காய் உடைத்தது போல் ஆளுக்கொரு திசையில் சிதறடித்தது. ஒவ்வொருத்தரும் வேலை தேடித் திரிந்த சமயம்...

மகராஜ நகரில் வீட்டுக்கு வந்த தபாலைப் பிரித்த தாசில்தார் கொப்பைய ரெட்டியார், உற்சாகமாய், ''கொண்டம்மா, இங்க வா... உம்மவனுக்கு சப்-இன்ஸ்பெக்டர் வேலைக்கு ஆடர் வந்திருக்கு...'' என்றார்.

'படிக்கிற காலத்தில இருந்தே ஏதாவது யூனிஃபார்ம் சர்வீஸுக்குத்தான் போகணும்' என்ற கனவுகளுடன் மிதந்த பிரேமுக்குச் சந்தோஷம் பிடிபடவில்லை. கேள்விப்பட்ட நண்பர்கள் எல்லோரும் தேடிவந்து 'கங்க்ராஜுலேஷன்ஸ்' சொன்னார்கள்.

ஒரு வருடப் பயிற்சி முடிந்து ப்ராக்டிகல் டிரெயினிங்குக்காக எந்த ஊரில் போடப் போகிறார்களோ என்ற டென்ஷனில் இருந்தபோது திருநெல்வேலி



யோகக்கார ஆளுயா... எடுத்த எடுப்பிலயே சொந்த ஊருல போஸ்டிங்...'' உடனிருந்தவர்கள் ஆதங்கப்பட்டனர்.

திருநெல்வேலி தாலூகா போலீஸ் ஸ்டேஷனுக்கு டியூட்டியில் ஜாயின் பண்ண வேண்டிய நாளில் பிரேமுக்குப் பரவசம்.

புதிதாய் வாங்கிய யூனிஃபார்மைப் போட்டு வீட்டில் ஆளுயரக் கண்ணாடியில் ரொம்ப நேரம் தன்னைப் பல கோணங்களில் திரும்பித் திரும்பிப் பார்த்தார்.

திருநெல்வேலி தாலூகா ஸ்டேஷனில் இன்ஸ்பெக்டர் ஜனகரத்தினத்தின் முன் டிரிம்மாக கிராஸ் பெல்ட் சகிதமாய் போய் நின்று சல்யூட் அடித்தார்.

''ம்.. வெரிகுட். தம்பி, போலீஸ் டிபார்ட்மெண்ட் ரோஜா மலர் படுக்கையல்ல. கற்களும் முட்புதர்களும் நிறைந்த காடு. நீங்க டியூட்டியில் கண்ணியமானவராகவும் கடின உழைப்பாளியாகவும் நடக்கணும்'' என்று வழக்கமான டயலாக்கைச் சொல்லிவிட்டு, ''மொதல்ல ரெண்டு வாரங்கள் நீங்க கான்ஸ்டபிள் டியூட்டி பாக்கணும்'' என்றார்.

''யெஸ் சார்.''

''ஏட்டையா, இவருக்கு பீட் டிக்கெட் குடுத்து சீவலப்பேரி பக்கம் கிராமங்களுக்கு அனுப்புங்க.''

பீட் டிக்கெட்டைப் பெற்றுக்கொண்டு கான்ஸ்டபிள் வின்சென்ட்டுடன் சைக்கிளில் கிளம்பினார் பிரேம்.

வெக்கையில் உடம்பெல்லாம் தீயைப் பூசியது போலக் காந்தலெடுக்கும் கோடைகால இறங்குவெயில் நேரம்... டியூட்டியில் சேர்ந்த முதல் நாள் முறுக்கில் சைக்கிளை வேகமாக மிதித்தார் பிரேம்.

''தம்பி.... மெள்ளப் போங்க... பத்து வருஷத்துக்கு முன்ன நானும் இப்படித்தான் மிதிச்சேன். இப்பம் மூச்சு வாங்குதில்லா... ரொம்பத் தூரம் போவணும்...''

''இப்பம் நாம எந்தெந்த ஊருக்குப் போவணும். டியூட்டி எப்டி?''

''மொதல்ல செட்டிகுளம் போவோம். அங்கயிருந்து கான்சாபுரம் போவணும். கான்சாபுரம் கள்ளைப்பத்திக் கேள்விப்பட்டிருக்கீகளா? அதுலயும் இன்னாசி நாடார் தோப்புக் கள்ளுனா சொல்லணுமா... பாளையங்கோட்டையிலருந்து வந்து மனுசப் பயலுக தவங்கெடப்பானுக... அங்கருந்து வந்த வழியில திரும்பி, சுத்தியிருக்கிற ஊர்களைப் பாத்துட்டு மருதூர், திருத்து வழியா கடைசியா பர்கிட்மாநகர்ல வந்து நம்ம பீட் முடியும். சீவலப்பேரி ஆத்து தென்கரையோட நம்ம லிமிட் ஓவர். அதுக்கு அந்தப் பக்கம் கங்கைகொண்டான் லிமிட். ஆனாலும் அங்கங்க ஊர்களுக்குள்ள பாண்டியைப் பத்தி என்னென்ன பேசிக்கிடுதானுகன்னு கவனிக்கணும். எப்படியும் வீடு போயி சேர நடுச்சாமம் ஆகிப்போவும். ஒவ்வொரு ஊர்லயும் கடையில பீட் நோட்டு இருக்கும். வந்ததுக்கு அதுல கையெழுத்துப் போடணும்...''

செட்டிகுளம், கான்சாபுரம் பீட் முடித்து, இருட்டத் தொடங்கிய நேரத்தில் சீவலப்பேரி ஆத்துப் பாலத்தருகே வந்தனர். சிலுசிலுவென்று குளிர்ந்த காற்று வீசியது. பாலத்தில் உட்கார்ந்திருந்து சிறிது நேரம் தகிப்பாறினர். சற்றுத் தள்ளி உட்கார்ந்திருந்த சிலர் காரசாரமாய் சத்தம் போட்டுப் பேசிக்கொண்டிருந்தனர். பேச்சிலிருந்து அவர்கள் படித்த இளைஞர்கள் என்பது புரிந்தது. காதுகொடுத்தனர்.

முன்னெல்லாம் எங்க போனாலும் நம்ம ஊர் சந்தைக்கு வந்துபோவதைப் பெருமையா பேசுவானுக. இப்பம் 'சீவலப்பேரி'ன்னு சொன்னதுமே 'பாண்டி ஊரா? அந்தப் பக்கம் ஒரே கொலையும் கொள்ளையுமா இருக்காமே'ன்னு விசாரிக்கானுக. கேவலமாய் இருக்கு. இப்பச் சன்னஞ்சன்னமா சந்தைக்கு மாடுகள் வரத்தும் கொறைஞ்சி போச்சுக..." இருட்டில் சற்றுத் தள்ளி போலீஸ்காரர்கள் உட்கார்ந்து இருப்பதை அவர்கள் கவனிக்கவில்லை.

"என்னிக்கி பஞ்சாயத்துத் தேர்தல்னு வந்துச்சோ அப்பவே எல்லா ஊர்களையும் ஏழ்ரநாட்டுச் சனியன் பிடிச்சிருச்சுல. வோட்டு இருக்குற ஒவ்வொரு ஜாதிக்காரனும் அடுத்த ஜாதிக்காரனுக்கு விரோதின்னு ஆகிப்போச்சு. ஒரு ஜாதிக்குள்ளேயே ஒரு கிளைக்கும் அடுத்த கிளைக்கும் ஆகாமப் போச்சு... எதுக்கெடுத்தாலும் ஒருத்தனை வெட்ட இன்னொருத்தன் அருவாளைத் தூக்கிட்டு நிக்கானுக. எல்லாம் துட்டு இருக்கவனும் வோட்டு வேணும்னு நெனைக்கவனும் பண்ணுத கூத்து... பாண்டி நெலமையப் பாத்தும் ஒருத்தனுக்கும் புத்திவல்லல..."

"நீ என்ன சொல்லுதே..? அதுக்காகப் பாண்டியைப் போல வீரத்தோட இருக்கறதைத் தப்புங்கிறியா..?"

"பாண்டியப் போல வேகத்தோடயும் வீரத்தோடயும் எவமாவது முன்னால நின்னா அவம்தாம்ல இந்தப் பக்கம் அழிக்க முடியாத வீரன். பாண்டியைப் பொறுத்தமட்டுல வீரமான ஆளுதாம்லே... ஆனா, விவேகமான ஆளுன்னு நான் ஒப்புக்கமாட்டேம்ல" என்றான் இன்னொருத்தன்.

அடுத்தவன் பாண்டிக்கு வக்காலத்து வாங்கினான். "தனக்காகவா இந்த நெலமைக்கு ஆனாரு. பாண்டிய ஏமாத்திட்டானுக... அதனாலதானே இப்படி ஆயிட்டாரு. கொள்ளையடிச்சதைத் தான் கொண்டுபோவாம மத்தவனுக்குக் கொடுத்துட்டில்லா போறாராம். ஒரு ஆளைப் புள்ளி வெச்சுக் கொள்ளையடிச்சிட்டுப் போனாருன்னா அதுக்கொரு காரணம் இருக்கும்ல... மானாவாரியா எல்லாத்துக்கிட்டையும் செய்யறதில்லையே... பாண்டியை போலீஸ்ல காட்டிக்கொடுக்க மாட்டேனுதானுகன்னா சும்மாவால..."

"நீ ஆளைப் பாத்திருக்கியால?"

"சின்ன வயசுல பாத்தது... மொகம் மறந்துபோச்சு..."

பிரேம் வேறு விவரம் கிடைக்கிறதாவென்று அவர்களுடன் பேசிப்பார்க்க நினைத்தார்.

'தம்பி... அதெல்லாம் ஒண்ணும் தேறாது. நேரமாச்சு.. போலாம்' என்பதுபோல் சைகை செய்தார் கான்ஸ்டபிள்.

அப்போது தூரத்தில் 'டமார்' என்ற வெடிச்சத்தம் கேட்டது. தென்திசையில் இவர்கள் பீட் முடியும் பர்கிட்மாநகர் பக்கம் அடிவானத்தில் செவேலென்று வெளிச்சம் பரவித் தணிந்தது. என்னவென்று நிதானிக்கும் முன், மற்றொரு வெடிச்சத்தம்!

"அதென்ன சத்தம்?"

"ஒண்ணுமில்ல... கடலைச் செடிய ராத்திரியில காட்டுப்பன்னிக வந்து கலைக்கும். அதுக்குக் 'கல்லுவெடி' வெச்சிருப்பானுக. இந்தப் பக்கம் சகஜம் தம்பி..."

"இல்லீங்க... சத்தம் பெரிசாயிருக்கு. போய்ப் பாத்துருவமே..."



நோக்கி விரைந்தனர்.

ரோட்டோரமாய் இருந்த மந்தையில் மயான நிசப்தம்! ஊருக்குள் ஈக்குஞ்சு இல்லை! சைக்கிளை உருட்டியபடி நடந்தனர். சற்றுத் தூரத்தில் ஊரே திரண்டு நின்றது. லேசான முனகலும் அழுகுரலும் சன்னமாய்க் கேட்டது. பாதையில் குண்டுவெடித்த இரண்டு பள்ளங்கள் இருந்தன. சைக்கிள்களை அப்படியே போட்டுவிட்டு பிரேமும் கான்ஸ்டபிளும் கூட்டத்தை நோக்கி ஓடினர். வகிடெடுத்தது போல கூட்டம் விலகியது. உள்ளே ஒருத்தர் தன் மணிக்கட்டைப் பிடித்தபடி உட்கார்ந்து துடித்துக் கொண்டிருந்தார். அவரது இடது கையில் ரத்தம் கொப்பளித்து உறைந்திருந்தது. அவரது மூன்று விரல்கள் தரையில் கிடந்தன. பக்கத்தில் நின்ற இன்னொருத்தரின் இடதுகண்ணிலிருந்து ரத்தம் வழிந்து கொண்டிருந்தது. போலீஸாரைப் பார்த்ததும் பெண்களில் சிலர் வாய்விட்டு அழுதனர்.

"என்ன... என்ன நடந்துச்சி?" கூடியிருந்தவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டனர். யாருமே பதில் பேசவில்லை. விரல் துண்டிக்கப்பட்டவரை பிரேம் உலுக்கினார். ஹூம்... பதிலே இல்லை!

"அட, என்ன நடந்துச்சுன்னு சொல்லுங்கவேய். லே... நீ சொல்லு... நீயாச்சும் சொல்லுல..." ஒவ்வொருத்தராய் கலைந்தனரே தவிர, பதில் பேசவில்லை.

"என்னதாம்னு சொல்லப் போறீங்களா இல்லையால...? செத்து ஒழிங்கலே. ஒரு செறுக்கிபுள்ளையாவது வாயைத் தொறக்கானா பாரு..." பிரேமுக்கு மூசுமூசென்று வந்தது. கூட்டத்துக்குள்ளிருந்து ஒரே ஒருத்தர் மட்டும் விலகி வந்து பிரேமிடம் "கொஞ்சம் தனியா பேசணும்..." என்றார்.

"வாங்க..." என்று அவரது கையைப் பிடித்து இழுத்துச் சென்றார். "இது யார் செஞ்சது?"

"புள்ளிக்காரன்!"

கேட்ட கான்ஸ்டபிளுக்குத் தூக்கிவாரிப் போட்டது. "யாருய்யா அவன் புள்ளிக்காரன்?" என்றார் பிரேம்.

"அவர்தான் சார், பாண்டி! இந்தப் பக்கம் அவம் பெயரைச் சொல்லப் பயந்தவங்க இப்படித்தாம் சொல்லுவானுக..." என்ற கான்ஸ்டபிள், அங்கிருந்தவர்களிடம் "என்ன நடந்துச்சு? தைரியமா சொல்லுங்கவேய்!" என்றார்.

"அப்பாஸ்பாய் கடை வெச்சிருக்கார். ஒரு வாரத்துக்கு முன்னாடி கடைக்கு வந்த யாரோ, பொதுவா பாண்டியைப் பத்திப் பேசிக்கிட்டு இருந்திருக்கானுக.. இந்த மனுசன் வாய் நிக்காம 'அவன் மட்டும் எங்கண்ணுல பட்டா ஒடனே போலீஸ்ல புடிச்சுக் குடுத்திடுவேன். ஏம்ல பயந்து சாவுதிக'ன்னு பேசியிருக்கார். இது எப்படியோ பாண்டியின் காதுக்கு எட்டி, இன்னிக்குக் கடை பூட்டிட்டிருக்க சமயத்துல திடீர்னு வந்து நின்னுட்டான். கூட நாலஞ்சு பேர் இருந்தானுக. 'பூட்டுன கடையைத் தொறல'ன்னு சொல்லி, கல்லாவுல இருந்த வெறும் ஐந்நூறு ரூபாயை எடுத்திட்டு, 'நீதானால புடிச்சுக் கொடுக்கவம்'னு கேட்டிருக்கான். அப்பாஸ் 'இல்லைங்க'ன்னு கும்புட்டிருக்கார். 'கைய அப்படியே நெலையில வையில... மத்தவனுக்கும் இது பாடமா இருக்கட்டும்'னு சொல்லி அரிவாளை எடுத்து ஒரே வெட்டு வெட்டுனாம். மூணு வெரலும் துண்டா போச்சு. சத்தம் கேட்டு ஊரே திரண்டு கம்பு, கடப்பாரையோட

போயிட்டாம்யா. ஒண்ணும் செய்ய முடியல. இன்னும் என்ன நடக்குமோன்னு பயந்து கெடக்கோம்...'' என்றார் அதிர்ச்சி விலகாமல்.

சைக்கிளை எடுத்துக்கொண்டு பிரேமும் கான்ஸ்டபிளும் ஸ்டேஷனுக்கு விரைந்தனர். ''நான் யூனிஃபார்ம் போட்டு சர்வீஸுக்கு வந்த மொத நாளே இப்படி ஆயிப்போச்சே! அதும் நமக்கு பீட் போட்டிருந்த ஏரியாவிலே நடந்திருக்கு. எந்த மொகத்தோட போயி நிக்கது...'' பிரேம் புலம்பினார்.

வியர்க்க விறுவிறுக்க வந்து ஸ்டேஷனில் சொன்னதும் தகவல்கள் பறந்தன! அடுத்த சில நிமிடங்களில் பர்கிட்மாநகரை நோக்கி போலீஸ் படை விரைந்தது. ஒருவர் பின் ஒருவராக டி.ஐ.ஜி., எஸ்.பி. எல்லோரும் நள்ளிரவில் பர்கிட்மாநகரில் இறங்கினர். டி.ஐ.ஜி. வந்ததுமே, ''இங்க பீட் பார்த்தது யார்?'' என்றார். பிரேம்குமாரும் கான்ஸ்டபிள் வின்சென்ட்டும் தலைகவிழ்ந்து நின்றனர். சில விநாடிகள் வெறுப்பாய்ப் பார்த்துவிட்டு, வந்திருந்த போலீஸாரை மூன்று டீம்களாகப் பிரித்து ஒரு டீமை சீவலப்பேரிக்கும் இன்னொரு டீமை வல்லநாட்டுக்கும் மற்றொரு டீமை மருதூரைச் சுற்றியுள்ள கிராமங்களுக்கும் அனுப்பினார். ஒரே சமயத்தில் மூன்று டீம்களும் தேடிக்கொண்டே வந்து மருதூரில் ஒன்று சேரும்படியான 'கோம்பிங் ஆபரேஷன்' நடத்த முடிவானது. ஆளுக்கொரு திசையில் விரைந்தனர்.

உயரதிகாரிகள் மருதூரில் முகாமிட்டனர். இரவு முழுவதும் தேடிய மூன்று டீம்களும் சோர்ந்துபோய் வெறுங்கையுடன் திரும்பி டி.ஐ.ஜி-யின் அருகில் போகவே பயந்தனர். அப்போது அதிகாலை நான்கு மணி இருக்கும். சற்று நேரம் அமைதியாய் யோசித்துவிட்டு, ''யெஸ்! எல்லோரும் அப்படியே தாலூகா ஸ்டேஷனுக்கு வாங்க... ஐந்து மணிக்கு ஸ்பெஷல் மீட்டிங் இருக்கு. உடனே இதுக்கு ஒரு முடிவுகட்டி ஆகணும்!'' கடுமையான குரலில் சொன்னார் டி.ஐ.ஜி.! இரவெல்லாம் தூங்காமல் அலைந்து வந்த அதிகாரிகள் ''யெஸ் சார்...'' என்று சல்யூட் அடித்தனர். நடக்கவிருக்கும் அந்த முக்கிய மீட்டிங்கில் என்ன முடிவெடுக்கப் போகிறாரோ என்ற யோசனையுடன் அதிகாரிகள் ஸ்டேஷனுக்கு விரைந்தனர்.

''இன்னும் ஒரு மணி நேரத்துல நம்ம யூனிஃபார்மையும் கழட்டிடுவாங்க சார்...'' பிரேமிடம் கான்ஸ்டபிள் வின்சென்ட் பயத்தில் முணுமுணுத்தார்.

**பே**றுகால வார்டுக்கு வெளியே நிற்பவர்களைப்போல, மீட்டிங் நடந்துகொண்டிருந்த ஸ்டேஷன் வாசலில் கான்ஸ்டபிள்கள் படபடப்புடன் நின்றனர். சர்க்கிள் இன்ஸ்பெக்டர்களில் சிலர் வேர்க்க விறுவிறுக்க ஃபைல்களை எடுத்துக்கொண்டு ஓடினர். இரவெல்லாம் அலைந்த கான்ஸ்டபிள்கள் சோர்ந்துபோய் வெளியே உட்கார்ந்திருந்தனர்.

மானூரில் டிரெயினிங் சப்-இன்ஸ்பெக்டராக இருந்த மரகதசுந்தரம் பிரேமை நெருங்கி, ''வருத்தப்படாத பிரேம்... பீட்டில் கவனக்குறைவா இருந்திட்டீங்கன்னு ஒரு மொமோ கொடுப்பாங்க. அவ்வளவுதான்'' என்றார்.

''இல்ல மரகதம்... நான் யூனிஃபார்ம் போட்ட மொத நாளே இப்படி நடந்துபோச்சே...'' பிரேம் தலைகவிழ்ந்தபடி நின்றார்.

அப்போது கிழக்கு வெளுத்து மெள்ளச் சிவந்துகொண்டு இருந்தது. மரங்களில் அடைந்திருந்த பறவைகளின் 'கீச்.. கீச்' என்ற ஆரவாரம் தூக்கலாய் கேட்டது. ஹாலுக்குள் அதிகாரிகள் சொல்வதை எந்த உணர்ச்சியும் காட்டாமல் மௌனமாய்க் கேட்டுக்கொண்டிருந்த டி.ஐ.ஜி.



முடியாததற்கு நீங்க சொல்ற காரணம் வேடிக்கையா இருக்கு. அவன் எங்கருந்து வரான்? யார் யாரைப் பார்க்கிறான்கிற பேஸிக் இன்ஃபர்மேஷன்கூட ஒங்ககிட்ட இல்ல. இவன்தான் பாண்டின்னு அடையாளம்கூட இல்லாம என்ன இன்வெஸ்டிகேஷன் நடத்திக் கிழிச்சிருக்கீங்க? இப்ப இருக்கிற நெலமையில ஒங்க வீடுகள்ல விசேஷம் வைங்க... அவனே வந்து ஒங்க முன்னாடி ஒட்கார்ந்து விருந்து சாப்பிட்டுட்டு உங்ககிட்டேயே வெத்தலைக்குச் சுண்ணாம்பும் வாங்கிக்கிட்டுப் போயிடுவான். இத்தனை வருஷமா தேடியும் அவனோட போட்டோவைக்கூடத் தேடிப் புடிக்கமுடியலைன்னு சொல்றதுக்கு வெட்கமா இல்ல...?''

''ஜனங்கள் யாரும் அவனைக் காட்டிக்கொடுக்க மாட்டேங்கிறாங்க சார்...'' ஒரு சர்க்கிள் இன்ஸ்பெக்டர் பவ்யமாய்ச் சொன்னார்.

''இன்னொரு தடவை இப்படிச் சொல்லாதீங்க. இது அதைவிடப் பெரிய கேவலம். ஒண்ணு, ஜனங்களுக்கு நம்ம டிபார்ட்மெண்ட் மேல நம்பிக்கை இல்லாம இருக்கணும்... இல்லாட்டி, ஒங்களை விடவும் அவன் எவ்வளவோ தேவலாம்னு நினைச்சிருக்கணும். இதில் எதை ஒப்புக்கப் போறீங்க?'' அதிகாரிகள் தலைகுனிந்து மௌனமாய் இருந்தனர்.

''என்னால் இதைச் சகிக்க முடியாது. இனி இன்ஸ்பெக்டர்ஸ் யாரையும் நம்பத் தயாராய் இல்லை. இதுவரைக்கும் பாண்டியைப் பிடிக்கப் போறோம்னு ஊர் சுத்தின டீமையெல்லாம் கலைச்சிடுங்க. புதுசா எஸ்.பி., ஏ.எஸ்.பி. தலைமையில டீம் ஃபார்ம் பண்ணுங்க. நானும் தனியா ஒரு டீமை ஆபரேட் பண்ணப்போறேன். இந்த மூணு டீமும் ஒண்ணுக்கொண்ணு சேலஞ்சா ஃபீல்டுல இறங்கணும்...'' டி.ஐ.ஜி. சொல்லிக்கொண்டிருக்கும்போதே வாசலருகே தயங்கித் தயங்கி வந்து நின்றார் பிரேம். விருட்டென்று டி.ஐ.ஜி-யின் முன் போய் நின்று, சல்யூட் அடித்து, ''சார்... ஒரு நிமிஷம்... நான் ஒண்ணு சொல்ல...'' என்று வாயெடுத்தார். பேச்சை நிறுத்திவிட்டு திரும்பிய டி.ஐ.ஜி., ''கெட் அவுட்... மேனர்ஸ் தெரியாதா மேன் ஒனக்கு? கெட் அவுட் ஐ ஸே...'' உட்கார்ந்திருந்த அதிகாரிகள், பிரேமை எரித்துவிடுவதுபோல் முறைத்தனர். சிலர் 'சீக்கிரமா வெளியே போயிடு' என்பது போல் கண்களால் ஜாடை செய்தனர். டி.ஐ.ஜி. அருகில் உட்கார்ந்திருந்த ராஜகோபால் எஸ்.பி., மெல்லிய குரலில் ''இவன் டியூட்டியில் சேர்ந்து இன்னும் ட்வெண்டிஃபோர் அவர்ஸ்கூட ஆகாத டிரெயினிங் எஸ்.ஐ. சார்.. நேற்றுச் சம்பவம் நடந்த ஊருக்கு பீட் போயிருந்தவன். டிபார்ட்மெண்ட் ஃபார்மாலிட்டிஸ் தெரியாதவன்... என்னதான் சொல்றான்னு கேட்கலாமே சார்!'' டி.ஐ.ஜி. சற்று சாந்தமானார்.

''என்ன விஷயம்?''

''ஸாரி சார்... என்னை மன்னிச்சுடுங்க... எனக்கு ஒரே ஒரு சான்ஸ் மட்டும் குடுங்க சார்...''

''எதுக்கு மேன்?''

''பாண்டியப் பிடிக்கத்தான் சார்...''

''ஓகோ...'' என்ற டி.ஐ.ஜி., லேசாய்த் தலையைக் குலுக்கியதும் உட்கார்ந்திருந்த அதிகாரிகளுக்குச் சிரிப்பு வந்தது. வாயைப் பொத்தியபடி குனிந்துகொண்டு குலுங்கினர். பிரேம் திருதிருவென்று விழித்தார். ''வெரிகுட், வெரிகுட்... இவ்வளவு நாளா நீங்க எங்க சார் இருந்தீங்க?''

''டிரெயினிங் ஸ்கூல்ல சார்...'' எல்லோருக்குமே இப்போது சிரிப்பு

வந்துவிட்டது. சூழ்நிலையின் இறுக்கம் கலைந்தது. "போ.. மேன்... நேரங்காலம் தெரியாமல் ஏதாச்சும் உளராத... போ.. போ... பேஷ்... நல்ல டிரெயினிங் கொடுத்திருக்காங்க போலிருக்கு..." தன் தோளைக் குலுக்கினார் டி.ஐ.ஜி.!

"சார்... என்னை நம்புங்க சார்..."

பிரேமைத் தன்னருகே வரச்சொல்லி சைகை செய்தார் எஸ்.பி. "நெஜமாவே நீ அவனைப் பிடிச்சிருவியா?"

'இவர் கிண்டலாகக் கேட்கிறாரா, சீரியஸாகக் கேட்கிறாரா?' என்று புரியாமல், "யெஸ் சார்..." என்றார் பிரேம்.

"சார்... இவனை என் டீமில் அடிஷனலா சேர்த்துக்கிடுறேனே..."

உதட்டைப் பிதுக்கி தலையாட்டியபடி மீட்டிங்கை முடித்து எழுந்தார் டி.ஐ.ஜி.!

"நீ இன்னிக்கே கேம்ப் ஆபீஸுக்கு வந்து என்னைப் பார்..." என்றபடி கிளம்பினார் எஸ்.பி.! எல்லோரும் கலைந்தபோது, பொழுது விடிந்துவிட்டது.

**எஸ்**.பி-யின் கேம்ப் ஆபீஸ் வாசலில் காத்திருந்த சில இன்ஸ்பெக்டர்களுக்குப் பிரேமைப் பார்த்ததுமே அடக்கமுடியாத சிரிப்பு வந்தது. உள்ளே வரச் சொன்னார் எஸ்.பி.! "வெரிகுட்... ஒன்னோட தைரியத்தைப் பாராட்டுறேன். வெளியிலே யூனிஃபார்மோட நின்னு வீரம் காண்பிக்கிற பல பேர், ஆபீஸர்ஸ் முன்னால பேசவே பயந்து நடுங்குற கோழைகளாக இருப்பானுக. மரியாதைங்கிறது பயப்படுறதுல மட்டும் இல்ல... தெரியுமா?"

பிரேம் மௌனமாய் நின்றார்.

"சரி... ஒன்னைப்பத்திச் சொல்லு... ஒங்கூடப் பிறந்தவங்க எத்தனை பேரு? ஒங்குடும்பம் ஒன்னை மட்டும்தா நம்பி இருக்கா?"

பிரேம் அனைத்தையும் சொன்னபின், "நீ புடிக்கப் போறேம்னு சொல்றது சாதாரண ஆளை இல்ல... நீதான் தேடித் திரியறேனு தெரிஞ்சா, ஒங்கதையை முடிச்சிடுவான்... தெரியுமா?"

"தெரியும் சார்... நான் காலேஜ்ல படிக்கிறப்பவே இவனைப் பத்தி நெறைய கேள்விப்பட்டிருக்கேன். இந்தப் பக்கம் எல்லா கிராமமும் எனக்குத் தெரியும் சார். எனக்கு ஒரே ஒரு சான்ஸ் மட்டும் கொடுங்க..."

எஸ்.பி-க்கு நம்பிக்கை துளிர்த்தது. "சரி, ஒனக்கு என்னென்ன செஞ்சு தரணும்... எவ்வளவு ஸ்ட்ரென்த் வேணும்? சொல்லு..."

"ஒண்ணுமே வேணாம் சார்... ஒரே ஒரு கான்ஸ்டபிள் மட்டும் கொடுங்க. எங்க ரெண்டு பேத்துக்கும் ஆளுக்கொரு ரிவால்வர் குடுங்க சார்... அதோட அவனைப் பிடிக்கிறவரைக்கும் நாங்க யூனிஃபார்ம் போடாம இருக்க பெர்மிஷன் தரணும். அதுபோதும் சார்..."

"யெஸ்... கிராண்டட்... பரமசிவம்கிற க்ரைம் கான்ஸ்டபிள் ஒருத்தனைத் தர்றேன். ரொம்ப விசுவாசமான ஆள். அவனுக்கு ஒரு ரிவால்வர் தர்றேன். ஒனக்கு நைன் எம்.எம். பிஸ்டலே தர்றேன். உன் சாமத்தியத்தையும் பார்க்கலாம். இப்ப இருந்தே உன்னுடைய ஸ்பெஷல் டியூட்டிக்குப் போகலாம். உனக்கு எது வேணும்னாலும் நேரடியா தொடர்பு வெச்சுக்க..."

"யெஸ் சார்!"

**பி**ரேம் வீட்டில் ஏகக் களேபரம். "ஏம்ல... இப்படி ஊர்ல ஊத்துத



ஒன்னிய விட்டா வேற போலீஸ்காரனே இல்லயாக்கும்? அவம் பொல்லாதவம்னு ஊர் முழுக்கப் பேசுதாக... இது அவம் தாய்புள்ள பெருத்த ஊரு. இப்படித் தெரிஞ்சிருந்தா ஒன்ன போலீஸ் வேலைக்கே விட்டிருக்கமாட்டேன்ல..." பிரேமின் தாயார் புலம்பினார்.

"துப்பாக்கிக் கொடுத்திருக்காகல்லா.. அவம் என்னை நெருங்கினா சுட்டுப்புடுவேன். நீ பயப்படாதம்மா..."

"சுட்டாலும் ஊருக்குள்ள பொல்லாப்பு வந்திரும்ல... இனப் பகையா ஆகிப் போகுமே... ஒனக்கு நேரம் செரியில்லேன்னு விளாத்திகுளம் ஜோசியரு சொன்னது சரியாப் போச்சில..." புலம்பித் தீர்த்தார் பிரேமின் தாயார். "இவம் என்னிக்கு என் சொல் கேட்டாம்? இப்ப மட்டும் கேக்க..." முணுமுணுத்தபடி வெளியே கிளம்பினார் தகப்பனார் கொப்பைய ரெட்டியார்.

**கா**ன்ஸ்டபிள் பரமசிவத்தைப் பார்த்ததுமே பிரேமுக்குப் பிடித்துப் போனது. இரண்டு மூன்று வயது மூத்தவராய் இருந்தார். "என்ன செய்யணும்னு சொல்லுங்க சார்... அதையிட்டு என் உசுரே போனாலும் பரவால்ல. செய்யுதேன்... நம்ப கான்ஸ்டபிள்களைக்கூட நம்பி, எங்கே போறோம் வர்றோம்னு பேசாதீக... தகவல் போயிடும்..."

"மொதல்ல நாம செய்யவேண்டிய வேலை – அவனோட பூர்வீகம் என்ன? தாய், தகப்பன், கூடப்பொறந்தவங்க யார் யாரு? எங்கெங்க சம்பந்தம் பண்ணிருக்காங்கங்கற விவரத்தை எடுக்கணும். அவனோட தாய்புள்ளைக எந்தெந்த ஊர்ல இருக்காகளோ, அவ்வளவு எடத்தையும் செக் பண்ணணும். யார் யார் அடைக்கலம் கொடுக்குறானுகன்னு தெரிஞ்சுபோகும்..." என்றார் பிரேம்.

சில வாரங்கள் இதே வேலையாய் அலைந்து தகவல் சேகரித்தனர். இடுப்பில் ரவைகள் நிரப்பிய கைத்துப்பாக்கிகளை செருகிக்கொண்டு கைலி, அழுக்குச் சட்டையோடு, கிராமம் கிராமமாய் அலைந்தனர். தினமும் விடிகாலையில் பாளையங்கோட்டையில் பஸ்ஸில் ஏறி கங்கைகொண்டான் விலக்கில் இறங்கி, "எங்க மொதலாளிக்கு மாடு பார்க்க வந்தோம்ங்க..." என்றபடி நடையாய் நடந்து திரிந்தனர். பரமசிவம் எச்சரிக்கையாக "ஊர்கள்ல பச்சத் தண்ணிகூடக் குடிக்கக்கூடாதுங்க... நம்மை யாருன்னு தெரிஞ்சா எதையாச்சும் வெச்சுக் கொடுத்திடுவானுக..." என்று சொன்னதால், வழியில் எங்கும் சாப்பிடுவதில்லை. ஒரு நாளைக்குக் குறைந்தது சராசரியாக இருபது மைல் தூரம் காட்டுப்பாதையில் அலைந்து திரிந்தனர்.

இப்படியே நான்கு மாதங்கள் உருண்டுவிட்டன. உருப்படியான தகவல் தேறவில்லை. போகிற வழிகளில் பாண்டியாய் இருக்குமோ என்று சந்தேகப்பட்டு யாரையாவது பின்தொடர்ந்து போவார்கள். கடைசியில் நிறுத்தி விசாரிக்கும்போது, அவர்கள் பைக்குள்ளிருந்து சி.பி.சி.ஐ.டி. அடையாள அட்டையை எடுத்துக் காண்பிப்பார்கள். தலையில் அடித்துக்கொண்டு, "நாங்க ஒங்களைச் சந்தேகப்பட்டு வந்தோம். நீங்க

பாண்டி தேடு படலம் தொடர்ந்தது.

ஒரு நாள் பிரேமும் பரமசிவமும் விளக்கு வைக்கும் நேரத்தில் திருத்துப்பக்கமாய் வந்தனர். வழியில் பழைய கேடி கந்தன் டீக்கடை வைத்திருந்தான். அவனுக்கு மட்டும் இருவரும் பாண்டியைத் தேடி அலையும் போலீஸ்காரர்கள் என்பது தெரியும்.

''நீங்க இன்னாருன்னு யார்கிட்டையும் மூச்சுவிடமாட்டேம்யா... அவம் நடமாட்டம் தெரிஞ்சா ஒடனே சொல்லுதேன்யா...'' என்று சத்தியம் செய்திருந்தான். இவர்களுக்கும் அவன் பேரில் மிகுந்த நம்பிக்கை. வழக்கமாய் இவர்கள் இந்தப் பக்கம் வருவார்கள் என்று வில்ஸ் சிகரெட் வாங்கி வைத்திருப்பான்.

பிரேமும் பரமசிவமும் வந்தபோது கடை காத்தாடிக் கொண்டிருந்தது. 'விஷ்...' என்ற லேசான சத்தத்துடன் பெட்ரோமாக்ஸ் லைட் எரிந்து கொண்டிருந்தது. ''வாங்கய்யா.... வாங்க! நாலு நாளா இந்தப் பக்கமே காணோமே... எப்படியும் இன்னிக்கு வருவீகன்னு நெனைச்சேன்..'' வெளியே கிடந்த மரபெஞ்சைத் துடைத்து உட்காரச்சொன்ன கடைக்காரன், வேகமாய் கடைக்குள் போய் சிகரெட் பாக்கெட்டை எடுத்துவந்து நீட்டினான். ''ரெண்டு டீ போடுலே...'' என்றார் கான்ஸ்டபிள் பரமசிவம். டீ ஆற்றிக்கொண்டிருந்த கடைக்காரன், ''எனக்கு ஒரு டீ ஸ்ட்ராங்கா போடுல...'' என்ற இன்னொரு சத்தம் கேட்டுத் திரும்பினான். அவனது விரல்கள் லேசாய் நடுங்கின!

எதிரே சாவகாசமாய்த் தன் தோளில் கிடந்த துண்டால் தூசு தட்டித் துடைத்துவிட்டு பிரேமின் அருகே உட்கார்ந்தான் பாண்டி! அவனது அரிவாளை ஒரு கோணிச் சாக்கில் சுற்றி அருகே வைத்திருந்தான். பிரேமும் பரமசிவமும் பேச்சு மும்முரத்தில் இருந்தனர். அருகிலிருந்த பிரேமின் முகத்தை ஒரு கணம் உற்றுப் பார்த்துவிட்டு, டீ ஆற்றிக்கொண்டிருந்தவனை ஏறிட்டான். ''ஆம்'' என்பதுபோல் தலையாட்டி, ''அச்...'' என்று தும்மினான்! 'இன்னார்னு ஆளைக் காமிக்கச் சொன்னே... காண்பிச்சுட்டேன். என் கடை முன்னே வெச்சு எதுவும் செஞ்சிராத சாமி!' என்பதுபோல் கடைக்காரன் பார்வையால் கெஞ்சினான்.

பதட்டத்தில் அவனுக்குக் குலைநடுங்கியது. கைகால் ஓடவில்லை. தோதாக அந்த நேரம் பார்த்து ஆள்நடமாட்டமும் இல்லை. 'குய்ய்...' என்ற சில்வண்டுகளின் இரைச்சலுக்கிடையே, 'பிர்...பி..ர்...' என்ற தவளைகளின் சத்தத்தைத் தவிர வேறு அரவமே இல்லை.

''லே... கந்தா, ஒன்னைத்தாம்ல... அங்கே என்னல செய்த... செறுக்கிபுள்ள! சீக்கிரமா டீத் தண்ணியைக் கொண்டால...'' மடியில் இருந்த ஒரு பீடியை எடுத்துப் பற்றவைத்து பிரேம்குமாரைப் பார்த்தபடி சுண்டியிழுத்தான் பாண்டி. பரமசிவத்துடன் பேச்சு மும்முரத்தில் இருந்த பிரேம், பாக்கெட்டிலிருந்து ஒரு சிகரெட்டை உருவி எடுத்து உதட்டில் வைத்தபடி சட்டைப் பையைத் தடவினார். தீப்பெட்டி இல்லை. பெஞ்சில் இரண்டடி இடைவெளியில் உட்கார்ந்திருந்த பாண்டி, பிரேம் அருகே நகர்ந்து வந்தான். 'சரக்...' என்று உரசிப் பற்றவைத்து காற்றில் தீ அணையாதபடிக்குக் கைகளைக் குவித்து, சற்றுக் குனிந்து தோதாய் நீட்டினான். நெருப்பு வெளிச்சத்தில், பிரேம்குமாரின் முகத்தை மூச்சுப்படும் நெருக்கத்தில் உற்றுப் பார்த்தான். 'இன்னும் மீசைகூடச் சரியா மொளைக்கல... நீதான் என்னைப் பிடிக்க வந்த ஆளாலே?' - மனசுக்குள் நினைத்தான்.



விரல்கள் நடுங்கியபடி மூவருக்கும் டீ கொண்டுவந்து கொடுத்துவிட்டு, வேகமாய் டீ பட்டறையில் போய் நின்றுகொண்டான் கடைக்காரன். பிரேமிடம் பேச்சுக் கொடுத்தான் பாண்டி. ''அசலூரா தம்பி..? என்ன சோலியா வந்தீக..?''

''பாளையங்கோட்டை அண்ணாச்சி... மாடு பார்க்க வந்தோம்... கடேசி பஸ்ஸை விட்டுப்புட்டோம்... அதான் நடந்தே போறோம்...''

'முன்பின் தெரியாதவனிடம் அநாவசியமாய் எதற்குப் பேச்சு?' என்பதுபோல் ''நேரமாச்சு... நடப்போம்...'' என்றார் கான்ஸ்டபிள் பரமசிவம். பிரேம் புரிந்துகொண்டார். ''அண்ணாச்சி வரட்டுமா?'' சொல்லிக்கொண்டு இருவரும் கிளம்பினர். கடைக்காரன் கல்லாய்ச் சமைந்ததுபோல நின்றான். இருவரும் இருட்டுக்குள் புள்ளியாய் மறையும்வரை, அவர்கள் போவதையே பார்த்துக்கொண்டிருந்தான் பாண்டி. கடைக்குள் நின்றவன் ஓடிவந்து, ''என்ன பாண்டி... 'ஆளை மட்டும் காண்பி... எட்ட நின்னு பாத்துட்டுப் போயிடுதேன்'னு சொன்ன... திடீர்னு வந்து அவனுக பக்கத்திலயே உக்காந்துட்ட! எனக்குன்னா அடிவயித்தைக் கலக்கிருச்சு... நீ நல்லாருப்ப சாமி...'' கையெடுத்துக் கும்பிட்டான்.

''நாங்கூட என்னமோ நெனச்சிட்டேம்ல... எவம்னு பார்த்துச் சோலியை முடிச்சாகணும்னுதான் வந்தேன். ரொம்பச் சின்னப் பயலுகளா இருக்கானுக... 'நில்லுங்கல'ன்னு ஒரு அமட்டுப் போட்டா, வேட்டி துண்டைக் கழட்டி வெச்சுட்டு ஓட்டம் புடிச்சிடுவானுக போலருக்கு... ஏம்னே தெரியலே... இதுவரைக்கும் ஒரு செய்கைக்குனு வந்துட்டு... 'செய்யலாமா, வேணாமா'ன்னு யோசனை தட்டாது. என்னமோ இந்தப் பயலுகளைப் பாத்ததுமே பாவமுன்னு தோணுச்சு... போறானுக'' என்றான்.

''நீ என் கடை முன்னே ஏதாச்சிலும் செஞ்சு, போலீஸு, கேஸுன்னு நான் அலையப்போறேன்னு நெனச்சுப் பயந்துட்டேன் பாண்டி...'' என்று மீண்டும் கையெடுத்துக் கும்பிட்டான் கடைக்காரன். தொடர்ந்து, ''நீ திடுதிப்புன்னு வர்ற, போற... எங்க இருக்கே? அவசரத்துக்கு எதுவும்னா எப்பிடித் தாக்கல் சொல்லது? நம்ம பயலுககிட்ட கேட்டாலும் ஒருத்தனும் தெரியலேங்கானுக...''

''ஒஞ்சோலியப் பாருலய்... எனக்கு எல்லாந் தெரிஞ்சுடும்...'' பெஞ்சில் கிடந்த சாக்குப்பையை எடுத்துக் கக்கத்தில் இடுக்கியபடி இருட்டுக்குள் நடந்தான்.

பிரேமும் பரமசிவமும் கண்ணைக்கட்டிக் காட்டில் விட்டதுபோல் கிராமம் கிராமமாகத் தொடர்ந்து அலைந்தனர்.

நாளுக்கு நாள் பிரேமின் மனதுக்குள் பாண்டியைப் பற்றி ஒரு கற்பனைச் சித்திரமே பதிந்துவிட்டது. உயரமாய் - யாரைப் பார்த்தாலும் தன் மனதிலிருக்கும் உருவத்துடன் ஒப்பிட்டுப் பார்த்து, 'சே... இவனா இருக்காது...' என்று நினைத்துக்கொண்டே தேடித் திரிவது அன்றாட வழக்கமாகிவிட்டது.

ஒரு நாள் பகலெல்லாம் அலைந்துவிட்டு, மதியத்துக்குமேல் சீவலப்பேரி சந்தையின் வாசல் வளைவை ஒட்டிய திண்டில் வந்து அசந்து உட்கார்ந்தனர். சந்தையில் கூட்டமும் அதிகமில்லை. பக்கத்தில் அசலூர்க்காரர்கள் சிலர் பஸ்ஸுக்காகக் காத்திருந்தனர். மேற்கே இருந்து ஒத்தையாய் கிடாய் மீசையுடன் தள்ளாடி நடந்து வந்து கொண்டிருந்த ஒருத்தரைப் பார்த்ததும் பரமசிவம், பிரேமை நிமிண்டினார். ''இவம்தான் மலையாண்டி... பாண்டியோட அண்ணன்..!''

சௌரியந்தானா... பச்சேரியே கெதின்னு கெடக்கிராமே...?'' என்றார் கண்சிமிட்டியபடி.

''வாங்க... எப்ப வந்திக? ஒரு நடை வீட்டுக்கு வராமக்கூடக் கிளம்பிட்டீக?''

''எங்க பக்கமெல்லாம் உந்தம்பி பேச்சாத்தாம்வேய் இருக்கி... வந்தா, போனா உம்மைப் பாப்பானா?'' பிரேமும் பரமசிவமும் இவர்கள் பேச்சைக் கவனிக்காதது போல் வேறுபக்கம் திரும்பிக்கொண்டனர். மலையாண்டியின் பதிலுக்காகக் காதைத் தீட்டிக் காத்திருந்தனர். இடுப்பில் கையூன்றியபடி ஒரு பெருமூச்சு விட்ட மலையாண்டி, சற்றுத் தள்ளி உட்கார்ந்து ''ஒங்களைப் போலதாம்வே நானும் கேள்விப்படுதேன்... அவனைப் பாத்துப் பல வருஷமாச்சு... அவம் வர்றதும் போறதும் தேசமாணிக்கம் ராமயாவுக்கும் ஆத்துக்குள்ள சாராயம் விக்கானே அல்லியான்... இந்த ரெண்டு பேருக்குத்தாம் தெரியுமாம்... இவனுகதாம் கொள்ளையடிச்ச நகைகளைத் தவிட்டு வெலைக்கு வித்துக் குடுக்குறவனுகளாம்...'நான்தாம் பாண்டி'ன்னு பொய் சொல்லி, பல இடங்கள்ல துட்டடிச்ச மொரப்பநாடு ராமசுப்பும் இப்பம் இவனுக கூடச் சேர்ந்து திரியுதானாம்... இதுல ஒருத்தனும் எங்கண்ணுல தட்டுப்படுதானுகயில்ல... கெடக்கானுக... கொடைக்கு வருவீருதான...?'' மலையாண்டியின் பேச்சு திசை திரும்பியது.

இவ்வளவு காலம் அலைந்தும் கிடைக்காத உருப்படியான முதல் 'க்ளு' கிடைத்த பரவசம் பிரேம்குமாருக்கு. ஸ்டேஷனுக்கு விரைந்தனர்.

''இது கரெக்ட் இன்ஃபர்மேஷன் சார்... மொதல்ல அல்லியானையும் ராமையாவையும் நம்ம கஸ்டடிக்குக் கொண்டுவந்து, ரெண்டு தட்டுத் தட்னா விஷயத்தைக் கக்கிடுவானுக... அப்புறம் எல்லா வெவரமும் வந்திடும் சார்...'' பிரேம் மூச்சுவிடாமல் சொல்லி முடித்ததும்,

''இவனுகளைத் தனித்தனியா தூக்கிட்டு வாங்க... லேசுல வாயைத் தெறக்கமாட்டானுக... வந்ததுமே அடி வெளுத்திருங்க... அப்புறமா விசாரிப்போம். வேணும்கிற 'ஸ்ட்ரென்த்' எடுத்துக்குங்க... ம்... ஒடனே கிளம்புங்க...'' இன்ஸ்பெக்டரும் பரபரத்தார்.

முதலில் தேசமாணிக்கம் ராமையாவையும் அப்புறம் சூட்டோடு சூடாய் அல்லியானையும் கொண்டுவருவது என்று முடிவுசெய்தனர். விரட்டிப் பிடிக்கத் தோதாய்ப் பத்துப் பன்னிரண்டு பேர் கொண்ட, தேர்ந்தெடுத்த இளம் போலீஸ் டீமுடன் கிளம்பினார் பிரேம். தேசமாணிக்கத்திலும் அதைச் சுற்றியுள்ள ஊர்களிலும் சலித்தும் ராமையா சிக்கவில்லை. அதே டீம், அப்படியே அல்லியானைத் தேடி சீவலப்பேரிக்கு விரைந்தது. அல்லியானும் அகப்படவில்லை.

''நம்ம ஸ்டேஷனிலிருந்து அவனுக ரெண்டு பேத்துக்கும் விஷயம் லீக்காயிருக்குமோன்னு சந்தேகமா இருக்கு சார்... இவனுகளை உடனே பிடிச்சு விசாரிக்கலைன்னா காரியமே கெட்டுப் போகும்...'' பிரேமிடம் பரமசிவம் புலம்பித் தவித்தார்.

அப்போது ஒரு கான்ஸ்டபிள் சொன்ன தகவல் பிரேமை ஸ்தம்பிக்க வைத்தது.

''நேத்து திருநெல்வேலியிலிருந்து நாகர்கோவில் போகும் பஸ்ஸுல தேசமாணிக்கம் ராமையா போயிருக்கான் சார்... மூன்றடைப்பு பக்கத்துல போகும்போதே டிரைவர்கிட்ட அரிவாளைக் காட்டி, வண்டியை நிறுத்தச் சொல்லியிருக்கான். பஸ் நின்னதும் கண்டக்டரை அரிவா மொனையால லேசா ஒரு கொத்துக் கொத்திட்டு, பணப்பையை இழுத்திருக்கான்.



புடுங்கிட்டு ஓடாம் சும்மா நின்னுருக்காம்... உடனே பஸ்ஸுல இருந்தவங்களுக்குத் தைரியம் வந்து, அவனைப் புடிச்சு அடிச்சு, அந்த பஸ்ஸுலயே கொண்டுபோய் தக்கலை ஸ்டேஷன்ல விட்டிருக்காக... அவன் தப்பி ஓடக்கூட முயற்சிபண்ணலையாம்... அவம்பேர்ல கொலைமுயற்சி, கொள்ளை செக்ஷன்களில் ஸ்ட்ராங்கா கேஸ் எழுதி ரிமாண்ட் பண்ணிட்டாகளாம்... 'ஜாமீன்ல எடுக்க முயற்சிபண்ணவா?'னு கோர்ட்டுல ஒரு வக்கீல் கேட்டாராம். 'வேணாம்யா! நான் செஞ்ச தப்புக்கு ஜெயிலுக்குப் போறேன்'னு போயிட்டானாம்.''

''குடி கெட்டுச்சு போ... அவ்ம் நமக்கு நாமம் போட்டுட்டாம்யா... நம்மகிட்ட சிக்காமத் தப்பிக்கத் தந்திரமா உள்ள போயிட்டான்... இனி அவனைக் கைவைக்க முடியாது... ஒடனே அல்லியானையாவது புடிச்சிறணும். கிளம்புங்க... நாம அவனைத்தாம் தேடுதோம்னு யாருக்கும் தெரியக்கூடாது. சாராய கேஸ் புடிக்கப் போறமாதிரி போவணும்...''

அல்லியானைத் தேடி அலைந்தனர். ஊஹூம்... பிரயோஜனம் இல்லை. 'எப்படியோ விஷயம் தெரிஞ்சு, பாண்டி கூடவே போயிருப்பான்' என்ற முடிவுக்கு வந்துவிட்டனர். ஆனாலும் விடாமல் தேடினர்.

ஒரு நாள் காலை சுமார் பத்து மணிவாக்கில் தாலூகா ஸ்டேஷனில் பிரேமும் பரமசிவமும் இன்றைக்கு எங்கெங்கு போவது என்று பேசிக்கொண்டிருக்கும்போது, சற்றுமுன் பிரேம் பெயருக்கு வந்திருந்த ஒரு தபாலைக் கொண்டுவந்து கொடுத்தார் ரைட்டர். அனுப்பியவர் முகவரி தெளிவில்லாமல் இருந்தது. அதைப் பிரிக்கப்போகும் சமயத்தில், யாரும் எதிர்பாராதவிதமாய் மேல்சட்டை இல்லாத ஒருவன், தோள் துண்டைக் கக்கத்தில் இடுக்கியபடி மெள்ள வந்து, திடுதிப்பென்று பிரேமின் முன்னால் விழுந்து அவரது கால்களை இறுகப்பற்றி விசும்பி விசும்பி அழுதான். ஆள் கரேலென்று திடகாத்திரமாய் இருந்தான். மேலெல்லாம் நல்ல ரோமக்கட்டு.

''ஏய்... யார்ல நீ... என்ன வேணும் ஒனக்கு..?''

கிடந்தவன் பதில் பேசாமல் தன் இடுப்பிலிருந்த ஒரு முழ நீளத்திலிருந்த உறைபோட்ட பிச்சுவா கத்தியை பிரேமின் காலடியில் எடுத்து வைத்தான். வார்த்தை வராமல் விம்மினான்.

''யாருவே நீ?''

''நாந்தாம்யா அல்லியான்...''

கான்ஸ்டபிள் பரமசிவத்தின் கை, தன் இடுப்பில் சொருகியிருந்த ரிவால்வர் அருகில் போனது. ஸ்டேஷனே ஸ்தம்பித்தது. ''உங்ககிட்ட தனியா பேசணும்யா...'' பிரேம் ஸ்டேஷனில் இருந்தவர்களை ஏறிட்டார். பரமசிவத்தைத் தவிர, எல்லோரும் வெளியில் போனதும் வாய்விட்டு அழுதான் அல்லியான்.

''நான் மோசம் போயிட்டேன்யா, மோசம் போயிட்டேன்! ஐயா, இத்தனை வருஷமும் பாண்டிக்கு எல்லா ஒதவியும் செஞ்சேன். கஷ்டப்படுத பல பேருக்குக் கொள்ளையடிச்சதைக் குடுத்திடுதானேன்னு அவனை எங்கூடப் பொறந்தவனா நெனச்சேன்... போன மாசம் ஒரு நாள் வந்தான். அவனை ராத்திரி என் வீட்டுல தங்க வெச்சுட்டு, அவன் சொன்ன ஒரு எடத்துக்குப் போயிட்டு விடிஞ்சு வந்தேன்...'' மீண்டும் தேம்பினான்.

''அன்னிக்கு ராத்திரி அடைக்கலம் கொடுத்த எம்பொஞ்சாதியைப் பலவந்தப்படுத்திக் கெடுத்துட்டுப் போயிட்டானய்யா...'' கதறினான்.

''இப்படி ஒரு காரியத்தை அவம் இதுவரைக்கும் வேற எங்கேயும்

இருக்காம்னு எங்ககிட்டகூடச் சொன்னதில்ல... ஒரு மாசமா அவனை ஊர் ஊராத் தேடி அலையுதேன்... அவன் நெஞ்சை வகுந்து, ரத்தத்தை எடுத்து அதை எம்பொஞ்சாதி நெத்தியில பொட்டு வெக்கிதேம்னு சத்தியம் பண்ணியிருக்கேம்யா... அவனைக் கொல்லாம என் ஆவி அடங்காதுய்யா...'' ஆவேசமாய் பிரேம்குமாரின் காலடியில் கிடந்த தனது பிச்சுவாவை எடுத்துத் தனது மார்பில் கோடு போட்டது போலக் கீறி, ரத்தத்தில் அடித்துச் சத்தியம் செய்தான்.

மௌனமாய் இருந்த பிரேம், அல்லியானைத் தொட்டுச் சாந்தப்படுத்தினார். ''நீ அழுவாதல... அவனை மட்டும் பிடிக்க நீ உதவி செய்... அது போதும்... மிச்சத்தை நாங்க பாத்துக்கிடுதோம்...''

''நான் இன்னும் உசிரைச் சொமக்குறதே, அவனைக் கொல்லத்தாம்யா... நான் விடமாட்டேம்யா...'' அவனது கண்கள் ரத்தச் சிவப்பாயிருந்தன.

''இது யாருக்குமே தெரியாதுய்யா... தெரிஞ்சா நானும் எம்பொஞ்சாதியும் நாண்டுக்கிடுவோம்யா... எங்க பக்கம் உசிரைக் காட்டிலும் மானம்தாம்யா பெரிசு...''

''சரி, யாருக்குமே தெரியாது... நம்பு... நாளைக் காலையில வந்து என்னைப் பாரு...'' அல்லியானை அனுப்பிவைத்த பிரேம்குமாரின் மனதில் நம்பிக்கை கரைபுரண்டது.

''பரமசிவம், பாண்டிக்கு முடிவு நெருங்குது... அதுக்கு இவந்தான் நமக்குச் சரியான ஆளு...'' என்றபடி, கையிலிருந்த தபாலைப் பிரித்தார் பிரேம். அது ஒரு மொட்டைக் கடுதாசி. என்றாலும், அதிலிருந்த விஷயமும் பிரேம்குமாரைப் பரபரப்படைய வைத்தது!

திரும்பத் திரும்ப அதை வாசித்தார். இருப்புக் கொள்ளவில்லை. எஸ்.பி-யின் கேம்ப் ஆபீஸுக்கு விரைந்தார்.

''சார், நாளைக்கு ராத்திரி ஏழு மணிக்குப் பாண்டி 'ஆலந்தா'ங்கற கிராமத்துக்கு வரப்போறானாம்... அங்க அவம் பெரியம்மாக்காரி இருக்காளாம்... கோழியடிச்சுச் சாப்பாடு ரெடிபண்ணிவைக்கச் சொல்லி அவளுக்குத் தகவல் அனுப்பியிருக்கானாம்...''

எஸ்.பி. இடைமறித்தார். ''இஸிட் ட்ரூ..? யாராவது சும்மா நம்மை அலைக்கழிக்கணும்னு 'மிஸ்கைட்' பண்ணியிருக்கப்போறானுக...''

''இல்ல சார்... நீங்களே படிச்சுப் பாருங்க...'' - கடிதத்தை வாசித்த எஸ்.பி., சற்று நேரம் யோசித்தார்.

''யெஸ்... நல்லவேளை... ஒரு நாள் அவகாசம் இருக்கு... இப்ப என்ன செய்யணும் பிரேம்...?''

''நாளைக்கி மதியம் மூணு மணிக்கே நாங்க ரெண்டு, மூணுபேரு மட்டும் அந்த ஊருக்குள்ள போயி, அவம் வரப்போற வீட்டைக் கண்காணிக்குதோம். அந்த வீட்டுக்கு வந்து போற யாராயிருந்தாலும் ஃபாலோ பண்ணுதோம்... அவம் வந்திட்டு தப்பிப் போற மாதிரி தெரிஞ்சா சுட்டுப்பிடுதோம்யா...''

''ஜாக்கிரதை... முடிஞ்சவரைக்கும் அவனை உயிரோடப் பிடிக்கணும்... அதுசரி... ரகசியமா ஒரு கிராமத்துக்குள்ள போயி எப்படி கண்காணிப்பீங்க?'' - எஸ்.பி. புருவம் நெரித்தார்.

''வழக்கம் போல 'மாடு வாங்க வந்தோம்'னு சொல்லிப்பிடுதோம் சார்...''



பார்த்ததுமே, 'இது அசலூரு காக்காயாத் தெரியுதே... என்ன சோலியா இந்தப் பக்கமா திரியுது?'னு யோசிச்சுடுவானுக... காரியம் கெட்டுப்போகும்...'' ஆழ்ந்து யோசித்த எஸ்.பி., திடீரென ஆர்.டி.ஓ-வின் தொலைபேசி எண்களைச் சுழற்றினார்.

''ஒண்ணுமில்ல சார்... ஒரு சின்ன ஆப்ளிகேஷன். தூத்துக்குடியில இருந்து வல்லநாடு போற வழியில 'ஆலந்தா'ன்னு ஒரு சின்னக் கிராமம் இருக்கு... அந்த ஊர் பொதுமக்கள்கிட்ட இருந்து 'கிரீவென்ஸ்' பெட்டிஷன் ஏதாச்சும் கலெக்டருக்கு வந்திருக்கானு பார்த்துச்சொல்ல முடியுமா? ரொம்ப நாளைக்கு முன்னாடி வந்திருந்தாலும் பரவாயில்ல...''

''ஐந்து நிமிஷத்துல பார்த்து, நானே உங்களுக்கு போன் பண்ணுதேன்...''

'இவர் எதுக்குப் பழைய பெட்டிஷன்களைக் கேக்குதாரு?' - யோசித்தார் பிரேம்.

'எப்போது போன் மணி சிணுங்கும்?' என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தபோதே, ஆர்.டி.ஓ. லைனில் வந்தார்.

''ஏழெட்டு பெட்டிஷன்ஸ் இருக்கு சார்... எல்லாம் 'காலனி வீடு வேணும்... சமுதாயக் கெணறு வெட்டித் தரணும்... சாக்கடை வசதி வேணும்'னு கேட்டு வரும் வழக்கமான பெட்டிஷன்ஸ்தான்... ஏன் சார்... என்ன விஷயம்? பெட்டிஷன் குடுத்த பயலுகள லாக்கப்ல தள்ளி, முட்டிக்கு முட்டித் தட்டப்போறீங்களா?'' - ஆர்.டி.ஓ. தமாஷாய்க் கேட்டார்.

''அப்படி ஒரு உத்தரவு மேலேருந்து வந்தா, அதையும் செய்யத்தானே இருக்கோம்? என்ன சொல்லுதிக?'' வாய்விட்டுச் சிரித்த எஸ்.பி., ''எதுக்காகன்னு ரெண்டு நாள்ல விவரமா சொல்லுதேன்... நீங்க நாளைக் காலை பத்து மணிக்கு உங்க ரெவின்யூ டிபார்ட்மெண்ட் ஜீப்பை எங்க ஸ்டேஷனுக்கு அனுப்பி வைங்க... வழக்கமா அதை ஓட்டுற டிரைவரையே அனுப்புங்க... மறக்காம அந்த பெட்டிஷன்ஸ் எல்லாத்தையும் ஒரு ஃபைல்ல போட்டுக் குடுத்தனுப்புங்க...''

போனை வைத்ததும் எஸ்.பி. லேசாகப் புன்னகைத்தபடி இன்ஸ்பெக்டர் ஜனகரத்தினத்தையும் கான்ஸ்டபிள் பரமசிவத்தையும் கூப்பிட்டார்.

பிரேமுக்குக் குழப்பமாயிருந்தது.

''நாளைக் காலை ரெவின்யூ டிபார்ட்மெண்ட் ஜீப் வரும். இன்ஸ்பெக்டர் ஜனகரத்தினம், நீங்கதான் ஸ்பெஷல் தாசில்தார்! பிரேம், நீதான் ரெவின்யூ இன்ஸ்பெக்டர்! பரமசிவம், நீதான் தாசில்தாரோட டவாலி! இன்னும் ரெண்டு கான்ஸ்டபிள்களை உங்களுக்கு எடுபிடி வேலை பார்க்க வந்த வேற ஊர் தலையாரிகள் மாதிரி ஜீப்புல ஏத்திக்குங்க... பெட்டிஷன்களோட இறங்கி, அதை விசாரிக்க கலெக்டர் அனுப்பினதா சொல்லிப் பேச்சுக் குடுத்துக்கிட்டே இருங்க... இருட்டத் தொடங்கும் நேரத்துல ஒரு பஸ் நெறைய ரிசர்வ் டீம் வந்து அந்த ஊரையே ரவுண்ட் பண்ணி மூவ்வாகி ஊருக்குள்ள வரும். அதுக்குள்ள அவன் தப்பிச்சு ஓடுனாம்னா, 'ஃபயர் ஓபன்' பண்ணிடுங்க... பிஸ்டலோ, ரிவால்வரோ 'லாங் ரேஞ்ச்' கவர் பண்ணாது. த்ரீ நாட் த்ரீ ரைஃபிள்களை லோட் பண்ணி வெச்சுக்கங்க... புரிஞ்சதா?''

பிரேமுக்கும் இன்ஸ்பெக்டர் ஜனகரத்தினத்துக்கும் தலைகால் புரியவில்லை. வெளியில் வந்து, ''ஐயாவுக்கு என்னா மூளைவேய்... சும்மாவா! ஐ.பி.எஸ். படிச்சவருல்லா...'' சிலாகித்து நடந்தார் இன்ஸ்பெக்டர்.

நின்றதும் ஸ்டேஷனே பரபரத்தது. தாசில்தாருக்கு ஓட்டும் டிரைவரே வந்திருந்தார். சிறிது நேரத்தில் எஸ்.பி-யும் வந்துவிட்டார். இன்ஸ்பெக்டர் ஜனகரத்தினம், பிரேம், கான்ஸ்டபிள் பரமசிவம் மற்றும் இரண்டு கான்ஸ்டபிள்கள் வரிசையாய் வந்து நின்றனர். தாசில்தார், ரெவின்யூ இன்ஸ்பெக்டர், டவாலி மற்றும் தலையாரிகள் வேஷம் கனகச்சிதமாயிருந்தது!

''வெரிகுட்... அங்க மதியம் ரெண்டு மூணு மணிக்குப் போய்ச் சேர்ற மாதிரி கிளம்புங்க... மறக்காம 'ரைஃபிளை' எடுத்துக்குங்க... இங்கருந்து பஸ்ல வர்ற ரிசர்வ் பார்ட்டியை டைம் பார்த்து நானே கிளம்பச் சொல்றேன்... கேர்ஃபுல்லா டீல் பண்ணணும், தெரிஞ்சுதா? ஆல் த பெஸ்ட்...''

''யெஸ் சார்...'' 'தாசில்தாரிலிருந்து தலையாரிகள் வரைக்கும்' விறைப்பாய் நின்று சல்யூட் அடித்தனர். எஸ்.பி. போனதும் எல்லோரும் வாசலுக்கு வெளியே ஜீப் அருகே வந்தனர். பெருமூச்சு விட்டார் இன்ஸ்பெக்டர், ''ம்... இன்ஸ்பெக்டர் ஆனதுக்குப் பேசாம நெஜ தாசில்தாராவே போயிருக்கலாம்டே... நல்ல வருமானம்...''

உடனே கான்ஸ்டபிள்களில் ஒருத்தர், ''இப்பம் நாங்களும் தலையாரியா போயிருக்கலாம்னுதாம்யா நெனைக்கோம்..'' என்றதும், எல்லோரும் சிரித்தனர்.

ஜீப் டிரைவர் தர்மசங்கடத்துடன் நெளிந்தார். பிரேம் ஸ்டேஷனுக்குள்ளிருந்த 'த்ரீ நாட் த்ரீ' ரைஃபிள்களை எடுத்து வந்து ஜீப்பின் அடியில் விரிப்பை விலக்கி, அடுக்கி வெளியில் தெரியாமல் மூடிக்கொண்டிருந்தார்.

''கும்பிடுதேம்யா...'' – திரும்பினார். அல்லியான் நின்றுகொண் டிருந்தான்!

''ஐயா, இன்னிக்கு வரச்சொன்னீக...''

''வால... வா, நல்ல நேரத்துல வந்தே... ஆலந்தான்னு ஒரு ஊரு இருக்காலே, தூத்துக்குடி பக்கம்?''

''ஆமாய்யா... அது பாண்டியோட பெரியம்மாக்காரி வாக்கப்பட்ட ஊருல்லா...''

மௌனமாய் புன்னகைத்தார் பிரேம், ''இன்னிக்கு உன் எதிரி, அதாம்ல 'புள்ளிக்காரன்' அங்க வரானாம்... இன்னிக்கு எப்பிடியும் ஆளைக் கொண்டாந்திருவோம்... அதுக்குத்தாம்ல இந்த வேஷம்... அவனை அடையாளங் காட்ட நீயும் வர்றியால...?''

''வர்றேம்யா...'' – விழிகள் பளிச்சிடத் தலையாட்டினான்.

''செத்த இரு... இன்ஸ்பெக்டர்கிட்ட கேட்டுக்கிடுதேன்...''

''ஐயையோ, எஸ்.பி-கிட்டே கேட்கணும். வெளியாளை கூப்பிட்டுப் போயி ஒண்ணு கெடக்க ஒண்ணு ஆச்சுன்னா என் பொழப்புக்கு பொங்கல் வெச்சுடுவானுக... வேணாம்...''

இன்ஸ்பெக்டரின் முகத்தைப் பார்த்ததுமே அல்லியானுக்குப் புரிந்து போனது. இடுப்பிலிருந்த தன் நீளமான பிச்சுவா கத்தியை உருவி, ''ஐயா, அவனை என் கத்தியாலதாம்யா மடக்க முடியும். நானும் கூட வருதேன்யா'' – கெஞ்சினான்.



உங்கத்தி பெரிசா? இல்லே துப்பாக்கி பெரிசான்னு ராத்திரி தெரிஞ்சு போவும்ல...''

''அதையும் பார்த்திடுவோம்யா... தப்பிக்க விட்டுராதீங்கய்யா. கொஞ்சம் அசந்தாலும் ஒங்களப் போட்டுத் தள்ளிடுவாம்...''

''நாளைக்கு வந்து பாருல அவனை...'' பிரேம் அல்லியானை அனுப்பி வைத்தார்.

மெயின் ரோட்டிலிருந்து விலகிப் பிரியும் சாலையில் உள்ளடங்கி இருந்தது அந்தக் கிராமம். ஊரை அடுத்து நல்ல மேடு. சுற்றிலும் கண்காணித்து நிற்பது போல் வரிசையாய் கரும் பனைகள் நின்றன.

ரெவின்யூ டிபார்ட்மெண்ட் ஜீப் அந்தக் கிராமத்துக்குள் நுழைந்தபோது ஊர் மந்தையில் திரிந்த நஞ்சான்குஞ்சான்களெல்லாம் ''ஊசி போட வந்திருக்கானுகல... ஓடுங்க...'' உயிரை வெறுத்துச் சிதறின!

ஆணும் பெண்ணுமாய் அங்கங்கு நின்று பார்த்தனர். ஃபைல்களுடன் தாசில்தாராய் இறங்கிய இன்ஸ்பெக்டர், ''கிட்ட வாங்கலே... கலெக்டருக்கு மனுமேல மனு போ்டுதிக... விசாரிக்க வந்தா வெலகி வெலகி நிக்குதிக! ஒரு பயலுகளுக்கும் வீடு வேணாமா?''

ஆர்வமாய் கூட்டம் நெருங்கி வந்தது.

''ஐயா, ரொம்பக் கஷ்டப்படுதோம்யா. ஆட்டு லோனு குடுங்கய்யா...''

''மேலத்தெருவுல தண்ணியெடுக்க விடமாட்டேங்காக... எங்க ஆளுகளுக்குத் தனியா கெணறு வெட்டிக் குடுக்கணும்யா...''

''ரெண்டு நாளைக்குமின்ன நான் சாதி சர்டிபிகேட் வாங்கப் போனப்ப வேற ஒரு தாசில்தாருல்லா இருந்தாரு... இவுக புதுசாவுலா இருக்காக'' என்றான் கூட்டத்துக்குள் இருந்த இளைஞன் ஒருத்தன்.

இன்ஸ்பெக்டருக்குக் கெதக்கென்றது.

''இவரு ஸ்பெஷல் தாசில்தாரு. அவரைவிடப் பெரிய அதிகாரி. உடனே நடவடிக்கை எடுக்கணும்னு கலெக்டரே அனுப்பிருக்காக'' என்றார் பிரேம்.

டிரைவரையும் ஜீப்பையும் அடையாளம் கண்டு ''இருக்கும்... இருக்கும்'' என்ற முடிவுக்கு வந்துவிட்டனர்.

''ஏய்... ஏய்... ஆளாளுக்குப் பேசாத... ஒவ்வொருத்தனா சொல்லு'' என்று குறித்துக்கொண்டிருந்தார் 'தாசில்தார்'(!)... மெள்ள பொழுது சாய்ந்து கொண்டிருந்தது.

''சாக்கடை வசதி வேணுமின்னு மனுப்போடுதிக. அவசியமானு பாப்போம்'' என்றபடி ஊருக்குள் கிழவியின் வீட்டைத் தேடிக் கிளம்பினர் பிரேமும் பரமசிவமும். ஒதுக்குப்புறமான ஒரு குடிசையின் வாசலில் கோழி இறகுகள் கிடந்தன. கமகமவென்று கோழிக்குழம்பு வாசம் மூக்கைத் துளைத்தது. பிரேம் வாசலுக்குள் லேசாய் தலையை நீட்டி ''என்னா கெழவி... சோறு,கொழம்பு ரெடியா? பாண்டிய வரச்சொல்லவா?'' என்றார் மெல்லிய குரலில்.

''அதாருல...?'' என்றபடி கண்களை இடுக்கிப் பார்த்தாள் கிழவி.

''எல்லாம் ஒந்தாயிபுள்ளதாம்...''

''பொழுது விழுந்தா இந்தக் கண்ணுவேற தெரியமாட்டேங்கு. ஒரு நாளும் வராத மவன் இன்னிக்கின்னு 'சாப்பிட வருதேன்'னு சொல்லிவிட்டிருக்காம். அவனைப் பாத்துப் பல வருஷம் ஆச்சி.

மெனக்கெட்டு நிக்கானுகல. இவனுக போனதும் வரச் சொல்லுங்கல...''

பிரேமுக்கும் பரமசிவத்துக்கும் உற்சாகம் பொங்கியது. எந்த நேரமும் பாண்டி வருவான் என்ற படபடப்பு... சற்றுத் தள்ளிப்போய் மறைவாய் உட்கார்ந்து கிழவியின் வீட்டையே கண்காணித்தனர்.

அடிவானம் சிவந்து அஸ்தமனத்துக்குச் சூரியன் தயாராகிக் கொண்டிருந்தது. மந்தையில் வளவளவென்று பேசிக் கூட்டத்தைச் சமாளித்துக்கொண்டேயிருந்தார் தாசில்தார் வேஷத்திலிருந்த இன்ஸ்பெக்டர்.

நேர் எதிரே மேட்டில் வரிசையாய் நிற்கும் பனங்காட்டுக்குள்ளிருந்து வந்தான் பாண்டி. ஊருக்குள் ஜீப் நிற்பதையும் ஜனங்கள் அதைச் சுற்றி நிற்பதையும் தூரத்திலிருந்தே பார்த்தான். வந்திருப்பவர்கள் போலீஸார் இல்லை என்று நினைத்தான்.

'எப்படியும் கொஞ்ச நேரத்தில் கிளம்பிவிடுவார்கள். யார் கண்ணிலும் படவேண்டாம்' என்று பனை மரத்தினடியில் நின்றுகொண்டேயிருந்தான். ஜீப் கிளம்பிப் போவதாய் தெரியவில்லை. பசி குடலைப் பிசைந்தது.

'யார் கண்ணிலும் படாமல் கிழவி வீட்டுக்குப் போய்டலாமா?' யோசித்துக்கொண்டிருக்கும்போதே, மெயின்ரோட்டிலிருந்து திரும்பிய ஒரு பஸ், அந்தக் கிராமத்தை நோக்கி வருவது தெரிந்தது.

'பஸ் வராத ஊராச்சே! புதுசா விட்டுருக்கானுகளோ?' மேட்டிலிருந்து பார்த்துக்கொண்டிருக்கும்போதே ஊருக்கு வெளியே பஸ் நின்றது. உள்ளிருந்து 'மளார்', 'மளார்' என்று ரிசர்வ் போலீஸார் துப்பாக்கிகளுடன் குதித்து ஊரைச் சுற்றி வளைப்பது தெரிந்தது.

'சே... மோசம் போகத் தெரிஞ்சமே...' இரண்டு எட்டுப் பின்வாங்கினான். அதற்குள் பாண்டியின் இடது தோளில் ஒரு முரட்டுக்கரம் விழுந்தது. திடுக்கிட்டுத் திரும்பினான். நின்றது அல்லியான்!

**வ**ந்த வேகத்தில் பாண்டியின் இடுப்புக்குக் கீழாய்க் கைகோத்து அலாக்காகத் தூக்கிக் கரகரவென்று சுற்றி இறக்கினான். அவனுக்கு உற்சாகம் கூடினால் இப்படித்தான்!

''விடுல.. அங்க பாரு...''

எதிரே ஊரைச் சுற்றிவளைக்கும் போலீஸை நோக்கிக் கை நீட்டினான் பாண்டி. ''அதைச் சொல்லத்தாம்ல ஓடியாந்தேன். நல்லவேளை... நீ போவல.. ஜீப்ல வந்து வேஷங்கட்டி நிக்கவனுக அம்புட்டுமே போலீஸ்தாம்ல. ஒன்னைப் புடிக்கத்தாம்ல வந்திருக்கானுக..'' என்றவன் ''செறுக்கிபுள்ளைக என்னை நம்பிட்டானுகல. நீ சொன்னபடிக்கு அப்படியே சொன்னேன். ஒன்னைக் கொல்லத்தாம் நானும் அலையுதேம்னேன்... நம்பிட்டானுக. இனி எனக்குத் தெரியாம ஒன்னைத் தேடி ஒரு பிட்டுக்கூட நவரமாட்டானுக. இன்னிக்குக்கூட நானும் அந்த ஜீப்லயே வந்திருப்பேன். கடைசி நேரத்ல இன்ஸ்பெக்டர் கெடுத்துப்புட்டான். எங்க நீ



நடையுமா வந்தேன்!'' மூச்சு விடாமல் சொல்லி முடித்தான் அல்லியான்.

''இப்படிப் படை படையா வருவானுகன்னு நெனச்சுக்கூடப் பார்க்கலல.. நல்லவேளை... வம்பா போயி சிக்கத் தெரிஞ்சேன். இனி இந்தப் பக்கம் நடமாடப்பிடாது. பெரிய ஆபத்து வந்து தப்பிச்சேம்னா ஒன் கோயில் பிடி மண்ணை எடுத்து அதை நான் இருக்கிற இடத்துல வெச்சுக் கும்பிடுதேம்னு நம்ம ஊரு சுடலைமாடஞ் சாமிக்கிட்ட வேண்டியிருந்தேன்ல. விடியறதுக்குள்ள நேரா சீவலப்பேரிக்குப் போய்க் கோயில் மண்ணை எடுத்திட்டுப் போயிடுதேன்.''

இருவரும் நிலா வெளிச்சத்தில் அடர்ந்த பனங்காடுகளுக்குள் புகுந்து வேகமாக நடந்தனர்.

சற்று நேரம் ஊரைச் சுற்றி வளையம் அமைத்து நின்ற போலீஸ், ஊருக்குள் முன்னேறியது. ரிசர்வ் பார்ட்டியைப் பார்த்ததுமே மனு வாங்கிக்கொண்டிருந்த தாசில்தார் சடக்கென்று எழுந்து இன்ஸ்பெக்டர் ஆனார். ''இங்கதாம் ஒரு வீட்டுக்குள்ள ஒளிஞ்சிருப்பான். உம்.. வீடு வீடாத் தேடுங்க. எவனாச்சிலும் ஓடுனா சுடுங்க.''

அருகில் நின்ற தலையாரிகள் கான்ஸ்டபிள்களாகி வீடு வீடாய் நுழைந்து தேடினர். மனு கொடுத்துக்கொண்டிருந்தவர்களுக்கு என்ன நடக்கிறது என்றே புரியவில்லை. பிரேமும் பரமசிவமும் கிழவியின் குடிசைக்கு விரைந்தனர்.

''ஏ கிழவி.. வெளியே வா. பாண்டி எங்கே இருக்காம்னு சொல்லுதியா இல்லையா?''

''அது எவம்ல? எங்கே வந்து யாரைக் கேக்கிக? கோட்டியால புடிச்சிருக்கு ஒங்களுக்கு?''

''ஏட்டி... எங்களுக்கு எல்லாமே தெரியும். சொல்லு.. இல்ல, உன்னைச் சுட்டுப்புடுவோம்.''

''ஏட்டிகீட்டினு மருவாதை இல்லாமப் பேசினே, மானம் கெட்டுப்போவும்ல. சுட்டுப்புடுவானாம், சுட்டு! எங்கே.. சுடுல பார்ப்போம்? ஆளு நெகார் தெரியாமப் பேசாதிங்கல. உங்க துப்பாக்கிக்குப் பயந்தவ இல்லலே இந்தக் கொண்டையங்கோட்டை மறத்தி. போங்கல போங்க... போக்கத்த பயலுகளா.''

ஆத்திரத்துடன் கிழவியை நோக்கிப் பாய்ந்த ஒரு கான்ஸ்டபிள், பிரேம் முறைத்ததைக் கவனித்து அப்படியே பின்வாங்கி நின்றார். ''சரி... பெரியம்மா... கோவிக்காத. வந்து ஐயாகிட்டே சொல்லிட்டுப் போயிடு...'' ''எங்க வேணும்னாலும் சொல்லுதேன்... வாங்கல...'' மந்தைக்கு வந்தாள் கிழவி. ஊருக்குள் அங்கங்கு சிக்கியவர்களை ''எங்கல பாண்டி? சொல்லுங்கல'' என்று அடி நிமிர்த்திவிட்டனர்.

''பாண்டி யாருனே தெரியாதுய்யா...''

''சாமி சத்தியமா தெரியாதுய்யா...''

''என்னை விட்டுடுங்கய்யா.. அடிக்காதிங்கய்யா.. நான் புள்ள குட்டிக்காரன்ய்யா'' என்ற ஓலம் கிராமம் முச்சூடும் பரவலாக ஒலித்தது. ஊர் முழுக்கச் சலித்து எடுத்த போலீஸ், கிழவியுடன் நாலைந்து பேரை ஜீப்பில் அள்ளிப் போட்டுக்கொண்டு திரும்பியது.

''மொதல்லயே நான் நினைச்சேன்... இது ராங் இன்ஃபர்மேஷனாய் இருக்குமோனு'' என்றார் எஸ்.பி.!

குழம்பு வெச்சிட்டு இருந்தா. நான் போய் 'சாப்பாடு ரெடியா? பாண்டியை வரச்சொல்லவா?'னு கேட்டப்ப, 'ஜீப் போனதும் அவனை வரச் சொல்லுங்கல'னு சொன்னா சார். இப்பம் எதுவுமே தெரியாதுங்கறா."

எஸ்.பி-யால் பிரேமின் பேச்சை ஒப்புக்கொள்ள முடியவில்லை.

தகவல் ஏதும் தேறாத நிலையில் கிழவி உட்பட பிடித்துவந்த எல்லோரையும் "போய்த் தொலைங்கல" என்று அனுப்பி வைத்தனர்.

தினமும் காலையில் பிரேமையும் பரமசிவத்தையும் சந்தித்து அவர்களுடனேயே இருட்டும் வரைக்கும் பாண்டியைத் தேடித் திரிவது போல் நடிப்பது அல்லியானின் அன்றாட வழக்கமாகிவிட்டது. "நாளைக்கு சீவலப்பேரி ஆத்துக்குப் பாண்டி சாராயம் குடிக்க வருவாம்னு பேசிக்கிடுதானுகய்யா" என்பான்.

மறுநாள் அதிகாலையிலேயே ஆற்றுக்குள் சாராய வியாபாரி ஒருவரின் ஒத்தாசையுடன் சாராயம் காய்ச்சிக்கொண்டிருப்பார் பிரேம். பரமசிவமும் அல்லியானும் சாராயம் விற்பது போல பாண்டியின் நடமாட்டம் தெரிகிறதா என்று கண்காணித்துக் கொண்டிருப்பார்கள்.

"அவம் வந்தவுடன் இவம்தானு சொல்லுதேன். சுட்டுப்புடுங்கய்யா..." அல்லியான் மனசுக்குள் சிரித்துக்கொள்வான். அந்தச் சாராய உலையைச் சுற்றி பத்துப் பன்னிரண்டு போலீஸ்காரர்கள் துப்பாக்கிகளுடன் வேலிக்கருவைப் புதருக்குள் இருட்டும் வரைக்கும் கஞ்சி தண்ணியில்லாமல் பதுங்கியிருப்பார்கள். பின்னர் நொந்துபோய்த் திரும்புவார்கள்.

ஒரு நாள் இரவு பத்து மணி சுமாருக்குப் பாண்டியைத் தேடி அலைந்துவிட்டு, தாலுகா ஸ்டேஷனுக்கு வந்தார் பிரேம். உள்ளிருந்த சீனியர் சப்-இன்ஸ்பெக்டர் பர்னபாஸ்கர் கிளம்பி வாசலுக்கு வந்தார். இவர் ஏற்கெனவே கொஞ்ச காலம் ராணுவத்தில் இருந்துவிட்டு வந்து சப்-இன்ஸ்பெக்டர் ஆனவர். கம்பீரமான ஆள். ஒரு முடிவு எடுத்தால் லேசில் பின்வாங்காதவர்.

"பாண்டியைப் புடிக்கிறதுல ஒரு முன்னேற்றமும் இல்லை போலிருக்கு... அல்லியான் என்ன சொல்லுதான்?" வாசலில் நின்ற விளக்குக் கம்பத்தின் அருகே வந்தார் பர்னபாஸ்கர்.

"தன் பெரியம்மாக்காரியப் புடிச்சிட்டு வந்ததோட ஊரையே அடிச்சு நொறுக்கிட்டோம்னு நம்மமேல பாண்டி ரொம்பக் கோபமாய் இருக்கிறதா ஊருக்குள்ள பேசிக்கிடுதானுகளாம். ஜாக்கிரதையா இருக்கணும்னு சொல்லுதான். அவன் சொல்லுறத நம்பவும் முடியல... நம்பாம இருக்கவும் முடியல. அவனும் 'பாண்டி என் கையில சிக்கட்டும்'னு வன்மத்தோட எங்க கூடயே அலையுதான்... பாவம்!" கொஞ்ச நேரம் ஊர் நடப்புகளைச் சாவகாசமாய்ப் பேசிக்கொண்டே இருந்தனர்.

அப்போது எதிரே இருந்த வேலிக்கருவைப் புதருக்குள் இருந்து திடீரென்று பிரேமையும் பர்னபாஸ்கரையும் நோக்கி 'தட தட தட' என்ற ஓசையுடன் துப்பாக்கி ரவைகள் சீறிப் பாய்ந்து, இரவின் அமைதியைக் கிழித்தன. தரையில் விழுந்து, உருண்டுகொண்டே ஸ்டேஷனுக்குள் பாய்ந்து கதவை மூடினர். பூட்டிய கதவிலும் சரமாரியாய் ரவைகள் பாய்ந்து துளைத்தன!

அடுக்கப்பட்டிருந்த த்ரீ நாட் த்ரீ ரைஃபிள்களில் ஒன்றை அவசரமாக எடுத்து லோட் பண்ணினார் பிரேம். "வேணாம் பிரேம். சுட்டது சாதாரண துப்பாக்கி இல்ல. மிலிட்டரியில யூஸ் பண்ற எல்.எம்.ஜி. 'மெஷின் கன்'



ஸ்டேஷனுக்குள் லைட்டை அணைத்துவிட்டு, சாத்தியிருந்த ஜன்னல் கதவை நீம்பலாய்த் திறந்து பார்த்தனர். நெடுநெடுவென்று வளர்த்தியான ஒரு உருவம் சீமைக்கருவைப் புதருக்குள்ளிருந்து ஒரு எல்.எம்.ஜி. மெஷின் கன்னைத் தோளில் தூக்கிக்கொண்டு இருட்டுக்குள் ஓடுவதைப் பார்த்து ஸ்தம்பித்தனர்.

"பாண்டியா இருக்குமோ சார்?"

"தெரியல! மொதல்ல எஸ்.பி. கேம்ப் ஆபீஸை அலர்ட் பண்ணணும்..." பர்னபாஸ்கர் தொலைபேசியைச் சுழற்றினார். லைன் கிடைத்தபாடில்லை. அதற்குள் எப்படியோ விஷயம் தெரிந்து சைரன் அலறியபடி எஸ்.பி-யின் கார் ஸ்டேஷன் வாசலில் வந்து கிறீச்சிட்டு நின்றது. தொடர்ந்து இரண்டு போலீஸ் வேன்களில் துப்பாக்கிகளுடன் குதித்து நின்றனர் போலீஸார். இறங்கிய வேகத்தில் ஸ்டேஷன் சுவரிலும் கதவுகளிலும் சரமாரியாகக் குண்டு துளைத்திருப்பதைக் கண்டு திடுக்கிட்டு, பூட்டியிருந்த கதவைப் பலமாகத் தட்டினார் எஸ்.பி.! உள்ளே விளக்குகள் எரிந்தன. உள்ளிருந்து தாழ்ப்பாளை விலக்கிக் கதவைத் திறந்தனர். பர்னபாஸ்கரும் பிரேமும் வேர்வையில் தெப்பமாய் நனைந்து நின்றனர்.

"யாருக்கும் ஒண்ணுமில்லயே?" ஸ்டேஷனுக்குள் ஓடி, ஓடிச் சுற்றிப்பார்த்த பின் நிம்மதியானார். என்ன நடந்தது என்று விளக்கினர்.

முகத்தில் முத்துமுத்தாய் அரும்பிய வேர்வையைத் துடைத்தபடி, "நிச்சயமா சுட்டது ஆர்மியில யூஸ் பண்ற எல்.எம்.ஜி-யால்தான் சார். கண்ணு மூடி தொறக்கதுக்குள்ள 'சடசட'ன்னு ரவுண்ட்ஸ் போச்சு."

"சுட்டுட்டு இருட்டுல ஓடினதப் பாத்தோம். ஆளு வளத்தியா இருந்தாம் சார். பாண்டியா இருக்குமோன்னு சந்தேகமா இருக்கு."

எஸ்.பி. முகத்தில் கலவரம் கூடியது.

"அவசரப்பட்டு வெரட்டிப் போனா நம்ம பக்கம் 'கேஷுவால்டி' நிறைய ஆகும். வெறும் 'த்ரீ நாட் த்ரீ' ரைஃபிளை வெச்சு ஃபேஸ் பண்ண முடியாது. மேல கன்சல்ட் பண்ணிட்டு யோசிக்கலாம்..." சென்னைக்கு அர்ஜண்ட் கால் புக் பண்ணினார் எஸ்.பி.!

மறுநாள் துப்பாக்கிச் சத்தம் கேட்டு அதிர்ந்து விழித்தது மணக்கரை கிராமம். லேசான தாடியுடன் வளர்த்தியாய் ஒருவன் ஆகாயத்தை நோக்கிச் சுட்டபடி சர்வசாதாரணமாய் நடந்து போனான். சில பெரிய வீடுகளை மட்டும் சுவரில் ரவைகள் தெறிக்கச் சுட்டபடி காட்டுக்குள் நடந்து மறைந்தான்.

ஆயுதம் தாங்கிய போலீஸார் சூழ்ந்திருந்த எஸ்.பி. ஆபீஸுக்கு அன்று சாயந்திரமே வேறு சில கிராமங்களிலிருந்தும் பலர் அலறிப்புடைத்து வந்தனர்.

"ஆறு ஆறரை அடி உயரம் இருக்கும்யா. இடுப்புல தேங்கா போல ரெண்டு மூணு வெடிகுண்டு தொங்குது. ஒரு சதுரப் பெட்டி முதுகுல தொங்குது. மிலிட்டரி யூனிஃபார்ம் போட்டிருக்கான். வானத்தைப் பாத்து சடசடன்னு சுடுதாம். கடைகளுக்கு முன்ன நின்னு முட்டைக் கூடையைக் கைநீட்டிக் கேக்காம். இருவது முப்பது பச்சை முட்டைகளை வொடச்சு வொடச்சு முழுங்கிட்டு, காசை அள்ளி வீசிட்டு மிச்சத் துட்டைக்கூட வாங்காமப் போயிட்டாம்யா. யார்கிட்டையும் வாய் தொறந்து பேசல. ஊரே பயந்து கெடக்குய்யா!"

காண்பித்தார்.

''இப்படியேதாம்யா இருந்திச்சு..!''

''மை காட்..! பல ஆயிரம் ரவைகள் வைக்கக்கூடிய பாக்ஸ் இது'' என்றபடி எஸ்.பி. சீரியஸ் ஆனார். அதற்குள் சென்னையிலிருந்து வந்த உயர் அதிகாரிகள் குழு, யாருக்கும் சேதமில்லாமல் எப்படி அவனை மடக்கிப் பிடிப்பதென்று விவாதித்துக் கொண்டிருந்தது.

''வேற யாரு... இது பாண்டியேதாம்ல. மிலிட்டரி துப்பாக்கியும் டிரஸ்ஸூம் இவனுக்கு எங்கிருந்துல கெடைச்சிருக்கும்? நம்மைத் தேடித்தாம்யா வந்திருப்பான்...'' துவக்கத்தில் முன்சீப்பைக் கொலைசெய்ய பாண்டியைத் தூண்டிய முக்கியஸ்தர்கள் கதிகலங்கி வெளியூர்களில் உள்ள உறவினர் வீடுகளில் தஞ்சம் புகுந்தனர்.

நெல்லை மாவட்டமே அதிர்ச்சியிலும் ஆச்சரியத்திலும் ஸ்தம்பித்திருந்தபோது திருச்சி கன்டோன்மெண்ட்டிலிருந்து ஆச்சரியமான ஒரு தகவல் கிடைத்தது. ''உங்க லிமிட்ல எல்.எம்.ஜி. மெஷின் கன்னுடன் திரிந்தவன் இங்க சரண்டர் ஆயிட்டான்'' என்ற செய்தி, நெல்லை போலீஸார் வயிற்றில் பால் வார்த்தது. அதற்குமேல் விவரம் பெற முடியவில்லை.

அவனைத் தங்களிடம் ஒப்படைக்குமாறு கேட்டு, திருச்சிக்கு விரைந்தனர் நெல்லை போலீஸார்!

**பி**ரமாண்டமான திருச்சி கன்டோன்மெண்ட் கட்டடத்தின்முன் வேன் நின்றதுமே உள்ளிருந்த போலீஸார் ஒரு முறை தங்கள் யூனிஃபார்மைச் சரிசெய்துகொண்டு இறங்கினர்.

''சே... இந்தப் பாண்டி நம்மகிட்ட சரண்டர் ஆயிருந்தாம்னா நாமே பிடிச்சதா ரெக்கார்டு பண்ணி மெடல் வாங்கியிருக்கலாம். போலீஸை மதிக்காம மிலிட்டரிக்காரங்கிட்ட வந்து சரண்டர் ஆயிருக்காம்... பாருல...'' வேனிலிருந்து தொந்தியும் தொப்பையுமாய் இறங்கிய ஏட்டையா முணுமுணுத்தார்.

''மெடல் இருக்கட்டும்யா மெடலு... மொதல்ல ஒங்க பாண்ட் ஜிப்பைப் போடுங்க. மிலிட்டரிக்காரன் முன்ன இப்படியே போயி நின்னு கேவலப்படுத்தாதீங்க...''

ஏட்டையா நெளிந்தார்.

முன்னறையில் உட்கார்ந்திருந்த ஒரு அதிகாரியிடம் எஸ்.ஐ. ஒருவர் சல்யூட் அடித்து ''சீவலப்பேரி பாண்டின்னு ஒருத்தன் உங்ககிட்ட வந்து சரண்டர் ஆயிருக்கானாமே சார்? அவம் பேர்ல ஏகப்பட்ட கேஸ் எங்க திருநெல்வேலி லிமிட்ல பெண்டிங் இருக்கு. எஸ்.பி. ஐயா உங்களைப் பாத்து..'' என்று எதையோ சொல்ல வந்தார்.

''என்ன சொல்றீங்க? அப்படி யாரும் எங்ககிட்ட சரண்டராதலயே...'' ராணுவ அதிகாரி புருவம் நெரித்தார்.

''எல்.எம்.ஜி. மெஷின் கன்னோட... திருநெல்வேலி ஜில்லா பக்கமா...''

''ஓ... அவனா... அவன் பேரு சீவலப்பேரி பாண்டி இல்ல. சடையாண்டி என்கிற சங்கரபாண்டி. அவன் சரண்டர் ஆனதும் எங்கிட்டதான் வாக்குமூலம் கொடுத்தான்.''

''பயங்கரமான ஆளு சார். எந்தப் பேர்ல இருந்தா என்ன சார்... ஒரு





வழியா சரண்டர் ஆயிட்டான். நிம்மதி. இவன் இதே திருச்சி ஜெயில்ல இருந்து ஏழு வருஷத்துக்கு முன்ன தப்பிச்சு வந்தவன் சார்... அன்னியில இருந்து இன்னிவரைக்கும் எங்களுக்குப் பொட்டுத் தூக்கம் இல்ல சார். அவனுக்கு மெஷின் கன்னும் ஒங்க யூனிஃபார்மும் எப்படி சார் கெடச்சிச்சி?..''

அதிகாரி முகம் சுளித்துக் குறுக்கிட்டார்: ''உங்களுக்குப் பைத்தியங்கியித்தியம் பிடிக்கலயே?''

''என்ன சார் சொல்லுதிக..?''

''நீங்க சொல்ற ஆள் இல்ல. இவன் பத்து நாளைக்கு முன்வரை ஜம்மு – காஷ்மீர் பார்டரில் எம்.எம்.ஜி. செக்ஷனில் டியூட்டியில் இருந்தவன். இவனோட தகப்பனார் ஒரு ரிடையர்டு கான்ஸ்டபிள். அவருக்கும்

பஞ்சாயத்துப் பண்ணின பெரியமனுஷனுங்க எல்லாம் ஒருதலைப்பட்சமா நெலத்தை எதிரிக்கு எழுதிக் குடுக்கச் சொல்லியிருக்காங்க. முடியாதுன்னுட்டு போலீஸுக்குப் போனாராம்... அங்க யாரோ ஒரு எக்ஸ்சர்வீஸ்மேன் எஸ்.ஐ-யா இருக்காராமே... இவரு போனதுமே என்ன ஏதுன்னு விசாரிக்காம 'என்னய்யா நீ... ரிடையர்டு கான்ஸ்டபிள்னா கொம்பா மொளச்சிருக்கு? உடனே அவன் பேருக்கு நெலத்தை எழுதிக் குடு. இல்ல, கேஸ் புக் பண்ணி உள்ளே தள்ளிப்பிடுவேன்'னாராம். வேற வழியில்லாம எழுதிக் குடுத்துட்டு அழுதுக்கிட்டே ஊருக்கு வந்திருக்கார். 'இங்க நமக்குச் சாப்பாட்டுக்கு விளைஞ்ச ஒரே நெலத்தை எஸ்.ஐ. புடுங்கி அந்தப் பாவிப்பயலுக்குக் குடுத்திட்டான். பஞ்சாயத்துப் பண்ணின பெரிய மனுஷனெல்லாம் அவம் பக்கமே நிக்கான். 'தெரிஞ்சதைப் பாருவேய்'னுட்டானுக. நீ இங்க இருந்தா எனக்கு இந்தக் கெதி வருமாலே..'ன்னு மிலிட்டரியில இருந்த மகனுக்கு லெட்டர் எழுதியிருக்கார். ஆத்திரத்துல ஒரு எல்.எம்.ஜி. கன்னையும் நாலு கிரனேடுகளையும் இருபதாயிரம் ரவுண்ட்ஸ் இருக்கிற பாக்ஸையும் ஒரு டிரங்க் பெட்டியில் போட்டுத் தூக்கிட்டு எப்படியோ ஸ்ரீநகர் வந்து அங்கிருந்து மாறி மாறி லாரிகளைப் பிடிச்சு நேரா அந்த எஸ்.ஐ. இருந்த ஸ்டேஷனுக்கே போயி சுட்டிருக்கான்.

அவங்க தப்பிச்சு ஒளிஞ்சிக்கிட்டதும் பஞ்சாயத்துப் பண்ணின பெரிய மனுஷங்களைத் தேடி ஊர் ஊரா போயிருக்கான். இவனுக்கு ஒருத்தரையும் அடையாளம் தெரியாதாம். அவனே வந்து சரண்டர் ஆயிட்டதால அவன் இருந்த ரெஜிமெண்டுக்கு மெஸேஜ் அனுப்பிக் கேட்டோம். 'கொஞ்சம் உணர்ச்சிவசப்படுறவன். மற்றபடி நல்லவன்தான். அவன் சர்வீஸ்ல எந்த ரிமார்க்கும் இல்லே'ன்னு வந்திருக்கு. 'பட்டாளத்தான் வீட்டுல வில்லங்கம் பண்ணினா என்ன நடக்கும்னு காமிக்க ஊருக்குள்ள போயி சுட்டேன்'ங்கிறான். இவனை எங்க மிலிட்டரி கோர்ட் விசாரிச்சு பனிஷ்மெண்ட் குடுக்கும். நீங்க போகலாம்..''

வந்தவர்கள் அங்கேயே தலையில் கைவைத்து உட்கார்ந்துவிட்டனர்.

விஷயம் கேள்விப்பட்டு திருநெல்வேலி தாலுகா நிம்மதிப் பெருமூச்சுவிட்டது. போலீஸார் மட்டும் முன்னிலும் நிம்மதியிழந்தனர்!

இந்தச் சம்பவத்துக்குப் பிறகு பாண்டியைப் பிடிப்பதில் என்னென்ன முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்ற வீக்லி ரிப்போர்ட்டை வாரா வாரம் தனக்கு அனுப்ப உத்தரவிட்டார் ஐ.ஜி.!

அல்லியானுக்கு ஸ்டேஷனை ஒட்டிய லாட்ஜில் மாத வாடகைக்கு போலீஸே ரூம் போட்டுக் கொடுத்தது. நினைத்த ஊர்களுக்கு அவன் போய்வர பஸ் பாஸ் வாங்கிக்கொடுத்திருந்தனர். தொடர்ந்து பிரேமையும் பரமசிவத்தையும் ஊர் ஊராய் அழைத்துச் சென்று பாண்டியை தேடு படலத்தில் மும்முரமாய்(!) இருந்தான் அல்லியான்!



[illegible] டைக்கானல் மலையின் பள்ளத்தாக்கில் பனிபோர்த்திச் சுருண்டு கிடக்கும் பூம்பாறை கிராமத்தின் வேலப்பர்கோயில் பின்வாசலுக்கு நேராய் வடமேற்கே அடுத்தடுத்து நிற்கும் மூன்று மலைகளுக்கு அப்பால் பள்ளத்தாக்கில் பாண்டி அண்டியிருந்த முதலாளி, ஜெரோனியம் பயிரிட்டார். அதை மேற்பார்க்க பாண்டியையும் வேலம்மாளையும் அங்கேயே தங்கச் சொன்னார். ஜன நடமாட்டமில்லாத அந்த வனாந்தரத்தில் உள்ளங்கை பள்ளம்போல் இருந்த ஓர் இடத்தின் பெருவிரல் மேடு போன்ற பாறையில் பாண்டி குடிசை போட்டான். கீழே சலசலவென்று ஒரு ஓடை ஓடிக்கொண்டிருந்தது. சீவலப்பேரியிலிருந்து கொண்டுவந்த பிடி மண்ணை வாசலுக்கு நேராய் வைத்து அதில் இடுப்புயரக் கல்லை நட்டு ஒரு கோயில் வைத்தான். கிடாய் வெட்டி தடபுடலாய் விருந்து வைத்தான். ஊர்க்காட்டில் மழை தண்ணிப் பெய்யாமல் தெற்கேயிருந்து பஞ்சம் பிழைக்க வந்திருந்தவர்கள் எல்லோரும் கூட்டங்கூட்டமாக வந்து கறிச்சோறு சாப்பிட்டார்கள்.

பாண்டியின் குடிசைக்கு முன்னால் திண்டாய் பிளந்த ஒரு பாறை நின்றது. அதில் நின்று ஏறிட்டுப் பார்த்தால் இரண்டு மைலுக்கு அப்பால் யார் வந்தாலும் துல்லியமாய்த் தெரியும். ஆள் நடமாட்டம் தெரிந்தால் பாறையில் நின்று நெற்றிக்கு நேராய் கைவைத்துப் பார்ப்பான். பக்கத்தில் இருப்பவர்களிடம் ''அதாருன்னு தெரியுதா பாருல'' என்பான். சற்று நெருங்கி வரும்வரை உற்றுப் பார்த்துவிட்டு அடையாளம் கண்டு ''இன்னார்'' என்று யாரும் சொன்னால் மற்ற வேலைகளைப் பார்ப்பான். ''சரியாத் தெரியலியே கோனாரே, புது ஆளுபோல இருக்கே'' என்றால் போதும்.. உடனே ''ஒருத்தரைப் பார்க்க வருதேம்னு சொல்லியிருந்தேன்... மறந்தே போச்சு'' என்றபடி குடிசைக்குப் பின்புறம் ஓணான் முதுகுபோல் நீண்டிருக்கும் மலையில் ஏறி எங்காவது உயரத்தில் மறைந்து நின்று, வருபவர்களின் நடமாட்டத்தைக் கண்காணிப்பான். 'ஆபத்து இல்லை' என்று உறுதியானதும்தான் இறங்கி வருவான்.

பொழுது சாயும்முன் குடிசை வாசல் எதிரே கோயிலை அடுத்த புல்மேட்டில் உட்கார்ந்திருப்பான். 'அல்லி அரசாணிமாலை', 'ஆரவல்லி சூரவல்லி' கதைகளை ஓங்கிக் குரலெடுத்துப் பாடுவான். ஒரு கையில் தடித்த புத்தகத்தைப் பிடித்து மறுகையை விரித்து உயர்த்தி இடுப்புக்கு மேலாய் கொடி அசைவது போல அசைந்து அசைந்து பாடத் தொடங்கினால் மகுடிக்குக் கட்டுப்பட்டவர்கள் போல கூலியாட்கள் வாய்பிளந்து கேட்பார்கள். சிலர் உருக்கமான கட்டத்தில் 'த்ச்சு... த்ச்சு...' என்று உச்சுக்கொட்டுவார்கள். பாண்டிக்குப் பாட்டின் வேகம் கூடும். கொஞ்ச நேரத்தில் ஒரு பெரிய சருவச்சட்டி நிறைய டீத் தண்ணி போட்டுக்கொண்டு வந்து உட்கார்ந்திருப்பவர்களுக்குப் பெரிய பெரிய சொம்பு நெறைய ஊற்றிக்கொடுப்பாள் வேலம்மாள்.

''கோனாரு பாட்டை எவண்டா கேக்குறது? இந்தக் குளுருக்கு சொம்பு நிறைய டீத்தண்ணி கெடைக்குதில்ல...'' தங்களுக்குள் சிரித்துக் கொள்வார்கள் சிலர். ராத்திரியானால் பாண்டியின் குடிசையின் வெளியே இரண்டு பக்கமும் நாய்கள் கட்டிக் கிடக்கும். தலைமாட்டில் வீச்சரிவாள் கிடக்கும். அந்தப் பாதுகாப்பான வனாந்தரத்திலும்கூட எந்நேரமும் ஆபத்தை எதிர்பார்த்தே இருந்தான். சுற்றியிருந்த விஷயந்தெரியாத கூலிக்காரர்கள் ''கோனாரே, கோனாரே'' என்று பாண்டியின்மேல் உசிரையே வைத்திருந்தனர்.

அங்கொன்றும் இங்கொன்றுமாய் குடிசை போட்டிருந்தவர்கள், இருக்கிற

பயிரிட்டனர். இதைப் பார்த்த வேலம்மாள் "நம்மளும் கொஞ்சம் காடு சேர்த்து வெவசாயம் பார்ப்போம்" என்று சதாகாலமும் புருசனை நச்சரித்தாள். ஒரு நாள் முதலாளியிடம் தயங்கித் தயங்கி "நானும் காடுவெட்டி வெவசாயம் பாக்கப் பிரியப்படுதேம்யா" என்றான்.

"நல்லா பாரு கோனாரே. சந்தோஷம். பொறம்போக்கு நெலந்தானே... பாடுபடு. ஊடமாட இந்தப் பக்கம் ஜெரோனியத்தைப் பாத்துக்க. வேற ஒருத்தனைக் காவலுக்குப் போட்டுக்கறேன்" என்று சந்தோஷப்பட்டார்.

புருஷனும் பொஞ்சாதியுமாக சுற்றியிருந்த கூலியாட்களின் ஒத்தாசையுடன் ராப்பகலாய் காடுவெட்டி நிலம் சேர்த்து பீன்ஸ் பயிரிட்டனர். பயிர் செழித்து வளர்ந்தது. "யே... யப்பா! அர்ஜுனக் கோனாரு பயிரு அமோகமாயிருக்கே" என்று சொல்லாதவர்கள் பாக்கியில்லை. பாண்டிக்கும் அவன் பொஞ்சாதிக்கும் அளவில்லாத சந்தோஷம். மறுநாள் அறுவடை செய்து குதிரைகளில் ஏற்றி பூம்பாறைக்குப் போய் விற்றுவரும் ஆசையில் எப்போது விடியுமென்று காத்திருந்தனர்.

விடிந்ததும் பயிர்களைப் பார்த்துப் பாண்டி திடுக்கிட்டான். பிணத்தைச் சுற்றி நிற்பதுபோல அங்கங்கு நின்றவர்கள் பரிதாபமாய் பாத்திகளைப் பார்த்துக்கொண்டிருந்தனர். பாத்திகளெல்லாம் ஐஸ் கட்டிகள்போல பனிபடர்ந்து மூடியிருந்தது. "இது கெட்ட சனியனாச்சே... 'கண்டப்பனி' விழுந்திருக்கு. ஒரே ராத்திரியில அம்புட்டும் அழுகிக் கருகிப்போச்சே..." எல்லோரும் பரிதாபப்பட்டனர். "நாம உப்பு விக்கப்போனா மழை பெய்யுது. உமி விக்கப்போனா காத்தடிக்கே..." வேலம்மாள் விசனப்பட்டாள்.

இனி பிழைப்புக்கு என்ன செய்வதென்று யோசித்தான் பாண்டி. அங்கிருந்து வெகுதூரம் தள்ளி விவசாயம் பார்த்தவர்களின் காரட், உருளைக்கிழங்கு ஆகியவற்றை பூம்பாறைக்குக் குதிரைகளில் கூலிக்கு ஏற்றி இறக்குவது நல்ல தொழிலாகப்பட்டது. நாலு குதிரைகள் வாங்கிக் குண்டுப்பட்டிக்கும் பூம்பாறைக்குமாய் லோடு ஏற்றி இறக்கினான். அந்தக் கரடுமுரடான பாதையில் ஒருத்தன் ஒரு குதிரை பத்தி வருவதே சிரமம். இவன் ஒரே சமயத்தில் நாலைந்து குதிரைகளில் லோடேற்றி ஐந்தடி நீளச் சாட்டைக்குச்சியுடன் அனாயாசமாய் சுழற்றி வந்து பூம்பாறையில் இறக்குவான். தினசரி நல்ல வருமானம்!

பூம்பாறை மந்தையில் நல்ல குதிரைகள் விலைக்கு வந்தால் முந்நூறு ரூபாய், முந்நூற்றைம்பது ரூபாய் என்று பேரம் நடக்கும். பாண்டிக்கும் குதிரை பிடித்துப்போனால் "ஆயிரத்து ஒண்ணு... இந்தா புடில" என்று பணத்தை எடுத்து வைத்துவிட்டு குதிரையைப் பிடித்துச்செல்வான். குதிரைகள் எவ்வளவு சண்டியாய் இருந்தாலும் ஒரே மாதத்தில் சொன்னதைச் செய்யும். லேசாய் தட்டினால் மின்னலாய் பறக்கும்!

அதுவரை பூம்பாறையில் குதிரை யாவாரத்திலும் லோடு ஏற்றுவதிலும் தடபுடலாயிருந்த சாயுபு ஒருத்தரின் வாடிக்கை லோடுகள் பாண்டிக்கு வலியப்போயின. சாயுபுக்கு மொத்தம் ஐந்து பையன்கள். பத்துப் பதினைந்து குதிரை வைத்து லோடு ஏற்றிச் சம்பாதித்த சாயுபுவின் பையன்மார்கள் கடுப்பாயினர்.

"தெக்க இருந்து பொழைக்கவந்தவன் எல்லா லோடையும் புடிச்சிட்டான். வீம்புக்குக் குதிரை வெலையை ஏத்திப்பிட்டான். ஊருக்குள்ள எவங்கிட்ட கேட்டாலும் நான் அவருக்குத்தான் குடுப்பேங்கறான். ஜாடைமாடையா ஒதுங்கிப்போகச் சொன்னா பதில்



பேசாம அடிச்சு ஒரு பார்வை பாத்துட்டுப் போயிடுறான். ஆளைவிட்டுச் சொல்லிவிட்டா 'நான் யார்னு தெரியாம திரியுதானுக. தலையச் சீவிப்பிடுவேன் செறுக்கிபுள்ளைகளை'ன்னு நேத்து திமிரா சொல்லிட்டுப் போயிருக்கான். ஒண்ணு... அவன் இருக்கணும்! இல்ல... நாம ஊரைவிட்டுப் போயிறணும். என்ன செய்யலாம்?"

"நாளைக்கு அவன் லோடேத்திட்டு வரட்டும்... ஓடையை அடுத்த மேட்டுல மறிச்சு அங்கேயே வெட்டி மலையிலருந்து உருட்டிருவோம்."

"வேணாம். அவன் எதிர்த்தா அப்படிச் செஞ்சிடலாம். பணிஞ்சுட்டான்னா ஒரு காலையும் ஒரு கையையும் மட்டும் வெட்டிப்புடுவோம்... நொண்டியா திரிஞ்சு அவன் லோடு எறக்குறதைப் பாப்போம்."

"விடியட்டும்... அவனா நாமான்னு பாத்துக்கிருவோம். அவன் வர்றதைப் பாத்துச் சொல்ல ரெண்டு சின்னப் பையன்கள் பாறைமேல நிக்கணும். ஆள் தட்டுப்பட்டதும் ஒரு விசில் குடுத்துட்டு இவனுக போயிரட்டும். போட்டுத் தள்ளிடுவோம்!" இரவு முழுக்கத் தூங்காமல் காத்திருந்தனர்.

பொழுது மெள்ள விடியத் துவங்கியது. இரவெல்லாம் விழித்திருந்த சாயுபுவின் மகன்கள் அரிவாள்களுடன் பூம்பாறைக்கு வரும் வழியில் காத்திருந்தனர். அரை பர்லாங் தூரத்தில் பாண்டியைக் கண்டதும் விசில் கொடுக்கத் தயாராக இரண்டு பையன்கள் நின்றனர்.

வழக்கம்போல் லோடேற்றிய குதிரைகளை முன்னே பத்திவிட்டு விரிசெட்டு இல்லாத குதிரை ஒன்றில், ஆபத்தை உணராமல் நிதானமாய் பூம்பாறையை நோக்கி வந்தான் பாண்டி.

ஆனைவட்டான்பாறை மேட்டைத் தாண்டியதும் மலையின் இடுப்பைச் சுற்றியது போல நெளிந்து கிடக்கும் பாதையில் குளிர்ந்த காற்றைக் கிழித்துக்கொண்டு குதிரையைச் சிட்டாய்ப் பறக்கவிடுவதில் அவனுக்கு அலாதி சுகம். இடதுபக்கம் திரும்பினால் தலை கிறுகிறுக்கும்படியாய் பசேலென்ற பள்ளத்தாக்கு! அந்த அதலபாதாளத்தில் தீப்பெட்டிகள் போல் கோம்பைக்காட்டில் வீடுகள் சிதறிக் கிடப்பது தெரியும். பாண்டியின் குதிரை ஜெரோனியக் காட்டைத் தாண்டும்போது மேஸ்திரி மணியின் வீட்டில் குதிரையின் விரிசெட்டை முதல் நாள் கொடுத்து வைத்திருந்தது நினைவுக்கு வந்தது. குதிரையும் கொஞ்சம் சண்டி. விரிசெட்டு இருந்தால் வேகமாய்ப் போகத் தோதாய் இருக்குமென்று நினைத்து, பாதையிலிருந்து விலகி அந்த ஒத்தை வீட்டருகே போனான். கதவு சாத்தியிருந்தது. அக்கம்பக்கம் ஆள் நடமாட்டம் இல்லை. குதிரையிலிருந்து இறங்கினவன் "ஏ, தங்கச்சி... தங்கச்சி..." என்றபடி கதவைத் தட்டினான். திறக்கவில்லை. உட்புறமாய் தாழ்ப்பாள் போடப்பட்டிருந்தது. "நான் கோனாரு வந்திருக்கேன். விரிசெட்டு வேணும் தாயி... லோடு போயிட்டிருக்கு..." விடாமல் கதவைத் தட்டினான். சத்தமே இல்லை. 'ஒரு சத்தத்தையும் காணோமே' என்று யோசித்துக்கொண்டிருக்கும்போதே உள்ளிருந்து கைக்குழந்தையின் அழுகைச் சத்தம் கேட்டது. திடுக்கிட்ட பாண்டி, சாவித் துவாரத்தின் வழியாய் உள்ளே பார்த்தான். நார்க் கட்டில் ஒன்றில் படுத்துக்கிடந்த மேஸ்திரி மணி பொஞ்சாதியின் கால்மாட்டில் கைக்குழந்தை அழுவது தெரிந்தது. அவள் சுய நினைவோடு கிடப்பதாய் தெரியவில்லை. 'புருசம் பொஞ்சாதி மனஸ்தாபத்தில ஒண்ணு கிடக்க ஒண்ணு செஞ்சுக்கிட்டாளோ... அடி... பாதகத்தி' என்று பதறிப் போய் நாலெட்டுப் பின்னால் வைத்து வேகமாய் ஓடிவந்து தன் வலது தோள் புஜத்தால் மதம் கொண்ட யானை போல கதவை 'மடார்' என்று இடித்தான்!

ஏற்கெனவே இற்றுப் போயிருந்த கதவு நிலையுடன் பெயர்ந்து வீட்டுக்குள் விழுந்தது. குழந்தை மேலும் அலறியது. கட்டிலில் படுத்திருந்த பெண் விழிபிதுங்கி மலங்க மலங்க விழித்துக்கொண்டிருந்தாள். நாக்கு உலர்ந்து வாயைத் திறந்து திறந்து மூடிக்கொண்டிருந்தாள். ஒரே துர்நாற்றம். ''ஒனக்கென்ன தாயி ஆச்சு?'' சிரமப்பட்டுத் தண்ணீர் பானையைக் காண்பித்தாள். தண்ணீர் மோந்து அவள் வாயில் ஊற்றினான். ''நேத்து ராவுல இருந்து குதுகுதுன்னு இருந்துச்சு. ஒரே வாந்தியும் வயித்தாலயுமா போகுது அண்ணே... வீட்டுக்காரர் வெளியூர் போயிருக்காரு. எந்திரிக்கக்கூட முடியலை. நான் பொழைக்கமாட்டேன். எம் புள்ளையை மட்டும் காப்பாத்துங்கண்ணே...'' கையெடுத்துக் கும்பிட்டு அழுதாள்.

'இந்த அத்துவானக் காட்டில் ஒத்தாசைக்கு யாரைக் கூப்பிடுவது?' யோசித்தான். ஒன்றும் பிடிபடவில்லை. ''செத்த இரு தாயி... புள்ளைய அழுவாமப் பாத்துக்க. நான் நொடியில வந்திடுதேன்...'' தன் இடுப்பில் தொங்கிய அரிவாளை எடுத்துக் கட்டிலுக்கு அருகே போட்டுவிட்டு வீட்டின் மூலையில் கிடந்த தன் குதிரையின் விரிசெட்டை எடுத்துக்கொண்டு வெளியே வந்தான். சில நொடிகளில் அதை குதிரையின் மீது விரித்துப் பரப்பித் தாவி ஏறிப் பெருவிரல்களால் குதிரையின் அடிவயிற்றில் நிமிண்டினான். குதிரை புயலாகக் கிளம்பியது! நெளிந்து செல்லும் மலைப்பாதையில் தான் லோடேற்றி அனுப்பிய குதிரைகளைக் கடந்து, பூம்பாறையை நோக்கி விரைந்தான். சரிவான ஒரு பாதையை அடுத்து ஓடும் சிற்றோடையைத் தாண்டி மேடேறியபோது ''வீய்... வீய்...'' இரண்டு விசில் சத்தம் கிளம்பி எதிரொலித்தது. குதிரையை இழுத்துப் பிடித்து நிறுத்தினான். நெற்றிக்கு நேராய் உயரத்தில் நின்று விசில் அடித்த இரண்டு பையன்மார், தன்னைப் பார்த்து ஓடி மறைந்ததைக் கண்டான். சுற்றும்முற்றும் பார்த்தான். 'ஏதோ ஆபத்து' என்று உள்மனதில் உறைத்தது. குதிரையின் வேகத்தைக் கட்டுப்படுத்தி நிதானமாய்ச் செலுத்தினான். பூம்பாறைக்குச் சற்றுமுன் திருப்பத்தில் இரண்டு பேர் தன்னை எதிர்பார்த்து நிற்பதைத் தூரத்திலிருந்தே பார்த்த பாண்டிக்கு, சாயுபுவின் மகன்கள் என்பது தெரிந்தது. தன் இடுப்பைத் தடவினான். 'அடடா... அரிவாளை அந்தத் தங்கச்சி வீட்டிலேயே போட்டுட்டு வந்துட்டமே..' ஒரு கணம் யோசித்தான். குதிரையை நிதானமாய் நடக்கவிட்டு ''அதாரு லேய்... அங்க நிக்கது?'' என்றான் அமட்டலான குரலில். வழிமறித்து நின்ற இருவரையும் குதிரை நெருங்கியது.

''மருவாதியா வெலகிப் போயிடுங்கல... நான் அவசரச் சோலியாய் போயிட்டிருக்கேன். எங்குணம் தெரியாமத் திரியுதிக செறுக்கி புள்ளைகளா...''

காத்திருந்த இருவரும் பாதையை மறித்து முறைத்து நின்றனர். இருவர் கைகளிலும் அரிவாள் பளபளத்தது. ஒருத்தன் மட்டும் ''இன்னிக்கோட ஒழிஞ்சடா கோனாரே'' என்றபடி பாண்டியை நோக்கி ஓடிவந்தான். அதற்குள் பாண்டி குதிரையை நிமிண்டியதும் நேருக்கு நேராய் பாய்ந்து கிளம்பியது குதிரை. ஒருவன் எட்டி அரிவாளை வீசினான். பாண்டி ஒருச்சாய்த்து விலகினான். அரிவாளின் பிடி வழுக்கி உருவிக்கொண்டு வலதுபுறம் இருந்த பள்ளத்தாக்கில் பறந்துபோய் விழுந்தது. அதற்குள் குதிரையின் குளம்பு அவனது காலில் தட்ட... அலறிக்கொண்டு பாதையில் விழுந்தான். அரிவாளுடன் நின்ற இன்னொருவன் மீது உரசிப் போய் குதிரையிலிருந்து பாய்ந்தான் பாண்டி. நிலைகுலைந்து கீழே விழுந்தவன் ஒரு கெட்ட வார்த்தையுடன் எழுந்து வேகமாய் அரிவாளை வீசினான். விருட்டென்று விலகிக்கொண்டு அவன் கையிலிருந்த அரிவாளை மடக்கிப்



பிடுங்கினான். இப்போது அவன் வைத்திருந்த அரிவாள், பாண்டி கையில் தகதகத்தது. தடுமாறி தரையில் கால் பரப்பி உட்கார்ந்திருந்த அவனது தலையைத் தன் கால்களுக்குள் கிட்டித்து நின்றான் பாண்டி. கீழே கிடந்தவன் திமிறினான்.

''வெலகிப் போயிடுங்கன்னு சொன்னதைக் கேக்கலியே செறுக்கி புள்ளைகளா'' என்றபடி தன் கால்களுக்குள் சிக்கியிருந்தவனின் வலது காதுக்கும் கீழாய் அரிவாளை வைத்து மேல்நோக்கிச் சுண்டினான். 'ஆ'வென்று அலறினான் கீழே கிடந்தவன். ரத்தம் பீரிட்டது. ஒரு காது மட்டும் துண்டாய் போய்த் தரையில் விழுந்தது.

''காதுல என்னல ஒச்சம்னு கேக்குறவம்கிட்டயெல்லாம் சொல்லுங்கல... உசிரு இருக்குறவரைக்கும் எவம்கிட்டையும் வம்புக்குப் போயி நிக்கப்படாது. ஓடுங்கல...'' அவனிடம் பிடுங்கிய அரிவாளைத் துடைத்து இடுப்பில் சொருகிக்கொண்டு குதிரையில் ஏறிக் கிளம்பினான். குதிரை சற்று நேரத்தில் பூம்பாறைக்கு வந்தது. வேலப்பர்கோயிலைத் தாண்டி ஊர் மந்தையைக் குதிரை கடந்த வேகத்தைப் பார்த்து பலர் திகைத்தனர். 'கோனாரு இவ்வளவு வேகமாக ஊருக்குள்ள குதிரை பத்தமாட்டாரே... எங்க போறாரு?' என்று யோசித்தனர். அங்கு பிரபலமாய் வைத்தியம் பார்த்துக்கொண்டிருந்த டாக்டர் ஒருத்தரின் வீட்டின் முன் பாண்டியின் குதிரை நின்றது.

**டா**க்டர் கொடுத்த மருந்து மாத்திரைகளைச் சாப்பிட்ட கொஞ்ச நேரத்தில் அவள் பிழைத்துக்கொண்டாள்.

டாக்டர் கிளம்பும்போது, ''சாய்பு பையன் ஒருத்தன் காதை அறுத்திட்டேன். பூம்பாறைக்குப் போனதும் அவனுக்கும் மருந்து போட்டுவிடுங்க... நானே துட்டைக் குடுத்திடுதேன்...'' பணம் கொடுத்தனுப்பினான்.

பாண்டி பூம்பாறைக்கு வரும்போதெல்லாம் யாரைப் பார்த்தாலும் ''என்ன அண்ணாச்சி சவுக்கியமா?'' என்பது தவிர, அதிர்ந்து பேசுவதில்லை. பூம்பாறைக்கு வரும் சாயந்திர நேரங்களில் குத்தூஸ்பாய் பலசரக்குக்கடை முன்பு ஒரு ஸ்டூலில் உட்கார்ந்து கொள்வான். கண்ணாடி ஜாடியில் கிடக்கும் அல்வா துண்டுகளில் இருபது முப்பதை அள்ளி தான் ஏறிவந்த குதிரைகளுக்கு ஊட்டிக்கொண்டிருப்பதைப் பார்த்து ''குதிரையா பொறந்தாலும் கோனாரு குதிரையா பொறக்கணும்டா'' என்று சொல்லிச் சிரிப்பார்கள். கொஞ்சங்கொஞ்சமாகப் பூம்பாறைக்குள்ளும் தனிப்பட்டவர்களின் வில்லங்க விவகாரங்களைத் தீர்த்துவைக்கும் மரியாதைக்குரிய பெரிய மனிதன் ஆனான்.

பூம்பாறையிலும் பாண்டி இருந்த குண்டுப்பட்டியிலும் விவசாய வேலைகளை எல்லோரும் தொடங்கினர். வேலம்மாள் கொஞ்சங் கொஞ்சமாகக் காடுவெட்டி இருபது ஏக்கருக்குமேல் சேர்த்துவிட்டாள். ஆட்களுக்குக் கூலி கொடுக்கவும் பயிர்பச்சைக்குப் பூச்சி மருந்துக்கும் நிறைய செலவானது!

''ஊர்ப்பக்கம் போயி ரொம்ப நாளாகுது. போயிட்டு வர்றேம் புள்ள'' என்று அடிக்கொருதரம் சொல்லிக்கொண்டேயிருந்தான். ஒவ்வொரு முறையும் ''இனி எதுக்கு அங்க போறீக? வேணாம்'' என்று தடுத்துவிடுவாள் வேலம்மாள்.

பாண்டி திடீரென்று தாடி வளர்க்கத் தொடங்கினான். ''பழநி கோயிலுக்கு வந்து மொட்டையெடுக்கேம்னு நேந்திருக்கேன். போயிட்டு

கோயிலில் தேங்காய் உடைத்து "எந்த ஆபத்தும் இல்லாம நான் திரும்பி வரணும் சொடலைமாடா" என்று வேண்டிக்கொண்டு திருநெல்வேலிக்குக் கிளம்பினான்.

தகவல் சொல்லியனுப்பியதும் அதிகாலையில் மருதூர் அணைக்கட்டில் வந்து பார்த்தான் அல்லியான். தான் பிரேம்குமாரையும் பரமசிவத்தையும் தினமும் அலைக்கழிப்பதையும் மெஷின் கன்னுடன் திரிந்த சடையாண்டியை பாண்டி என்று மிரண்டு போலீஸ் தேடியதையும் கதை கதையாய்ச் சொல்லிச் சிரித்தான்.

"அதெல்லாம் இருக்கட்டும்ல.. நான் திருத்துல இருக்கற பெரிய மனுஷங்ககிட்ட துட்டு வாங்கணும்னு வந்தேன். எனக்குப் பாதுகாப்புக்கு ஒரு கைத்துப்பாக்கி வேணும்ல. முன்சிப் துப்பாக்கி கெட்டுப்போயி தூர வீசிட்டேன். ஏட்டு பேச்சிமுத்தண்ணன் குடுத்த போலீஸ் துப்பாக்கி ஒண்ணுக்கும் ஆகல. ரவையும் இல்ல... ரிவால்வர் ஒண்ணு இருந்தா நல்லாயிருக்கும்ல."

"அதுக்கொரு வழியிருக்குவேய். உம்மைப் புடிக்கணும்னு தேடித் திரியற பிரேம்குமாரும் பரமசிவமும் ஆளுக்கொரு கைத்துப்பாக்கி வெச்சிருக்கானுக. நீ ஒரு எடத்தைச் சொல்லு. அங்க எப்டியாச்சும் அவனுகளைக் கொண்டாறேன். மத்ததை நீ பார்த்துக்க. மத்தவம்லாம் சும்மா கெடக்கப்போ இவனுக மட்டும்தான் தீவிரமா தேடுதானுக, சோலியை முடிச்சுப்புடு. ஒனக்கும் துப்பாக்கிக் கெடச்ச மாதிரியும் இருக்கும்."

யோசித்த பாண்டி, "சின்னப் பயலுகளேனு பார்த்தேன். சரி, இன்னிக்கு ராத்திரி சீவலப்பேரி போற பாதையில வயக்காட்டுக்குள்ள இருக்கும் வெயிலாச்சியம்மன் கோயில் மேட்டுக்கு ஆளைக் கொண்டா. மத்ததைப் பாத்துக்கிடுதேன்..."

"ஊர் அடங்குனதும் நான் அவனுகளைக் கொண்டாந்திடுதேன். ரெடியா இரு..." உற்சாகமாய் கிளம்பினான் அல்லியான்.

இரவு சுமார் பத்து மணி இருக்கும். லேசான நிலா வெளிச்சம் இருந்தது. பிரேம் சைக்கிள் மிதிக்க, அல்லியான் கேரியரில் உட்கார்ந்திருந்த சைக்கிள் முன்னே சென்றது. அடுத்து மானூர் சப்-இன்ஸ்பெக்டரான மரகதசுந்தரத்தின் சைக்கிளும் கடைசியில் பரமசிவத்தின் சைக்கிளும் முன்னும்பின்னுமாய்... வேர்க்க விறுவிறுக்க, அல்லியான் கைநீட்டிய திசையில் விரைந்தனர்.

"இப்படி எதிர்பாராத நாள்ல வந்து சிக்குவாம்னு நான் நெனச்சுக்கூடப் பாக்கலவேய். அவம் மட்டும் இன்னிக்குச் சிக்கட்டும் அல்லியான். நீ என்ன கேக்குதியோ வாங்கித் தர்றேம்..."

கருங்கும்மென்ற இருட்டில், அல்லியான் அழைத்துவரும் பிரேம் மற்றும் பரமசிவத்தின் ரிவால்வர்களையும் உயிர்களையும் குறிவைத்துக் காத்திருந்தான் பாண்டி. சற்றுத் தொலைவில் இவர்கள் வந்த சைக்கிளின் டைனமோ வெளிச்சம் தெரிந்தது!



இருட்டுக்குள் மூன்று வெளிச்சப் புள்ளிகளாய் ரோட்டில் முன்னும்பின்னும் நெருங்கி வந்த சைக்கிள்களுக்குப் பின்னால் திடீரென்று மற்றொரு பிரகாசம் தெரிந்தது! அந்த வெளிச்சத்தில் முன்னே வந்த சைக்கிள் கேரியரில் அல்லியான் உட்கார்ந்து வருவதை மேட்டில் நின்ற பாண்டியால் பார்க்க முடிந்தது. வந்த வெளிச்சம் சைக்கிள்களை நெருங்கியதும் சைக்கிள்கள் நின்றன. பின் எல்லா விளக்குகளும் அணைந்தன. அப்புறம் இருட்டில் ஒன்றும் தெரியவில்லை.

'அவனுகள மட்டும் கொண்டாடான்னா இந்தச் செறுக்கிபுள்ள கெடை ஆடு பத்திக்கிட்டு வந்தது கெணக்கா நாலஞ்சு பேரையில்லா கொண்டாந்திருக்காம்போல...' – மனசுக்குள் சபித்தபடி திடுக்கிட்டுக் குழம்பினான்.

ஸ்கூட்டரில் வந்து சைக்கிள்களை மறித்த இன்ஸ்பெக்டர் "ஸ்டேஷன்ல இருந்து ஆள்வந்து சொல்லுச்சு. என்னால இருக்கமுடியல... ஒடனே நானும் ரிவால்வரை லோட் பண்ணி எடுத்துக்கிட்டு வந்துட்டேன்... அவம் வந்திருக்கது நெசந்தானால?" என்றார் அல்லியானைப் பார்த்து.

"ஆமாயா..."

"நானும் ஒரு ரிவால்வரை எடுத்துட்டு வந்திருக்கேன் சார். ஏற்கெனவே பிரேமும் பரமசிவமும் ஆளுக்கொண்ணு வெச்சிருக்காக. நம்ம நாலு பேர்கிட்டயும் இருக்கு... அல்லியானும் பெரிய கத்தி வெச்சிருக்கான். இருட்டுல பாண்டின்னு நெனச்சு நமக்குள்ள ஒருத்தரை ஒருத்தர் சுட்டுப்பிடக்கூடாது. ஆபரேஷனை பிளான் பண்ணணும்" என்றார் மரகதசுந்தரம். அல்லியானுக்கு அடிவயித்தைக் கலக்கியது. 'அடடா... ஆளுக்கொரு துப்பாக்கியோடயில்லா வந்துட்டானுக! அவம் வயக்காட்டுக்குள்ள தப்பி ஓடினாலும் சுட்டுப்புடுவானுகளே...' மிரண்டு யோசித்தான்.

இன்ஸ்பெக்டர் பரபரத்தார். "பிரேம், பரமசிவம், மரகதம்! ஒங்க மூணு பேரு கைக்கடிகாரத்தையும் மணி பதினொன்று ஐம்பதில் இருக்கற மாதிரி செட் பண்ணிக்கங்க. எல்லா வாட்ச்சுகள்லயும் ரேடியம் இருக்குல்ல...?"

"இருக்கு சார்..."

"கவனமா கேட்டுக்குங்க... நாம நாலுபேரும் சத்தமில்லாம வயக்காட்டுக்குள்ள நடந்துபோய், அஞ்சு நிமிஷத்துக்குள்ள அந்தக் கோயில் மேட்டின் நாலா பக்கமும் ரெடியா நின்னுக்கணும். கரெக்டா மணி பன்னெண்டு ஆனதும் எல்லார் வாட்ச்சிலும் ஒரே ஒரு ரேடியக் கோடு மட்டும் தெரியும். ஒடனே எல்லாரும் ஒரே சமயத்துல நாலா பக்கம் இருந்தும் ரிவால்வரோட மேடேறணும்... என்ன நாஞ்சொல்லுதது புரியுதா? சைக்கிள்களை ஓரமா நிறுத்துங்கவே.."

அல்லியானுக்குக் குப்பென்று வேர்த்தது. தன் சேக்காளியை தான் கூட்டிவந்த ஆட்கள் தன் கண்ணெதிரே சுடப்போகிறார்களே என்று பதறினான். "வேணாம்யா... நீங்க இருங்க... நான் போயி இருக்கானான்னு மொதல்ல பாத்துட்டு வந்திடுதேன். அப்புறமா எல்லாரும் வாங்க..."

"சீ... தூர வெலகுல... நீ பின்னால வா..." இன்ஸ்பெக்டர் கடிகார முட்களை மணி பதினொன்று ஐம்பதுக்குக் கொண்டுவந்தார். அதைப்போலவே மற்றவர்களும் தங்களது கடிகாரங்களை செட்பண்ணின வேகத்தில் வயக்காட்டுச் சகதிக்குள் இறங்கி ஓசையில்லாமல் பம்மிப் பம்மி, வயல்களுக்கு நடுவே தீவைப்போல நின்ற வெயிலாச்சியம்மன் கோயில்மேட்டை நோக்கி முன்னேறினர்.

'ஓடிப்போயிரு பாண்டி என்று சத்தம் கொடுக்கலாமா?' ஒருகணம் யோசித்தான். சகதிக்குள் அவனும் தப்பி ஓட முடியாது. தானும் பிசிர முடியாது. இரண்டு பேத்தையும் சல்லடைக் கண்ணாய் சுட்டுப் பொசுக்கிப்பிடுவானுகளே என்று பயந்தான். மரங்கள் அடர்ந்திருந்த அந்த மேட்டின் சரிவில் நாலாதிசை விளிம்பிலும் ஒரு கையில் ரிவால்வருடனும் மறுகையில் ரேடியம் மிளிரும் கைக்கடிகாரத்தை உற்றுப் பார்த்தபடியும் நால்வரும் காத்திருந்தனர். நேரம் நத்தையாய் ஊர்ந்தது. ''குய்...ய்'' என்ற சில்வண்டுகளின் இரைச்சல் மட்டும் வியாபித்திருந்தது. மினுக் மினுக்கென்று கண்சிமிட்டுவது போல மின்மினிப் பூச்சிகள், வெளிச்சப் புள்ளிகளால் குறுக்கும்நெடுக்குமாய் கோலம் போட்டுப் பறந்துகொண்டிருந்தன. ஆயிற்று...! பிரேமின் கடிகாரம் முள் ஒத்தையாய்த் தெரிந்தது. சடக்கென்று எழுந்து வலது கையில் தயாராய் பிஸ்டலை நீட்டியபடி தெற்கேயிருந்து குனிந்துகொண்டே பிரேம் மேடேறுவதற்கும் அதேபோல மற்ற திசைகளிலிருந்து ரிவால்வர்களை நீட்டியபடி மற்ற மூவரும் ஏறிவரச் சரியாய் இருந்தது. சுற்றிலும் மரங்கள் நின்றதால் நடுவே எருமை மாட்டு இருட்டு... அடிமேல் அடி வைத்து நால்வரும் நடுப்பகுதிக்கு ஊர்ந்தனர். உதிர்ந்து காய்ந்துகிடந்த மாவிலைகளும் அரச இலைச் சருகுகளும் சாரைப்பாம்பு ஊர்வதுபோல 'சரசர'வென்று சத்தம் எழுப்பின. தென்மேற்கு மூலையில் ஒரு மாமரத்தின் தூரில் இடுப்புயரத்துக்கு ஒத்தைச் செங்கல் வைத்துக் கட்டப்பட்ட சின்னக் கோயில் ஒன்று மங்கலாய்த் தெரிந்தது. எதிரே ரொம்ப நாளைக்கு முன்னால் தூரோடு பெயர்ந்து இற்றுப்போய்க் கிடந்த பூவரசமரம் குறுக்கும்நெடுக்குமாய் கிடந்தது. ஈசான மூலையில் தூர்பெருத்த ஒற்றைப் பனைமரமொன்று கரேலென்று நின்றது. வேறு ஜீவராசிகள் இருப்பதற்கான அறிகுறியோ, அசைவுகளோ இல்லை. பிரேம் கிளம்பிய சரிவில் படபடப்புடன் நின்றான் அல்லியான். அடுத்த சில விநாடிகளில் துப்பாக்கிகள் வெடிக்கப்போகும் சத்தத்தையும் பாண்டியின் அலறலையும் திகிலுடன் எதிர்பார்த்தான். ரிவால்வர்களுடன் மேடேறிய நால்வரும் மேட்டின் நடுவே கூடினர். சுற்றும்முற்றும் பார்த்தனர்.

''என்ன பிரேம்.. ஆளக் காணோமே..?''

''தெரியல சார்... ஒளிஞ்சிருப்பான். எந்த நிமிஷமும் அட்டாக் பண்ணுவாம் சார்.'' எல்லோருக்குமே அந்தக் குளிரிலும் சதசதவென்று வேர்த்து ஒழுகியது. லேசாய் கூதக்காற்று அடித்தது. சரிவோரம் புதராய் மண்டி நின்ற நீர்க்கனகாம்பரச் செடிகள் காற்றுக்கு மெள்ள அசைந்தன. பிரேமும் பரமசிவமும் மண்டியிட்டு ஊர்ந்துபோய் உற்றுப்பார்த்தனர்.

''ஊஹூம்.. ஆள் இல்லை.'' மீண்டும் மற்றவர்கள் நின்ற இடத்துக்கே சுற்றும்முற்றும் பார்த்தபடி வந்தனர்.

''ஸ்டேஷன்ல அஞ்சு செல் டார்ச் இருந்துச்சு. அவசரத்துல எடுத்து வராம வந்துட்டோமே...'' முணுமுணுத்த இன்ஸ்பெக்டரின் காலில் ஏதோ தட்டுப்பட்டது. ரிவால்வரை இடுப்பில சொருகிக்கொண்டு சட்டைப் பையில் இருந்த தீப்பெட்டியை எடுத்துச் 'சரக்'கென்று உரசினார். திடீர் வெளிச்சத்தில் மாமரத்தில் அடைந்திருந்த நாரைகள் 'கிர்புர்' என்று குரலெழுப்பிப் படபடவென்று சிறகடித்துக்கிளம்பின. உட்கார்ந்து தரையைத் தடவினார். பீடிகட்டு ஒன்றும் ஒரு தீப்பெட்டியும் தட்டுப்பட்டன. அருகே ஒரு தூக்குவாளியில் கோழிக்குழம்பும் சாப்பிட்டு முடித்த எலும்புகளும் சிதறிக் கிடந்தன. நெருக்கிப் பின்னப்பட்ட இரண்டு தென்னை மட்டைகள் ' படுத்துக்கொள்வதற்குத் தோதாய் நீளமாய் தெற்குவடக்காய் விரிக்கப்பட்டிருந்தன. தலைமாட்டுக்குத் தோதாய் ஒரு



''நிச்சயமா பாண்டியேதான் சார். படுக்கைக்குத் தென்னைமட்டை இவ்வளவு நீளமாக கெடக்குன்னாவே அவம்தாம் சார். ஆள் நல்ல ஒயரமில்ல...'' சுற்றிலும் பார்த்தார் பிரேம். மாமரத்திலும் அரசமரத்திலும் ஏறி உட்கார்ந்திருக்கிறானா என்று கிளைகளை உற்றுப் பார்த்தார். உஹூம்.. இல்லை.

''எங்க சார் போயிருப்பாம்..?'' மறுகினார் பிரேம்.

''அரைமணி நேரத்துக்குள்ளதாம் இந்த இடத்தைவிட்டுப் போயிருக்கணும். அவம் வேகத்துக்கு இந்நேரம் கங்கைகொண்டான் போயிருப்பாம்.. ஸ்டேஷனுக்குப் போயி ஏ.ஆர். பார்ட்டியை அலர்ட் பண்ணினாதாம் தேடமுடியும்'' என்றார் இன்ஸ்பெக்டர் ஏமாற்றத்துடன். அல்லியானுக்கு ஆச்சரியமான ஆச்சரியம்! பிரேமின் அருகில் வந்து ''ஒடனே கிளம்புங்கன்னு சொன்னனே... யாரும் எம்பேச்சைக் கேக்கல. இத்தனை பேரு வந்தா தெரிஞ்சுபோகாதா? இந்நேரம் ஆத்தோரமா போனாலும் ஸ்ரீவைகுண்டம் போயிருப்பான்யா... விட்டுப்புட்டீகளே'' என்றான், தன் ஆச்சரியம் கலந்த சந்தோஷத்தை வெளிக்காட்டாமல்!

விரித்துக்கிடந்த தென்னை மட்டையில் எல்லோரும் ஏமாற்றத்துடன் உட்கார்ந்தனர். ''நல்ல சந்தர்ப்பம் போச்சே வேய்..'' அல்லியானிடம் புலம்பினார் பிரேம். ''ரவைகளை அன்லோடு பண்ணிடலாமா சார்..?''

''எதுக்கு பிரேம்? வேணாம்.. ஸ்டேஷன் போற வரைக்கும் லோடாவே இருக்கட்டும். வழியில திடீர்னு தட்டுப்பட்டாம்னா?'' என்றார் மரகதசுந்தரம். இன்ஸ்பெக்டரும் அதை ஆமோதித்தார். எல்லோரும் எழுந்து சோர்வுடன் ஒரு வரப்பில் நடந்து ரோடேறினர். சைக்கிள்களையும் ஸ்கூட்டரையும் எடுத்துக்கொண்டு கிளம்பினர். ''இவ்வளவு தூரம் வந்துட்டேன்... இப்படியே என் வீட்டுக்குப் போயிட்டு, விடிஞ்சதும் வந்து பாக்கேன்யா'' என்றான் அல்லியான். பிரேமும் சரியென்றபடி சைக்கிளைக் கிளப்பினார். எல்லோரும் போய்விட்டார்கள் என்பதைச் சற்றுநேரம் அதே இடத்தில் நின்று உறுதிப்படுத்திக்கொண்ட அல்லியான், ஆச்சரியம் விலகாமல் மீண்டும் தனியாய் வெயிலாச்சியம்மன் கோயிலுக்கு ஓடினான். சுற்றும்முற்றும் பார்த்தான்.

''பாண்டி... பாண்டி!'' என்று நாலா திக்குக்கும் திரும்பிச் சன்னமாய் குரல் கொடுத்தான். சற்றுநேரத்தில் ஒத்தைப் பனைமரத்தின் உச்சியில் சரசரப்பு கேட்டது. மெள்ள ஒரு உருவம் இறங்குவது தெரிந்தது. பாண்டி இறங்கி வந்ததும் ஓடிப்போய் கட்டிப்பிடித்தான். அவனது மேலெல்லாம் பனங்கருக்கு அறுத்து ரத்தம் பிசுபிசுத்தது.

''ஏல... கோட்டிக்காரச் செறுக்கிபுள்ள... அவனை மட்டும் கொண்டாலேன்னா நீ நாலு பேத்தைக் கூட்டியாந்திருக்கியேல. ஒவ்வொருத்தனும் ஆளுக்கொரு துப்பாக்கியோட வந்திருக்கானுக. பனங்கருக்கைக் கட்டிப்புடிச்சுக்கிட்டு எம்புட்டு நேரமா மேல நிக்கது... 'எங்க மரத்துல வெச்சே சுடப்போறானுக'ன்னுதான் நான் நெனச்சேன். நல்லவேள... ஒருத்தனும் பாக்கல.''

அல்லியான் விசும்பி அழுதான். ''நானும் பயந்துட்டேம்ல... எவ்வளவு பெரிய யோகக்காரனும் இப்படிப் பெரிய ஆபத்துகள்ல இருந்து மூணு தடவைக்குமேல தப்பிக்க முடியாதாம்ல.. ஏற்கெனவே இவனுக தாசில்தார் வேஷம்போட்டு வந்தப்பவே சிக்கத் தெரிஞ்சே... இப்பம் ரெண்டாவது தடவையாயிப் போச்சி.. இனி ரொம்பக் கோளாறா இருக்கணும்ல... விடிஞ்சதும் தீவிரமா தேடுவானுக. ராவோட ராவா நீ போயிடுல''

"எனக்கு எப்படியும் அவனுக துப்பாக்கி வேணும்ல... சீவலப்பேரி கொடைக்கு வர்றேன். அப்பம் சோலியை முடிச்சுப்புடுவோம்... இப்பம் திருத்துப்பக்கம் ஒரு நடைபோயிட்டுப் போயிடுதேன்..." தன் நீளமான அரிவாளைச் சாக்கில் சுருட்டிக் கக்கத்தில் இடுக்கிக்கொண்டு கிளம்பினான். பாண்டி திருத்து அருகே வந்து கொண்டிருந்தபோது ரோட்டில் ஒரு பிளசர் காரின் வெளிச்சம் தெரிந்தது. போலீஸ் ஜீப் இல்லையென்பதை உற்றுப் பார்த்து உறுதிப்படுத்திக்கொண்டான். காரில் வருவது இன்னாராய்த்தான் இருக்குமென்று பாண்டிக்குப் புரிந்துபோனது. அரிவாளைச் சாக்குப்பையிலிருந்து உருவி காரின் ஹெட்லைட் வெளிச்சத்தில் கீழ்நோக்கி அசைத்தான். காரில் வந்தவருக்கும் மறித்து நிற்பது இன்னார்தான் என்பது தெரிந்திருக்க வேண்டும். கார் பதட்டமில்லாமல் நின்றது. உள்ளிருந்தவர் நிதானமாய் இறங்கினார். "என்ன மாமா, எப்ப வந்தீக? இதென்ன எங் காரை மறிச்சு நிக்கீக.?"

"மருமவனே, ஒங்கப்பாரைப் போல நாலஞ்சு பெரிய மனுசனுக பேச்சை நம்பித்தாம் நான் இப்படிச் சாமப் பிசாசா அலையிதேன். எங்கிட்ட சொன்னபடிக்கு யாருமே எங்குடும்பத்துக்கு எதுவும் செய்யல. இப்பம் நான் இருக்க எடத்துல வெவசாயம் பாக்கப் போறேன். துட்டு வேணும்... அதென்ன மருமவனே... கழுத்துல சங்கிலியா போட்டிருக்கீக?"

காரில் வந்தவர் மறுபேச்சுப் பேசாமல் தன் கழுத்தில் கிடந்ததைக் கழற்றி "அதனால என்ன மாமா... வெச்சுக்குங்க" என்று கொடுத்தார். வாங்கிக்கொண்ட பாண்டி "ஒங்க கொணம் ஒங்கப்பாருக்கு இல்லாமப் போச்சே மருமவனே... வாங்க... ஒரு நடை அவரையும் போயிப் பாத்துடுவோம்."

"வேணாம் மாமா... அவரு தூங்குத நேரம்."

"எனக்குத் தெரியும்ல. வந்து உசுப்புதியா... இல்லயா?"

மறுபேச்சு பேசாமல் காரில் வந்தவர் நடந்துபோய் சற்றுத் தள்ளியிருந்த வீட்டில் தன் தகப்பனாரை எழுப்பினார்.

"நான் பாண்டி வந்துருக்கேம்..." சத்தம் கேட்டதும் எதுவுமே பேசாமல் அவசரமாய் எழுந்து பீரோவிலிருந்து ஐயாயிரம் ரூபாய் கொண்டுவந்து கொடுத்தார் அந்தப் பெரியவர். அதை வாங்கிக்கொண்டு நேராய் பாளை மார்க்கெட் பகுதியில் காய்கறி வியாபாரம் செய்துவந்த தன் உறவுக்காரப் பெண்மணியின் வீட்டுக்குப் போனான்.

"கஷ்டப்படுதேனு முன்னமே சொன்ன. இந்தா... இதை வெச்சுப் பொழச்சுக்க தாயி..." அவள் கும்பிட்டபடி வாங்கிக்கொண்டாள். சோறு போட்டாள். சாப்பிட்டான். "மலையில நாலஞ்சு குதிரை வெச்சிருக்கேன். வெவசாயமும் பாக்கேன். ஒனக்குப் பிரியமிருந்தா உம் மவனுக ரெண்டு பேத்துல சின்னவனை எங்கூட அனுப்பி வை. எங்கூடமாட ஒத்தாசையா இருக்கட்டும். எனக்கும் புள்ளகுட்டி இல்ல. எங்காடுகரைக்கு வாரிசாயிருந்து நல்லபடியா பொழச்சுக்கிடுவாம். பெத்த புள்ளையைப்போல பாத்துக்கிடுதேம். எந்தச் சூழ்நிலையிலையும் இவனைக் கைவிடமாட்டேன். இது சத்தியம்..." என்றான்.

அவளும் சந்தோஷமாய் சம்மதித்தாள். இந்தப் பக்கம் வரும்போது எப்போதாகிலும் சாப்பாட்டுக்காக இங்கு வந்துபோயிருந்ததால் பையனும் பாண்டியிடம் பிரியமாய் இருந்தான். பையனுக்குப் பத்துப் பன்னிரண்டு வயசிருக்கும். மாநிறம்.. சூட்டிப்பான பயல். தூக்கக் கலக்கத்தில்



இரவாய் பஸ் பிடித்துப் பழநிக்குப் போய் தனக்கு மட்டும் மொட்டையடித்துக்கொண்டு மறுநாள் பொழுதுசாயும் நேரத்தில் இருவரும் பூம்பாறை வந்து சேர்ந்தனர். அங்கிருந்து பையனுடன் குண்டுப்பட்டிக்கு வந்தான்.

பாண்டி தன்னுடன் கூட்டி வந்திருந்த பையனை ஏற இறங்கப் பார்த்தாள் வேலம்மாள். ஏனோ திடீரென்று அவளது முகம் இருண்டு கறுத்தது!

வந்ததிலிருந்து அவள் முகங்கொடுத்துப் பேசவில்லை. "நானும் பாக்கேன்... ஏட்டி, உம் மூஞ்சியில எள்ளும் கொள்ளும் வெடிக்கி?" நெருங்கிக் கேட்டான். விலகிப்போய் நின்று விசும்பினாள். "இதான ஆகாதுங்கது... எதுக்கோசரம் இப்படி வாயைப் பொளக்க?" சமாதானப்படுத்தினான். அழுகை நின்றபாடில்லை. கூடியது. பையன் கூப்பிடு தூரத்தில் நாய்களுடன் விளையாடிக் கொண்டிருந்தான். ஒரு பாட்டம் அழுது ஓய்ந்தவள் மூக்கைச் சிந்தியபடி அருகில் வந்தாள்.

"நேத்திக்கடனுக்குப் பழநி போறேம்னு சொல்லிட்டு எங்கவே போனீரு?"

"சே... இதுக்குத்தானாக்கும் இந்தக் கூத்து? போறப்பச் சொன்னா வில்லங்கம் பண்ணுவேனு தெரிஞ்சுதாம் அப்படிச் சொன்னேன். நேரா திருநெல்வேலி போயிட்டு, அங்கிருந்து பழநி போயி உங்கிட்டச் சொன்னபடிக்கு மொட்டையும் அடிச்சுட்டு வந்திட்டன்லா..." உருமாலை அவிழ்த்துத் தலையைத் தடவிக் காண்பித்தான்.

"அதுசரி... நீர் கூட்டியாந்திருக்கீரே, இவம் யாரு?"

"வந்ததுமே சொல்ல நெனெச்சேன். நீதாம் மூஞ்சியைத் தூக்கி மொகட்டுல வெச்சிருந்தியே... எல்லாம் ஒனக்காகத்தாம்ல! நானும் அடிக்கொருதரம் அங்க இங்கனு போயிடுதேன்... இந்தக் குளிர்காட்டுல பாவம், ஒத்தை மரமா நிக்க... இவம் ஒனக்கும் பேச்சுத் தொணையா இருப்பாம். கடைகண்ணிக்குப் போக வரவும் எங்கூடமாட ஒத்தாசைக்கும் தோதுபாதாயிருக்கும்! நமக்கும் புள்ளையா குட்டியா... நீ இம்புட்டுக் காடுகரை சேர்த்து வெச்சிருக்க. என்னையும் போலீஸ் தேடுதாம். எந்த நேரமும் எதுவும் நடக்கும். ஒண்ணு கெடக்க ஒண்ணுனா வாரிசுக்குனு ஒருத்தன் வேணாமா புள்ள? அதான்... நெருங்கின எந்தாயிபுள்ளகிட்டயிருந்து இவனைத் தத்தெடுத்துட்டு வந்தேன்."

அவளது ஆத்திரமும் ஆவேசமும் கூடியது. "பொய் சொல்லுதீரு. நீரு திருச்சி ஜெயில்ல கெடந்தப்ப எந்தத் தாயிபுள்ளவே ஒம்மைத் தேடிவந்து பாத்திச்சு? தவிச்ச வாய்க்கு யாருவே தண்ணி குடுத்தது? தத்தெடுத்துட்டு வந்தாராம் தத்து! யாருகிட்ட வந்து காது குத்துதீரு? எனக்கு எல்லாந் தெரியும்... நான் அப்பவே நெனெச்சேம்... அடிக்கொரு தரம் ஒம்ம ஊருப்பக்கம் போறப்பவே தெரியும்."

"ஏட்டி, சும்மா கெடந்து கொலைக்காதடி... என்ன தெரியும்னு சொல்லு?"

"நான் என்ன ஒம்ம வீட்டு நாயாவே... கொலைக்கிறதுக்கு? ஒமக்கு அங்க ஒரு தொடுப்பு இருந்திருக்கு. அந்த வப்பாட்டிச் செறுக்கிக்கும் ஒமக்கும் பிறந்தவம்தான் இந்தப் பய." பாண்டி நிலைகுலைந்தான்.

"அடிப் பாதகத்தி... ஒம்வாயி அவிஞ்சு போவும்! ஏட்டி, இவம் யாருன்னு நெனச்ச? என் ஒண்ணுவிட்ட அக்காவோட மகபுள்ள. எனக்குப் பேரன் மொறை வேணுமாக்கும்..."

''நம்பாட்டி போடி... இந்தச் சந்தேகப் புத்தி ஒங்க ரத்தத்தோட சேர்ந்ததிடி. இம்புட்டு நாளா இது ஒங்கிட்ட இல்லன்னு நெனெச்சேன்.''

''இந்த ஆம்பளைக ஒருத்தனுமே யோக்கியனில்லவேய்..! இதுக்காகத்தானாவே மணியாச்சியிலிருந்து வந்து ஒமக்கு வாக்கப்பட்டேன்? இதுக்காகத்தானாவே ஒம்மைப் புடிச்சா சுடுவாம்னு தெரிஞ்சும் உடுத்தின சேலையோட ஒம்ம பின்ன வந்தேன்...? 'நம்ம ஊருக்கு வந்திரு வேலம்மா'ன்னு எந்தாய்புள்ள சொல்லியும் நாங் கேக்கலியே... விசுவாசங்கெட்ட மனுசா! ஒம்க்கு என்னவேய் துரோகம் பண்ணினேன்? இப்படியொரு காரியம் பண்ணிருக்கிரு!''

''ஏ... இப்படிக் கூறுகெட்டத்தனமா சலசலன்னு பேசாத... ஆமா...'' பாண்டிக்கு ஆத்திரமாய் வந்தது. என்ன செய்வதென்று புரியவில்லை.

''ஏ... ஒனக்குக் கோட்டிகீட்டி புடுச்சிருக்கா புள்ள? ஒனக்கு எங்கொணம் தெரியும். நான் பழிபாவத்துக்கு அஞ்சாதவந்தான். ஆனாலும் நீ இருக்கப்ப அப்படி ஒரு காரியத்தைச் செய்யமாட்டம்ல. நான் அடிக்கொருதரம் சொல்லாமப் போய் வரது வாஸ்தவம்தான். நீ போலீஸுக்குப் பயந்து என்னை விடமாட்டேங்கிறதுனாலதாம் சொல்றதில்ல. இந்தச் சொடலமாடசாமி சத்தியமா இவன் எம்மவன் இல்ல. நான் அப்புடி ஆளும் இல்ல. என்னை நம்பு...''

''அது நெசம்னா, இப்பமே நீரு இவனத் திருப்பி அனுப்பிச்சிரும். தத்துப்புள்ள வேணும்னா, மணியாச்சி போயி எந்தாயிபுள்ளகிட்டருந்து ஒரு பயலக் கூட்டியாறேன்.'' பாண்டி சற்று நேரம் யோசித்தான். பெருமூச்சு விட்டான். நெஞ்சே வலித்தது. ''அது முடியாதுல. நான் இவனைக் கைவிடமாட்டேன்னு சத்தியம் ,பண்ணிட்டேன். நம்பி வந்தவனை நான் திருப்பி விடமாட்டேன். இதயிட்டு என்ன வந்தாலும் சரி... இவம் இங்கதாம் இருப்பாம். தெரிஞ்சுக்க'' என்றான் தீர்க்கமாக.

அன்றிலிருந்து சில வாரங்களாய் பாண்டிக்கும் அவன் மனைவிக்கும் பேச்சுவார்த்தை இல்லாமல் போனது. சாப்பாட்டு நேரத்துக்கு இரண்டு தட்டில் சோற்றைப்போட்டு ஒரு சொம்பில் தண்ணீர் மொண்டு வைத்துவிட்டு வாசல் முற்றத்தில் போய் நின்று கொள்வாள் வேலம்மாள். அவளிடம் எது சொல்ல வேண்டுமென்றாலும் அந்தப் பையனிடம் சொல்லுவது போல் சொல்லுவான். அவளும் சுவரைப் பார்த்துக்கொண்டு ஒரு வார்த்தை, இரண்டு வார்த்தைகளில் பதில் சொல்லுவாள்.

நாட்கள் நகர்ந்தன. குதிரையில் லோடேற்றிவிட்டால் பூம்பாறையில் போய் சரக்கு இறக்கிவிட்டு வீட்டுக்குண்டான பலசரக்குச் சாமான்கள் வாங்கி வரும் அளவுக்குப் பையனும் பழகிவிட்டான். பாண்டியை 'அப்பா' என்றும், அவளை 'அம்மா' என்றும்தான் கூப்பிட்டான். ஆனாலும் இவனைப் பார்க்கிறபோதெல்லாம் அவளுக்கு வேப்பம் புண்ணாக்காய் கசந்தது! நாள் படப்பட சரியாகிவிடும் என்று நினைத்தான் பாண்டி.

ஒரு நாள் தான் வளர்த்த வெடைக்கோழி ஒன்றைப் பிடித்து, கழுத்தைத் திருகி, ரோமத்தைப் பிடுங்கிச் சுத்தம் செய்தான். ''மதியத்துக்குக் கொழம்பு வையில'' என்று அவள் முன்னே போட்டுவிட்டுக் கிளம்பிப் போனான். மதியம் இரண்டு மணிக்குமேல் வேர்த்து விறுவிறுத்து வந்தான். வீட்டுக்குள் வெகுநேரத்துக்கு முன்பே இரண்டு தட்டுகளில் சோறுபோட்டுக் குழம்பு ஊற்றி வைக்கப்பட்டு ஈயாடிக் கிடந்தன. சாப்பாட்டில் கைநனைத்தபடி ''சின்னவனை எங்கல காணோம்? அவன் சாப்பிடலயா?'' என்றான் முகட்டைப் பார்த்தபடி.



''அது என்னமோ எனக்குத் தெரியாது!'' என்றாள் சலிப்புடன். உடனே சாப்பாட்டுக்குள்ளேயே கைகழுவிவிட்டு எழுந்தான். வேகமாய் அவனைத் தேடிப்போனான். பையன் ஜெரோனியக் காட்டோரமாய் ஒரு பாறையில் உட்கார்ந்திருந்தான்.

''என்னல நீ, ஒன்னை எங்கெல்லாம் தேடுதது? கோழியடிச்சிருக்கு... சாப்பிடப் போகலியா?'' பையன் பதில் பேசவில்லை. ''என்னல நான் சொல்லுதேன்... கேக்கலியா?'' பையனுக்கு மாலை மாலையாய்க் கண்ணீர் வடிந்தது. ''ஏம்ல அழுவுதே? என்னன்னு சொல்லு...''

''நேத்து நீங்க பூம்பாறை போயிருந்தப்போ சாப்பிடப் போனேன். அம்மா எனக்கு நாய்தட்டுல சோறு போட்டு வெச்சிருந்திச்சி... எனக்குச் சாப்பாடே வேணாம்.''

நெஞ்செல்லாம் தீப்பிடித்தது போலப் பற்றியெரிந்தது. கண்கள் ரத்த விளாறாய்ச் சிவந்தன. அவனை இழுத்து நெஞ்சோடு அணைத்துக்கொண்டு தன் பற்களை இறுகக் கடித்தான். குறுமணலை மென்றதுபோல 'நற...நற'வென்று சத்தம் கேட்டது. ''அவ கெடக்கா பைத்தியாரச் செறுக்கிபுள்ள... நீ கிளம்புல... நாம பூம்பாறைக்குப் போயி கிளப்புக் கடையில சாப்பிட்டு வருவம், வா...'' அவனைக் கொடங்கையில் அரவணைத்துக்கொண்டு ஒரு குதிரையில் ஏறிக் கிளம்பினான். திரும்பி வீட்டுக்கு வந்ததும் பாண்டி அவளிடம் இதுபற்றி எதுவுமே கேட்கவில்லை.

பையன்மேல் பாண்டி காட்டும் அக்கறையைப் பார்த்து பயல் இந்த மனுசனுக்குப் பொறந்தவன்தான் என்ற எண்ணம் வேலம்மாள் மனதில் ஆழமாய் வேரோடிவிட்டது. அவள் சமாதானமாகவில்லை. பாண்டியும் நிம்மதி இழந்து தாடி வளர்த்துக்கொண்டு பிரமை பிடித்தவன்போல் நடமாடினான். இவர்களுக்குள் புகைந்த இந்த வெப்பம், அக்கம்பக்கம் இருந்தவர்களுக்குத் தெரியாமலேயே மாதங்கள் சில உதிர்ந்தன. ஒரு நாள் பொழுது சரியும் முன் வேர்த்து விறுவிறுத்து வீட்டுக்கு வந்த பாண்டி ஒரு தேங்காயை எடுத்துச் சென்று, எதிரே தான் நட்டு வைத்த கோயிலில் உடைத்துச் சாமி கும்பிட்டான். திருநெல்வேலிப்பக்கம் கிளம்பப் போகிறான் என்பது அவளுக்குப் புரிந்துபோனது. நிலையோரமாய் நின்று வெறித்துப் பார்த்தாள். எங்கிருந்தோ பல்லி ஒன்று 'டிட்டிட்டிட்' என்று கெவுளியடித்தது. சற்று தூரத்தில் சின்னவன் குதிரைகளை மேயவிட்டபடி விளையாடிக் கொண்டிருந்தான். பாண்டி வேகமாய் வீட்டுக்குள் வந்தான். வெளுத்த ஜிப்பாவை எடுத்து மாட்டினான். நீளமான அரிவாளை எடுத்து தன் முதுகுப்பக்கமாய்ச் செருகினான். ''எங்க கிளம்புதீரு...?''

அவன் பதிலே பேசவில்லை. வாசலை மறித்து நின்றபடி ''நான் கடைசியாய் கேக்கேம். ஒம்ம வப்பாட்டி மகனை ஒடனே அனுப்பிச்சிரும்! நீரும் அந்த ஊர்ப்பக்கமே போவப்பிடாது...''

''ம்... உங்கிட்ட பேசிப் புண்ணியமில்ல... மூட்டுவாதம், மொடக்குவாதத்துக்கு மருந்து இருக்கு. உம் புடிவாதத்துக்கு மருந்தே இல்லட்டீ... நான் வாக்குக் குடுத்திட்டேம். இவம் இங்கதாம் இருப்பாம். என்னைக் கண்ட எடத்திலேயே போலீஸ் சுடுவாம்னு தெரிஞ்சும் செத்தாலும் சேர்ந்து சாவேம்னு எங்கூடக் கிளம்பி வந்தே! நீ குடுத்த தகிரியத்துலதாண்டி இதுநாள் வரை எவம்கிட்டயும் சிக்காம நிமிந்து திரியுதேன். அந்த ஒண்ணுக்காகத்தாம் நீ சொன்னதெல்லாம் சகிச்சிக்கிட்டு இருக்கேம். ஒனக்கு எங்கொணம் தெரியும். வழிவிடு புள்ள...'' வெளியேற முயன்றான்.

போயிடுவீரோ? இப்பம் போனரு நானே போயி ஓம்மை போலீஸ்ல புடிச்சுக் குடுத்துடுவேம். நீரு அருச்சுனக் கோனாரு இல்ல... 'சீவலப்பேரி பாண்டி'னு எல்லார்கிட்டயும் சொல்லிப்புடுவேன்...'' வெறிவந்தவள் போல் சத்தமிட்டு அவன் சட்டையைப் பிடித்து உலுக்கினாள். அவளிடமிருந்து அந்த வார்த்தையைக் கேட்டதும் பாண்டி நிலைகுலைந்தான். தடுமாறினான். ''ஏட்டி, தூரப்போ!'' அவளை உதறிப் பலமாக எட்டித் தள்ளினான். அவள் தடுமாறி மல்லாந்து விழுந்தாள். பாண்டி வேகமாய் கிளம்பி வாசலுக்கு வந்து செருப்பை மாட்டினான். கோபமாய் உள்ளே பார்த்தான். விழுந்தவள் ஏனோ அசையாமல் அப்படியே கிடந்தாள். முகட்டை வெறித்துப் பார்த்தபடி அவளது பார்வை நிலைகுத்தி நின்றது. பதறிப்போய் செருப்புக்காலுடன் வீட்டுக்குள் ஓடினான். அவள் தோளைப் பிடித்து உலுப்பினான். தலை 'விலுக்'கென்று சரிந்தது. கீழே விழுந்த இடத்தில் இருந்த அம்மிக்கல்லின் முனை பின்மண்டையில் இரண்டு விரக்கடை அளவு ஆழமாய் பதிந்திருந்தது! ரத்தம் குபுகுபுவென்று அம்மிக்கல்லில் வழிந்து, ஆரத்தி எடுக்க மஞ்சளும் சுண்ணாம்பும் கலந்து அரைத்தது போல் செவேலென்று ஊர்ந்து பரவியது. மூக்கில் விரலை வைத்தான்... நாடி பிடித்துப் பார்த்தான். 'அடடா... எல்லாம் முடிந்துபோனது!'

''ஏட்டி... வேலம்மா...'' அலறினான். பிரமைபிடித்தவன் போல் வீட்டைச் சுற்றும்முற்றும் பார்த்தான். கண்களை அகல விரித்தபடி மெள்ள அவளை ஒரு சுற்றுச் சுற்றினான். ஜிப்பாவைக் கழற்றித் தூர வீசினான். எதுவுமே ஓடாமல் மீண்டும் வாசலுக்கு வந்தான். நிமிர்ந்தான். ஆகாயமே சுழலுவது போலிருந்தது. அப்படியே ஒரு பாறையில் உட்கார்ந்து 'கோ'வென்று குலுங்கிக் குலுங்கி அழுதான். ''எங்கையாலயே ஒன்னைக் கொன்னுப்பிட்டேனடி, பாவி மவளே... கடைசிவரைக்கும் நீ நம்பலையடி...'' தலையில் அடித்துக் கதறினான். சுற்றியிருந்த பள்ளத்தாக்கிலும் மலைகளிலும் சத்தம் மோதி எதிரொலித்தது. ஏதோ சத்தம் கேட்கிறதென்று தூரத்தில் குதிரை மேய்த்துக்கொண்டிருந்த பையன் வீட்டை ஏறிட்டுப் பார்த்தான். பாண்டி பாறைமேல் முதுகைக் காட்டிக் குனிந்து உட்கார்ந்திருப்பது தெரிந்தது. 'காட்டில் மாடு கன்று மேய்ந்திருக்கும்... சத்தம் கொடுத்திருப்பாக' என்று நினைத்து, தொடர்ந்து குதிரைகளை மேயவிடுவதில் மும்முரமாய் இருந்தான். பாண்டி மீண்டும் வீட்டுக்குள் போனான். தலை தொங்கிக்கிடந்தவளை வாரி மடியில் போட்டுக்கொண்டு அவள் தலையோடு தலையை முட்டி முட்டிக் கேவினான். ரத்தத்தைக் கண்டு கலங்காதவனுக்கு முதல் முறையாக பயந்தட்டியது. ''எதேச்சையா நடந்துபோச்சு. இவள் தலையில் அடிபட்ட காயத்தை யாரும் பார்த்து நாந்தாம் கொலை செஞ்சிருப்பேம்னு போலீஸுல சொன்னா ஒடனே இங்க போலீஸ் வரும்... என்ன, ஏதுன்னு விசாரிக்கும்... அதுல ஒண்ணைத் தொட்டு ஒண்ணா தான் இன்னார் என்று தெரிஞ்சுபோகுமே...'' வெலவெலத்தான். அமைதியாய் சற்று நேரம் யோசித்தான். 'இவள் செத்தது வெளியில் யாருக்கும் தெரியக்கூடாது...' காரியத்தில் இறங்கினான்.

அவளைக் கிழக்குப் பார்த்து ஓரமாய் சாத்தி வைத்துவிட்டு அம்மிக்கல்லை நகர்த்தி அது கிடந்த தென்மேற்கு மூலையில் வேகவேகமாய் இடுப்பு ஆழத்துக்கு ஒரு குழி வெட்டினான். அவளை வாரியெடுத்து மண்டியிட்டதுபோல் நேராகக் குழிக்குள் இறக்கினான். மண்ணைப்போட்டு மூடினான். தோண்டி மூடிய அடையாளம் தெரியாமல் இருக்க, மூடிய



இடத்தில் மீண்டும் அம்மிக்கல்லைத் தூக்கி வைத்தான். சுற்றிலும் தண்ணீர் தெளித்து ரத்தத்தைக் கழுவி, மெழுகிவிட்டு நிமிர்ந்தவனுக்கு அடிவயிற்றில் 'பகீர்' என்று உறைத்தது! எதிரே கதவிடுக்கில் மறைந்தபடி தலையை மட்டும் நீட்டிச் சின்னவன் பார்த்துக்கொண்டிருந்தான். அவன் ரொம்ப நேரத்துக்கு முன்பே தண்ணீர் குடிக்க அங்கு வந்திருக்கவேண்டும். ரத்தம் தோய்ந்த கைகளை விரித்தபடி அவனை நெருங்கினான். பையன் கதவிடுக்கிலிருந்து விருட்டென்று கிளம்பி வாசலுக்கு வந்தான். மிரண்டு பார்த்தான். நாலெட்டுப் பின்னால் நகர்ந்தான். ''லே... சாமி சத்தியமா நான் இவளைக் கொல்லணும்னு நெனக்க...'' – எதையோ சொல்ல வந்தபடி பையனை நெருங்கினான். அவன் ஒதுங்கி விலகி, ''ஆஆ...!'' என்று அலறியபடி எதிரே சரிவில் இறங்கி ஓட்டத்தில் கிளம்பி புள்ளியாய் மறைந்தான்!

பாண்டி அப்படியே சரிந்து உட்கார்ந்தான்!



அடிவானம் சிவந்து கிடந்தது. தீப்பந்தமாய் தகதகத்த சூரியன், மேமலையில் மெள்ளப் பம்மிப் புதைந்து கொண்டிருந்தது. ஓடின பையன் பொழுதுசாய்ந்ததும் வீட்டுக்கு வந்துவிடுவான் என்று பாண்டி எதிர்பார்த்தான். இருட்டின பின்னும் அவன் வருவதற்கான அறிகுறியே இல்லை. 'இங்கேதான் எங்கேயாவது ஒளிஞ்சிருப்பான். விடிஞ்சதும் தேடி அவனுக்குப் புரிகிற மாதிரி நடந்ததை விவரமா சொல்லணும்' என்று நினைத்தான்.

கண்கள் தகதகவென்று காந்தலெடுத்தன. கொஞ்சம் கண் அசரலாம் என்று வீட்டுக்குள் போனான். அவன் மனைவியைப் புதைத்த இடத்திலிருந்த அம்மிக்கல்லை உற்றுப் பார்த்தான். அது லேசாய் நகர்ந்து... 'டமால்' என்று தெறித்து உள்ளிருந்து வேலம்மாள் ஆகாயத்துக்கும் பூமிக்குமாய் எழுந்து நிற்பதுபோல் கற்பனை தட்டியது. கண்களில் நீர் முட்டியது. ராத்திரி முழுசும் தூக்கமில்லாமல் அந்தப் பாறையிலேயே உட்கார்ந்திருந்தான்.

கீழ்வானம் வெளுத்தது. சடக்கென்று எழுந்து ஜெரோனியக் காட்டோரமாய் பையனைத் தேடிப் போனான். காணவில்லை. தற்செயலாய் போவதுபோல், அங்கொன்றும் இங்கொன்றுமாயிருந்த கூலிக்காரர்களின் குடிசைகள் பக்கமாய் பொழுதுசாயும் வரை தேடித் திரிந்தான். எங்குமே பயல் தட்டுப்படவில்லை. 'பூம்பாறை போயிருப்பானோ?' தேடிப் போனான். அங்கும் இல்லை!

'பயல் கொடைக்கானலைத் தாண்டிப் போயிருக்கமாட்டான்' என்று நினைத்த பாண்டி, அவனைத் தேடி கையோடு கூட்டிவரக் கிளம்பினான். 'ஓட்டலிலோ, லாட்ஜிலோ வேலைக்குச் சேர்ந்திருக்கிறானா?' என்று படிபடியாய் ஏறி இறங்கினான். எந்தத் தடயமும் இல்லை. 'ஒருவேளை ஊருக்கே போயிருப்பானோ?' சீவலப்பேரி கோயில் கொடை வருவது நினைவுக்கு வரவே, 'ஒரு நடை கிளம்பிப்போய் சாமி கும்பிட்டுவிட்டு இவனையும் வந்திருக்கிறானா என்று பார்த்துவிடலாம்' என்று தன்னைச் சமாதானப்படுத்திக் கொண்டான்.

சித்திரை பிறக்கப் போகிறதென்றாலே சீவலப்பேரி களைகட்டிவிடும். ஆற்றோரமாய் நிற்கும் சுடலைமாடன்கோயில் வெள்ளையடித்து வர்ணம் பூசி, பந்தக்கால் ஊன்றிப் பளிச்சென்று நிற்கும். ஊரைவிட்டு எங்கெங்கோ போயிருந்தவர்கள் சித்ரா பௌர்ணமி அன்று குடும்பத்தோடு வந்து ஆற்றில் நீராடி, கூடி உட்கார்ந்து நிலாச்சோறு சாப்பிடுவது படுபிரசித்தம்!

மாதம் முழுசுமே எங்கு பார்த்தாலும் சனக்காடு நெரியும். கொடை துவங்கியதும் மேளதாளத்துடன் ஆட்டமும் பாட்டமுமாய் ஊரே திமிலோகப்படும். சேணங்கட்டி நின்று கண்களை அகலத் திறந்து சாமியாடிகள் அருள்வாங்கும் தோரணையே திகிலூட்டும். அங்கே வரிசையாகக் கருங்கிடாய்கள் பலிகொடுப்பதைப் பார்க்கவே குலைநடுங்கும்.

பொழுதுசாயும் நேரத்தில் ஆடுமேய்க்கும் பையன் ஒருத்தன் வந்து, தகவல் சொன்னதுமே அல்லியான் எழுந்து ஓடினான். ஊருக்கு வெளியே பாண்டி காத்திருந்தான். "அதான பாத்தேன்... எங்க சுத்தினாலும் கொடைக்கு வந்திடுவேனு தெரியும். நானும் நீ எப்ப வருவேனு காத்திட்டுத்தாம்ல இருந்தேன். கும்பக்காரிக ஆட்டத்தில உன்னைப் பத்திப் பாட்டுப்படிச்சு ஆடுதாளுகளாம். பாக்கலாம் வாரியா..."

"எனக்கு மனசே சரியில்லல... சாமி கும்பிட்டுட்டுப் பாளையங்கோட்டை போவணும்... சின்னவம் ஒருத்தனை இங்கிருந்து



... அங்க அவனைக் காங்கல. இங்க வந்துட்டானான்னு பாக்கணும்..."

'தன் மனைவி வேலம்மாள் செத்துப்போன விஷயத்தை அல்லியானிடம் சொல்லலாமா... வேண்டாமா?' என்று யோசித்தான்.

அதற்குள் அல்லியான், "என்னன்னே தெரியல... எனக்கு ஒரு வாரமா கெட்டகெட்ட சொப்பனமா தட்டுது. நானும் பல தடவை பாத்துட்டேன். ஆத்துல வெள்ளம் போற மாதிரி கனவு கண்டேன்னா அன்னிக்குப் பொழுது சாயுறதுக்குள்ள 'அடடே'ங்கற மாதிரி அகால எழவு விழுந்திடும். இந்த ரெண்டு நாளா ஒரே மாதிரி சொப்பனமா வருதுல... நம்ம தாமிரபரணி ஆத்துத் தண்ணி அப்படியே மாறி எதிர் தெசையில, கரைபுரண்டு போகுது. அதுல நம்ம சொடலமாடன் கோயிலையும் ராட்டினம் சுத்துனதுபோல உருட்டி இழுத்துட்டுப் போறது மாதிரி கண்டேன். எனக்குப் பயமா இருக்கில..." பாண்டியின் கைகளை இறுகப் பற்றினான் அல்லியான்.

அவன் புறங்கையில் ஒரு சொட்டுக் கண்ணீர் வெதுவெதுப்பாய் விழுந்தது. வெலவெலத்து ஏறிட்டான்.

"என்ன பாண்டி, இது...? நீ கங்கலங்கிப் பாத்ததில்லியே..."

"உஞ்சொப்பனம் நெசந்தாம்ல... எங்கோயில அகாலமா வெள்ளம் கொடைசாய்ச்சி இழுத்திடுச்சில..." என்றான் கரகரத்த குரலில்.

"நீ என்ன சொல்லுதே?"

தன் மனைவி வேலம்மாள் செத்துப்போனதையும் வளர்த்த பையன் பயந்து ஓடிப்போனதையும் பாண்டி விவரித்தான்.

இருவரும் வெகு நேரம் மௌனமாய் இருந்தனர். தூரத்தில் ஊருக்குள் சாமியாட்டத்துக்கான நையாண்டி மேளச்சத்தம் சன்னமாய்க் கேட்டுக்கொண்டிருந்தது.

"அதாம்ல... இனி நான் இந்தப் பக்கம் வரமாட்டேன். அவ செத்ததுமே எம்மனசில இருந்த தெம்பு போச்சு... நம்ம பயலுக எல்லாத்தையும் வரச்சொல்லி ஆளனுப்பிச்சிருக்கேன். வந்ததும் சொல்லிட்டுக் கிளம்புதேன். நீ இவனுக யார்கிட்டையும் வேலம்மாள் செத்துப்போனதைக் கடைசிவரைக்கும் சொல்லவேணாம்..." என்று பாண்டி சொல்லிக்கொண்டிருக்கும்போதே மொரப்பநாடு ராமசுப்பு முன்னால் வர... வரச்சொல்லியிருந்த சிலரும் எதிரே வந்துகொண்டிருந்தனர். சட்டென்று கலகலப்பாய் இருப்பதுபோல் தன்னை மாற்றிக்கொண்டான் பாண்டி. அல்லியான் முகத்தைத் தொங்கப்போட்டபடி நின்றான்.

"என்னல அல்லியான்... இஞ்சி குடிச்சியா... உம் மூஞ்சியில தெரியுதே..." நக்கலடித்தபடி வந்தான் மொரப்பநாடு ராமசுப்பு.

"பாண்டி இனி இந்தப் பக்கம் வரமாட்டானாம்.. அதைச் சொல்லிட்டுப் போவத்தான் வந்திருக்கானாம்..."

வந்தவர்களுக்கு அதிர்ச்சியாயிருந்தது.

"ஏதோ செய்கைக்குத்தான் கூப்பிட்டனுப்பிச்சிருக்கேன்னு நெனச்சோம். வட்டிக்குத் துட்டை வாங்கிக் காடுகரையெல்லாம் எழுதிக் குடுத்துட்டு, பொட்டைப்புள்ளைகளைக் கரையேத்த முடியாம நிக்கற நாலஞ்சு பேத்தைக் கூடக் கூட்டியாந்தோம். இவனுகள இப்பம் என்ன செய்யட்டும்..? சொல்லு..." என்றான் மொரப்பநாடு ராமசுப்பு.

சாக்குப்பையில் கொண்டுவந்திருந்த நாட்டு வெடிகுண்டுகளை எடுத்து ஏந்தி, "இம்புட்டு நாளும் எங்களை வாழவைச்சே... ஒங்கையாலயே இந்தக்

குண்டுகளை எங்கமேல எறிஞ்சி கொன்னுப்பிடு பாண்டி'' என்றான் வந்திருந்தவர்களில் ஒருவன்.

அல்லியான் எதுவுமே பேசவில்லை. எல்லோரும் அந்த மங்கலான நிலா வெளிச்சத்தில் பாண்டியின் முகத்தையே ஊடுருவிப் பார்த்தனர்.

''செரி... வாங்கல... இன்னிக்கு ஒரே நாள் ராத்திரியில சுத்துப்பத்துல இருக்க அத்தனை பெரிய மனுசன் வீட்டுக்கும் போவோம். 'என்னல சொல்லுதீக'ன்னு நிக்கேன். நகைநட்டு, துட்டு எவ்வளவு கெடைக்கோ அதை எல்லாரும் பகுந்துக்கங்க. இனி அதை வெச்சு எப்படியாவது பொழைச்சுக்கங்கல... கஷ்டப்படுத நம்ம தாயிபுள்ளைகளுக்கும் எதாச்சிலும் செய்யுங்க. இனி இந்தப் பாண்டி வருவான்னு மட்டும் எதிர்பார்க்காதீங்கல.''

''நீ என்ன பாண்டி இப்படிச் சொல்லுத...?'' என்றான் மொரப்பநாடு ராமசுப்பு.

''நிறுத்துல... எனக்குத் தெரியும். இந்தானிக்கு ஆத்தோரமா அணைக்கட்டுக்குப் போவம். அங்கருந்து எங்க போவலாம்னு சொல்லுதேன். வாங்கல...'' பாண்டி வேகமாய் நடந்தான். நாட்டு வெடிகுண்டுகளுடனும் ஆளுக்கொரு அரிவாளுடனும் வந்திருந்த ஏழெட்டுப் பேரும் தொடர்ந்து முன்னும்பின்னுமாய் மருதூர் அணையை நோக்கி நடந்தனர்.

**வ**ழக்கம்போல் பகலெல்லாம் ஊர் ஊராய் அலைந்துவிட்டு மரகாத்தலையிலிருந்து காலாங்கரை வழியாக மருதூர் அணையை நோக்கித் தற்செயலாய் பிரேமும் பரமசிவமும் வந்துகொண்டிருந்தனர். பிரேமின் கையில் ஐந்துசெல் டார்ச் இருந்தது. 'நைன் எம்எம்' பிஸ்டலும் லோடு பண்ணியிருந்தது. பரமசிவம் தன் ரிவால்வரை வீட்டிலேயே வைத்துவிட்டு வந்திருந்தார்.

''வெளியில் கிளம்புனா ரிவால்வரைக் கொண்டார வேணாமா? அதென்ன அருவாமணையாவே, வீட்டுல காய்கறி நறுக்கதுக்கு வெச்சிட்டு வந்திட்டீரு?''

''இல்ல சார்... நாமும் தெனமும் அலையுதோம். சுடுங்கன்னு நம்ம முன்னாடியா சார் வந்து நிக்கப்போறாம்? அவன் இந்தப் பக்கம் வந்திருந்தாம்னா இந்நேரம் அல்லியான் வந்து சொல்லியிருப்பான்ல? ரெண்டு நாளா அவனையும் காங்கலியே...''

''கொடை நடக்குற நேரத்துல நிச்சயமா அவம் நடமாட்டம் இருக்கும்னு கேள்விப்பட்டிருக்கேன். நாளைக்குச் சிவலப்பேரிப் பக்கம் போவணும்...'' பேசிக்கொண்டே, இருவரும் மருதூர் அணையை நெருங்கினர். 'ஹோவ்' என்ற சத்தத்துடன் மதகுக்கண்களில் தண்ணீர் பாய்ந்து கொண்டிருந்தது. நல்ல கோடைமழை பெய்து அபூர்வமாய் ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து நுங்கும் நுரையுமாய்ச் சுழித்தோடியது. அகன்று விரிந்த ஆற்றுக்கு வகிடெடுத்ததுபோல் தென்கரையோரமாய்க் கனத்த சுவர் நின்றது. கிழக்குப் பார்த்த மோட்டார்ரூமைத் தாண்டி பின்புறமாய் ஒரு ஆள் நுழையும்படியான படிக்கட்டில் இறங்கினால் எதிரே தண்ணீர் நடுவே பாதைபோல் கற்சுவர் கண்ணுக்கெட்டிய தூரம்வரை மேற்கே நீண்டுகிடக்கும். கால்வாய் மதகோரமாய் பெருங்கொண்ட புளியமரங்கள் உயர்ந்து நின்றன. அதையொட்டிய ஒத்தையடிப் பாதையில் இரண்டு பர்லாங் நடந்தால் மருதூர் எதிர்ப்படும். அதையும் கடந்து வந்தால் சிவலப்பேரியிலிருந்து பாளையங்கோட்டைக்குப் போகும் தார்ரோட்டின் இடுப்பில் மிதிக்கலாம்.



... இருக்குது... ... செத்த நேரம் உட்கார்ந்துட்டுப் போலாம் சார்... நடந்து நடந்து கால் வலிக்கி...''

''பேய் பிசாசுதாம்வே இந்நேரத்தில் காத்து வாங்கும்... சீக்கிரம் வீடு போய்ச் சேர வேணாமா?'' பிரேம் முணுமுணுக்க... இருவரும் அணையின் மோட்டார்ரூமைத் தாண்டி படிக்கட்டில் இறங்கி அகலமான கல் சுவரின் மேற்பரப்பில் காலைத் தொங்கப்போட்டு உட்கார்ந்தனர். ஜில்லென்று குளிர்ச்சியாய் இருந்தது.

அப்போது எதிரே கூப்பிடு தூரத்தில் தங்களை நோக்கி ஏழெட்டுப் பேர் பேசிக்கொண்டே வருவது மங்கலாகத் தெரிந்தது. ஏதோ உள்ளுணர்ச்சியில் தன் இடுப்பிலிருந்த பிஸ்டலை எடுத்து லாக்கை 'டிக்' என்ற ஓசையுடன் ரிலீஸ் செய்தார் பிரேம்.

பரமசிவம் லேசாய் சிரித்தார். ''ஓடுதண்ணியில 'பானைப்பரி' போட்டு மீன் அள்ள வருவானுக சார். ஒங்கபாட்டுக்குச் சுட்டுப்புடாதீக...'' வருவது யார் என்று மறைந்து நின்று கவனிக்கத் தோதில்லை. முதுகுக்குப் பின்னால் மேட்டில் ஆள் உயரச் சுவர். ஒரு ஆள் மட்டும் ஏறிப்போகும்படி உயரமான படிக்கட்டு. இரண்டுபுறமும் தண்ணீர் ஓடிக்கொண்டிருந்தது. எதிரே வந்தவர்கள் நெருங்கிக்கொண்டிருந்தனர்... ஒரு பதினைந்து அடி இடைவெளியில்!

இடதுகையில் டார்ச்சை நீட்டி, வலது கையில் பிஸ்டலை நிமிர்த்தினார் பிரேம்.

''அப்படியே நில்லுங்கல... யார்ல நீங்க?'' வந்தவர்கள் அப்படியே நின்றனர். பிரேம் டார்ச்சின் பட்டனை அழுத்தினார். இருட்டைக் கிழித்து வெளிச்சம் பாய்ந்தது. பிரேமின் அடிவயிற்றில் சில்லிட்டது. நேருக்குநேராய் வலதுகையால் அரிவாளைப் பிடித்தபடி, கண்கூசப் பாய்ந்த திடீர் வெளிச்சத்தை இடதுகையால் மறைத்தபடி, உருமாலுடன் நெடுநெடு வென்று நின்றான் பாண்டி!

பிரேமுக்கு ஒரு விநாடி ஒன்றுமே ஓடவில்லை.

''அதாருல செறுக்கிபுள்ளே... அமத்துல லைட்டை. நீ யாருல?'' இருட்டுக்குள்ளிருந்து டார்ச் அடித்ததால் எதிரே நிற்பது யாரென்று பாண்டிக்குத் தெரியவில்லை.

அடிவயிற்றிலிருந்து குரலெடுத்த பரமசிவம், ''சார், பாண்டி... சார். சுடுங்க சார்'' என்றார் பதட்டத்துடன்.

''லே... செறுக்கிபுள்ள, போலீஸுலேய்!'' – பாண்டியின் சத்தத்தைத் தொடர்ந்து இமைக்கும் நேரத்தில் பிரேமின் காதை உரசிக்கொண்டு வந்த நாட்டு வெடிகுண்டு, பின்புறமிருந்த சுவரில் மோதி 'திடும்' என்ற சத்தத்துடன் நெருப்புக்குண்டம் கிளப்பியது. டார்ச்சை தண்ணீருக்குள் வீசிவிட்டு நேருக்குநேராய் சுட்டார் பிரேம்.

''டுமீல்... டுமீல்...'' கிடுகிடுக்கும் ஓசை அதிர்ந்து எதிரொலித்தது. சிலர் கால்வாயிலும் ஆற்றிலும் அலறியபடி தண்ணீருக்குள் சரிந்து விழுந்த சத்தம் கேட்டது. ஆறு ரவுண்டுகள் சுட்டபின் சுடுவதை நிறுத்தினார். இருட்டுக்குள் உற்றுப்பார்த்தார் பிரேம். ''எதிரே நின்றவர்கள் எல்லோரும் குளோஸ்'' என்ற முடிவுடன் இரண்டு எட்டு முன்னால் வைத்தார். பின்னேயிருந்து ''லேய் செறுக்கிபுள்ள'' என்ற வெறித்தனமான சத்தத்துடன் தண்ணீருக்குள்ளிருந்து அரிவாளுடன் எழுந்தான் பாண்டி!

'குபுக்' என்று தண்ணீர் விலகித் தெறித்த திசையில் சுதாரித்துத் திரும்பி

சரமாரியாய் பாய்ந்து சொருகின. தலைகுத்து நின்ற பரமசிவம், ஒரு தண்ணீருக்குள் பாய்ந்தார். பிரேம் சுடுவதை நிறுத்தினார். ''மொதல்ல மேல ஏறுவேய்...'' பதறினார். ப்ரமசிவத்தைத் தூக்கிவிட்ட பிரேம் மெல்லிய குரலில், ''ரவுண்ட்ஸ் தீந்து போச்சு'' என்றார் பதட்டத்துடன்.

''ஒருத்தன் பொழைச்சிருந்தாலும் இப்ப நாம தப்பிக்க முடியாது. ஒடனே இங்கருந்து ஓடீருவோம்...'' பரபரத்த பரமசிவம், சட்டைப் பையிலிருந்த போலீஸ் விசிலை அவசரமாய் எடுத்தார். 'பீப்... பீப்... பீப்...!' என்று ஊதியபடி, ''பார்ட்டி ரவுண்டப்... பார்ட்டி ரவுண்டப்..'' என்று நாலா திசைக்கும் திரும்பிக் கத்திக்கொண்டே பிரேமின் கைகளைப் பிடித்து இழுத்தபடி உயரமான படியில் பாய்ந்து ஏறினார். அணையின் மோட்டார் ரூமைக் கடந்து வலதுபக்கம் திரும்பி மருதூர் பாதையில் பிரேம் பின்தொடர... ஓடினார். வழிநெடுகிலும் மீண்டும், ''பார்ட்டி ரவுண்டப்... பார்ட்டி ரவுண்டப்...'' என்று கத்திக்கொண்டே விசில் ஊதியபடி இருவரும் மருதூரைக் கடந்தனர். மூச்சு வாங்கியது. ''ஊர் முழிச்சிடும்... சத்தம் போடாம வாரும்'' என்றார் பிரேம்.

''ஒங்களுக்குத் தெரியாது சார். இந்த ஊர்லயே அவனுக்கு சப்போட்டு இருக்கும். பாண்டியோட ஒடம்பொறந்தா வாக்கப்பட்ட ஊரு இது. பெரிய போலீஸ் பார்ட்டியே வந்து இறங்கியிருக்குன்னு நெனச்சிக்கிடட்டும்..''

இருவரும் மருதூரைத் தாண்டி மெயின்ரோட்டுக்கு வந்தபோது சிவலப்பேரி பக்கமிருந்து மணல் லோடு ஏற்றிய அரைபாடி லாரி ஒன்று நிதானமாய் வந்துகொண்டிருந்தது. நிறுத்தச் சொல்லி கைநீட்டினர். லாரி ஸ்லோவானது. எங்கே நிறுத்தாமல் போய்விடுவானோ என்று பயந்த பிரேம், தாவி ஏறிய வேகத்தில் ரவைகள் தீர்ந்த தன் கைத்துப்பாக்கியை டிரைவரின் நெற்றிப் பொட்டில் வைத்து ''நிறுத்துல'' என்றார். டிரைவர் வெலவெலத்து சடன் பிரேக் அடித்தார். பரமசிவமும் ஓடிவந்து ஏறியதும், ''வெலகுல'' என்றார். டிரைவர் ஸ்டியரிங்கை விட்டு நகர்ந்தார். பிரேம் லாரியைப் படுவேகத்தில் கிளப்பி எஸ்.பி-யின் கேம்ப் ஆபீஸில் போய் நிறுத்தினார்.

''சார், பாண்டியை மருதூர் டேம்ல சுட்டுட்டேன் சார். ஏழெட்டுப் பேர் செத்திருப்பானுக சார்.''

''என்ன நடந்துச்சுன்னு நிதானமா சொல்லு பிரேம்!'' எஸ்.பி. கேட்டுக்கொண்டிருக்கும்போதே பிரேம் தனது இடது விலாவில் ஈரமாயிருந்ததை உணர்ந்தார். சுவரில் மோதி வெடித்த நாட்டு வெடி குண்டின் சிதறல் பிரேமின் இடது விலாவைக் கிழித்து ரத்தம் கசிந்தது அப்போதுதான் தெரிந்தது.

''மொதல்ல ஃபர்ஸ்ட் எய்டு பண்ணிக்க பிரேம்.. ஏ.ஆர். பார்ட்டி ரெண்டு செக்‌ஷனை அலர்ட் பண்ணுங்க...'' உடனே எஸ்.பி. ஜீப்பில் கிளம்பினார். பிரேமும் பரமசிவமும் ஏறிக்கொண்டனர்.

சம்பவம் நடந்த இடத்தை எஸ்.பி. பார்வையிட்டார். போலீஸார் மருதூர் அணையைச் சுற்றி துப்பாக்கிகளுடன் நின்றனர். ''இங்கதான் சார் குண்டு வீசினான். இங்க நின்னுதான் சார் ஃபயர் ஓப்பன் பண்ணினேன்...'' – பிரேம் ஓடி ஓடி விளக்கினார். தண்ணீருக்கு நடுவே பாதைபோல் நீளும் அந்தச் சுவரின் மேற்பரப்பில் எஸ்.பி. டார்ச் அடித்துப் பார்த்தார். திட்டுத்திட்டாய் ரத்தம் உறைந்து கிடந்தது. அருகே ஒரு கோணிச் சாக்கு ஈரமாய் கிடந்தது. லேசாய் விலக்கி லைட் அடித்தார். அந்தச் சாக்கு நிறைய நாட்டு வெடிகுண்டுகள் நனைந்து கிடந்தன. எச்சரிக்கையுடன் அதை வெளியில் எடுத்து வரிசையாய் ஒரு கான்ஸ்டபிள் அடுக்கினார். மொத்தம்



''யெஸ்... இது பாண்டி குரூப்பேதான்... கேஷுவாலிட்டி நிறைய இருக்கும்போல.. மறு உத்தரவு வரும்வரைக்கும் உடனே ஸ்ரீவைகுண்டம் ஷட்டர்களை மூடச் சொல்லுங்க. விடிஞ்சதும் டெட்பாடி ஒதுங்கியிருக்கானு ரெண்டு கரையிலும் சர்ச் பண்ணுங்க. ஆத்துல நல்ல இழுவை இருக்கு. இங்க பாடி எதுவும் கிடக்க சான்ஸ் இல்லை.''

மறுநாள் மருதூரிலிருந்து ஸ்ரீவைகுண்டம் வரை ஆற்றை போலீஸ் சலித்தெடுத்தது. எதுவுமே தட்டுப்படக் காணோம். இரண்டு நாட்களுக்குப் பின்னால் ஸ்ரீவைகுண்டத்துக்குச் சற்று முன்பு புதருக்குள் கொஞ்சம் ஊதிப் போன நிலையில் ஒரே ஒரு பிணம் ஒதுங்கியிருந்தது. அதன் தொண்டைக்குழியிலும் நெஞ்சிலும் குண்டு துளைத்த அடையாளங்கள் இருந்தன. உருவம் சற்று வளர்த்தியாய் இருந்தது. இன்னாரென்று தெரியவில்லை. உடனே போலீஸார் சிவலப்பேரியிலிருந்து பாண்டியின் அண்ணன் மலையாண்டியையும் ஊர்க்காரர்கள் சிலரையும் அடையாளம் காட்ட அழைத்து வந்தனர்.

சற்று தூரத்தில் கைகளை விரித்து அகாலமாய் கிடக்கும் உடலைப் பார்த்ததுமே மலையாண்டிக்குக் 'கப்'பென்று நெஞ்சடைத்தது. ஓடிப்போய் உற்றுப் பார்த்தார். அவர் முகத்தில் நிம்மதி படர்ந்தது. ஆனாலும், கண்களில் ஏனோ கரகரவென்று கண்ணீர் பெருக்கெடுத்தது. ''இது பாண்டியில்லை... அசப்பில பார்த்தா அல்லியானப் போலயில்ல இருக்கு'' என்றார் அடையாளம் காட்ட வந்த ஒருத்தர்.

போலீஸாருக்குத் தலைசுற்றியது. 'அதெப்படி? பாண்டியுடன் அல்லியானா?' குழம்பினார்கள். ''அல்லியான் இப்படி இருக்கமாட்டாம். நாஞ்சொல்லுதேன்... இது மொரப்பநாடு ராமசுப்புவாக்கும்'' என்றார் இன்னொருத்தர். செத்தது இன்னாரென்று போலீஸாரால் ஒரு முடிவுக்கு வரமுடியவில்லை. கிடப்பது பாண்டி இல்லை என்பது மட்டும் உறுதியானது. ''டெட்பாடி பப்ளிக் கையில கெடச்சா 'லா அண்ட் ஆர்டர்' ப்ராப்ளம் கிரியேட் ஆகும்...'' என்ற இன்ஸ்பெக்டர் ஒருவர், கான்ஸ்டபிள் ஒருவரின் காதில் ஏதோ முணுமுணுத்தார். பிறகு அடையாளம் காட்ட வந்தவர்களிடம் ''இங்க பாத்ததை யார்கிட்டயும் மூச்சுவிடக்கூடாது... தெரிஞ்சதா?'' என்று எச்சரித்து அனுப்பி வைத்தனர். சற்று நேரத்தில் ஒரு கான்ஸ்டபிள் பெட்ரோல் டின்னுடன் வந்தார். பிணத்தின் மீது அருகில் இருந்த செடி செத்தைகளைப் பரப்பி பெட்ரோலை ஊற்றித் தீ வைத்தார். குபீரென்று கிளம்பிய தீ வெகுநேரம் நின்று எரிந்து நீர்த்துத் தணிந்தது!

**ம**றுநாள் நள்ளிரவில், மேலெல்லாம் சிராய்ப்புக் காயங்களுடனும் நீர்க்கருவை முள் வரிவரியாய்க் கிழித்த ரணங்களுடனும் நொண்டியபடி பூம்பாறை வந்து சேர்ந்தான் பாண்டி. இடது தொடையில் வேட்டியைக் கிழித்துக் கட்டுப் போட்டிருந்தான். துப்பாக்கிக் குண்டு உரசிச் சென்றதில் லேசாய் சதைப் பிய்ந்திருந்தது. யார் கண்ணிலும் படாமல் அங்கிருந்து தள்ளாடியபடி கோம்பைக்காடு போனான். நாட்டு வைத்தியர் ஒருவர் வீட்டிலேயே சில தினங்கள் தங்கியிருந்து காயங்களை ஆற்றிக் கொண்டான்.

குண்டுப்பட்டியில் விஷயம் கேள்விப்பட்ட சிலர், கோம்பைக்காட்டுக்குப் போய்ப் பார்த்தனர். ''ஒண்ணுமில்ல... வெவசாயத்துக்கு ஊர்ல கிணறு வெட்டுதோம். கல் வெடி வெச்சேன். தவறுதலா வெடிச்சிருச்சு...'' என்றான்.

''சரி! உம்ம பெஞ்சாதி எங்க கோனாரே? இங்க வந்து இப்படிக் கெடக்குதிகளே...''

''வெடிச்சுச் செதறுன கல்லுமேல நின்னவ பொட்டுல அடிச்சு அந்த



எல்லோரும் இரக்கப்பட்டனர். ''வருத்தப்படாதீங்க கோனாரே... ஒங்களுக்கு இப்படியொரு கெதி வரப்பிடாது. தாயாபுள்ளையா நாங்க இருக்கோம்...'' ஆறுதல் சொல்லி கைத்தாங்கலாக அழைத்து வந்தனர்.

பூம்பாறைக்குப் போவதைக்கூட தவிர்த்து வெளிநடமாட்டமே இல்லாமல் பிரமைபிடித்தவன் போல் குண்டுப்பட்டியில் இருந்தான் பாண்டி. கூலிக்காரர்கள் அவ்வப்போது சாப்பாடு கொடுத்தனர். ''இப்படி நேரத்துக்குக் கஞ்சித் தண்ணி வெச்சுக் கொடுக்கக்கூட ஆளில்லாம எத்தினி நாளைக்கு கெடப்பீரு? பேசாம ரெண்டாந்தாரமா ஒரு பொண்ணைப் பார்த்துக் கல்யாணம் முடிச்சுக்குங்க. வருத்தப்பட்டுக்கிட்டே இருந்தா, போன மனுசி திரும்பியா வரப்போறா?'' என்றனர்.

இவர்கள் சொல்லுவது எதையுமே காதில் வாங்காமல் இருந்தான்.

மருதூர் அணையில் சுவரில் பட்டுத் தெறித்த குண்டுச் சிதறல் பிரேமின் விலாவுக்குக் கீழ் ஏற்படுத்திய காயம் ஆறி தையல் பிரிக்க ஒரு வாரம் ஆனது.

ஒரு நாள் முன்பின் தெரியாத பெரிய மனிதர்கள் நாலைந்து பேர் பிரேமைப் பார்க்க ஆரஞ்சுப் பழங்களுடன் ஆஸ்பத்திரிக்கு வந்தனர்.

''என்ன தம்பி, அப்படிப் பாக்கீக..? பாண்டி எங்க தாய்புள்ளக்காரன்தான். ஒப்புக்கிடுதோம். ஆனா, அவம் என்னிக்கு வந்து எங்க கதவைத் தட்டுவாம்னு பயந்துகெடக்கோம். நாங்க எல்லாம் அவனுக்குத் துரோகம் பண்ணிட்டோம்னு சொல்லுதானாம்! எந்த நேரமும் எதுவும் நடக்கும். வெறும் பயலுக அவனுக்கு சப்போட்டு பண்ணுவானுக. இத்தனை வருஷத்துல நீங்கதாம் அவனைப் பிடிக்க முயற்சிபண்ணியிருக்கீக... அவன் உசிரோட திரியுதவரைக்கும் எங்களுக்கு நிம்மதியில்ல. தூக்கமில்ல. எப்படியும் நீங்க அவனைச் சுட்டுக் கொன்னுபுடணும். ஒங்களையும் இனி லேசுல விடமாட்டான். அவன் யானை போல. வஞ்சம் வெச்சாம்னா என்னிக்கிருந்தாலும் பழிவாங்காம விடமாட்டான். நீங்க சுதாரிப்பா இருக்கணும் தம்பி...'' என்றனர்.

''ஒரு தனி மனுஷன் தலைமறைவா இருந்துக்கிட்டு எது வேணும்னாலும் செய்வாம்னா... சட்டம் எதுக்கு, போலீஸ் எதுக்கு? அவன் முடிவு ஏந்துப்பாக்கியிலதான் இருக்கு. நான் அவனை விடவே மாட்டேன்!'' – ஆவேசப்பட்டார் பிரேம்.

அவர் டிஸ்சார்ஜ் ஆகி மீண்டும் டூட்டிக்கு வந்ததுமே ஸ்டேஷனில் எல்லோரும் 'எப்படி நடந்தது?' என்று திரும்பத் திரும்பக் கேட்டனர். பிரேமுக்கு அலுத்துப்போனது.

''விடுங்கப்பா... சும்மா போட்டு நச்சரிக்காதீங்க... அவனைத் தேடிப்புடிச்சுச் சுடலேன்னா நான் யூனிஃபார்ம் போட்டதுக்கே அர்த்தமில்ல'' என்றபடி இருட்டிய பின் மகராஜநகரிலுள்ள தன் வீட்டுக்குக் கிளம்பினார் பிரேம்.

ரோட்டோரமாய் சிறிய பாலம் போலிருந்த சிமெண்ட் திட்டில் இரண்டு உருவங்கள் உட்கார்ந்து பேச்சு மும்முரத்தில் இருந்தது தெரிந்தது. அவர்கள் பீடி குடித்துக்கொண்டிருக்க வேண்டும். நெருப்பு தெரிந்தது. பையிலிருந்த சிகரெட்டை எடுத்தார் பிரேம். தீப்பெட்டியை ஸ்டேஷனிலேயே வைத்துவிட்டது நினைவுக்கு வந்தது. நெருப்புக் கேட்க நினைத்து, உட்கார்ந்திருந்தவர்களை நெருங்கினார். அவர்கள் பேசியது தெளிவாகக் கேட்டது. திடுக்கிட்ட பிரேம் அப்படியே நின்றார். ரோட்டோரமாய் சிறுநீர் கழிக்கப் போவதுபோல் உட்கார்ந்தார். மேலும் காதைத் தீட்டிக் கேட்டார்.

''எந்தம்பிக்காரன் பயந்து போயி, காச்ச வந்து ஒரு வாரமா படுத்த படுக்கையா கெடந்தாம்ல. ரெண்டு நாளாதான் எந்திரிச்சு நடமாடுதான்...''

''ஏன் பேயிகீயி அடிச்சிருச்சோ?''

''இல்லல... பாண்டி தெரியுமா... அதாம்ல சீவலப்பேரி பாண்டி...! அவரு பொஞ்சாதிய வெட்டிக் கொன்னு பொதைச்சுப்புட்டாராம். அதைப் போயி இவம் கண்ணால பாத்திருக்கான்!''

''ஏல.. நீ என்னல சொல்லுத..?''

''நெசந்தாம்ல! அவரு எங்க தாயிபுள்ளக்காரர்லா. எங்க வீட்டுக்கெல்லாம் வருவாரு. எந்தம்பிய எங்கயோ ஒரு மலைக்குக் கூட்டிட்டுப் போனாராம். போன இடத்துல இதப் பாத்துட்டுப் பயந்து லாரியைப் புடிச்சு மருதைக்கு வந்திருக்கான். அங்க ஒரு காய்கறிக்காரர்கிட்டே வேலையா இருந்திருக்கான் கொஞ்ச நாளு. வீட்டுக்குப் போகணும்னு அழுதிருக்கான். நாகர்கோயில் போற லாரியில ஏத்தி அனுப்பிச்சுட்டாக. நல்லவேளை... அங்க நான் போவல...''

பிரேமுக்கு மேலெல்லாம் மின்சாரம் பாய்ந்தது போலிருந்தது. என்ன செய்வது என்று ஒரு தரம் யோசித்தார். அதற்குள் ஆள் அரவம் கேட்டுப் பேசிக்கொண்டிருந்த இருவரும் சட்டென்று பேச்சை நிறுத்தினர். படபடப்புடன் அவர்களை நெருங்கிய பிரேம், ''தீ குடுக்கிறீகளா?'' என்றபடி அருகில் போனார். உற்றுப்பார்த்தார். இருவருமே பதினைந்து, பதினாறு வயதிருக்கும் சின்னப் பையன்கள். 'பெரிய மனுஷன் வந்து நம்மகிட்ட நெருப்புக் கேட்குதாரே' என்று நெளிந்தனர். அவர்களை எப்படி விசாரிப்பது என்று யோசித்த பிரேம்: ''சும்மா நெருப்பு கொடுங்க தம்பி...''

''இங்க பக்கத்தில போலீஸ் ஸ்டேஷன் எங்கருக்கு தெரியுமா? என் தாய்புள்ள ஒருத்தன் ஏட்டா இருக்கான். பாக்க வந்தேன். எங்கன இருக்குன்னு தெரியலயே!''

''இதோ... கிட்டத்தான். செத்த நடந்தா வந்திடும்!''

''நானும் அந்தானிக்கிருந்துதான் வருதேன். ஏங்கண்ணுல தட்டுப்படலயே... வந்து காண்பிச்சிகனா, சீக்கிரமா பாத்துட்டு பஸ் புடிச்சு ஊர் போய்ச் சேருவேன்!''

ஏதோ அசலூர் ஆள் போல என்று நம்பிய பையன்கள் இருவரும், ''வாங்க.. காட்டுதோம்'' என்று முன்னால் நடந்தனர். ஸ்டேஷன் வாசல் வந்ததும், கொத்தாக இருவரையும் சட்டைகாலருடன் பிடித்து, தப்பவிடாமல் ஸ்டேஷனுக்குள் இழுத்துச் சென்றார் பிரேம். பையன்களுக்கு என்ன நடக்கிறதென்று புரியாமல் மிரண்டு விழித்தனர். பயத்தில் நடுங்கினர்.

''பாண்டியைப் பத்தி ஒங்களுக்கு என்னல தெரியும்? சொல்லுங்கல... ஒங்க ரெண்டு பேத்தையும் உரிச்சி உப்பைத் தடவிப்பிடுவேன்



''ஒண்ணுமே தெரியாதே... நாங்க ஒண்ணும் பேசலயே...''

செருகியிருந்த ஒரு பிரம்பை வேகமாய் உருவி எடுத்தார். 'விர்ர்ர்' என்று காற்றைக் கிழிக்கும்படியான சத்தத்துடன் பையன்கள்மேல் அடி விழாமல் வீசினார். இருவரும் அதிர்ந்து நடுங்கினர். ஒருவன் சரசரவென்று அந்த இடத்திலேயே ஒண்ணுக்கு இருந்தான்.

''மருதூர் இன்ஸிடன்ட் நடந்ததிலிருந்து நீங்க ஒரு மாதிரிதாம் திரியுதீங்க... சின்னப் பயலுகளக் கூட்டியாந்து கேட்டா அவனுகளுக்கு என்ன தெரியும்..? அதே எண்ணத்திலே திரியுததால உங்க காதுல அப்பிடி விழுந்திருக்கும். அவுனுகள வெரட்டி விடுங்க தம்பி, பாவம்'' என்றார் ஒரு ஏட்டையா. ''ஒங்க சோலியப் பாருங்க அண்ணாச்சி...'' - சிடுசிடுத்தார் பிரேம். பயமுறுத்தி விஷயத்தை வாங்க கான்ஸ்டபிள் பேச்சிப்பாண்டியைக் கூப்பிட்டார்... ''ரெண்டு பயலுகளையும் தலைகீழாய்க் கட்டித் தொங்கவிடுவேய்!'' பையன்கள் திருதிருவென்று முழித்தனர்.

பிரேம் இரவு முழுவதும் இருவரையும் அமட்டிப் பார்த்தார். அடித்தும் பார்த்தார். ம்கூம்... ''ஒண்ணுமே தெரியாதே, எதுவுமே பேசலயே...'' என்று அழுது சாதித்தனர்.

''ஒங்க ரெண்டு பேத்துல எவனுக்குல தம்பி இருக்கான்?'' என்றதும் காய்கறிக்காரியின் மூத்த மகனை நோக்கி, இருவரில் ஒருவன் கைநீட்டினான். ''உன் வீடு எங்கல இருக்கு?''

தயங்கித் தயங்கி விவரம் சொன்னான். இருவரையும் ஒரு ரூமில் பூட்டி வைத்துவிட்டு விடிவதற்குமுன் ஜீப்பை எடுத்துக்கொண்டு கிளம்பினார் பிரேம்.

அவன் சொன்ன வீட்டைக் கண்டுபிடிப்பதில் சிரமம் இல்லை. ஜீப்பைச் சற்று தள்ளி நிறுத்திவிட்டு அந்த வீட்டுக்குப் போனார். சின்னவன் மட்டும் இருந்தான். அவனாகத்தான் இருக்க வேண்டும் என்று யூகித்தார்.

''உங்கம்மா, அப்பா எங்க தம்பி?''

''யாவாரத்துக்கு மார்க்கட் போயிருக்காக!''

''என்னை யார்னு தெரியுதால?''

''தெரியல...''

''ஒந்தாயுபுள்ளதாம்ல! எங்கூட வந்து ஒங்கம்மா இருக்க இடத்தைக் காண்பிலே... முக்கியமான தாக்கல் ஒண்ணு சொல்லணும்...''

''சரி...'' என்று தலையாட்டியபடி கதவைச் சாத்திவிட்டு வந்தான். பிரேம் ஜீப்பில் ஏறிக்கொண்டு அவனையும் ஏறி உட்காரச் சொன்னதும், பையனுக்கு ஜீப்பில் உட்கார்ந்த சந்தோஷம்... ''இங்க ஒரு எடத்துக்குப் போயிட்டு அப்புறமா ஒங்க அம்மாவைப் போயி பாக்கலாம்டே!''

''சரி...'' அதற்கும் தலையாட்டினான். வழியில் ஒரு கடையின் முன் நிறுத்தினார். கைநிறையக் கடலைமிட்டாயும் முறுக்கும் வாங்கிக் கொடுத்தார். வாங்கிக்கொண்டான். ஜீப் நாகர்கோவில் மெயின் ரோட்டில் திரும்பி விரைந்தது. வழியில் அவனிடம் எதுவுமே பேசவில்லை. மூன்றடைப்பு வந்ததும் ஒரு பாலத்தின் அருகே ஜீப்பை நிறுத்தினார்.

''ஒங்கம்மா எங்கிட்ட சொல்லுச்சுல, எப்படில நீ பயப்படாம தப்பிச்சு வந்தே? ரொம்ப கெட்டிக்காரன்டே நீ!'' பையன் பிரேமையும் ஜீப்பையும் மாறி மாறிப் பார்த்தான். ''எனக்கு எல்லாமே தெரியும்ல. பாண்டியே

சற்று யோசித்த பையன், ''அவரு பொஞ்சாதிய வெட்டி வீட்டுக்குள்ளேயே பொதச்சுட்டாருல்லா'' என்றான். ''அதான் எனக்குத் தெரியும்டே.. அவரு நல்லவரோ கெட்டவரோ... என்ன இருந்தாலும் நம்ம தாய்புள்ளக்கார மனுசன் இல்லையா!''

'ஆமாம்' என்பது போல் மேலும்கீழுமாய்த் தலையாட்டினான். ''இப்ப பாண்டி இங்க வந்தாருன்னா அவருக்குப் பெரிய ஆபத்து இருக்குல... போலீஸ் புடிச்சிடும். இங்கிட்டு வரவேணாம்னு ஒடனே தகவல் சொல்லணும்... எங்கயிருப்பாருன்னு சொல்லு. நான் போய்ச் சொல்லுதேன்!'' சற்றுத் தயங்கி யோசித்தவன், கைகளை உயர்த்தி ''கொடைக்கானல் பூம்பாறைக்கிட்ட'' என்றான். பிரேமின் மேலெல்லாம் சிலிர்த்தது. ''மொட்டையாச் சொன்னா எப்பிடி? அவரை ஒடனே காப்பாத்தணும்ல... ஒன்னப் பூம்பாறைக்குக் கூட்டிட்டுப் போனா, அவரு இருக்க எடத்தைக் காண்பிப்பியா? ஜீப்லயே போவலாம்! வந்து ஒங்க அம்மாகிட்டே நான் சொல்லிக்கிடுதேன்ல...'' என்றதும், இன்னும் பெரிதாய்த் தலையாட்டினான். பிரேமுக்கு இருப்புக்கொள்ளவில்லை. ஜீப்பை மின்னல் வேகத்தில் கிளப்பி வந்து, கேம்ப் ஆபீஸ் முன் ஒரு திருப்பத்தில் நிறுத்திவிட்டுத் தனியாய் போய் எஸ்.பி-யிடம் விஷயத்தைச் சொன்னார். ''வெரிகுட்.. அதே ஜீப்ல பூம்பாறை கிளம்புங்க, க்ரைம் இன்ஸ்பெக்டர் ஒருத்தர் தலைமையில ஒரு ஸ்பெஷல் பார்ட்டி ஆயுதங்களோட உங்களை ஃபாலோ பண்ணி வரும். எப்படியும் 'ஷூட்' பண்ணியாவது ஆளைக் கொண்டுவந்திருங்க... அவசியம்னா கொடைக்கானல் ஸ்டேஷன்ல கொஞ்சம் ஸ்ட்ரென்த் எடுத்துக்கங்க. நான் மதுரை எஸ்.பி-யிடம் போன்ல பேசிடுறேன்.''

பையனுடன் பிரேமின் ஜீப் கொடைக்கானலை நோக்கி நிதானமாய் ஊர்ந்து கிளம்பியது. ஒரு பர்லாங் இடைவெளி விட்டு 'த்ரீ நாட் த்ரீ ரைஃபிள்கள்' மற்றும் ரிவால்வர்கள் சகிதமாக 16 பேர் கொண்ட போலீஸ் டீம், வேனில் பின்தொடர்ந்தது!

**பா**ண்டியின் சிராய்ப்புக் காயங்களும் தொடையில் குண்டுகிழித்த காயமும் நன்றாய் ஆறிவிட்டன. நல்ல இறங்குவெயில் நேரத்தில் எதிரே பள்ளத்தாக்கில் அடுக்கடுக்கான பாத்திகளில் வேலம்மாள் நட்டு, இப்போது அறுவடைக்குத் தயாராய் இருக்கும் காரட் பயிர்களை வெறித்துப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தான். அக்கம்பக்கம் விவசாயம் பார்ப்பவர்களும் ஜெரோனியக் காட்டில் கூலிக்கு இருந்தவர்களுமாய் ஏழெட்டுப் பேர் நெருங்கி வந்து துண்டை உதறித் தரையில் போட்டு உட்கார்ந்தனர்.

''அவரு அப்படித்தானப்பா சொல்லுவாரு. நாமதான் ஆகவேண்டியதப் பாக்கணும்.''

''வாங்க.. வாங்க, என்ன ஒருவடியா ஒண்ணுசேர்ந்து வந்திருக்கீக? வில்லங்க வெவகாரமா?''

''அதெல்லாமில்ல கோனாரே, எல்லாம் ஒரு, காரியமாத்தான்...''

''சொல்லுங்க..''

''கோனாரே, எப்படித் திரிஞ்ச மனுசனையா நீரு? ஒம்மை எதுக்க நின்னு பாத்தா ஈரக்கொலை கருகுது. எத்தனை நாளைக்கு இப்படி நேரத்துக்கு அன்ன ஆகாரம் வெச்சுக் குடுக்க நாதியில்லாம ஒத்தப் பனையா நிப்பீரு?''

''அதுக்கென்ன செய்யச் சொல்லுதீக அண்ணாச்சி?''



ஒரு பொண்ணைப் பாத்துத் தாலியக் கட்டிக் கூட்டியாரும்.''

''இல்ல, இனி அந்தப் பக்கம் போறதில்லன்னு முடிவெடுத்துட்டேன். ஏந்தாயிபுள்ள சாதிசனமெல்லாம் நீங்கதாம்...''

''இது நெசம்னா நாங்க சொல்றதக் கேட்கணும்...''

''சொல்லுங்க...''

''பூம்பாறை மேலத்தெருவுல நம்ம ஆசாரி இருக்காரு தெரியும்ல...''

''ஆமா.''

''பாவம், ஒண்ணுக்கு ரெண்டு சமைஞ்ச புள்ளைகளை வெச்சுக்கிட்டுக் கரையேத்த முடியாம கஷ்டப்படுறாரு. தாயில்லாப்புள்ளைக. அதிர்ந்து பேசாத, அழகு பெத்த புள்ளைக... ஆசாரியார் சம்மதிப்பாரோ, மாட்டாரோன்னு நெனச்சு உம்மைக் கேட்காம அவருகிட்டயே பேசிப் பார்த்தோம். 'சாதி கெடக்கட்டும்யா சாதி... கோனாருக்குப் பொண்ணு கொடுக்கறதுக்கு என்னா? தங்கமான மனுசன்... அவருக்கு இப்பிடி நெலம வந்திருக்கக்கூடாது. காடுகரை இருக்கு. வெச்சுக் காப்பாத்துவாரு. என் மக மூத்ததை ஒரு எடத்துல கேட்டிருக்காக... எளையவ பச்சையம்மாளைக் கட்டிக்கிரட்டும்... எனக்குச் சம்மதம்தான். ஆனா, எங்கிட்ட வசதியில்ல. உடுத்துன சேலை துணியோடதான் அனுப்பி வைக்க ஏலும்'னு சொல்லிப்புட்டாரு. 'அந்தப் பொண்ணையும் ஒரு வார்த்தை கேளும்'னோம். அதுவும் தலையாட்டிருச்சாம். 'நாங்க கோனாருகிட்டேயும் பேசுறோம்... சரின்னாருன்னா, நாள் நட்சத்திரம் வேணாம். நாள மறுநாளுக்குள்ள சட்டுப்புட்டுன்னு கோயில்ல வெச்சு மொறையக் கழிச்சுப்புடுவோம்'னு சொல்லிட்டு வந்திட்டோம். இப்ப என்ன சொல்லுறீரு?'' என்றார் ஒரு பெரியவர்.

எல்லோரும் பாண்டியின் முகத்தையே பார்த்தனர். பாண்டிக்கு என்ன சொல்லுவதென்று தெரியவில்லை. ஒரே குழப்பமாக இருந்தது. ''பதில் பேசாம உட்கார்ந்திருந்தா எப்படி? உம்ம நல்லதுக்குத்தான் வந்தோம். அப்புறம் உம்ம இஷ்டம்...'' வந்தவர்கள் துண்டை உதறித் தோளில் போட்டனர். ஏறிட்ட பாண்டி ''செரி...'' என்று தலையசைத்தான். ''ம்.. அப்படி வாரும் வழிக்கு... செரி, நாளையும் பொழுதையும் தள்ளிப்போட வேண்டாம். இப்பவே பூம்பாறை போறோம். ஆசாரியார்ட்ட விஷயத்தைச் சொல்றோம். ஒரக்கடைப் பழனிச்சாமியண்ணன்கிட்ட உம்ம பற்றுல துட்டு வாங்கி வேணும்கிற சாமான்களை வாங்கி வெச்சிடுறோம். நாளை காலையில நீரே பூம்பாறைக்கு வந்து நேர்ல நின்னு மாலையும் தாலியும் வாங்கணும். நாளைக்குப் பொழுதுசாயும் இதே நேரத்துல இங்க பொண்ணை அழைச்சிட்டு வந்து உம்ம சொடலமாடன் கோயில் முன்ன வெச்சே தாலியக் கட்டிப்புடுவோம். சரி, கிளம்புங்கப்பா, பூம்பாறைக்கு..'' எல்லோரும் உற்சாகமாய்க் கிளம்பினர்.

பூம்பாறைக்குப் போனவர்கள் ஆசாரியாரைப் பார்த்து கல்யாணத் தாக்கலைச் சொன்னார்கள். ''இது, இது இப்படித்தான் நடக்கணும்னு ஆண்டவன் எழுதியிருக்கப்ப, அதுப்படி நடக்கட்டும்யா'' என்றார். கையோடு பெண்ணின் அளவு ஜாக்கெட் வாங்கி உடனுக்குடனே தைக்கக் கொடுத்தார்கள். ''டெய்லரே, கோனாருக்கு நாளைக்குக் கல்யாணம். அவருக்கு இந்த சில்க் ஜிப்பாவையும் பொண்ணுக்கு ஜாக்கெட்டையும் விடியறதுக்குள்ள தெச்சு ரெடியா வெச்சிரணும். என்ன செய்வியோ, ஏது செய்வியோ தெரியாது... விடிஞ்சதும் அவரே வந்து நிப்பாரு. ஒடனே

வந்தனர். "கல்யாண மாலை ரெண்டு நெருக்கிக்கட்டி ரெடியா வெச்சிருக்கணும். காலையில கோனாரு வருவாரு. இந்தா புடி அச்சாரத்தை..."

நகை வேலைக்காரரைக் கூப்பிட்டு "அரை பவுனுல தாலி ஒண்ணு ரெடி பண்ணி வெச்சிருங்க!" என்று விஷயத்தைச் சொன்னார்கள்.

"ராவோட ராவா உருக்கி ஊத்திப் பத்த வெச்சு மெருகுபோட்டு வெச்சிருக்கேன்... விடிஞ்சதும் வந்து வாங்கிக்கச் சொல்லுங்க" என்றார் அவர்.

எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிட்டு, வாங்கிய பலசரக்குச் சாமான்களை ஒரு ஓலைப்பெட்டியில் போட்டுக் கட்டித் தூக்கிக்கொண்டு நிலா வெளிச்சத்தில் குண்டுப்பட்டிக்குக் கேலியும் . கிண்டலுமாகப் பேசிக்கொண்டே மலைப்பாதையில் நடந்தனர்.

மறுநாள் கல்யாணத்துக்காக இரவோடு இரவாக தையல்காரர், லாந்தர் வெளிச்சத்தில் துணி தைத்துக் கொண்டிருந்தார். நகை வேலைக்காரர் பொன் உருக்கிக் கொண்டிருந்தார். பூக்காரர் பெரிய மாலை கட்டிக் கொண்டிருந்தார். அதே இரவில் பிரேமின் ஜீப், ஆயுதம் தாங்கிய போலீஸ் டீம் பின்தொடர கொடைக்கானல் வந்து சேர்ந்தது. நல்ல குளிர்! வெடவெடவென்று ஆட்டியது. 'பாதை சரியிருக்காது. டவுன்ஷிப்ல தங்கிட்டு விடியும் நேரத்தில கிளம்பிப் போனா சரியா இருக்கும்' என்று நினைத்தார் பிரேம். ஜீப் கொடைக்கானல் டவுன்ஷிப் கட்டடத்தில் போய் நின்றது. முதலில் ரூம் போட்டு கம்பளி கொடுத்து பையனைப் போர்த்திக்கொள்ளச் சொல்லிவிட்டு "சாப்பிட ஏதாச்சிலும் வாங்கியாறேன்டே" என்றார். பையன் தலையாட்டினான். அறையைப் பூட்டிவிட்டு வெளியில் வந்தார். ஜீப்பைப் பின்தொடர்ந்து வந்த போலீஸ் வேன் நின்றது. கான்ஸ்டபிள்கள் தங்குவதற்கும் வேறு ரூம்கள் போட்டுக் கொடுத்துவிட்டு, க்ரைம் இன்ஸ்பெக்டருடன் விடிந்ததும் செய்யவேண்டிய காரியங்களைப் பேசிவிட்டு, சாப்பாடு வாங்கிக்கொண்டு பையன் இருந்த அறைக்கு வந்தார். அதற்குள் அவன் தூங்கிவிட்டான். பிரேமும் படுக்கையில் விழுந்தார். படபடப்பில் தூக்கமே வரவில்லை.

பிரேமுக்கு மட்டுமா? மறுநாள் கல்யாணம் என்று திடுதிப்பென்று முடிவான ஆசாரி மகள் பச்சையம்மாளுக்கும் பாண்டிக்கும்கூடத்தான் தூக்கமே இல்லை.

அந்தக் குளிரில் மூன்று பேருமே வெவ்வேறு மனநிலையில் எப்போது விடியும் என்று காத்திருந்தனர். விடியலை நோக்கி பொழுது நந்தையாய் மெ..ள்...ள ஊர்ந்தது!



செவேலென்று கிடந்தது. பால் சொம்புடன் வீட்டுக்குள்ளிருந்து வாசலுக்கு வந்தான் பாண்டி. எதிரே நாலைந்து குதிரைகள் மேய்ச்சலில் திரிந்தன. இடதுபக்கம் முளைக்கம்பில் கட்டிக்கிடந்த ஒரு காராம்பசு "ம்...மா..." என்று குரலெடுத்தது. உட்கார்ந்து, சொம்பிலிருந்து ஒரு சிரங்கைத் தண்ணீரைக் கவிழ்த்து விண்ணென்று விறைத்து நின்ற பசுவின் காம்புகளில் அறைந்து கழுவினான். மடுவில் கைபடும் முன்பே 'சரசர'வென்று பால் பீய்ச்சியது. சொம்பு நிறைந்து நுரைத்து வழிந்தது. நின்றபாடில்லை... 'இதென்னல கூத்தாருக்கு... வத்து மாட்டுல தானாப் பால் சொரக்கே... இன்னொரு பெரிய பாத்திரமா எடுத்தாரலாம்' என்று எழுந்து வாசலை நோக்கி வந்தான் பாண்டி. கையில் ஏந்தி வந்த சொம்பைத் தற்செயலாய் பார்த்து வெலவெலத்தான். வெளேரென்று நுரைத்து வழிந்த பால், செக்கச்செவேலென்று பலியாட்டு ரத்தம் போல் பொங்கிப் பிசுபிசுத்து கையெல்லாம் வழிந்தது. தடாலென்று சொம்பைக் கீழே போட்டான். வாசல் தெளித்தது போல ரத்தம் படர்ந்தது! அதே நேரத்தில் பாண்டியின் பின்னே பிடரிக்கு நேராய் பூமி அதிரும்படியாக 'திடும்' என்ற பிடாங்கு வேட்டுச் சத்தம்! இப்படி ஒரு சத்தம் தெற்கே கோயில் கொடைகளில் கேட்டது! அதிர்ச்சி மாறாமல் திரும்பினான். பார்வை தொடுதூரத்தில் இரண்டு மலைகள் ஒன்றோடொன்று உரசி நின்ற இடத்தில் பெரிய வெடிப்புக் கண்டு எங்கிருந்தோ காட்டாற்று வெள்ளம் புரண்டு வந்தது. சிறிய ஓடையில் பெருங்கொண்ட மரங்களைத் தூரோடு பெயர்த்து உருட்டி இழுத்து வந்தது. கண்ணெதிரே மேய்ந்து கொண்டிருந்த குதிரைகளை வெள்ளம் கால்மாடு, தலைமாடாக இழுத்துப் போனது. அவன் நின்ற இடத்திலும் சரசரவென்று நீர்மட்டம் கூடியது. 'எதிரே தெரிந்த மேட்டுக்கு நீந்திப்போய் தப்பித்துவிடலாம்' என்று நினைத்த பாண்டி, குரல்வளைத் தண்ணீரில் நின்று கால்களைத் தரையில் வேகமாய் உதைத்தான். 'டணங்' என்ற ஓசையுடன் கால்மாட்டில் தண்ணீர்ப் பானை உதைபட்டு உருண்டது.

சொப்பனம் கலைந்து இப்போது முழிப்புத் தட்டிவிட்டது!

இரவில் ரொம்ப நேரம் முழித்திருந்தவனுக்கு எந்நேரம் கண்ணயர்ந்தான் என்றே நினைவில்லை. தலைமாட்டில் கிடந்த பீடிக் கட்டிலிருந்து ஒன்றை உருவிப் பற்றவைத்தான். வெளியே வந்து எட்டிப் பார்த்தான். கனவில் காராம் பசு கட்டிக்கிடந்த இடத்தில் படுத்துக்கிடந்த குதிரைகள் பாண்டியைக் கண்டதும் செல்லமாய்க் கனைத்தன. ஆகாயத்தைப் பார்த்தான். விடிவெள்ளி முளைத்திருந்தது. செவேலென்று கங்கு தெறிக்க பீடியை உறிஞ்சி இழுத்தபடி, எதிரில் பனிபெய்து ஈரமாய் கிடந்த பாறையில் தோளில் கிடந்த துண்டைப் போட்டு உட்கார்ந்தான். நல்ல குளிர்.. விடிந்து பொழுதுசாய்ந்தால் நடக்கப்போகும் தனது மறுகல்யாணம் நினைவில் தட்டியது.

ஒரே யோசனையாய் இருந்தது! 'அவசரப்பட்டுச் சரிசொல்லிட்டேனோ? இது வேலம்மாளுக்குச் செய்த துரோகமா? இல்லை... அப்படியில்லை!' என்றது அவனது அடிமனம். கல்யாணம் முடித்த புதிதில் வாழ்ந்த அமைதியான நாட்களை நினைத்துப் பார்த்தான். பதினாறு வருடங்களுக்குமுன், "தம்பி, இந்தக் காரியத்தைத் துணிஞ்சு செய்... ஒங்குடும்பத்தை ஒரு கொறையும் இல்லாமப் பாத்துக்கிடுதோம்" என்று வெத்தலையில் அடித்துச் சத்தியம் செய்து முன்சிப்பைத் தீர்த்துக்கட்டத் தூண்டியவர்களின் முகங்கள் வரிசையாய் வந்து போயின. பெருமூச்சு விட்டான்.

கொண்டிருந்தது. எதிரே சவரப்பெட்டியைக் கக்கத்தில் இடுக்கியபடி குடிமகன் கெந்திக் கெந்தி மேடேறி வந்தார். ''ரொம்ப சந்தோஷம் கோனாரே... இன்னிக்குப் பொழுதுசாய கல்யாணமாம்ல... ராத்திரியே சொன்னாங்க... அதான் மொகம் வழிக்க வந்தேன்...'' அருகில் உட்கார்ந்து கத்தி, கிண்ணத்தை எடுத்து வைத்தார்.

''மீசை பெரிசா இருக்கட்டும்ல... ஆமா!''

''அதுக்கென்ன... கடாமீசையே வெச்சுடுறேன். பொண்ணு மட்டும் பயந்திடாமப் பாத்துக்கங்க...'' குடிமகன் கண்சிமிட்டிச் சிரித்தார்.

**வி**டியும் முன்னே கொடைக்கானலிலிருந்து கிளம்பிய பிரேமின் ஜீப், அப்சர்வேட்டரியைத் தாண்டி வெகுதூரம் வந்து கரடுமுரடான பாதையில் விலகி பூம்பாறையை நோக்கி ஸ்லோவாய் குலுங்கிக் குலுங்கி இறங்கியது. பையன் தூக்கக் கலக்கத்தில் இருந்தான். பின்னால் வேனில் வந்த ஆயுதம் தாங்கிய போலீஸ் படை, ஜீப்பை இடைவெளிவிட்டுத் தொடர்ந்தது.

பூம்பாறை மந்தையில் ஜீப் நின்ற அதிகாலையில் ஊர் உசும்பியிருக்கவில்லை. வீரணன் டீக்கடையில் இரண்டு மூன்று பேர் மட்டும் டீ குடித்துக்கொண்டிருந்தனர். சுற்றும்முற்றும் பார்த்த பையன், உற்சாகமாய் வேலப்பர்கோயிலில் மேற்கு பார்த்த வாசலுக்கு நேராய் நீளும் பாதையைக் காட்டி, ''இதுல போனா அவரு வீடு வந்திடும்'' என்றான். ''சரி... வால... பேசிக்கிட்டே நடந்து போயிடுவோம்...'' தன் இடுப்பில் இருந்த பிஸ்டலைத் தடவிப் பார்த்துக்கொண்டு, திரும்பிப் பார்த்தார் பிரேம். டீக்கடைமுன் வேனிலிருந்து மளமளவென்று குதித்து நின்றனர். 'பிரேம் கொஞ்சதூரம் முன்னால் நடக்கட்டும்' என்று நினைத்த க்ரைம் இன்ஸ்பெக்டர், கான்ஸ்டபிள்கள் எல்லோருக்கும் டீ போடச் சொன்னார். எல்லோரும் சிவில் டிரஸ்ஸில் இருந்ததால் அங்கு நின்ற சிலருக்கு வந்திருப்பது இன்னாரென்று நிதானிக்க முடியவில்லை.

''இப்படியே போனா பழநிக்குப் போயிடலாமா?''

''போகலாம்ங்க... தடம் மாறாமப் போனா குண்டுப்பட்டிங்க. அங்கிருந்து வடக்க பாத்துப் போகணும்... பாதை மோசம்மய்யா! நடந்து போகங்குள்ள இடுப்புக்கிண்ணி கழண்டு போகும்.''

''சும்மா காட்டுப்பன்னி வேட்டைக்கு வந்தோம்... 'ஆட்டை மேய்ச்சாப்லயும் இருக்கும்... அண்ணனுக்குப் பொண்ணு பாத்தாப்லயும் இருக்கும்'கிறகணக்கா இந்தப் பக்கம் காடுகள் வெலையும் சகாயம்னு கேள்விப்பட்டோம். பாத்துட்டுப் போயிடலாம்னு வந்தோம்.''

''மகராசரா பாருங்கய்யா... அம்புட்டும் பொன்னு வெளையுற பூமி...''

இன்ஸ்பெக்டர் ஏறிட்டுப் பார்த்தார். பிரேமும் பையனும் தூரத்தில் போவது தெரிந்தது. ஜாடை செய்தார். கான்ஸ்டபிள்கள் பதட்டத்தை வெளிக்காட்டாமல் அவரவர் துப்பாக்கிகளைக் கையில் எடுத்துக்கொண்டு முன்னால் போகும் பிரேமையும் பையனையும் பின்தொடர்ந்தனர்.

**இ**ப்போது லேசான வெயில் முகம் காட்டியது. கொடியில் கிடந்த சிவப்புச் சால்வையை உருவி எடுத்தான் பாண்டி. தலைப்பாவாக இறுக்கிக் கட்டினான். முகட்டில் செருகியிருந்த சாட்டைக் குச்சியை எடுத்தான். கரேலென்று டிக்காக்ஷன் நிறத்தில் நின்ற குதிரையில் தாவி ஏறினான். வாசலில் நின்ற குடிமகனிடம் ''நான் தாலி, மாலை, துணிமணிகளை வாங்கியாற பூம்பாறைக்குப் போறேன்ல... பொழுதுசாய நீயும் வந்து





சேரு...'' குதிரையைச் செலுத்தினான். சரிவான பாதையில் இறங்கி பூம்பாறையை நோக்கி நிதானமாய் புறப்பட்டது குதிரை.

**பி**ரேமும் பையனும் வெகுதூரம் வந்துவிட்டனர். ''இன்னும் எவ்வளவு தூரம்ல போவணும்..?''

எதிரில் நிற்கும் மலைமேட்டின் உச்சியைக் காண்பித்து ''அங்க ஏறி இறங்குனா அவரு வீடு வந்திரும். நான் அவர்கிட்டச் சொல்லாம ஓடியாந்திட்டேன். என்னைப் பாத்தா 'ஏம்ல ஓடினே'ன்னு அடிப்பாக...'' – பயந்து நின்றான்.

''இப்பம் அவருக்காகத்தானல வந்திருக்க? அதெல்லாம் ஒண்ணுஞ்சொல்ல மாட்டாக. நான் இருக்கேன்... வா...'' தைரியம் சொல்லிக் கூட்டிப் போனார். துப்பாக்கியுடன் பின்தொடர்ந்து வந்த கான்ஸ்டபிள்கள் ''ஒளிஞ்சுக்கிறதுக்கு நல்ல இடத்தைத் தேடிப்பிடிச்சிருக்காம்ல'' என்று சுற்றும்முற்றும் பார்த்து பிரஸ்தாபித்தபடி வந்தனர். ஆனைவட்டான் மேடருகே வந்ததும் பிரேமுடன் வந்த பையன் சடக்கென்று நின்றான்.

''என்னல நிக்கே? முள்ளு குத்திருச்சா?''

பையன் எதிரே பள்ளத்தாக்கை நோக்கிக் கைநீட்டினான். ''அந்தா...

எதிரே பள்ளத்தில் அடர்ந்து நின்ற வாழைத்தோப்பைக் கடந்து மெலிதாய் ஓடிய சிற்றோடைக்குள் இறங்கி, வந்துகொண்டிருந்தான் பாண்டி!

''அப்படிச் சுத்தி, பாதை வழியா இங்கதான் வருவாரு... நிப்பம்.. காலு வலிக்கி.'' பிரேமுக்குச் சில விநாடிகள் ஒன்றுமே ஓடவில்லை.

பின்தொடர்ந்து வந்த கான்ஸ்டபிள்களை அவசரமாய் வரச்சொல்லி கையசைத்தார் பிரேம். தடதடவென்று ஓடிவந்து நின்றனர். பையன் திருதிருவென்று விழித்தான்.

''பாண்டி குதிரையில வந்துக்கிட்டிருக்கான்... இன்னும் அஞ்சு நிமிஷத்துக்குள்ள இந்த இடத்துக்கு வந்திடுவான். எல்லோரும் ரவுண்ட்ஸை லோட் பண்ணி ஆள் தெரியாம மறைஞ்சுக்குங்க. முடிஞ்ச வரைக்கும் உசுரோட பிடிக்கணும். குவிக்...'' தன் பிஸ்டலின் லாக்கை ரிலீஸ் செய்தார். ஏதோ விபரீதம் நடக்கப் போகிறது என்று பையனுக்குப் புரிந்துபோனது. பிரேமைவிட்டு இரண்டு எட்டு விலகிச் சத்தம் போட்டு அழத் தொடங்கினான்.

''அழுவாதல. சத்தம் போட்டே கழுத்தைத் திருவி உருட்டிவிட்டிருவேன். பேசாம நிக்கணும்..!'' ஒரு அமட்டுப் போட்டார். ''இவனை இந்தப் பாறையில உக்கார வெச்சு டவுசரோட சேத்துப்புடிச்சுக்கோ. பார்வைக்கு இவம் மட்டும் தனியா வந்து உக்கார்ந்திருப்பதுபோல இருக்கணும்... பாண்டி வந்ததும் இவனைப் பாறைக்கு அந்தப் பக்கமா இழுத்துப் பத்திரமா வெச்சுக்கோ. அவன் எதையும் பார்க்கக்கூடாதுவே. விட்னஸ் ஆயிடுவான். ம்... சீக்கிரம்.''

சில விநாடிகளில் கான்ஸ்டபிள்கள் ஆளுக்கொரு திசையில் பதுங்கிக்கொண்டனர். பையனை ஒரு பாறைமேல் உட்கார்த்தி, ஒரு கான்ஸ்டபிள் மறைந்து நின்று பிடித்துக்கொண்டார். நீட்டிய துப்பாக்கிகளுடன் பாதையோரமாய் எல்லோரும் காத்திருந்தனர். சரசரவென்று அசையும் இலை தழைகள்கூட காற்றடிக்காமல் வரைந்த சித்திரம் போல் நிசப்தமாய் நின்றன. பிரேம் தலையைத் தூக்கிச் சுற்றும்முற்றும் பார்த்தார். தூரத்தில் வாழைத் தோப்பை ஒட்டிய மேட்டில் ஒரே ஒருத்தன் மட்டும் மாடு மேய்த்துக்கொண்டிருந்தான். வேறு மனித சஞ்சாரமே இல்லை. 'டக்.. டக்.. டக்...' பிரேமின் இடப்பக்கத்திலிருந்து குதிரையின் குளம்போசை சன்னமாய்க் கேட்டது. படபடவென்று இருந்தது. பாதையை நோக்கித் தன் கையிலிருந்த பிஸ்டலை நிமிர்த்தினார். பாறையில் உட்கார்ந்திருந்த பையன், வாயில் கைபொத்தி விசும்பிக்கொண்டிருந்தான். அவனுக்கு மாலை மாலையாய் கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது.

மேடேறி வளைவில் திரும்பிப் பாறையை ஏறிட்ட பாண்டிக்கு ஆச்சரியம்! குதிரையை இழுத்து நிறுத்தி ''லே... என்னல. நீ... இங்க உக்காந்து...?''

''..............''

பையனின் பின்னாலிருந்து ஒரு கை அவனை இழுத்துப் பாறையின் பின்புறமாய் கொண்டுபோவது தெரிந்தது. பாண்டிக்குத் 'திக்'கென்றது.

குதிரையில் இருந்தபடிக்கே சுற்றும்முற்றும் அதிர்ச்சியுடன் திரும்பிப் பார்த்தான். பாதையில் இருபக்கமும் புதருக்குள்ளேயிருந்தும் பாறைகளின் மறைவிலிருந்தும் துப்பாக்கி முனைகள் நீள்வது தெரிந்தன. 'மோசம் போயிட்டனே...' வந்த பாதையில் குதிரையைத் திருப்பினான். அதற்குள்



''லே... பாண்டி..!'' - பிஸ்டலுடன் எழுந்தார் பிரேம்!

திகைத்த பாண்டி, குதிரையிலிருந்தபடியே பிரேம் தன்னை நெருங்கவிடாமல் கையிலிருந்த சாட்டைக் கம்பால் எட்டி விர்ரென்று வீசினான். விலகிய பிரேம், தரையில் மண்டியிட்டுக் குதிரையை நோக்கி ட்ரிக்கரை அழுத்தினார். 'டுமீல்' என்ற சத்தத்தில் அந்தப் பிரதேசமே கிடுகிடுத்தது. குதிரை பின்னங்கால்களை ஊன்றி முன்னங்கால்களை மேலே தூக்கி மிரண்டு கனைத்து எழுந்தது. பிரேமின் பிஸ்டல் ரவைகள் குதிரையின் நடுவயிற்றில் சரமாரியாய் சொருகின. குதிரை விகாரமாய் கனைத்தபடி மல்லாந்து சரிந்தது. குப்புற விழுந்த பாண்டி, வலதுபுறம் பாதையை அடுத்திருந்த பள்ளத்தாக்கில் தாவி கடகடவென்று செடிகளுக்குள் பந்துபோல் உருண்டான்.

தொடர்ந்து விரட்டிச் சுட்டனர். சரவெடிபோல் துப்பாக்கிச் சத்தம்! சற்று நேரம் சுடுவதை நிறுத்தினர். உடலைத் தேடினர். தட்டுப்படவில்லை. பாண்டி தலையில் கட்டியிருந்த சிவப்பு நிறச் சால்வை மட்டும் ஒரு புதரோரம் கிடந்தது.

''இதென்ன மாயமா இருக்கு! ஆளக் காணோமே..? இங்கதான் செடிகளுக்குள்ள மறைஞ்சிருப்பான். பார்ட்டி ரவுண்டப்...'' அந்தப் பகுதியையே சுற்றி வளைத்தது போலீஸ். தரையில் உருண்டு செடி மறைவில் பம்மிப் பம்மிப் பள்ளத்தில் இருந்த வாழைத்தோப்பின் கால்வாய் பள்ளத்தில் போய்ப் பதுங்கினான் பாண்டி.

போலீஸார் ஒவ்வொரு செடிமறைவையும் தேடிக்கொண்டே நகர்ந்து வாழைத்தோப்பருகே வந்தனர். எல்லோருக்கும் ஆச்சரியமான ஆச்சரியம்! ''எங்க போயிருப்பான்?'' பிரேம் சுற்றும்முற்றும் பார்த்தார். துப்பாக்கிச் சத்தம் கேட்டு வெருண்டுபோய் மேட்டில் நின்ற மாட்டுக்காரன் பயந்து நின்றான்.

''இந்தப் பக்கம் ஒருத்தன் ஓடியாந்தானால?''

''ஆமாம்'' என்பவன் போல் தலையாட்டினவன், மேட்டில் நின்றபடிக்கே வாழைத்தோப்பில் பாண்டி பம்மி இருந்த கால்வாய்ப் பள்ளத்தைக் கைநீட்டினான். பிரேம் அவன் காண்பித்த திசையைப் பார்த்தார்!

**க**ன்றுகள் சூழ்ந்து நின்ற ஒரு வாழைத்தூரோரமாய் பதுங்கியிருந்த பாண்டியின் முதுகு தெரிந்தது. குறிபார்த்தார். பிஸ்டலின் முனை பாண்டியின் நடுமுதுகுக்கு நேராய் நிலைகொண்டது. ட்ரிக்கரை அழுத்த ஆள்காட்டி விரல் தயாரானபோது... மனதில் சிறு பொறி தட்டியது.

'ஆளைச் சேதாரமில்லாமல் உசுரோடு பிடித்துக்கொண்டுபோய் எஸ்.பி. முன் நிறுத்தினால் அது எவ்வளவு பெரிய பெருமை? இவனைச் சுட்டுப் பிணமாகத் தூக்கிக்கொண்டுபோவதற்கா இத்தனை வருஷம் மாறுவேடத்தில் காடுமேடெல்லாம் அலைந்தோம்... அதுவும், போயும்

நொடியில் சுதாரித்த பிரேம், குறிவைத்தபடியே விசில் கொடுத்தார். நாலா புறமும் தேடித் திரிந்த கான்ஸ்டபிள்கள் திரும்பினர். பாண்டியும் சத்தம் கேட்டு ஏறிட்டான்.

பாண்டி ஒளிந்திருந்த இடத்தைக் காட்டி 'யாரும் சுட வேண்டாம். அவசியப்பட்டா நானே சுடுகிறேன். எல்லோரும் வட்டமாக ஆளை வளைத்து நில்லுங்கள்' என்று சைகையால் சொன்னார் பிரேம். புரிந்துகொண்ட கான்ஸ்டபிள்கள் பாய்ந்துபோய் நின்றனர். பாண்டி உட்கார்ந்தபடிக்கே தலையை நிமிர்த்தித் திரும்பித் திரும்பிப் பார்த்தான். நாலா பக்கமும் போலீஸ் வளைத்து நிற்பது தெரிந்தது. மீண்டும் மேட்டில் நின்ற பிரேமைப் பார்த்தான். சுற்றி நின்றவர்களைச் சன்னஞ்சன்னமாய் பாண்டியை நோக்கி நெருங்கிப் போகச் சொல்லிச் சைகை செய்தபடி பிரேமும் முன்னேறினார்.

'இனி தப்பிக்க முடியாது' என்பது பாண்டிக்குப் புரிந்துபோனது. ஒரு கணம் கண்களை மூடி யோசித்தவன், யாருமே எதிர்பாராதபடிக்கு பிரேமைப் பார்த்துக் கைகளைத் தூக்கியபடி எழுந்து நின்றான். மேலெல்லாம் செடிகள் கிழித்துக் கோடுகோடாய் ரத்தம் கசிந்திருந்தது. சுற்றி நின்ற போலீஸார் உத்தரவு கிடைத்ததும் சுடத் தயாராய் நின்றனர். ஒரு கான்ஸ்டபிள் தன் துப்பாக்கியைத் திருப்பி பாண்டியின் தோள்பட்டையில் இடிக்க வேகமாய்ப் பாய்ந்தார். ஓடிப்போய்த் தடுத்து பிரேம் முறைக்கவும், கான்ஸ்டபிள் பின்வாங்கினார். தன்னை அடிக்க வந்த கான்ஸ்டபிளை முறைத்தபடி மௌனமாய் நின்ற பாண்டியை, கவனமாய் நெருங்கிய பிரேம், இன்னொரு கான்ஸ்டபிளைப் பார்த்து சைகை செய்தார். தன் துப்பாக்கியில் மாட்டியிருந்த ஸில்லிங்கைக் கழற்றி பாண்டியின் கைகளைப் பின்புறமாய் மடக்கிக் கட்ட முயன்றார். பாண்டி திமிறினான். கான்ஸ்டபிள் தடுமாறினார். "நான் இங்க கௌரவமா வாழ்ந்திட்டு இருக்கேன். இங்க வெச்சு என்னைக் கேவலப்படுத்த வேணாம். நான் சரணடைஞ்சுட்டேன். கட்டுப்படுதேன். எதுனாலும் நான் கோர்ட்டுல பார்த்துக்கிடுதேன்."

பாண்டியை ஆச்சரியமாய் பார்த்த பிரேம், கான்ஸ்டபிளை விலகச் சொன்னார். இதில் எதாச்சிலும் தந்திரம் இருக்குமோ என்ற எண்ணம் இருந்தது. பாண்டியை உயிரோடு பிடித்துக்கொண்டுபோவதை நினைக்கவே பரவசமாயிருந்தது.

"உம்... நடவே..."

சலனமில்லாமல் சாதுவாய் வந்தான். பிரேம் இரண்டடி விட்டு பிஸ்டலுடன் பின்தொடர்ந்தார். முன்னும் பின்னும் பத்தடி இடைவெளியில் தயார்நிலையில் போலீஸார் வந்தனர். வழியில் ஒரு பள்ளத்தாக்கில் பாதையின் குறுக்கே சிற்றோடை ஓடியது. பின்னால் வந்த பிரேம் விலகி முன்னால் சென்று செடிகொடி மண்டிய ஓடைக்குள் புகுந்து, தப்பிவிடாதபடிக்குக் கெரண்டைக்கால் தண்ணீரில் நின்றார். நீர்தெறிக்க நடந்துகொண்டே நிமிர்ந்த பாண்டி, பிரேமைப் பார்த்து, "இனி நான் தப்பி ஓட மாட்டேன். அது கோழைத்தனம்" என்றபடி கடந்தான். வழியில் வேறு வார்த்தை பேசவில்லை.

கூடவந்த க்ரைம் இன்ஸ்பெக்டர், "உம் பொஞ்சாதியையும் கொன்னுபுட்டியாமேவே?" என்றார்.

பாண்டி முறைத்தான். பதில் பேசவில்லை.



என்றார் பிரேம்.

அதற்குள் பூம்பாறையிலிருந்து குண்டுப்பட்டிக்கு வந்துகொண்டிருந்த பலர், பாண்டி கைதாகி வந்துகொண்டிருப்பதைப் பார்த்து அதிர்ந்தனர். என்ன, ஏதென்று கேட்கப் பயம். அந்தபடிக்கே திரும்பி போலீஸாரைப் பின்தொடர்ந்து வந்தனர். அதில் ஒருவன் குறுக்குப்பாதையில் ஓடி பூம்பாறைக்குள் புகுந்து "நம்ம கோனாரை போலீஸ் புடிச்சுக் கூட்டியாருது... எங்கண்ணால பாத்தேன்" என்றான்.

"விளங்காதபய மவனே... யாரைப் போயி என்னடா சொல்றே?" என்றனர் கேட்டவர்கள்.

மூங்கில் காட்டுத் தீ போல் விஷயம் ஊருக்குள் பரவியது. நம்ப முடியாமல் வேலப்பர்கோயில் முன்பு ஊரே திரண்டு நின்றது. கொஞ்ச நேரத்தில் துப்பாக்கிகளுடன் போலீஸ் சுற்றிச்சூழ, நடுவே பாண்டி ஊரை நோக்கி வந்து கொண்டிருப்பதைக் கண்டனர்.

"இதென்னய்யா அக்கிரமமா இருக்கு... அதிர்ந்து பேசாத மனுசனை ஆள் தெரியாமக் கூட்டியாராகளோ?" சிலர் படபடத்தனர்.

"ஏ... இவனுக பன்னி வேட்டைக்கு வந்தவனுகளப்பா. துப்பாக்கி வெச்சிருந்தா பெரிய இவனுகளா? எங்க வந்து யாரைக் கூட்டியாரானுக பாத்தியா? எம்புட்டு மப்பு இருக்கணும்? ஏ... எடுத்தாங்கடா நம்ம வேட்டைத் துப்பாக்கிகளை! ரெண்டுல ஒண்ணு பாத்திடுவோம்..." – ஆத்திரப்பட்டார் வேகமான ஒரு ஆள்.

"ஏ... பொறப்பா பொறு... வரட்டும்.. நம்மள மீறி எங்கடா போயிடுவானுக? பாத்துக்கிடுவோம்..."

போலீஸார் வீரணன் டீக்கடைமுன் வந்து நின்றனர். எல்லோருக்குமே அகோரப் பசி.

"சாப்பிட என்ன இருக்கு?"

டீக்கடைக்காரன் பதிலே பேசவில்லை. கடையின் முன் கிடந்த ஒரு பட்டியக் கல்லில் பாண்டி சோர்ந்து உட்கார்ந்தான். நின்ற கூட்டம் ஓடிவந்து மொய்த்தது. நெருங்கவிடாமல் கான்ஸ்டபிள்கள் தடுத்தனர். நடந்து வந்ததில் பாண்டியின் மேலெல்லாம் தெப்பமாய் வியர்த்து வழிந்தது. "யாரய்யா நீங்க?" ஆவேசமாக வந்தார் உரக்கடை பழனிச்சாமி. பிரேம் நிதானமாக "நாங்க எல்லாரும் திருநெல்வேலி போலீஸ்" என்றதும், லேசாய் பின்வாங்கினார்.

"நீங்க யாராவும் இருங்கய்யா... இங்க பேருபெத்த மனுசன இப்படிக் களவாணியைப்போல கூட்டியாரலாமா? அர்ச்சுனக் கோனாரு என்ன தப்பிதம் செய்தார்னு சொல்லுங்க.. நாங்க இவரைக் கொண்டுபோக விடமாட்டோம்."

"அங்க பாண்டி... இங்க கோனாராவே?" என்றார் பிரேம்.

பாண்டி பேசவில்லை. "நீங்க நெனைக்கித மாதிரி இவரு அர்ச்சுனக் கோனாரு இல்லீங்க. சீவலப்பேரி பாண்டி! ஜெயில்ல இருந்து தப்பி, பல கொலை, கொள்ளை வழக்குகள்ல சம்பந்தப்பட்டுத் தலைமறைவா இருந்தவர். நாங்க வருஷக்கணக்கில் தேடின அக்யூஸ்ட்."

"இதை வேற எங்கேயாவது போயி சொல்லுங்க... அது இவர்தான்னு எவஞ் சொன்னான்?"

ஒருவன் முன்னால் வந்து தன் தோள் துண்டை பாண்டியிடம் நீட்டினான். பாண்டி அதை வாங்கிக்கொண்டான்.

''இவங்க சொல்றதெல்லாம் நெசந்தானா கோனாரே?'' என்றான் தழுதழுத்த குரலில். தலையைக் கவிழ்ந்தபடி ''ஆம்'' என்பதுபோல் தலையாட்டினான் பாண்டி. சுற்றி நின்றவர்களுக்கு அதிர்ச்சி.

வியர்வையில் தெப்பமாய் நனைந்திருந்த பாண்டி, துண்டால் முகத்திலும் மார்பிலும் ஒற்றியபடி நிமிர்ந்தான். எதிரே, இன்றைக்குச் சாயந்திரம் நடக்கவிருந்த பாண்டியின் கல்யாணத்துக்காக இரவெல்லாம் கண்விழித்துப் பொன் உருக்கி, மெருகுபோட்டு வைத்திருந்த தாலியை உள்ளங்கைக்குள் வைத்தபடி நின்ற நகை வேலைக்காரர் குலுங்கி அழுதார். கல்யாணத் துணி தைத்தவர் சற்றுத் தள்ளி நின்று விம்மினார். பூத்தொடுத்தவர் கண்களில் மாலை மாலையாய் நீர்.

கேள்விப்பட்டு ஓடிவந்து பார்த்த மணப்பெண், அதிர்ச்சியில் அப்படியே மயங்கிச் சரிந்தாள். சிலர் கைத்தாங்கலாய் அவளைக் கூட்டிப்போனார்கள்.

''எங்களால நம்பமுடியலேங்க... இப்படி ஒரு மருவாதியான மனுசரைப் பார்த்ததில்லையே... நெசந்தானா வேலப்பரே!'' என்றபடி கோயிலை நோக்கிக் கைநீட்டிய பழனிச்சாமி, ஓடிப்போயி அருகிலிருந்த கடையில் ஒரு சோடா எடுத்து பாண்டியிடம் உடைத்துக் குடுத்துக் குடிக்கச் சொன்னார். பிரேம் தடுக்கவில்லை.

''ஐயா, உங்களைக் கையெடுத்துக் கும்புடறோம். நீங்க என்னதான் சொன்னாலும் எங்களுக்கு இவரு தாயாபுள்ளையா பழகின கோனாருதான். எங்களால இவரைக் குத்தம் செஞ்சவரா நெனச்சுப் பார்க்கக்கூட முடியல. எங்க கண்ணு முன்ன வெச்சு இவரை ஒண்ணும் செஞ்சிடாதீங்க... அவருமேல ஒரு துரும்பு படக்கூடாது'' – கெஞ்சிக் கும்பிட்டார் பழனிச்சாமி. சற்று நேரத்தில் பாண்டியுடன் பிரேமும் வேனில் ஏறிக்கொண்டார். பூம்பாறையே உறைந்து நிற்க... இப்போது பிரேம் வந்த ஜீப், அழுதுகொண்டிருந்த பையன் மற்றும் ஒரு கான்ஸ்டபிளுடன் வேனைப் பின்தொடர்ந்தது.

கொடைக்கானலுக்கு வந்த வேனும் ஜீப்பும் பஸ் ஸ்டாண்ட் அருகே போஸ்டாபீஸ் முன் போய் நின்றன. பிரேம் மட்டும் இறங்கிப்போய் எஸ்.பி-யுடன் பேச திருநெல்வேலிக்கு ட்ரங்கால் புக் பண்ணினார்.

''சார்... பாண்டிய உயிரோடு புடிச்சுட்டேன் சார்! அங்கிருந்து கொடைக்கானலுக்குக் கொண்டுவந்துட்டோம். முரண்டு பண்ணாம வர்றான் சார். சாயந்திரத்துக்குள்ள வந்து சேர்ந்திடுதோம்...''

எஸ்.பி. சுருக்கமாய் ''வெரிகுட்'' என்பதோடு போனை வைத்துவிட்டார். 'எப்படி, ஏதுன்னு வெவரம் கேட்காம போனை வெச்சுட்டாரே?'

வேன் திருநெல்வேலியை நோக்கிக் கிளம்பியது. ஜீப் பின்தொடர்ந்தது.

''லே... நம்ம பாண்டியைக் கொடைக்கானல்ல புடிச்சி கொண்டுவந்திட்டு இருக்கானுகளாம். செத்த முன்னே போன்ல பேசிருக்கானுக. டெலிபோன் எக்ஸ்சேஞ்ச்ல வேலைபாக்குத எங்க சித்தப்பாரு மவன் சொன்னான்ல'' என்று யாரோ விதைத்த செய்தி, சற்று நேரத்தில் திருநெல்வேலியைச் சூறாவளியாய்ச் சுழற்றியது.

மேற்கே சூரியன் புதையப் போகிற நேரத்தில் பாண்டியுடன் வந்த வேனும் ஜீப்பும் தாழையூத்தைத் தாண்டி தச்சநல்லூரைக் கடந்தபோது



ரோட்டை ஏறிட்டார் பிரேம். எதிரே அரை பர்லாங் தூரத்தில் ஜனக்காடு நெரிந்து நின்றது. தெற்குப் பார்த்துப் போகும் கார்களை நிறுத்திக் கூட்டம் கூட்டமாய் எட்டிப் பார்ப்பது போல் தெரிந்தது. சாரிசாரியாய் வண்டிகள் ரோட்டில் நின்றன. எதிரில் வந்த ஒரு காரை நிறுத்தினார் பிரேம். ''ஆக்ஸிடெண்டா?''

''இல்லீங்க... யாரோ பாண்டியாம். அவரை எங்கிருந்தோ கூப்பிட்டு வர்றாங்களாம். போற வர்ற வண்டியெல்லாம் இதுக்காக மறிச்சுத் தேடிப்பாக்குறாங்க.''

பிரேமுக்குத் 'திகீர்' என்றது.

'இது வேடிக்கை பார்க்கத் திரண்ட கூட்டமா... இல்லை, விடுவிக்கக் கிளம்பிய கூட்டமா?' பிரேமால் நிதானிக்க முடியவில்லை.

வேனை நிறுத்தச் சொல்லி இறங்கி, பின்னால் போய் ஜீப் டிரைவரிடம் ஏதோ பேசினார். சைடு வாங்கி வேனுக்குமுன் வந்து நின்றது ஜீப்.

''டிரைவர், லைட்டை ஆஃப் பண்ணுப்பா...'' வேனுக்குள் 'கருங்கும்' என்றானது. எதிரே ஒரு பர்லாங் தூரத்தில் திரண்டு நின்ற கூட்டத்தின் கூச்சலும் ஆரவாரமும் சன்னமாய்க் கேட்டுக்கொண்டேயிருந்தது. வேனுக்குள் பாண்டியின் அருகே நெருங்கி உட்கார்ந்தார் பிரேம்.

''இங்க பாரு பாண்டி... இவ்வளவு பேரு தெரண்டு நிக்கானுக! வேடிக்கை பார்க்க நிக்கானுகளா? வேற எதுக்குமான்னு தெரியல! நீ இருக்கது தெரிஞ்சு, எதாச்சும் நடந்திச்சுன்னா... ஒண்ணு சொல்லுதேன் கேட்டுக்க... சுடுவோம்! ஈவு இரக்கம் பாக்காமச் சுடுவோம்! உன்னை இத்தனை வருஷமா தேடி இவ்வளவு கஷ்டப்பட்டுக் கொண்டாந்திட்டு, இங்க வந்து தப்பிக்கவிட நாங்க ஒண்ணும் கேணப்பயலுக இல்ல... நல்லதுக்குச் சொல்லுதேன் கேளு. நீ ஆள் தெரியாமப் படுத்துக்கிறணும். வேன் கூட்டத்தைக் கடந்து லெவல் கிராஸிங்கைத் தாண்டினதும் எந்திரிச்சுக்க...''

பாண்டி யோசித்தான். என்ன நினைத்தானோ தெரியவில்லை... மறுவார்த்தை பேசாமல் வேனுக்குள் படுத்துக்கொண்டான். ஜீப்பும் வேனும் முன்னும்பின்னுமாய் நகர்ந்து, மறித்து நின்ற கூட்டத்தை நெருங்கின. ஸ்லோவாய் முன்னே நகர்ந்த ஜீப்புக்குள் கூட்டம் பாய்ந்து பார்த்தது. பையனும் ஏட்டும் தகப்பன்-மகன் மாதிரி உட்கார்ந்திருந்தனர். அடுத்து வந்த வேனின் கதவோரமாய் உட்கார்ந்திருந்த பிரேம் கீழே குதித்தார். தீவிரமாய் பாண்டியைத் தேடி அலைபாய்ந்த ஓர் இளைஞனை இழுத்துச் சன்னமான குரலில், ''பின்னால ஒரு வெள்ளை அம்பாஸடர்ல கொண்டாராக... நாங்க அதுக்கு எஸ்கார்டு வந்த பார்ட்டிதான்'' என்றார்.

நின்றவர்கள் ''என்ன... என்ன..?'' என்று கேட்க, தகவல் தீயாய்ப் பறந்தது!

சில நொடிகளில் அடுத்து வரப்போகும் வெள்ளைநிற அம்பாஸடரை எதிர்பார்த்துக் கூட்டம் நகர்ந்தது. வேன் அந்த இடத்தைப் பத்திரமாய் கடக்கக் கூட்டத்தில் நின்ற சிலரே உதவினர். ஊர்ந்து கடந்த வேனை யாருமே சந்தேகப்படவில்லை. பாண்டி இவ்வளவு தூரம் ஒத்தாசையாக இருப்பான் என்று பிரேம் எதிர்பார்க்கவில்லை!

இதேசமயத்தில் திருநெல்வேலிக்குள்ளும் காது, மூக்கு வைத்த வதந்திகள் சர்வ அலங்காரத்துடன் கிளம்பியிருந்தன.

''விசயம் தெரியுமாவே... பாண்டியைக் கொடைக்கானல் மலையில

வண்ணாரப்பேட்டையில் ஒருவன் பதட்டத்துடன் முணுமுணுத்தான்.

''எந்தச் செறுக்கிபுள்ளல சொல்லிச்சு? தேடிப்போனதெல்லாம் நெசந்தானாம்... போன எடத்துல பாண்டி குண்டுவீசி ஏழெட்டு போலீஸ்காரனுக சரிஞ்சுட்டானுகளாம். டவுன்ல இதேதாம்ல பேச்சு'' – கொக்கிரகுளத்தில் கூடிநின்றவர்களிடம் ஒருவன் பிரஸ்தாபித்தான்.

''எவனாச்சிலும் ஏப்பசாப்பயாப் புடிச்சு 'இவந்தான் பாண்டி'ன்னு கேஸ்களை முடிக்கப் பாக்கானுகபோல. நாஞ்சொல்லுதேன், பாரு... பாண்டி எப்பவும்போல வந்து போவாரு'' என்று ஒரு கும்பல் முருகன்குறிச்சியில் பேசிக்கொண்டிருக்க,

''சும்மா எந்தச் செறுக்கிபுள்ளையோ வீம்பொரளி கிளப்பி விட்ருக்கானுகலேய்...'' என்று பாளையங்கோட்டையில் கூடிக் கூடிப் பேசிக்கொண்டிருந்தனர்.

சுத்துப்பத்தில் உள்ள கிராமத்து பொட்டல்வெளிகள், ஒட்டுத்திண்ணைகள் எல்லாமே இதே வதந்திகளைத் தீவிரமாய் அசை போட்டுக்கொண்டிருந்தன.

அப்போது பாண்டியுடன் வந்த வேன், ஜங்ஷனைத் தாண்டி கொக்கிரகுளம் பாலத்தைக் கடந்து சாவகாசமாய் ஊர்ந்தது.

'ஸ்டேஷனுக்கோ, எஸ்.பி. கேம்ப் ஆபீஸுக்கோ கொண்டுபோனா விசயம் பரவிடும். நம்ம கான்ஸ்டபிள்களே ஊரே மணக்கத் தாளிச்சிருவானுக...' பிரேம் யோசித்தார்.

''இப்பம் என்ன செய்யலாங்கிறீக?''

''என்.ஜி.ஓ. காலனியில நம்ம இன்ஸ்பெக்டர் ஒருத்தர் வீடு குடிவராமக் கெடக்கு. அக்கம்பக்கம் ஈக்குஞ்சு நடமாடாது. சாவிகூட எங்கிட்டதான் இருக்கு. மொதல்ல அங்க கொண்டுபோயிருவோம். ஜீப்புல முன்ன போயி எஸ்.பி-கிட்ட தாக்கல் சொல்லட்டும். அவரு என்ன சொல்லுதாரோ அதுபடி செய்யலாம்'' என்றார் இன்ஸ்பெக்டர். பிரேம் தலையாட்டினார். வேன் பாளையங்கோட்டை ஜெயிலைக் கடந்து இடதுபுறம் பெருமாள்புரம் போகிற பாதையில் திரும்பியது. அமைதியாய் வேனுக்குள்ளிருந்தான் பாண்டி.

சாராள்தக்கர் கல்லூரியையும் தாண்டி வெகுதூரம்போய் ஒத்தையாய் நின்ற வீட்டின் முன்னே நின்றது வேன். போனதுமே ஒரு பெஞ்சில் பாண்டியை உட்காரச் சொன்னார் பிரேம். வீட்டைச் சுற்றும்முற்றும் பார்த்தபடி உட்கார்ந்தான். தன் பையிலிருந்த பாக்கெட்டிலிருந்து சிகரெட்டை எடுத்துப் பற்றவைத்தபடி பாண்டியின் முன் நீட்டினார். மறுக்காமல் அதிலிருந்து ஒன்றை உருவி எடுத்துத் தன் உதட்டில் வைத்தான் பாண்டி. தீப்பெட்டியைத் தானே உரசிப் பற்றவைத்தார் பிரேம். பாண்டி லேசாய் சிரித்தான்.

''என்னவே... சிரிக்கீரு?'' சிகரெட்டை ஆழ்ந்து உறிஞ்சிய பாண்டி மேலும் சிரித்தான். ''அன்னிக்கு உங்களுக்கு நாஞ் சிகரெட்டுப் பத்தவெச்சேன். இப்பம் எனக்குப் பத்த வெக்கீகளாக்கும்!''

''என்ன... எனக்கு நீரு பத்தவெச்சீரா?'' – பிரேமுக்கு ஒன்றும் புரியவில்லை.

''மூணு வருஷத்துக்கு மின்னே.. திருத்துல கந்தன் டீக்கடைக்கு வந்து பெஞ்சில உட்கார்ந்திருந்தீக...''



'''சந்தைக்கு மாடு புடிக்க வந்தேம்'னீக. அப்போ சிகரெட்டை வெச்சுக்கிட்டு நெருப்பு தேடினீக. உங்களை அடுத்து உட்காந்திருந்தது நாந்தான்! கிட்ட வந்து பத்த வெச்சேன்... நெனைவிருக்கா?''

பிரேமுக்கு மங்கலாய் நினைவில் வந்தது.

''அடப்பாவி.. ஆமா..! அன்னக்கி உம்மைத் தேடித்தானவே வந்தோம்.''

''தெரியும்... அங்க வெச்சே உங்க சோலிய முடிச்சிடணும்கிற முடிவோடதான் வந்தேன். உத்துப் பாத்தேன். மீசைகூடச் சரியா மொளைக்கல. பாத்தா நாயக்கமாரு வீட்டுப் பையம்போல அப்புராணியா இருந்தீக. எனக்கு மனசு வரல... நீங்களாவது என்னைப் புடிக்கப்போறதாவதுன்னு நெனச்சேன். இத்தன வருசங்கழிச்சும் நெனச்சதைச் சாதிச்சுட்டீக... பாராட்டுதேன் தம்பி.''

''...............''

அதற்குள் எஸ்.பி. அவசர அவசரமாய் அந்த வீட்டுக்குள் நுழைந்தார். பிரேமை இழுத்துத் தன் மார்போடு சேர்த்து முதுகில் வாஞ்சையுடன் தட்டிக்கொடுத்தார். எழுந்திருக்காமல் பெஞ்சியிலேயே உட்கார்ந்திருந்த பாண்டியைச் சற்று நேரம் ஏற இறங்கப் பார்த்தார். ''ம்.. நீதானா சீவலப்பேரி பாண்டியாக்கும்? என்ன மேன்! நீ செஞ்சதெல்லாம் ஒப்புக்கிட்டு



இடதுபுருவத்தை வளைத்து ஏறிட்ட பாண்டி, பிரேமைப் பார்த்துத் திரும்பி "மொதல்ல எல்லாத்தையும் வெளிய போகச் சொல்லுங்க. இவங்ககிட்ட எதையும் பேச விரும்பல. எதுனாலும் நீங்க மட்டும் பேசுங்க தம்பி..."

எஸ்.பி. யோசித்தார். பிரேமைத் தனியாக அழைத்தார். "என்ன செய்வீங்களோ தெரியாது... குற்றத்தையெல்லாம் ஒப்புக்க வெச்சு ஸ்டேட்மெண்ட் வாங்கணும். அது ரொம்ப முக்கியம். அப்புறந்தான் கோர்ட்டுக்குக் கொண்டுபோறதைப் பத்தி யோசிக்க முடியும். சாட்சிகளையும் உடனே ரெடி பண்ணணும். எதுவும் ப்ரூவ் ஆகாம விடுதலை ஆயிட்டான்னா நம்ம மானமே போயிடும். பிரஸ்காரங்க வேற 'ஆளைப் புடிச்சாச்சா... இல்லையா?'ன்னு தொளைக்கிறாங்க. நியூஸ் போட்டுட்டானுகன்னா இவனை உடனே கோர்ட்டுல புரடியூஸ் பண்ணணும். அப்புறம் நம்ம கஸ்டடி எடுக்கதுக்குள்ள பெரிய பெரிய லாயர்ஸ் புகுந்துடுவாங்க. காரியங்கெட்டுப் போகும். எதாயிருந்தாலும் குயிக்கா செய்யணும் பிரேம்" என்ற எஸ்.பி. மேலும் குரலைத் தாழ்த்தி,

"நீங்க ஜாக்கிரதையா இருக்கணும்... சாதுவா இருக்கற மாதிரி நடிச்சு, திடீர்னு எதுவும் செஞ்சுத் தப்பிக்கிற ஆள் இவன். விடிஞ்சதும் வர்றேன். அவனுக்கு விரும்பினதைச் சாப்பிடக் கொடுத்து எப்படியும் வாக்குமூலம் வாங்க ட்ரை பண்ணுங்க."

"யெஸ் சார்.."

எஸ்.பி. கிளம்பிப்போனார்.

வீட்டின் மற்ற அறைகளில் இருந்த போலீஸாரில் பலர் அசதியில் லேசாய் கண்ணயரத் தொடங்கினர்.

சற்றுத் தள்ளி அறையின் மூலையில் பனியனுடன் உட்கார்ந்து புத்தகம் வாசிப்பது போல யோசித்துக்கொண்டிருந்தார் பிரேம்.

"உங்களைத்தான்... இங்க வாங்க தம்பி..." அருகில் அழைத்தான் பாண்டி.

பிரேம் நெருங்கிப் போனார். "ஏம்னே தெரியல... நீங்க என்னைப் புடிச்சிட்டீங்கன்னு உங்க பேர்ல எனக்குக் கொஞ்சங்கூட வருத்தமில்ல... நான் விரும்பியோ விரும்பாமலோ எத்தனையோ தப்பு பண்ணியிருக்கேன்.. இப்ப அதுக்கு வருத்தப்படறேன். அவங்கவங்க செஞ்ச காரியங்களுக்கு என்னிக்கியிருந்தாலும் ஒரு நாளைக்கிக் கணக்கு ஒப்படைச்சுத்தானே தீரணும்? ஏனோ, இப்பத்தான் எம் மனசெல்லாம் லேசாகி நிம்மதி வந்து புகுந்த மாதிரி இருக்கு." – சற்று நேர மௌனத்துக்குப்பின் மீண்டும் தொடர்ந்தான்.

"நான் நெனச்சிருந்தா... உங்களை எப்பவோ தீத்துக்கட்டியிருப்பேன்... ஏனோ பல சந்தர்ப்பங்கள்ல 'வேணாம்'னு விட்டுட்டேன். அதப்போல நீங்களும் நான் குதிரையில வந்தப்பவே சுட்ருக்கலாம். சுடல. எங்குதிரையை மட்டுந்தான் மாறிமாறிச் சுட்டீக. நான் வாழைத்தோப்புக்குள்ள ஒளிஞ்சிருந்தப்பவும் சுடல. சரணடைஞ்ச என்னை மருவாதி கொறையாம கூட்டியாந்தீக. வயசுல சின்னவரா இருந்தாலும், உங்ககிட்ட மட்டும் மனந்தொறந்து பேசணும்போல் இருக்கு" என்றான் நெகிழ்ந்த குரலில்.

பாண்டி ஏதோ ஒப்புக்காகப் பேசவில்லை என்பது பிரேமுக்குப் புரிந்தது. இன்னும் நெருங்கி உட்கார்ந்தார்.



முறையில எனக்கும் விரோதம் இல்லை பாண்டி. ஒருபக்கம் உம்ம பேரைக் கேட்டா திருநவேலி ஜில்லாவே நடுங்குது. இன்னொரு பக்கம் உம் பேரைச் சொல்லி பெருமையா பேசுதானுக. நீரு உம்ம தாயிபுள்ளைகளுக்காகவும் ஏழை பாழைகளுக்காகவும் கொள்ளை அடிச்சு எவ்வளவோ நல்லது பண்ணிருக்கலாம். ஆனா, சட்டத்தின் முன்ன நீரு மிகப் பெரிய குற்றவாளி. ஒரு போலீஸ்காரன்கிற மொறையில என் வேலையைச் செஞ்சிருக்கேன். என் பேர்ல உமக்கும் வருத்தமில்லைங்கிறதுல எனக்கும் சந்தோஷமா இருக்கு."

பிரேமை ஊடுருவிப் பார்த்தான்.

"பேசாம உம் பேர்ல இருக்கிற பெண்டிங் கேஸையெல்லாம் ஒப்புக்கிட்டு வாக்குமூலம் குடுத்துட்டா சீக்கிரமா கோர்ட்டுல புரடியூஸ் பண்ணிருவோம். உமக்கு எதிரா சாட்சி சொல்ல யாரும் வரமாட்டானுகனும் தெரியும். கேஸ் விடுதலையானாலும் ஆயிடும். அப்படியே தண்டிச்சாலும் நீரா குத்தங்களை ஒப்புக்கிட்டதால கொஞ்ச காலம்தான் தண்டனை. ஜெயில்ல இருந்தாலும் நிம்மதியா இருக்கலாம்... வாக்குமூலம் கொடும். நீரு சொல்லச் சொல்ல நானே கைப்பட எழுதுதேன்."

"முடியாது!" புன்னகைத்தபடி மறுத்தான்.

"நான் சாகப் பயந்தவனில்ல தம்பி. விடிஞ்சா தூக்குன்னு இருந்தப்பவே நிம்மதியா தூங்கினவன். ஒரு ஆயுள் தண்டனைக் கைதி தப்பி வந்து இன்னொரு கொலை பண்ணினா நிச்சயமா தூக்குதான்னு எனக்கும் தெரியும். எனக்கு அதுபத்திக் கவல இல்ல. ஆனா, நாஞ்செய்ய நினைச்ச சிலதை பாக்கி வெச்சுட்டேன். அது என்ன, ஏதுன்னு கேக்காதீக. என்னைச் சீக்கிரமா கோர்ட்டுக்குக் கொண்டுபோங்க. சொல்ல வேண்டியதை வெவரமா அங்க சொல்லுதேன். அது நாலாபேருக்கும் தெரியட்டும்."

"அதெல்லாம் இருக்கட்டும்.. எஸ்.பி. வாக்குமூலம் வாங்குற பொறுப்பை எங்கிட்ட ஒப்படைச்சிட்டார். நீரு இவ்வளவு பழுத்த மனுஷனா இருப்பீருன்னு நான் நெனச்சுக்கூடப் பாக்கல. எனக்காக இப்பமே நீரு வாக்குமூலம் தரணும். அப்பத்தான் எங்க வேல முடியும். அதுக்காகத் தனிப்பட்ட மொறையில என்ன கேட்டாலும் தருதேன்."

பாண்டி சற்றுநேரம் கண்களை மூடி யோசித்தான்.

"அதுக்கு ஒரே ஒருவழிதான் இருக்கு..."

"சொல்லுங்க... எதுவானாலும் செய்யுதேன்..." – இப்போது பிரேமின் வார்த்தைகளில் மரியாதை தொனித்தது. "நீங்க மட்டும் மனசு வெச்சா நிச்சயம் முடியும் தம்பி."

"சொல்லுங்க..."

"நான் ஒரு வரம் கேக்கேன்... தட்டாமத் தருவீகளா?"

பிரேம் சற்று யோசித்தார். இன்னதென்று யூகிக்க முடியவில்லை. "சரி... தருதேன்... கேளுங்க... என்ன வரம்?" என்றார் பிரேம்!

பாண்டி கொஞ்ச நேரம் மௌனமாயிருந்தான்.

மேகங்களுக்குள் புகுந்து போய்க்கொண்டிருந்தது. குளிர்ச்சியாய் வீசிய காற்று, ஜன்னல் கதவை 'தடார்' என்று அறைந்து சாத்தியது. பாண்டியின் முகத்தையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தார் பிரேம்.

''சொடலமாடஞ் சத்தியமா சொல்லு மாறமாட்டேன்... இப்ப மட்டும் என்னை வெளிய விடுங்க... இன்னிக்கு ராத்திரிக்குள்ள செல காரியங்களை முடிச்சுட்டுப் பொழுதுவிடியுமுன்னே இதே எடத்தில வந்து மறுபடியும் சரணடைஞ்சிடுதேன்... இது சத்தியம்...''

பிரேம் அதிர்ந்து திகைத்தார்.

''இதென்ன வெளையாட்டா? நடக்கக்கூடியதா... சொல்லும்...''

''நீங்க மனசு வெச்சா நடக்கும்...''

''அதெப்படி? நீரு வெளிய போய் என்ன செய்யணும்னு நெனக்கீரோ சொல்லும்... தனிப்பட்ட மொறையில அதை நான் செஞ்சு தர்றேன்...''

''அது உங்களால முடியாது தம்பி...'' - பாண்டியின் உதடு பிரியாத சிரிப்பில் இளக்காரம் தெரிந்தது.

''ஏம் முடியாது?''

''இன்னிக்கி ராத்திரியோட ராத்திரியா போயி ஒரு ஏழு பேரு தலையை எடுத்துட்டு வந்திடுதேன்! அப்புறமா நீங்க என்னென்ன கேக்குதிகளோ அதுபோல வாக்குமூலம் தருதேன்...'' - வார்த்தைகள் ஒரு வைராக்கியத்துடன் வெளிப்பட்டன.

பிரேம் வெலவெலத்துப் போனார்.

''என்னை நம்புங்க தம்பி, நெனச்சும் முடிக்காம விட்ட இது ஒண்ணுதான் என் நெஞ்சை அரிக்கி. இதை மட்டும் செஞ்சுட்டா அப்புறம் தூக்குச் சொன்னாலும் சந்தோசமாப் போயி நிப்பேன். இல்லாட்டி என் ஆவி லேசுல அடங்காது தம்பி, அடங்காது!''

''என்ன இருந்தாலும் ஒரு அக்யூஸ்ட்கிட்ட அளந்து பழகணும்கறது சரியாப் போச்சுவேய்...''

விரக்தியாய் சிரித்த பிரேம், ''நீரு திருச்சி ஜெயில்லருந்து தப்பி எவ்வளவோ காரியம் செஞ்சிருக்கலாம். எல்லாரும் கேஸ் குடுக்கவே பயந்தானுக. எங்க ரெக்கார்டுபடி உம் பேர்ல ஒண்ணு ரெண்டு கேஸ்தான் பெண்டிங் இருக்கு. இதுக்காகத்தான் இத்தனை வருஷமா தேடியலஞ்சோம். இப்ப என்னடான்னா... 'வெளிய விடு... விடியுறதுக்குள்ள ஏழு பேரு தலைய எடுத்துட்டு வர்றேன்'னு எங்கிட்டயே கேக்குதீரே? யாருவேய் அந்த ஏழு பேரு? அவகள எதுக்காகக் கொல்லணும்?''

ஓர் ஆழ்ந்த பெருமூச்சுவிட்டான் பாண்டி.

''கல்யாணம் கட்டுன வயசில என்னை போலீஸ் - ஜெயிலுன்னு சீரழிச்சுட்டு எங்குடும்பத்தை நிராதரவா விட்டானுகளே... அந்தப் பெரிய மனுஷன்கள்ல இன்னும் ஏழு பேர் உயிரோட இருக்கானுக தம்பி. எனக்குள்ள இருந்த வேகத்தையும் தாயி புள்ளைக மேலிருந்த அபிமானத்தையும் தூண்டிவிட்டுத் துரோகம் பண்ணுனவனுகளுக்குப் பாடமா இருக்கணும். இதுவரைக்கும் நான் கொள்ளையடிச்சதெல்லாம் இவனுகள்ட்ட மட்டும்தான். கொலை செஞ்சதெல்லாம் இவனுக சொல்லி என்னைக் காட்டிக்குடுக்க நினைச்சவனுகளைத்தான். இவனுகள இப்டியே விட்டா தாயாபுள்ளையா இருக்க வேண்டியவனுக காலம்பூராம் ஒருத்தனுக்கொருத்தன் பொருதிச் சாவானுக. என்னால இதுக்கொரு



அதைப்பத்தி உமக்கென்னவே! சட்டம் ஒழுங்கைக் காப்பாத்த போலீஸ் இருக்கோம். அதை நாங்க பாத்துக்கிடுதோம்...''

கலகலவென்று சிரித்தான் பாண்டி.

''அதை வேற யார்கிட்டயாச்சும் போயி சொல்லுங்க தம்பி. உங்க போலீஸப்பத்தி உங்களைவிட எனக்கு ரொம்பத் தெரியும். இதுக்கு நான்தான் சரி. எம் பாதை வேற... என்னை வெளிய விடுங்க தம்பி...'' கெஞ்சிய பாண்டியிடம் ஆவேசமாய் குறுக்கிட்டார் பிரேம்.

''நீரு சொல்லுத ஆளுக எல்லாருமே உந்தாயிபுள்ளதானவேய்... எப்பமோ நடந்த தப்புக்கு இவங்களைத் தீத்துட்டா மட்டும் பிரச்னை தீர்ந்துடுமா?''

''தப்புக்கணக்குப் போடுதீக. என் வாழ்க்கை தெசை மாறுனதே இவனுகளாலதான். அது எல்லாத்துக்குமே நல்லாத் தெரியும். எனக்கே ஒரு உண்மை புரிய பல வருஷம் ஆச்சு. பதினாறு வருஷத்துக்கு முன்ன நான் எங்க ஊரு முன்சீப்பை வெட்டுனப்போ எனக்கும் அவருக்கும் தனிப்பட்ட பகையில்ல. எப்போ மொதமொத பஞ்சாயத்துத் தேர்தல் வந்துச்சோ வந்துச்சி வெனை... அதுவரைக்கும் வராத சாதி வந்து நொழைஞ்சிருச்சு...

'நம்ம தாயிபுள்ளைகள இன்னொருத்தன் அடக்கி ஆளுதான். உங்களுக்கெல்லாம் ஒதட்டுக்குமேல புல்லாலே மொளைச்சிருக்கு..? இதுக்கொரு முடிவுகட்ட வேணாமா?'ன்னு என்னைக் கிளப்பிவிட்டுட்டானுக. கீழ்கோர்ட்டுல எல்லாருமே கேஸ்ல இருந்தாக. எங்க மூணு பேத்துக்குத் தூக்குன்னும் தூண்டிவிட்டவங்களுக்கு ஆயுள்னும் தீர்ப்பாச்சு. அப்பீல்ல எனக்கும் முண்டன், முருகன் மூணு பேத்துக்கு மட்டும் தூக்குன்னும் மத்தவங்களுக்கு விடுதலைன்னும் ஏற்பாடு பண்ணிட்டாக. அதோட சரி... என்னத் திரும்பிக்கூட பாக்கலை. என் ரத்தம் கொதிச்சிச்சு. அன்னிக்கித் திருச்சி ஜெயில்ல என் பெஞ்சாதி வேலம்மாள் கண்ணீரும் கம்பலையுமா வந்து நின்னதுமே எனக்கு நெஞ்சே வெடிச்சிரும்போல இருந்திச்சு. ஒவ்வொருத்தர்கிட்டயும் உதவி கேட்டு வீடுவீடா போனாளாம். இவனுகள்ல ஒருத்தனுமே மொகங்கொடுத்துப் பேசலியாம். இப்பம் எதுவுமே தெரியாதவனுக மாதிரி பதவியும் பவுசுமா பெரிய மனுசனுகளா திரியுதானுக...''

''இவங்களைத் தீத்துக்கட்டிட்டா உடனே ஊருக்கு விடிஞ்சிடுமா? உம்மை வெளியே விடுததுங்கிறதை நெனச்சுக்கூட பாக்காதீரும்... இப்ப நீரு செஞ்சதெல்லாம் ஒப்புக்கிட்டு, கொள்ளையடிச்சதையெல்லாம் யார் யார்ட்ட குடுத்தீர்னு வாக்குமூலம் தரமுடியுமா, முடியாதாங்குறதை மட்டும் சொல்லும்...''

''அதுக்கு வேற ஆளைப் பாருங்க தம்பி... நான் செத்தாலும் மனமொப்பிச் சாவனே தவிர, நீங்க சொல்றதுபோல தரமுடியாது...''

கோபத்துடன் விலகிப்போய் உட்கார்ந்துகொண்டார் பிரேம். இரவெல்லாம் பொட்டுக்கூடத் தூங்காமல் எச்சரிக்கையாய் காவலிருந்தார். விடிந்ததும் அதிகாரிகள் யார் யாரோ வந்தார்கள், போனார்கள். யாருடனும் பாண்டி ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. பிரேம் மறுபடியும் எவ்வளவோ பேச்சுக் கொடுத்துப் பார்த்தார். அவன் முகம் கொடுக்கவேயில்லை. ஜன்னலோரமாய் உட்கார்ந்து ஆகாயத்தையும் ஆள் நடமாட்டமில்லாத அத்துவானவெளியையும் வெறித்துப் பார்த்தபடி மௌனமாயிருந்தான். இரண்டு தினங்கள் இப்படியே உதிர்ந்தன. மூன்றாம் நாள் அதிகாலை பாளையங்கோட்டை ரிசர்வ் லைனில் விநோதமான

ஆயுதப்படை மைதானத்தில் அவசரகதியில் போலீஸார் குவிந்தனர்.

''பாண்டியைப் புடிச்சுக் கொண்டாந்து ஒரு வீட்டுல வெச்சு விசாரிச்சாகளாம்... எப்படியோ தப்பிச்சுட்டானாம்... நேத்து ராத்திரியே எஸ்.பி. ஆபீஸ்ல பேசிக்கிட்டாக...'' என்றார் ஒரு கான்ஸ்டபிள்.

''அதான பாத்தேன்... நேத்துக் கடைசி பஸ்ஸுல தென்காசியிலிருந்து எம் மாமனாரு வந்தாருவே... வந்தும் வராததுமா, 'என்ன மாப்ள, குற்றாலம் போற பாதையில சாரிசாரியா உங்க வேனும் ஜீப்புமா போறதைப் பாத்தேன். ஆட்களெல்லாம் சைக்கிள்லயும் பைக்லயும் தொயந்து போவுதுக. சாதிக் கலவரமா?'ன்னு கேட்டாரு. 'அப்படி ஒண்ணும் தெரியலயே மாமா'ன்னேன். இப்பல்லா சங்கதி தெரியுது... தப்பிப்போன பாண்டியைத்தாம் வெரட்டிப் போயிருப்பாக போல... ஆளைப் புடிச்சாச்சாமா?'' என்றார் இன்னொருவர்.

''இனி எங்க புடிக்க? கையில சிக்குன ஆளைவிட்டுப்பிட்டு இனி மலைங்காட்டுல தேடுங்கலேன்னு நம்ம பெண்டை நிமித்தப் போறானுக...''

ஏட்டையா ஒருத்தர் மூச்சுவாங்க ஓடிவந்தார். ''வெரட்டிப்போன நம்ம போலீஸ்காரங்க மேலயே பாண்டி குண்டெறிஞ்சிட்டானாம். அந்த இடத்திலேயே டிரைனிங் எஸ்.ஐ-யான பிரேம்குமாரையும் வெட்ட வந்தப்ப, நேருக்கு நேரா சுட்டாராம். ஸ்பாட்லேயே பாண்டி ஆள் காலியாம்... பாடியை ஹைகிரவுண்ட் ஆஸ்பத்திரிக்கு போஸ்ட்மார்ட்டத்துக்குக் கொண்டுபோறாக. விஷயம் பரவுறதுக்குள்ள ரெண்டு செக்ஷன் ரிசர்வ் பார்ட்டி வெப்பன்ஸோட ஆஸ்பத்திரிக்குப் போகணும். ம்... சீக்கிரமா கிளம்புங்கவேய்...'' பதறினார் ஏட்டையா.

ஹைகிரவுண்ட் ஆஸ்பத்திரிக்கு போலீஸ் விரைந்தது!

கிடப்பது பாண்டிதானா என்பதை உறுதிப்படுத்த, ஒரு ஜீப்பில் போய் கமுக்கமாய் பாண்டியின் அண்ணன் மலையாண்டியைக் கூட்டிவந்திருந்தனர். எட்டிப் பார்த்த மாத்திரத்தில் அந்த ஆஸ்பத்திரியே அதிரும்படியாகக் கதறினார். முகத்திலும் மார்பிலும் அறைந்துகொண்டே வாசலுக்கு ஓடிவந்த மலையாண்டியை இரண்டு போலீஸார் மறித்துக்கொண்டனர்.

ரத்தக்கறை படிந்த யூனிஃபார்முடன் அங்கும் இங்கும் ஓடி போஸ்ட்மார்ட்ட ஏற்பாடுகளை விரைவுபடுத்திக் கொண்டிருந்தார் பிரேம். அவரது முகத்தில் இனம்புரியாத இறுக்கம் அப்பிக் கிடந்தது.

சற்று நேரத்தில் வந்து சேர்ந்த அதிகாரிகள் பிரேமைக் கண்டதுமே, ''யூ ஹாவ் டன் எ கிரேட் ஜாப்...'' என்று கைகொடுத்தனர். தோளில் தட்டினர். அப்போது வாசலில் பெரும் இரைச்சல் கேட்டது. அதிகாரிகள் வாசலுக்கு வந்தனர். எப்படியோ விஷயம் கசிந்து ஆணும் பெண்ணுமாய் ஆவேசமான கூட்டம் திரண்டு நின்றது.

''அவரச் சுட்டவன் எவனாருந்தாலும் கண்டந்துண்டமா வெட்டாம விடமாட்டோம்ல... அவரு மொகத்தைப் பாக்கவிடுங்கல...'' கூப்பாடு போட்டு நின்றது கூட்டம். போலீஸார் மீது சிலர் மண்ணை வாரித் தூற்றினர். வெறிகொண்டு நின்ற கும்பலுக்கும் போலீஸாருக்கும் வாசலில் தள்ளுமுள்ளு நடந்துகொண்டிருந்தது.

சிலர் முன்னால் வந்து, ''இப்ப பாண்டியின் பொணத்தை எங்ககிட்ட ஒப்படைக்கணும்! நாங்க அதோட ஊர்வலம் போகணும். இல்ல, இந்த ஆஸ்பத்திரியில ஒரு ஜன்னல் கம்பி மிஞ்சாதுல...'' என்று ஆவேசப்பட்டனர்.



கலவரம் வெடிக்கும்... லா அண்ட் ஆர்டர் ப்ராப்ளம் வரும். இவர்களை எப்படிச் சமாளிப்பது?' அதிகாரிகள் கைகளைப் பிசைந்தனர்.

அதற்குள் பாண்டிக்குச் சமாதிகட்ட சிலர் வசூலில் இறங்கினர். அந்த இடத்திலேயே சுமார் ஒரு லட்சம்வரை சேர்ந்தது. நேரம் செல்லச் செல்ல திருநெல்வேலியின் தெருக்களெல்லாம் ஹைகிரவுண்ட் ஆஸ்பத்திரியை நோக்கி நீண்டதுபோல சாரிசாரியாய் கட்டுக்கடங்காமல் கூட்டம் திரண்டு திமிறி வந்தது.

வாசலை நோக்கி வந்தார் பிரேம்.

''வெளிய போகவேண்டாம். சுட்டது நீங்கதான்னு தெரிஞ்சா எதுவும் நடக்கும்...''

''அதெல்லாம் ஒண்ணுமில்லே சார்... வெவகாரம் வராம நான் பாத்துக்கிடுதேன்...'' கூட்டத்தை ஏறிட்ட பிரேமுக்குப் பலத்த அதிர்ச்சி!

கொஞ்ச நாளுக்கு முன்பு மருதூர் அணைக்கட்டில் பாண்டியுடன் நடந்த மோதலில் காயம்பட்டு பிரேம் இதே மருத்துவமனையில் அட்மிட் ஆகியிருந்தபோது, கூடைநிறைய பழங்களுடன் வந்து நலம் விசாரித்து, ''பாண்டியை நீங்கதான் எப்படியும் சுட்டுக் கொன்னுப்புடணும் தம்பி...'' என்று கெஞ்சிய பெரிய மனிதர்கள் சிலர், பெரிய மாலைகளுடன் அஞ்சலி செலுத்த கூட்டத்தில் முன்னால் நின்றுகொண்டிருந்தனர். பிரேமைக் கண்டதும் பார்வையைத் திருப்பிக்கொண்டனர். ஒரு கான்ஸ்டபிளிடம் பிரேம் ஏதோ சொல்ல... அவர் அவசரமாய் வெளியே கிளம்பினார்.

சற்று நேரத்தில் மைக்செட் கட்டிய ஆட்டோ ஒன்று வந்து நின்றது. மைக்கைக் கையிலெடுத்தார் பிரேம். கூச்சல் சற்று அடங்கியது.

''இங்க அநாவசியமா கூட்டம் சேராம எல்லோரும் கலஞ்சு போயிருங்க! பாண்டி உங்கள்ல பலருக்கு நல்லது செஞ்சிருக்கலாம். ஆனா, சட்டப்படி இவர் பயங்கரக் குற்றவாளி... உங்கள்ல நிக்குத பலருக்கே அது நல்லா தெரியும். நாங்கள் எங்கள் கடமையைத்தான் செஞ்சிருக்கோம்...''

''நிறுத்துல... நிறுத்து...! அவரு பாடியை எங்ககிட்ட ஒப்படைக்க முடியுமா, முடியாதா? அதைச் சொல்லுங்கல மொதல்ல...'' ஆவேசக் கூச்சல் கிளப்பியது கூட்டம்.

''ஒரு முக்கியமான விஷயத்தை இப்பச் சொல்லப்போறேன். பாண்டி தப்பி ஓடுறதுக்கு முன்ன, இத்தனை வருஷங்கள்ல அவர் கொள்ளையடிச்ச நகைகளையும் பணத்தையும் யார் யாருக்குக் கொடுத்தார்ங்கற முழு வெவரத்தையும் அவரே ஒப்புக்கிட்டு வாக்குமூலம் கொடுத்துட்டாரு. அதை அப்படியே டேப்ல பதிஞ்சு வெச்சிருக்கோம்...'' தன் பாண்ட் பாக்கெட்டில் கைவிட்டு மூன்று ஆடியோ காஸெட்டுகளை எடுத்து உயர்த்திக் காண்பித்தார் பிரேம்.

கூட்டம் சலசலத்தது.

''உங்களுக்கு ஊர்வலம் போக பாண்டியோட பாடி வேணும்னா தருதோம். எங்களுக்கு ஆட்சேபமில்லை. ஆனா ஒண்ணுமட்டும் நிச்சயம்.. நாளைக்குப் பொழுது விடிஞ்சதுமே பாண்டி சொன்ன ஆட்கள் யார் யார்னு தேடிப்புடிச்சுக் கொண்டாந்திடுவோம். ஊர்வலம் போயி ஒரு சின்ன அசம்பாவிதம் நடந்தாலும் ஒருத்தரையும் லேசில விடமாட்டோம். உங்கள்ல ஒரு அஞ்சு பேரு மட்டும் வந்து 'ஊர்வலத்தில் எது நடந்தாலும் நாங்கதான் பொறுப்பு'ன்னு எழுதிக்கொடுத்திட்டு தாராளமா பாடியை வாங்கிக்கங்க. யோசிச்சு முடிவுபண்ணிக்கங்க...'' என்றார்.

''இது பெரிய வில்லங்கமாச்சேல.. பழைய குப்பையயில்லா கிளருதானுக. போலீஸ்காரங்ககிட்ட வில்லங்கம் வெச்சா என்னிக்கிருந்தாலும் விடமாட்டானுக. நாங்க பெரியமனுசனுக சொல்லுதோம்... கேளுங்கல, நடந்தது நடந்து போச்சி... இப்பம் கலஞ்சிடுவோம். ஒண்ணு கெடக்க ஒண்ணு ஆகிப் போவும்...'' முன்வரிசையில் மாலையுடன் நின்ற சிலரே கூட்டத்தைக் கலைத்தனர். சற்றுநேரத்தில் ஆஸ்பத்திரி வாசல் வெறிச்சோடிப் போனது!

அன்றைய மாலைப் பத்திரிகைகள் மதியமே வெளிவந்து, பாண்டியின் சாவைத் தலைப்புச் செய்தியாய் அறிவித்தன. போலீஸ் தரப்பில் அவசரகதியில் அறிக்கைகள் தயாராயின.

*'திருநெல்வேலி வட்டக் காவல்நிலைய குற்ற எண் 39/65-ல் கொலை வழக்கொன்றில் சம்பந்தப்பட்டு ஆயுள்தண்டனை பெற்ற சீவலப்பேரி பாண்டி என்பவனைக் கண்டுபிடிப்பதற்காக தகுதிகாண் பருவத்தில் இருக்கும் சப்-இன்ஸ்பெக்டர் கே. பிரேம்குமார் சிறப்புப் பணியில் அமர்த்தப்பட்டார்.*

*இந்தப் பாண்டியை எப்படியும் பிடிப்பதென்ற சவாலை ஏற்றுக்கொள்ளும்படி மாவட்டக் காவல்துறையினருக்கு அடிக்கடி கட்டளைகள் அதிகாரிகளால் அளிக்கப்பட்டிருந்தன. இந்தச் சிறப்புப் பணியில் அநேக அதிகாரிகள் ஈடுபடுத்தப்பட்டிருந்தும் எவ்விதத் தகவலும் சேகரிக்க முடியவில்லை. சிறையிலிருந்து தப்பிவிட்ட இக்குற்றவாளி பயங்கரமான நபராக இருந்ததாலும், உள்ளூர் காவல்துறையினரிடமிருந்து இவனுடைய நடவடிக்கை குறித்து எந்தத் தகவலும் கிடைக்காததாலும், இவனைக் கண்டுபிடிப்பதற்குத் தீவிர முயற்சி எடுத்தும், குற்றவாளி தப்பிவிட்டான்.*

*நம்பத்தகுந்த தகவலின்பேரில் மேலே குறிப்பிட்ட தப்பியோடிய குற்றவாளியைக் கண்டுபிடிப்பதற்காக சிறப்புப் பணியில் அமர்த்தப்பட்ட திருநெல்வேலி மத்திய குற்றப்பிரிவின் இன்ஸ்பெக்டர், சப்-இன்ஸ்பெக்டர் பிரேம்குமாரையும் காவல்படை ஒன்றையும் கொடைக்கானலுக்கு அழைத்துச் சென்று அங்கே பாண்டியைக் கண்டுபிடித்தார். குற்றவாளியைப் பிடிக்கும்போது, காவல்படையினர்மீது பாண்டி இரண்டு நாட்டு வெடிகுண்டுகளை எறிந்தான். மனவுறுதியுடனும் துணிவுடனும் விளங்கிய காவல்படையினர் பின்னடையவில்லை. காவல்படையிலிருந்த ஆயுதப்படை சப்-இன்ஸ்பெக்டர் ஒருவர் தன் கைத்துப்பாக்கியால் இரண்டு முறை சுட்டார். ஆனால், பாண்டி தப்பிவிட்டான். அப்பகுதி முழுவதும் தேடிப்பார்த்து, காவல்படையினர் பாண்டியை அன்றே கைதுசெய்து திருநெல்வேலிக்குக் கொண்டுவந்தனர். பாண்டியைக் காவலில் வைக்கும்போது அவன் தப்பியோடிவிட்டான். திரும்பவும் அவன் வல்லநாடுமலைகளில் கைதுசெய்யப்பட்டான். குற்றவாளியைப் பிடிக்கும்போது பாண்டி காவல்படையினர்மீது நாட்டுவெடிகுண்டுகளை வீசித் தப்பிக்க*



*முயன்றான். பாண்டியைக் கைதுசெய்கையில், திடீரென்று திரும்பி அவனுடைய அரிவாளை எடுத்துக் காவல்படையினர்மீது வீசியதில் ஒரு காவலர் காயத்துக்குள்ளானதோடு அவருடைய துப்பாக்கியும் சேதமடைந்தது. இக்காவல்படைக்குத் தலைமை வகித்த இன்ஸ்பெக்டர் சுட உத்தரவிட்டதன் பேரில் பிரேம்குமார் துப்பாக்கியால் சுட்டார். பாண்டி என்ற அந்தப் பிரபல கொள்ளைக்காரனுக்கு மார்பில் காயம் ஏற்பட்டது. அவன் மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்படுகையில் வழியில் இறந்தான்.*

*தன் உயிரையும் துச்சமென மதித்து இந்தப் பயங்கரக் குற்றவாளியைப் பிடிக்க முயன்ற இந்த சப்-இன்ஸ்பெக்டரின் துணிவு, வீரச்செயலென அங்கீகரிக்கப்படத்தக்கதாகிறது.'*

டைப் மெஷினில் அறிக்கை கடகடத்துக் கொண்டிருந்தபோதே... ஆஸ்பத்திரியில் பாண்டியின் போஸ்ட்மார்ட்டம் முடியும் தறுவாயில் இருந்தது.

''விஷயம் தெரியுமா பிரேம்... கல்கத்தா ஃபோரன்சிக் டிபார்ட்மெண்டிலிருந்து பாண்டியோட மூளையை அவுங்க லேப்புக்கு அனுப்பக் கேட்டு மெஸேஜ் வந்திருக்காம். பெரிய பெரிய கிரிமினல்ஸ் மூளைகள அங்க ரிசர்ச் பண்ணுதாகளாமே...'' என்றார் ஆர்வத்துடன் ஒரு இன்ஸ்பெக்டர்.

குண்டு துளைத்த மார்புடன் மல்லாந்து கிடந்த உடலை அளப்பதுபோல் பார்த்தார் பிரேம். அருகில் இருந்த இன்ஸ்பெக்டர், கால்மாட்டுப்பக்கம் ஸ்ட்ரெச்சரைப் பிடித்தார். தலைமாட்டிலிருந்து தானே கைபிடித்துத் தூக்கி வந்து வேனில் ஏற்றினார் பிரேம். சுற்றிலும் துப்பாக்கி ஏந்திய போலீஸார் நூற்றுக்கணக்கில் நின்றனர். சடலம் ஏற்றப்பட்ட வேனை பலர் ஆஸ்பத்திரியைச் சுற்றியிருந்த கடைகளுக்குள் ஒதுங்கி நின்று ஏக்கத்துடன் பார்த்தனர்.

முன்னும் பின்னும் ஆயுதம் தாங்கிய போலீஸார் தொடர, வண்ணாரப்பேட்டை அருகிலுள்ள வெள்ளக்கோயில் சுடுகாட்டை நோக்கிக் கிளம்பியது வேன்!

'இவர்கள் பாண்டியின் சடலத்தை மட்டுமா எரிக்கப்போகிறார்கள்? ஒரு திடுக்கிடும் உண்மையையும் சேர்த்தேதான் சாம்பலாக்கப் போய்க்கொண்டிருக்கிறார்கள்...' என்பதை ஒரு சிலர் மட்டுமே அறிந்திருந்தனர்.

உலைவாயை மூடலாம்... ஊர்வாயை மூடமுடியுமா..?

இனம்புரியாத நிசப்தம் ஊரையே கவ்வியிருந்தது...! ரோட்டோரங்களில் கூடிக் கசகசவென்று பேசி நின்றவர்களை ரோந்து சுற்றிய போலீஸ் வேன்கள் கலைத்து விரட்டின.

பாளையங்கோட்டையில் சற்று உள்ளடங்கியிருந்த அந்தத் தேகப்பயிற்சிக்கூடம், மந்தமாய் இயங்கத் தொடங்கியிருந்தது. இதுவே காலை நேரமென்றால் கூட்டம் நெரியும். இதுபோல சாயந்தர நேரங்களில் ரிசர்வ் போலீஸ்காரர்களும் ஏதாவது ஆபீஸ் உத்தியோகஸ்தர்களும் மட்டுமே வந்து போவார்கள். சற்றுத் தள்ளி பார் விளையாடிக் கொண்டிருந்த பாங்க் வேலைக்காரர் ஒருவர் தம்பல்ஸுடன் நின்ற தன் நண்பரான ரிசர்வ் கான்ஸ்டபிளை அருகில் கூப்பிட்டார்.

''ஏ... என்னால நம்பவே முடியல மக்கா! வெரட்டிப்போன போலீஸ் மேல பாண்டி குண்டெறிஞ்சிட்டாராமே..? 'நெருங்கினா சுடுவேன்'னு பிரேம்குமார் சொல்லச் சொல்ல, வெரட்டி வெரட்டி வெட்ட வந்தாராம்ல? சுதாரிச்சுச் சுடலைன்னா அங்கனயே பத்துப் பதினஞ்சு பொணமில்லா விழுந்திருக்கும்போல?'' ஆச்சரியமாய்க் கேட்டார்.

அப்போது வியர்க்க விறுவிறுக்க ஜிம்முக்குள் ஓடிவந்த இன்னொரு பாங்க் வேலைக்காரர் ''எங்காச்சிலும் கண்டமா வேய் இந்த அநியாயத்தை?'' கையிலிருந்த மாலைப் பத்திரிகையை, பேசிக்கொண்டு நின்ற இருவரிடமும் நீட்டினார். அவருக்கு மூச்சு வாங்கியது.

''ஏ.. இதைச் சொல்லத்தான் இந்த ஓட்டம் ஓடியாறீராக்கும்? இந்த பேப்பரை நான் மதியமே பாத்திட்டம்லா?''

பாங்க் வேலைக்காரர்கள் இருவரும் பேசிக்கொண்டிருக்க... இவர்களின் கிளாஸ்மேட்டான கான்ஸ்டபிள் மட்டும் மௌனமாய் நின்றார்.

''நான் இதைச் சொல்லலவே.. ரெண்டு நாளைக்கு மின்ன இதே ஜிம்ல ரெண்டு போலீஸ்காரனுக பேசினதை எங்காதால கேட்டேன்..''

''என்ன பேசுனானுக?''

'''பாண்டியைப் புடிச்சுக் கொண்டாந்து ஒரு வீட்டில வெச்சிருக்கோம். இன்னும் ரெண்டு நாள்ல பாரு, பேப்பர்ல படத்தோட பெரிய நியூஸ் வரும்'னு சிரிச்சாங்க. எனக்கு ஒண்ணும் புரியல. 'எல்லாத்தையும் போல இவங்களும் கதைவுடுதாக... பாண்டியைப் புடிக்கித ஆளுகப் பாரு'ன்னு நெனைச்சேன். இப்ப என்னடான்னா 'தப்பிச்சு ஓடினார். வெரட்டிப்போன போலீஸாரை வெட்ட வந்தார்.. குண்டு வீசினார்.. பிரேம்குமார் சுதாரிச்சு நெஞ்சில சுட்டார்'னு அவங்க பேசினது போல பெரிய நியூஸ் வந்திருக்கு. இதை நான் நம்பமாட்டேன் மக்கா! இதுல நிச்சயமா ஏதோ சூது இருக்கு. என்னமோ திருகல் வேலை நடந்திருக்கு...''

''ஏ.. இவன் என்னவே புதுக் குண்டையில்லா போடுதான். ரெண்டு நாளைக்குமின்ன இங்க பேசின பேச்சு அப்படியே, எப்பிடில பேப்பர்ல வரும்? நெசத்தில என்னதாம்ல நடந்திச்சி?'' கான்ஸ்டபிளின் கையைப் பிடித்துக் கேட்டார் முதலில் பேசிக்கொண்டிருந்தவர்.

சற்று நேரம் மௌனமாயிருந்த கான்ஸ்டபிள் சுற்றும்முற்றும் பார்த்தார். ''பேப்பர்ல நாங்க விட்ட கதையைத்தான் போட்டிருக்கான்.. எவன் பாத்தான்.. பாண்டி செத்த வெதமே வேற.. இவஞ் சொல்றது நெசந்தான். அந்த ஸ்பெஷல் பார்ட்டியில நேத்து நானும் போயிருந்தேன்ல...'' கிசுகிசுத்த குரலில் சொன்னவர் திடீரென்று சுதாரித்து,

''ஒங்களுக்கெதுக்குவே இது.. சும்மாவே எனக்கு 'ஆல் இந்தியா



ரேடியோ'ன்னு டிபார்ட்மெண்டல பேரு வெச்சிருக்கானுக. நான் ஏதாச்சும் ஒண்ணுகெடக்க ஒண்ணை உளறிப்பிடுவேன். நானே நேத்து ராத்திரி போனவன் விடிஞ்சுதான் திரும்பினேன். அப்புறமும் மதியம் வரைக்கும் போஸ்ட்மார்ட்டம் நடந்த ஆஸ்பத்திரியில டூட்டி போட்டுட்டானுக. பெறகு போயி படுத்தா, தூக்கமே வல்ல. பாண்டி கண்ணுக்குள்ளயே நிக்காரு. எம் மனசே செரியில்ல. அதான் நேரா இங்க வந்தேன். வெயிலுக்கு ஒதுங்கி வெள்ளாவிப் பானையில விழுந்த கதையா, நீங்கவேற என்னைப் போட்டுப் பஞ்சரிக்காதீக...'' என்றார் விரக்தியான குரலில்.

''இம்புட்டுக் காலம் பழகியும் நீரு எங்கள புரிஞ்சுக்கலவே.. நம்பு. என்ன நடந்திச்சுன்னு சொல்லும்... ஒரு பயகிட்ட வாயைத் தொறக்கமாட்டோம்...''

அந்த கான்ஸ்டபிளுக்கும் மனதில் உள்ளதை யாரிடமாவது கொட்ட வேண்டும்போல் முட்டி நின்றது. மூன்று பேருமாய் ஒதுங்கிப்போய் உட்கார்ந்தனர்..

''நேத்து ராத்திரி திடீர்னு கிளம்பி வரச்சொன்னாக... வேன்ல ஏறிப் போனோம்..........!'' கான்ஸ்டபிள் நடந்ததை விவாதித்தார்.

**கோ**டை மேகம் கறுத்துத் திரண்டு சிலுசிலுவென்று லேசாய்த் தூறல் விழுந்து கொண்டிருந்தது. தெருவிளக்குகள் எல்லாம் அணைந்து கிடந்தன. சுழன்றடித்த காற்றில் பாதையோரத்து மரங்களெல்லாம் இருட்டில் தலைவிரித்து ஆடின.

''ஒரு முக்கியமான காரியமாப் போறோம். நல்லா நெனைவிருக்கட்டும்ல... எவனும் வெளியில போயி மூச்சுவிடக்கூடாது. ஆமா, சொல்லிட்டேன்...'' என்றார் டவுன் க்ரைம் இன்ஸ்பெக்டர். கான்ஸ்டபிள்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

ஒதுக்குப்புறமான ஒரு வீட்டின்முன் போய் வேன் நின்றது. க்ரைம் இன்ஸ்பெக்டர் கையோடு கூட்டிவந்த போட்டோகிராபருடன் இறங்கி முன்னால் நடந்தார். பிரேமும் அவரைப் பின்தொடர்ந்து வீட்டுக்குள் போனார். வேனுக்குள் இருந்த ரிசர்வ் கான்ஸ்டபிள்கள் 'கள்ளச்சாராய ரெய்டுக்குப் போகப்போறோம் போல... எந்தச் செறுக்கிபுள்ள போட்ட ஊறல் ஒடையைப்போவுதோ' என்று மனதுக்குள் நினைத்துக்கொண்டனர்.

வீட்டினுள்ளே ஜன்னலோரமாய் உட்கார்ந்திருந்த பாண்டி, தன்னை ஏறிட்டதுமே பிரேம் ஏனோ வேறுபக்கமாய் திரும்பிக்கொண்டார். க்ரைம் இன்ஸ்பெக்டர் பாண்டியை நெருங்கி ''உம்ம இங்கருந்து வேற எடத்துக்குக் கொண்டுபோகப் போறோம். பகல்ல கொண்டுபோக முடியாதில்லா... அதான் ஊர் அடங்கட்டும்னு வந்தோம். அதுக்குமின்ன எங்க ரெக்கார்டுக்கு உம்மை போட்டோ எடுக்கணும்வே...'' என்று சிரித்தார்.

பாண்டி பதில் பேசாமல், யூனிஃபார்மிலிருந்த பிரேமைப் பார்த்தான். ''சும்மா ஒரு ரெக்கார்டுக்குத்தான்... இந்த பேப்பர்காரனுக வேற 'ஆளைப் புடிச்சாச்சா இல்லையா'ன்னு உசிரை எடுக்குதானுக. உம்மை கோர்ட்ல புரடியூஸ் பண்ணினதும் ஒடனே அவங்களுக்கும் குடுக்கணும்'' என்றார் இன்ஸ்பெக்டர். பாண்டியின் முகச்சுளிப்பைக் கவனித்த பிரேம், ''நீரு விரும்பலைன்னா பேப்பருக்குக் குடுக்கமாட்டோம். எங்க ரெக்கார்டுக்கு மட்டும்தான்...'' என்றார்.

சற்று நேரம் யோசித்த பாண்டி, 'சரி... எடுத்துக்கங்க' என்பது போல் பார்த்தான். பிரேம் குறுக்கிட்டு ''கொஞ்சம் இருவே.. வெத்து ஒடம்போட எடுக்க வேணாம். நல்லாருக்காது..'' என்றபடி தன் கைப்பையில் மடித்து வைத்திருந்த வெள்ளைச் சட்டையை எடுத்து நீட்டினார். சட்டையையும்

தயக்கத்துடன் வாங்கிப் போட்டுக்கொண்டான்.

''பளிச்'' என்று பிளாஷ் அடித்து முடிந்ததுமே பாண்டி தன் தாடையைத் தடவிப் பார்த்தான். மூன்று நாட்களுக்குமுன் தன் மறு கல்யாணத்துக்காக குண்டுப்பட்டியில் குடிமகன் சவரம் செய்துவிட்டது... இப்போது கட்டையாய் சொரசொரவென்று உறுத்தியது. சட்டையைக் கழற்றி பெஞ்சில் போட்டான். வெளியே தூறல் வெறித்துக் குளிர்ந்த காற்று வீசியது. குப்பென்று கரிசல்மண் வாசம் வெக்கையுடன் கிளம்பிக் கமகமத்தது.

ஆழ்ந்து மூச்சு வாங்கிய பாண்டி, நிமிர்ந்து ஜன்னலுக்கு வெளியே பார்த்தான். மேகம் கலைந்து பிசிறடித்து அங்குமிங்குமாய் வெள்ளி முளைத்திருந்தது. அடிக்கொருதரம் தன் கைக்கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார் க்ரைம் இன்ஸ்பெக்டர்...

அதே நேரத்தில்... பாளையங்கோட்டை போலீஸ் கண்ட்ரோல் ரூமிலிருந்து ஒரு வதந்தி பரப்பப்பட்டது. ''இன்னும் கொஞ்ச நேரத்தில பாண்டியைக் குற்றால மலைப்பக்கமா கொண்டுபோகப் போறாகளாம்'' என்று கான்ஸ்டபிள்களுக்குள் பேசிக்கொண்டனர். எதிர்பார்த்தபடியே இந்தத் தகவல் சற்று நேரத்தில் திருநெல்வேலியையே ஒரு சுற்றுச் சுற்றி வந்துவிட்டது. அவ்வளவுதான்... கேள்விப்பட்டவர்கள் போட்டது போட்டபடிக்குக் கிளம்பி ஓட்டமும் நடையுமாக குற்றாலம் போகிற விலக்கு நோக்கி ஆவேசமாய் திரண்டனர்.

இரவு சரியாகப் பன்னிரண்டு மணி ஆனதும் பாளையங்கோட்டையை அடுத்த ரிசர்வ் லைனில் வரிசையாய் நின்ற பத்துப் பன்னிரண்டு போலீஸ் வேன்களும் ஜீப்புகளும் ஒன்றன்பின் ஒன்றாகக் கிளம்பின. ஜங்ஷனைத் தாண்டி பேட்டையைக் கடந்து குற்றாலம் போகிற பாதையில் ஸ்லோவாகத் திரும்பின. முன்னால் ஊர்ந்த ஜீப்பில் துப்பாக்கிகளுடன் உட்கார்ந்திருந்த போலீஸாரைப் பார்த்ததும், காத்திருந்த கூட்டம் மிரண்டு ஸ்தம்பித்தது. பிறகு பெருங்கூச்சலுடன் பின்தொடர்ந்து போனது. போலீஸ் வாகனங்களின் வேகம் சற்றுக் கூடியது. சைக்கிளிலும் மோட்டார் பைக்கிலும் விடாமல் விரட்டிப் போனார்கள்.

அதே நேரத்தில் பாண்டியின் எதிரே தன் கைக்கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டே உட்கார்ந்திருந்த இன்ஸ்பெக்டர், மணி பன்னிரண்டு ஆனதும் ''நேரமாச்சி... கிளம்பலாம்...'' என்று சடக்கென்று எழுந்தார். ''வெளியில கொண்டுபோறோம்... கைவெலங்கு போடுங்க. அதுதான மொறை...'' என்றார்.

பிரேமை பாண்டி ஏறிட்டான். பிரேம் இன்ஸ்பெக்டரிடம் எதையோ சொல்ல வாயெடுத்தார்.

''எனக்குத் தெரியும்.. வழியில ஏதாச்சும்னா ஏன் 'ஹேண்ட்கப்' போடலைங்கற கொஸ்டின் வரும். யார் பதில் சொல்றது?'' என்றார் இன்ஸ்பெக்டர்.

''அக்யூஸ்ட்களை வெளியே கொண்டுபோறதுக்குனே எங்களுக்குச் சில நடைமுறைகள் இருக்கு பாண்டி. அதுபடி செய்யலைன்னா நாங்க மேல பதில் சொல்லியாகணும். இது ஒண்ணும் கேவலம் இல்ல...'' என்ற பிரேம், தன் இடது கையை விலங்குக்குள் நுழைத்து தானே பூட்டிக்கொண்டு, இன்னொரு பகுதியில் பாண்டியின் கையை நுழைக்கச் சொன்னார். பாண்டி வலது கையை நீட்ட... ''நீரு தப்பி ஓடினாலும் பிரேமையும் சேத்தேதான் இழுத்திட்டுப் போவணும்...'' என்று சிரித்துக்கொண்டே, விலங்கைப் பூட்டி





*1981... ஏப்ரல்... சுட்டுக் கொல்லப்படுவதற்குச் சில மணி நேரங்களுக்கு முன் பாண்டி!*

நன்றி: காவல்துறை நண்பர் ஒருவர்

தன்னோடு ஒரு கையில் விலங்கு மாட்டிக்கொண்டு யூனிஃபார்முடன் நின்ற பிரேமைப் பார்த்து பாண்டி லேசாய்ப் புன்னகைத்தான். பிரேம் ஏனோ முகம் இருண்டு நின்றார்.

வேனுக்குள் ஏறிய பாண்டியும் பிரேமும் அருகருகே உட்கார்ந்து கொண்டனர். பொதுமக்களின் கவனமெல்லாம் குற்றாலம் விலக்கை நோக்கியிருக்க... பாண்டியுடன் கிளம்பிய வேன் எந்தப் பாதுகாப்போ, பதட்டமோ இல்லாமல் பாளையங்கோட்டையைத் தாண்டி ஹைகிரவுண்ட் அருகே நின்று போட்டோகிராபரை மட்டும் இறக்கிவிட்டு மீண்டும் கிளம்பியது. கான்ஸ்டபிள்களுக்கு எங்கு போகிறோம் என்பது தெரியாமல் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டனர். தங்களுடன் வருவது பாண்டி என்பது அவர்களுக்கும் தெரிந்திருக்கவில்லை. வேன் திருச்செந்தூர் விலக்கைக் கடந்து பாறைக்குளம், அனவரதநல்லூரை யெல்லாம் தாண்டிப் போய்க்கொண்டேயிருந்தது.

'ஊரைவிட்டு ஏன் இவ்வளவு தூரம் கொண்டுவரணும்?' பாண்டிக்கும் லேசாய் சந்தேகம் தட்டியது! ரோட்டின் இருமருங்கும் கைகோத்து நின்ற மரங்களுக்கு ஊடாகப் பாய்ந்து விரைந்த வேன், பக்கபட்டியையும் தாண்டி குறுக்கே போகும் தாமிரபரணி ஆற்றுப் பாலத்தைக் கடந்தபோது, பாண்டி லேசாய் திரும்பினான். ''என்னை எங்க கொண்டுபோறீக?''

பிரேமிடமிருந்து பதிலே இல்லை.

''சுடத்தான போறீக? சும்மா சொல்லுங்க... நான் சாகப் பயந்தவனில்லை தம்பி...''

பாண்டிக்கு இருட்டில் பிரேமின் முகம் தெரியவில்லை. இப்போதும் பிரேமிடமிருந்து பதிலே இல்லை.

ஓர் ஆழ்ந்த பெருமூச்சு விட்டான் பாண்டி. ஏனோ அவனுக்குள் எதிர்த்துப் போராட வேண்டும் என்ற எண்ணமே எழவில்லை.

'நாஞ்செஞ்சதெல்லாம் தப்புன்னும்.. கொள்ளையடிச்சி யார் யாருக்கு உதவி பண்ணுனேன்னும் வாக்குமூலம் குடுக்கறதவிட கோழைத்தனம் வேற இல்ல. அதுக்குச் சுடுபட்டுச் சா்வது எவ்வளவோ மேல்... இத்தனை வருசம் தப்பிச்சு உசிரோட இருந்ததே பெரிசுதான். வேலம்மாள் செத்த அன்னிக்கே தன்னால செத்திருக்கணும். புள்ளையா.. குட்டியா..? இம்புட்டு நாள் வாழ்ந்தது போதும்... இந்தத் தம்பி ஒருபொழுது வெளிய விட்டிருந்தாலும் அவனுக சோலிய முடிச்சிட்டு நிம்மதியா செத்திருக்கலாம். கோர்ட்டுக்குக் கொண்டுபோயிருந்தாலும் அங்க வெச்சே இந்தப் பெரிய மனுசனுகள நாக்கப் புடுங்கறா மாதிரி நாலு வார்த்தை கேட்டுக்கலாம். இனி எதை நெனைச்சும் புண்ணியமில்ல. இப்படித் தூண்டிவிட்டுட்டு ஒதுங்கி நின்னு வேடிக்கை பாக்குத செறுக்கிபுள்ளைகளுக்குச் சரியான பாடம் பொகட்ட என்னிக்காவது, எங்கிருந்தாவது இன்னொரு பாண்டி பொறக்காமலா போவான்?' மனதுக்குள் யோசித்தபடியே வந்தான் பாண்டி.

நிலா வெளிச்சத்தில் அடர்ந்த நாணல் காட்டைத் தாண்டி கரும்படையாய் நிற்கும் தேக்கங்காடுகளைப் பார்த்ததும் வல்லநாட்டு மலையை நெருங்கிவிட்டது புரிந்தது. அப்போது இரவு சுமார் இரண்டு இரண்டரை மணி இருக்கும். வேன் வந்த பாதையில் ஒரு ஈக்குஞ்சு நடமாட்டமில்லை. ''விய்ய்ய்...''யென்ற சில்வண்டின் நெடிய இரைச்சலையும் தவளைகளின் கெக்கலிப்பையும் தவிர, வேறு சத்தமே இல்லை.



[illegible] போகிற பாதையில் மலையின் கக்கத்தில் முட்டியது போல் அடிவாரத்தில் போய் நின்றது வேன். ஹெட்லைட்டை அமர்த்தியதும் பாய்ந்து சூழ்ந்த இருட்டுக்குள் கண்கள் பழகக் கொஞ்சம் நேரமானது. விதவிதமான வண்டுகளின் ரீங்காரம் காதைக் குடைந்தது. காற்று 'விர்விர்'ரென்று சவட்டி எடுத்தது. இன்ஸ்பெக்டர் ஒரு கையில் டார்ச்சுடன் இறங்கியதும் பிரேமின் இடது கையில் மாட்டியிருந்த விலங்கைத் திறந்துவிட்டார். கான்ஸ்டபிள்கள் எல்லோரும் பாண்டியைச் சூழ்ந்து நின்றனர்.



*1965.. திருமணமான புதிதில் மனைவி வேலம்மாளுடன் பாண்டி... (தலைமறைவாய்த் திரிந்த காலங்களில் பாண்டியின் நெருங்கிய உறவினர்கள் பாலிதீன் காகிதங்களில் சுற்றிப் பூமிக்கு அடியில் புதைத்துப் பாதுகாத்த படம் இது!)*

நன்றி: ஜூனியர் விகடன் வாசகர் ச. உடையார், கருங்குளம்.

ஒரு கான்ஸ்டபிளை அழைத்த இன்ஸ்பெக்டர், வேனுக்குள் கிடந்த நீளமான லீடிங் செயின்களை எடுத்துப் பாண்டியின் இரு கைகளிலும் கட்டச் சொன்னார். எதுவுமே பேசாமல் கைகளை நீட்டினான். லீடிங் செயினைப் பிணைத்து அதை இடமும் வலமுமாக இரண்டு பேர் பிடித்துக் கொண்டனர்.

''மத்தவங்க இங்கயே நில்லுங்க. நீங்க ரெண்டு பேர் மட்டும் செயினைப் பிடிச்சுக்கிட்டு எம் பின்ன வாங்க... பிரேம், நீங்க எல்லோருக்கும் பின்னால வாங்க...'' – புதர்களையும் மரங்களையும் விலக்கி, சிறு சிறு பாறைகளைத் தாண்டி டார்ச் அடித்துக்கொண்டே, சரிவில் ஏறி முன்னால் நடந்தார் இன்ஸ்பெக்டர்.

கீழே நின்ற கான்ஸ்டபிள்களுக்கு இப்போது விஷயம் புரிந்துபோனது! திகில் நிறைந்த பீதியுடன் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர்.

''ஏ.. நாங்கூட வேற யாரோன்ல நெனைச்சேன். வேன்ல நாம

எல்லோருக்குமே அதிர்ச்சி கலந்த ஆச்சரியம்.

"அடடா... தெரியாமப் போச்சேல... நாஞ்சரியா மொகத்தைக்கூடப் பாக்கலையே.."

"அவந்தான் பசுப்போல கூட வர்றானே.. எதுக்காக இந்தச் சோலி பாக்கணும்?"

"உனக்கு விஷயம் தெரியாதுல.. ரெண்டு நாளைக்குமின்னயே நான் கேள்விப்பட்டேன்.. பாண்டி வாக்குமூலம் தரவே முடியாதுன்னுட்டாராம்.. கோர்ட்டுக்குக் கொண்டுபோனா ஒரு பய சாட்சிக்கு வரமாட்டான். இத்தனை வருசமா இவரை உசிரோடயோ, பொணமாவோ புடிச்சுக் குடுத்தா ஆயிரக்கணக்கில பரிசுன்னு பேப்பர்ல எல்லாம் போட்டுட்டு இப்பம் கேஸ்ல விடுதலையாகி வந்துட்டா டிபார்ட்மெண்ட்டுக்கே கேவலம்னு பேசிக்கிட்டாகளாம். ஸ்ட்ராங்கா கேஸ் எழுதினாலும் அப்பீலுக்குப் போயி எப்படியும் வெளிய வந்திடுவார்னு மேல நெனைக்காக. அதான் இந்த முடிவெடுத்துட்டாக போல..."

"அதுக்காக.. இப்படியா...?"

"வேறென்ன செய்யச் சொல்றேல. 'என்னை வெளிய விடு... ஒடனே போயி பெரிய மனுசங்க ஏழு பேரு தலைய எடுத்திட்டு வந்திருதேம்'னு வேற சொல்லிக்கிட்டிருந்தாராம். எஸ்கார்டு இருந்த ஏ.ஆர். கான்ஸ்டபிள் ஒருத்தர் சொன்னார். பாண்டி சொன்னா செய்யுத ஆளாச்சே... எதுக்கு வம்புன்னு யோசிச்சு எல்லா கேஸையும் ஒரு சோலியா முடிக்க நெனச்சிட்டாக போல. 'என்கௌண்டர் டெத்'னு ஃபைல முடிச்சிரலாமில்ல? நமக்கெதுக்குல இந்த வம்பு... சொன்னதைச் செய்வோம்..." என்றார் விவரமான ஒரு கான்ஸ்டபிள்..

'இன்னும் கொஞ்ச நேரத்தில் சாகப்போறோம்னு தெரிஞ்சும் மனுசன் கொஞ்சங்கூடக் கலங்காம நடந்து போறானே.. இதுக்கு நெஞ்சில என்னா அழுத்தம் இருக்கணும்? 'சரி... என்னைக் கொன்னுக்கங்கல.. சாகேம்'னு கூட வர எவ்வளவு வீரம் வேணும்? அடடா, இவனைப் போயா...' பிரேம் மனம் மறுகிப் பேதலித்தார். 'ரெண்டு நாளும் இவனிடம் பேசிப் பழகியிருக்கக்கூடாது.. அது நாஞ்செஞ்ச பெரிய தப்பு' தனக்குள் நினைத்துக் கொண்டார்.

கால்களை அகல விரித்து நின்ற பாண்டியின் இடமும் வலமும் நின்று கான்ஸ்டபிள்கள் மணிக்கட்டில் பொருத்தியிருந்த லீடிங் செயினை இழுத்துப் பிடித்தனர். பாண்டி கைகளை விரித்து நின்றான். இன்ஸ்பெக்டர் கையோடு கொண்டுவந்திருந்த பையிலிருந்து அரிவாள், நாட்டு வெடிகுண்டுகள், உடைந்த போலீஸ் துப்பாக்கி ஒன்று... ஆகியவற்றைத் தரையில் தாறுமாறாகப் பரப்பினார். எதிரில் நின்ற தன்னையே இமைக்காமல் பார்த்த பாண்டியின் பார்வையை எதிர்கொள்ள முடியாமல் இன்ஸ்பெக்டரையே கவனித்துக்கொண்டிருந்தார் பிரேம்.

எல்லாம் சரியாயிருக்கிறதா என்று இன்ஸ்பெக்டர் ஒருமுறை பார்த்துவிட்டு பிரேமின் பக்கம் திரும்பி மிக்ச் சன்னமான குரலில், "நெஞ்சில இடது பக்கமா ஒரே புல்லட்ல முடியணும்..." என்றார். பிரேம் உணர்ச்சியில்லாமல் தலையாட்டினார்.

"மொதல்ல கண்ணைக் கட்டீருங்க..." – தன் கர்ச்சீப்பை எடுத்து பிரேமிடம் கொடுத்தார். அதுவரை மௌனமாய் நின்ற பாண்டி, "வேணாம்! கண்ணைக் கட்டவேணாம்!" என்றான்.





*மார்பில் குண்டு பாய்ந்த நிலையில்...*
*– 1981-ம் வருட 'மாலைமுரசு'*

"சரி... வேணாம்னா விட்ருங்க..."

"யெஸ்.. பிரேம் ஃபயர்..!"

தன் இடுப்பிலிருந்து நைன் எம்எம் பிஸ்டலை எடுத்து பாண்டியின் மார்புக்கு நேராய் நீட்டினார் பிரேம். நிலா வெளிச்சத்தில் பாண்டியின் முகத்தைக் கடைசியாய் ஒருமுறை உற்றுப்பார்த்தார். பிரேமையே ஊடுருவிப் பார்க்கும் பாண்டியின் விழிகள் பளபளத்தன.

"ம்... க்விக்.. பிரேம்..!"

"................"

என்ன நினைத்தாரோ தெரியவில்லை.

"ஸாரி.. சார்.."

"என்ன, என்னாச்சு பிரேம்?"

"என்னால முடியலை சார்.. என்னை மன்னிச்சிருங்க..." என்றார் தழுதழுத்த குரலில். இன்ஸ்பெக்டர் அதிர்ந்தார்!

"எங்க வந்து என்ன சொல்லுதீரு பிரேம்? நான் சொல்லுதேன்... ஃபயர் ஹிம்..!"

"தப்புதான் சார். தயவுபண்ணி மன்னிச்சிருங்க சார். வீட்டுல வளத்த கோழியை அறுக்குறப்பக்கூட நான் கிட்ட நிக்கமாட்டேன். என்னால இவனைச் சுட முடியல சார்..." – கெஞ்சினார்.

பிரேமை முறைத்து "வெலகுவே..." என்ற இன்ஸ்பெக்டர், தன் இடுப்பிலிருந்த ரிவால்வரை உருவினார். பாண்டியின் மார்பைக் குறி

ஆச்சரியம்... லோக் ரிலீஸாகவில்லை! பதட்டத்துடன் டார்ச் அடித்து ரிவால்வரை என்னென்னவோ செய்து பார்த்தார். ம்கூம்.. அதில் ஏதோ சிக்கல் இருந்தது. கடைசிவரை அதைச் சரிப்படுத்த முடியவில்லை. தன் ரிவால்வரை இடுப்பில் சொருகிக்கொண்டு பிரேமை நோக்கிக் கைநீட்டினார். பிரேம் தன் பிஸ்டலை எடுத்துக் கொடுத்துவிட்டு எதிர்திசையில் திரும்பிக்கொண்டார்.

''ட்டும்மீல்...!''

மலையே கிடுகிடுத்த சத்தத்தில் மரங்களிலும் பாறைப் பொந்துகளிலும் அண்டியிருந்த கூகைகளும் ஆந்தைகளும் படபடவென்று அலறிக் கிளம்பின.

என்னவானான் பாண்டி என்று உற்றுப்பார்த்தனர். அலறாமல், துடிக்காமல் அப்படியே கைகளை விரித்து நின்றபடிக்கே இருந்தான். அண்ணாந்து பார்த்த முகத்தருகே சங்கிலியோடு வலது கையை இழுத்து மடக்கி கைமுஷ்டியால் மீசையைத் தடவினான். வலது கையை இழுத்துப் பிடித்திருந்த கான்ஸ்டபிள், லீடிங் செயினோடு தடுமாறிக்கொண்டிருந்தார்.

''குறி தப்பிடுச்சுபோல.. மீசையைத் தடவுதாம் பாருல...'' - இன்ஸ்பெக்டர் மறுபடியும் பிஸ்டலை நிமிர்த்தினார். மீண்டும் சுட்டார். துடிக்கவில்லை! கதறவில்லை! அப்படியே மண்டியிட்டுச் சரிந்தான் பாண்டி. கொஞ்ச நேரம் அப்படியே போட்டுவிட்டு எல்லோரும் சற்று ஒதுங்கி நின்றனர். தரையில் கிடந்த பாண்டியின் உடல் 'விலுக் விலுக்'கென்று சுண்டி இழு..த்..துக்கொண்டே இருந்தது!

தன் பையிலிருந்த பிளேடை எடுத்து அதிர்ச்சி விலகாமல் நின்ற கான்ஸ்டபிள்களின் தோளில் லேசாகக் கீறிவிட்டார் இன்ஸ்பெக்டர். அவர்களது யூனிஃபார்மில் ரத்தம் கசிந்து பரவியது! பார்வைக்கு அவர்கள் பாண்டியுடன் கட்டிப்புரண்டு போராடிக் காயம்பட்டது போலத் தெரிந்தது.

''ஊர் போறதுக்குள்ள அடங்கிரும்.. ம்.. தூக்குங்க...'' பாண்டியைத் தோளில் தூக்கிக்கொண்டு வந்து வேனில் மெள்ளக் கிடத்தினார் பிரேம். வேனுக்குள் ஏறிய கான்ஸ்டபிள்களின் முகங்களில் இனம்புரியாத கலக்கம் இருந்தது!

திருநெல்வேலி எல்லையைத் தொட்டபோது, வேனுக்குள் பாண்டியைக் குனிந்து பார்த்தார் பிரேம். இன்னும் உயிர் அடங்கவேயில்லை! சுண்டிச் சுண்டி இழுத்துக்கொண்டே இருந்தது. ரத்த வெள்ளத்தில் மல்லாந்து கிடந்த பாண்டியின் வாயில் நுரை தள்ளியது. இடதுபக்க மார்பில் அடுத்தடுத்து நாலு விரக்கடை இடைவெளியில் பொந்தாக ரவைகள் துளைத்த இடத்தில் இன்னும் ரத்தம் பொங்கி வழிந்துகொண்டிருந்தது.

''இப்பிடியே கொண்டுபோக முடியாது. உசிர் பிரியறவரைக்கும் எங்கயும் வேனை நிறுத்த வேணாம். ஊருக்குள்ளே சுத்திக்கிட்டே இருப்போம். யாருக்கும் தெரியாது...'' என்றார் இன்ஸ்பெக்டர். துடித்துக்கொண்டிருந்த உடலுடன் வெகுநேரம் சந்து சந்தாய் ஊர்ந்து திரிந்தது வேன். ஒருவழியாய் சுமார் காலை ஏழு மணிக்குமேல் பாண்டியின் உடல் ஒருமுறை விதிர்த்துக் குலுங்கி அடங்கியது. உயிர் பிரிந்தது! உடனே ஹைகிரவுண்ட் ஆஸ்பத்திரிக்கு போஸ்ட்மார்ட்டத்துக்காகக் கொண்டு போனார்கள்...

**அ**டிவானம் ரணகளமாய்ச் சிவந்து கிடந்தது. மேற்கே சூரியன் சரிந்து விழுந்த நேரம்...



... வெந்து தணிந்து சாம்பலாய் நீர்த்துக்கொண்டிருந்தது. சிலர் மலையாண்டியைக் கைத்தாங்கலாகக் கூட்டி வந்தனர். அப்போது மறைந்து மறைந்து வந்த ஒரு உருவம், எரிந்த சடலத்தருகே ஆட்களிருப்பதைப் பார்த்து அப்படியே ஸ்தம்பித்தது! நீர்கருவை புதருக்குள் பதுங்கியது! மலையாண்டியுடன் வந்தவர்கள் கொஞ்ச நேரம் வாய்விட்டு அழுது நின்றனர். பின்னர் எல்லோருமாய் ஆளுக்கொரு கை சாம்பலை அள்ளி துண்டில் முடிந்தனர். அதை வைத்து பாண்டிக்குச் சமாதி எழுப்ப சீவலப்பேரியை நோக்கி நடந்தனர்.

எல்லோரும்- போனபின், சுற்றும்முற்றும் யாரும் இல்லை என்பதை உறுதிப்படுத்திக்கொண்டு, மறைந்திருந்த உருவம் புதருக்குள்ளிருந்து வெளியேறியது. சாம்பலாய் கிடந்த பாண்டியின் அருகே நிதானமாய்ப் போனது. சற்று நேரம் மௌனமாக நின்றது. பின் சடக்கென்று குனிந்து கைநிறைய வெதுவெதுப்பான சாம்பலை அள்ளிக்கொண்டு விடுவிடுவென நடந்துபோய் அருகில் சலசலத்த தாமிரபரணியில், கலங்கிய விழிகளுடன் கரைத்து நிமிர்ந்தது!

அது - பிரேம்குமார்!

## சீவலப்பேரி பாண்டி ஜூனியர் விகடனில் தொடராக வந்தபோது வாசகர்களிடமிருந்து வந்த கடிதங்கள் சில!

முதல்பாதி-பாண்டியோடு சேர்ந்து நாங்கள் (வாசகர்கள்) ஒளிந்து வாழ்ந்தோம். பிற்பகுதி-பிரேம்குமாரோடு சேர்ந்து தேடித் திரிந்தோம். ரியலி வெரி சூப்பர்ப்!

பா. ஈஸ்வரமூர்த்தி, கரிவலம்வந்தநல்லூர்

சீவலப்பேரி பாண்டியின் கதையைப் படித்து முடித்தபின் மனதில் நிற்பவர் பாண்டி அல்ல... அவரது அசைவுகளை அணுஅணுவாக அற்புதமாக எழுதிய சௌபாதான்!

வை. ஜெயராமன், சென்னை-23

சமீப காலங்களில் வெளியான (உண்மைக்) கதைகளில் பெரும்பான்மை வாசகர்களைப் பாதித்த தொடர் சீவலப்பேரி பாண்டியாகத்தான் இருக்கும்!

இரா.சிவநேசன், வேலூர்-12

நெல்லைத் தமிழின் அழகான சொல் நடையுடன் வலம்வந்த சீவலப்பேரி பாண்டியின் தொடரைத் தொகுத்து வழங்கிய சௌபா.. சபாஷ்லே! ராஜசேகரா.. உமக்கும்தாம்லே சேர்த்துச் சொல்லுதேன்.

எஸ்.பி. ராஜ், தேவகோட்டை

வர்ணனைக் காட்சிகளும் நெல்லைத் தமிழ்நடையும் வாரா வாரம் திகிலூட்டும் சஸ்பென்ஸ் முடிவும் இறுதியாகப் பாண்டியின் மரணமும் மறக்கமுடியாத நிகழ்ச்சிக் கோவை!

எஸ். நாகராஜன், கண்டனூர்

சலசலக்கும் தாமிரபரணியில் கரைந்தது பாண்டியின் சாம்பல் மட்டுமல்ல.. எங்களின் மனதும்தான்!

கலைப்ரியன், காங்கயம்

எங்களைப் பழைய நினைவுகளுக்குக் கொண்டுபோய் விட்டார் சௌபா. நாங்களே அறியாத பல நிகழ்ச்சிகளைக் கண்டு வியந்து போனோம். கடமையில் கண்ணியத்தோடும் கடைசியில் மனிதாபிமானத்தோடும் நடந்துகொண்ட பிரேம்குமார் மீதிருந்த எங்கள் வருத்தம் நீங்கியது. முடிவில், மீண்டும் சில கண்ணீர் துளிகளைச் சிந்த வைத்துவிட்டார் கதாசிரியர்.

சி.எஸ்.ஐ. பாண்டியன், சீவலப்பேரி

பல உயிர்களைப் பலிகொண்டிருந்தாலும் பாண்டியின் உயிர் பிரிந்த விதத்தை நம்மால் சகித்துக்கொள்ள முடியவில்லை. வன்முறையாளர்களுக்குப் பாண்டி ஒரு படிப்பினை!

வி. ஜெயராமன், அயனாவரம்

இந்தக் கதைக்கு மாடலாக இருந்தவர்கள் நம்மையெல்லாம் அசத்திவிட்டார்கள். அவர்களைப் படமெடுத்த கே. ராஜசேகரன், அட்டகாசமான கோணத்தில் எடுத்துக் கதைக்கு உயிர் கொடுத்துள்ளார்!

ரா. கண்ணன், தளவாய்ப்பேட்டை





'சௌபா' என்று அன்புடன் அழைக்கப்படும் சௌந்தரபாண்டியன், விகடன் மாணவப் பத்திரிக்கையாளர் பயிற்சித் திட்டத்தின், முதல் படையின் தளபதிகளில் ஒருவர். மதுரை மாவட்டத்துக்கான விகடன் நிருபராகப் பணியாற்றியவர். கனல் தமிழில், அனல் பறக்கும் புலனாய்வுக் கட்டுரைகள் எழுதுவது இவரது தனிச் சிறப்பு.

உசிலம்பட்டி பகுதிகளில் பெண் சிசுக்களைப் பெற்றோரே கொல்லும் கொடுமை, கொடைக்கானல் மலைப்பகுதிகளில் கொத்தடிமை பயங்கரம், சிதம்பரத்தில் நிலவிவந்த பால்ய விவாக அவலம் என முதன்முறையாக வெளி உலகத்துக்கு இவர் வெளிச்சம் போட்டுக் காட்டிய கட்டுரைகள் ஒவ்வொன்றும் ஜூ.வி. வாசகர் அனைவருக்கும் இன்னும் நினைவில் நிற்பவை.

பரபரப்பான பத்திரிக்கையாளராகவே அறிமுகமான சௌபா, எழுதிய முதல் நாவல் 'சீவலப்பேரி பாண்டி'! கொலைகாரனாகவும் கொள்ளைக்காரனாகவும் அறியப்பட்ட ஒருவனுக்குள் ஒளிந்திருந்த மனிதனைப் பற்றிய ஈரமான படைப்பு இது! பிறகு திரைப்படமாகவும் வெளியானது இந்தக் கதை.